**வேண்டுகோள் - எச்சரிக்கை!**

இந்த நூல் சுத்தமான 'அத்வைதம் - வஹ்தத்துல் வுஜூது' சித்தாந்தத்தை விளக்கும் நூல். மேலும் சுத்தமான தமிழில், அரபு வார்த்தைகளும் இதில் கலந்துள்ளது. எனவே இதைப் படிப்பவர்கள் இதற்கு விளக்கம் தெரியாமல், தாங்களாகவே அர்த்தம் வைக்காமல் அல்லது போலி ஞானிகளிடமோ, தவறாக விளக்கம் சொல்லும் அறிவற்றவர்களிடமோ சென்று விளக்கம் கேட்காமல், ஞானவான்களான காமிலானவர்களிடம் இதற்கு பொருள் அறிந்து, அமல் செய்ய வேண்டப்படுகிறீர்கள். –நிர்வாகிகள், www.sufimanzil.org

# ஞானப் பிரகாசம் அல்லது நூருல் இர்பான்

*ஆசிரியர்:* **மெய்ஞ்ஞான குருபிரான் அல்ஆரிபுபில்லாஹ் ஷெய்கு பூஅலி ஷாஹ்மதார் ஆலிம் சாஹிப்**

பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்.

## முகவுரை

(இதன் பொருள்) ஜீவ பேதம் நீங்கி 'சிவமான' சிற்சொரூபத்தைக் கொண்டு தொடங்குகிறேன். அந்தச் சொரூபமே திரிசியமாகக் காணப்படும் ஜெக சொரூபங்களாகவும், ரஹீமென்னும் நாமத்திற்கு உரித்தாகிய மள்ஹருள் அதம் எனும் பரிபூரணத் தோற்றமாகிய இன்ஸானாகவும், அந்த இன்ஸானில் அக்மலெனும் அதீதத் தோற்றமாகிய நம்முடைய 'நயினார் முஹம்மது முஸ்தபா ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல'மாகவும் விளங்குகிறது.

எங்ஙனமெனில் உருக்கியவிடத்துப் பொன்னாலாகிய சொரூபம் நானாவிதப்பணிகளாகவும், பொன்முன்னிலைமை கெடாமல் விளங்குவது போலவுமே. இன்னும் தப்ஸீர் ரூஹுல் பயானென்னும் கிதாபில் சொல்லிய பிரகாரம் பிஸ்மில்லாஹ்வின் பொருளாவது:

*'பீகான மாகான வஎகூனு மாஎ கூனு'*

(பொருள்) உண்டாயினவெல்லாம் என்னைக்கொண்டே உண்டாயின. உண்டாகப் போவனவெல்லாம் என்னைக் கொண்டே உண்டாகும். ஆகையால் ஆலமனைத்தும் என்னைக் கொண்|டுதான் உண்டாயின, என்னைத் தவிர ஒரு வஸ்துவுக்கும் 'உஜூதென்ற உள்ளமை கிடையாது. இப்போது தோன்றுவனவெல்லாம் கானல் ஜலமும், சொப்பன உலகம் போலும் தோற்றமாத்திரமும், சொல் மாத்திரமுமாகத் தோற்றுகின்றனவேயல்லாமல் அவைகளுக்குப் பொருளில்லை.

*'சுபுஹான மன் அள்ஹறல் அஷ்யாஅ வஹுவ அய்னுஹா'*

(**பொருள்**) எவன் வஸ்துக்களனைத்தும் தானாகவிருக்கிற நிலைமையில் வஸ்துக்களைத் தோன்றச் செய்தானோ அவனே பரிசுத்தமுள்ளானென்று தியானிக்கிறேனெனக் காண்கிறது.

இதான்ல சர்வ வேதாந்தத்தின் அம்ஸங்களும், 'பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர்ரஹீமில்' அடங்கிவிட்டதென நன்கு வெளியாகின்றது. ஹக் அல்ஹம்துலில்லாஹ்.

*'அல்ஹம்துலில்லாஹி ரப்பில் ஆலமீன்'*

(**பொருள்**) எந்த வஸ்து சந்த்தா மாத்திரமாயிருக்குமோ எந்த வஸ்து அத்|துவிதமாயிருக்குமோ எந்த வஸ்துவில் பிரபஞ்சம் தோன்றுகிறதோ அந்த வஸ்துவுக்கே புகழனைத்துமாம்.

இறைவனே! மறைவாகிய ஆலத்தைச் சேர்ந்த உன்னுடைய இரகசியங்களைப் பிளந்து வெளியில் வரவும், உன்னுடைய அன்பான ஜோதிகள் பிரகாசிக்கவும், நீ காரணமாக்கி வைத்த எங்கள் நாயகம், நான் மறைக்குத் தாயகம், நபி முஹம்மது முஸ்தபா ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது 'ஸலவாத்தும், ஸலாமும், சொல்லுக.

எங்கள் நாயகத்தின் பரிசுத்த ஆவியளவிற் சேர்க்கப்பட்ட பந்துக்கள் மீதும், பரிசுத்த 'ஸிபாத்' என்னும் இலட்சணங்களளவில் சேர்க்கப்பட்ட பந்துக்கள் மீதும், பரிசுத்த ஆவியை நேசித்த நட்பாளர்களாகிய ஸஹாபாக்கள் மீதும் 'ஸலவாத்தும், ஸலாமும்' சொல்வோமாக.

மிகவும் இழிவினையுடைய அடியேனாகிய **மேலப்பாளையம் என்னும் ஊரில் தரித்த பூஅலி முஹம்மது மஸ்தான் புதல்வன் பூஅலி ஷாஹ் மதாரெ**ன்னும் யான், ஒப்பற்ற ரப்பில் ஆலமீனது திருவருளை ஆதரவு வைத்து, தமிழ்மொழியில் அளவிறந்து பரந்து கிடக்கும் வேதாந்த நூல்களில் ஓர் சிறு பகுதியை எனக்கு காட்டி கொடுத்த கல்வியின் 'ஷுக்ரு'க்காக அவ்வாண்டவனைப் புகழ்ந்து, அவனது வல்லமையைத் துணையாக நாடி, இச்சிறு நூலைச் செய்யத் துணிந்தேன். இந்நூல் அவனது சந்நிதானத்திலும், அவனது அடியார்களின் சந்நிதானத்திலும் ஒப்புக்கொள்ளப்பட்டதாக, அவனே ஆக்கியருள்வானாக. மேலும், 'ஈமான்' 'இஸ்லாம்' 'இஹ்ஸானா'கிய இம்மூன்றாலும், 'ஹக்கில்' இரண்டறக் கலப்பதற்கு இந்நூலிற் போதுமான வழிகளிலிருப்பதால், அதை விளக்கிக் காட்ட ஆசை வைத்து, இந்நூலுக்கு **ஞானப் பிரகாசம் அல்லது நூருல் இர்பான்** என்ற நாமம் சூட்டினேன்.

ஸல்லல்லாஹு வஸல்லம அலா செய்யிதினா முஹம்மதின் வஅலல் அன்பியாயி வ|ஆலிகுல்லின் மின்ஹும் வஸஹ்பி ஹிம் அஜ்மயீன் வல்ஹம்துலில்லாஹி ரப்பில் ஆலமீன்.

www.sufimanzil.org

## பாபுல் ஈமான்

### 1 – வது ஈமானைப் பற்றிய அத்தியாயம்.

**ஆமந்துபில்லாஹி.**

'அல்லாஹுத்தஆலாவைக் கொண்டு ஈமான் கொள்வது. ஈமானாவது ஒரு வஸ்துவை உண்மையாக்கி வைப்பது ஷரீஅத்தின் பொருள் ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எதைக் கொண்டு வந்தார்களோ அதை உண்மையாக்கி வைப்பது. அல்லாஹுத்தஆலா

*'யாஅய்யு ஹல்லதீன ஆமனு ஆமினு பில்லாஹி'*

(**இதன் பொருள்**) சொல்லைக் கொண்டு ஈமான் கொண்டவர்களே! அல்லாஹுத்தஆலாவைக் கண்காட்சியாகக் காணுவதைக் கொண்டு ஈமான் கொள்ளுங்களென்று குர்ஆனில் திருவுளமாயிருக்கின்றான். காலன்னபிய்யு ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்

*'அல் ஈமானு அந்துஉமின, பில்லாஹி'*

(**இதன் பொருள்**) ஈமானாவது உங்கள் தாத்தென்னும் உண்மையை அல்லாஹ்வின் உண்மையென்றும் உங்கள் ஸிபாத்தென்னும் வருணனைகளை அல்லாஹ்வின் வருணனையென்றும், உங்கள் தத்துவங்களை அல்லாஹ்வின் தத்துவங்கள் என்றும், உங்கள் செயல்களை அல்லாஹ்வின் செயல்கள் என்றும் ஈமான் கொள்ளுங்கள் என்று திருவுளமானார்கள். 'ஈமானில்' முந்தின காரியமாவது 'புர்ஹா'னென்னும் அத்தாட்சியைக் கொண்டு ஈமான் கொள்ளுவதே. அந்த அத்தாட்சி 'அக்லியத்தான' அத்தாட்சி 'நக்லியத்'தான அத்தாட்சியென இரு வகைப்படும்.

அக்லியத்தான அத்தாட்சியாவது 'அகல்' புத்தியினால் ஒரு வஸ்துவை உண்டென்றாவது, இல்லையென்றாவது 'ஹுகும்' கட்டளை செய்வது, அல்லது உண்டாகவும் இல்லாமையாகவும் இடம்பாடாயிருக்குமென்றாவது 'ஹுகும்' கட்டளை செய்வது, ஆக இம்மூவகைதானுள்ளன, நான்காவதில்லை.

ஆனதால், 'ஆலம் ஹக்தஆலா' உண்டென்பதை அறிவிக்கும் அடையாளமாயிருக்கின்றது. எங்ஙனமெனின், எழுதப்பட்டதனால் எழுதினவனைக் காணவில்லையாயினும், காத்திபென்னும் எழுத்துக்காரன் ஒருவன் உண்டெனவும் நடக்கப்பட்ட சுவட்டின் அடையாளத்தால், நடந்தவனைக் காணவில்லையாயினும் நடந்தவன் ஒருவன் உண்டெனவும் அறிவதைப் போல், 'ஹக் தஆலா உண்டென்று அறிவின் 'ஆதாரம் கொண்டு உண்மை கொள்வது.

(**வினா**) படைக்கிறவனென்னும், 'ஹக் தஆலா'வேயில்லாமல் படைப்புகளனைத்தும், தானே உண்டாகி, தானே அழிகிறதெனவும், தானே, அதன் குணப்பாட்டின்படி நடக்கிறதெனவுஞ் சொல்லலாகாதோ?

(**விடை**) 'ஆதத்து' வழக்கப்படி ஆணும், பெண்ணும் சேர்ந்தால் சிசு உற்பத்தியாகின்றது, அப்படிச் சேராதவரை சிசு ஜனிப்பதில்லை. நெருப்பு, மண் முதலியவற்றைக் கரித்துப் போ|டுகின்றது. ஜலம் நெருப்பை அணைத்துவிடுகின்றது. காற்று தண்ணீரைக் கரியச் செய்கின்றது. இக்காரணங்களால், ஒன்று மற்றொன்றோடு சேராதது வழக்கமல்லவா?

அப்படியிருக்க 'செய்யிதினா அபூனா ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்குத் தாய் தந்தை இல்லாதிருக்க எவ்வாறு உற்பத்தியானார்கள்?

உம்முனா ஹவ்வா அலைஹிஸ்ஸலாம் அவர்களும் தாய் தந்தை இல்லாதிருக்க செய்யிதினா ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் விலா எலும்பில் நின்றும் எவ்வாறு உண்டானார்கள்.

செய்யிதினா ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தந்தை இல்லாதிருக்க எப்படி உண்டானார்கள்?

மண், தண்ணீர், காற்று, நெருப்பாகிய 'அனாஸிறு' பூதங்களை, ஒவ்வொரு ஜீவராசிகளிடத்தும் சேர்த்து எவ்வாறவைகளை உண்டாக்கப்பட்டன.

அப்பூதங்கள் ஒன்றுக்கொன்று விரோதமின்றி எவ்வாறு சேர்ந்திருக்கின்றன?

செய்யிதினா இப்றாஹிம் அலைஹிஸ்ஸலாம் அவர்களை நெருப்பு ஏன் சுடவில்லை?

மேலும் அவர்களது மகனார் இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களை அறுத்ததில் அவர்கள் ஏன் அறுபடவில்லை?

மலாயிகத்துமார்களிலொரு பகுதியை நெருப்பினாலும் மற்றொரு பகுதியை பனிக்கட்டியாலும் எவ்விதம் படைக்கப்பட்டது? இவைபோல் இன்னும் அநந்தம் 'ஆதத்து' வழக்கத்திற்கு மாற்றமாயிருக்கின்றன.

ஆதலால் இவைகளினால் குத்றத்து வல்லமையுடைய வாஜிபுல் வுஜூதாகிய ஹக்தஆலா ஒருவன் நித்தியனாயிருக்கின்றானெனவும், அவனைக் கொண்டு உண்மை கொள்ள வேண்டுமெனவும் உறுதிப்படுத்தப்படுகின்றதல்லவா?

அப்பால் 'முஷாஹதா' என்னும் காட்சியைக் கொண்டும், ஹக்தஆலாவைக் கண்டு உண்மை கொள்ள வேண்டும். அதன்பின் யாவற்றையும் அழித்து 'ஸர்வம் பிரஹ்மமய'மென்று ஈமான் கொள்ள வேண்டும்.

ஆயினும் குரு அல்லது குருவையொத்த மேதாவிகளின் சொல்லைக் கொண்டு ஈமான் கொள்வது சாதாரண மக்களின் ஈமானாகும். அவர்களுடைய ஈமான் 'துருஷ்து' பரிசுத்தமுடையதென்றும், பரிசுத்தமுடையது அல்ல என்றும் 'கிலாபு' சந்தேகத்திற்கிடமாயிருக்கின்றது. 'முஷாஹதா' வென்னும் காட்சியைக் கொண்டு ஈமான் கொள்வது, ஹக்குக்குத் தனதானவர்கள் என்றும், 'கவாஸ்' களுடைய ஈமானாகும். யாவற்றையும் சூனியமாக்கிச் சர்வமும் பிரஹ்மமய என்ற நிலையில் நிற்பவர்களது ஈமான் ஹக்கிலிரண்டறக்

கலப்பதென்னும் முகர்ரபீன்களுடைய ஈமானாகும். இதற்காகவே 'மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள்

*'றப்பீ அரினீ அன்ளுற் இலைக்க'*

**(பொருள்)** என் ஆண்டவனே! உனது தாத் என்னும் உண்மையை எனக்குக் காட்டுவாயாக. நான் உன் உண்மையளவிற் பார்ப்பேனாக! என்றார்கள்.

அவன் தன் உண்மையையும், வருணனைகளென்னும் ஸிபாத்தையும் காட்டிக் கொடுத்தபோது, ஹக்தஆலாவின் உண்மையிலும், வருணனையிலும் தன்னையிழந்து சூனியமாக்கி மாய்ந்து விட்டார்கள்.

ஆகையால் நப்ஸென்னும் மனமென்ற மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அடித்து விழுந்து விட்டார்கள். அவர்கள் 'பனா, அழிவை விட்டும் 'பகா' ஹக்குடைய உண்மையையும் வருணனைகளையும் கொண்டு தெளிந்த போது மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் சொன்னார்கள்:

*சுபுஹானக துப்து இலைக்க வஅனா அவ்வலுல் மு:மினீன்*

**(பொருள்)** ஆண்டவனே! உன்னைப் பரிசுத்தனென்று தியானிக்கிறேன். என்னைவிட்டு உன்னளவில் மீண்டேன். என்னுடைய சுய சொரூபம் உன்னுடைய சுய சொரூபமென்றீமான் கொண்டவர்களில் யான் முந்தினவனாயிருப்பேனென்றார்கள்.

இந்தப் பதவி முகர்ரபீன்களுடைய பதவியாம். ஆதலால் ஈமானாவது ஐந்து வகைப்படும்.

ஒன்று தக்லீதுடைய ஈமான். அது எதுவுமோர் தலீலில்லாமல் குருக்கள் போன்றவர்களுடைய சொல்லாலுண்டாகிற ஈமான். இரண்டாவது அகீதாக்களை அறிவதிலுண்டாகிற ஈமான். மூன்றாவது ஒரு இமைக் கொட்டி விழிக்கும் நேரமாவது ஹக்குடைய முராக்கபாவை விட்டும் கல்பு மறைந்திராதபடி ஹக்கை முராக்கபா செய்வதாலுண்டாகிற ஈமான். நான்காவது கல்பைக் கொண்டு ஹக்கை முஷாஹதாச் செய்வதாலுண்டாகிற ஈமான். ஐந்தாவது ஹக்கைத் தவிர வேறொன்றையும் ஷுஹூதுச் செய்யாதிருப்பதாலுண்டாகிற ஈமான். இன்னும், பத்ஹுர் ரஹிமா என்னும் கிதாபில்,

*அல்ஈமானுல் காமிலு குறூஜுக்க மின்ஹு*

**(பொருள்)** நிரம்பிய ஈமான் நானென்னம் குகையையும் அவனென்னும் குகையையும் விட்டு வெளியிலாவதாமென வருகின்றது. அதாவது ஹக்குக்குத் தனதாக்கப்பட்ட வருணனைகளில் நின்றும் ஒரு வஸ்துவிலேனும் அவனுடன் நீ இணையாகாமல் இருப்பதாம்.

*வல்யக்கீனுஸ் ஸாதிகு குறூஜுக்க அன்க*

**(பொருள்**) உண்மையான எகீன் பூரண நிலையாவது 'நீ' என்பதை விட்டு வெளிப்படுவதாம். அதாவது வல்லமை, சக்தி, உண்மையை விட்டும் வெளிப்படுவதாம்.

*'வயிதாஸாத ஈமானுக ஸாறத்தில் குயூபுஅய்னன்'*

**(பொருள்)** இப்படி ஈமானும் நிர்ணயமென்னும் எக்கீனும், அதிகமாகுமேயானால், மறைபொருளானதெல்லாம் கண் காட்சியாகிவிடும்.

இன்னும் புதுஹாதுல் இலாஹிய்யா என்னும் கிதாபில் வருகிறது, ஹக்கிடம் செல்பவனுக்கு அவசியம் தன்னை தேக அளவாய்க் காண்பதைப் பாழ்படுத்தி உலகத்தில், தன்னை எல்லையற்றதாக விரித்துவிட வேண்டும்.

உலகத்தில் தன்னைத் தேக அளவாய்க் காண்பது போலி மக்களுக்குள்ள கொள்கை, தன்னை எல்லையற்றவனாகக் காண்பது பூரணஞானியின் கொள்கை. இதை ஒப்பக்கைவல்லிய நவநீதத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது.

**'சத்தொடு சித்தாநந்தஞ் சமந்திரஞ் சாஷியேகம்**

**நித்தியம் வியாபியான்மா நீயதுவா யறிந்து**

**பொத்தொடு சடத்துக்காதி பொருந்து பேதங்களான**

**குத்திர பஞ்சகோசக் குகைவிட்டு வெளியிலாவாய்'**

அதாவது சத்து, சித்து, ஆனந்தம் என்பது சிவத்தின் சொரூபம். அசத்து, ஜடம், துக்கம் என்பது ஜெகத்தின் சொரூபம். ஆகையால் சத்தென்றது முக்காலமுள்ளதும் சித்தென்பது சுயம் பிரகாசமானதும், ஆனந்தமென்பது துக்கமற்றதும் சமமும், ஸ்திரமும், சாட்சியும் யேகமும், நித்தியமும் பூரணமாக விளங்குவது ஆத்ம ஸ்வரூபம்.

ஆதலால், ரூஹுல் குத்ஸென்ற கூடஸ்தனே பிரஹ்மமென்ற அல்லாஹ், பிரஹ்மமே கூடஸ்தன் என அத்துவித ஸ்வயரூபமாகத் தரிசித்து 'அநுர்த்த ஜடதுக்கம்' முதலியவற்றை அடையானென்ற வேறுபாடுள்ள வஞ்சகமான பஞ்சகோசமாகிய தேகத்தை நீக்கி வெளிப்படுவாய் என்பதாம்.

கருத்தாவது, பஞ்சகோசங்களைக் கண்டு: அவைகளுக்கு இலட்சணமாவாயென்பதாம். பஞ்சகோசமாவது யாதெனில், அவைகளுக்கு ஐந்து வகையுண்டு.

1ஆவது இந்த தூல சரீரமே (அன்னமய கோசம்) 2ஆவது சூஷ்ம சரீரம் மூன்று கோசங்களாக இருக்கும். அஃதெங்ஙனமெனில், பிராணவாயும், கன்மேந்திரியமென்ற வாக்கு, பாதம், பாணி(கை) பாயுரு(பின்துவாரம்), உபஸ்தம்(முன்துவாரம்) இவ்வாறும் கூடி (பிராணமய கோசம்). 3 ஆவது மனதும் ஞானேந்திரியமும், அதாவது சுரோத்திரம் (காது), தொக்கு (உடம்பு) ஸட்சு (கண்), சிங்யுவை (நாக்கு) ஆக்கிராணம் (நாசி) இவ்வாறும் கூடி (மனோமய கோசம்). 4 ஆவது

புத்தியும், மேற்சொல்லிய ஞானேந்திரியம் ஐந்தும் ஆக இவ்வாறும் கூடி (விஞ்ஞானமய கோசம்) 5ஆவது காரண சரீரமாகிய அஞ்ஞானமே ஆனந்தமயகோசம். ஆக இப்பஞ்சகோசங்கள் ஐந்தையும் விட்டு வெளியிலாவாய். (ஐ)இன்சானே!

மேலே கூறப்பட்ட சிவ சொரூபமாய் நில்லு, அந்த சிவ சொரூபமே உனது சுயசொரூபமாகும். ஜெக சொரூபமாகிய அஸத்து ஜடம், துக்கம், அதாவது முக்காலமுமில்லாத அஸத்தும், சுயம் பிரகாசமில்லாத ஜடமும் துக்கமும் உனது சுய சொரூபமல்ல. ஆகையால், உன் சொந்த நிலையை விட்டு அந்நிய நிலைக்குப் |போகாதே. இன்னும் கைவல்லிய நவநீதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

**'பிறந்த துண்டானாலன்றோ பிறகுசாவது தானுண்டாம்**

**பிறந்ததேயில்லை யென்னும் பிரமமாவதுவு நானே**

**பிறந்தது நானன்றாகிற் பிரமென்றந்த நானே**

**பிறந்தது மிறந்ததற்ற பிரப்மமா நானே நானே'**

**(பொருள்)** நம்முடைய சுய சொரூபமாகிய சிவ சொரூபத்தை கவனிக்கும்போது ஜனித்தது உளதாயின் அன்றோ பின் மரித்தலுமுளதாம். ஜனித்ததே இன்று என்னும் பிரஹ்மம் என்பது நானேயாம். ஜனித்தது நானல்லனாயின் பிரஹ்மம் என்று சொல்லப்பட்ட அந்த நானே! உற்பத்தியும், லயமுமில்லாத பிரஹ்மமாகிய கூடஸ்தன் நானே!

கருத்தாவது, சாமவேத மகாவாக்கியப்படி அது 'நீ'யானாய் என்பார். பிரஹ்மம் 'நானே' என்றார். பிரஹ்மமென்பது 'அது' என்னும் ஆனந்தமும், 'நான்' என்பது 'நீ' என்னும் வித்தையும், 'ஆம்' என்பது ஆனாய்! என்னும் ஐக்கியமும் ஆமெனக் கொள்க.

ஆனால், நான் நீ, அவன், என்று நாம் பேசுவதில் தானென்னும் பதம் எல்லாவற்றிற்கும் பொதுவாயுள்ள, அர்த்த பதமாயிருப்பதால் முன்கூறிய பதங்கள் வெறும் பதங்களாகும்.

ஆகையால், நான் என்பதை உணர்ந்து மற்றவைகளைக் களைந்து தானென்னும் பதத்தில் (ஐ) இன்சானே! நீ தரித்திரு. இதற்காகவேண்டித்தான் அல் ஆரிபுர் ரப்பானி அப்துல் கரீமுல் ஜீலி ஆண்டவர்கள் இன்ஸான் காமிலென்னும் கிதாபில் குல்ஹுவல்லாஹு அஹதுக்கு வியாக்கியானம் செய்திருக்கிறார்கள். அதாவது:

*'காலல்லாஹுத் தஆலா யா முஹம்மத் ஹுவ அய்யுல்யின்சானி அல்லாஹு அஹது பஹுஉல்யிஸராதி பீஹுவ றாஜிவுன் யிலா பாயிலுன் குல்ஹுவ அந்த வயில்லா பொலா யஜுஸு யிஆதன்னமீரி யிலா கொய்ரி மதுகூரின் அல்லாகுஸ் ஸமது லம்யலிது வலம்யூலது வலம்யகுன்லஹு குபுவன் அஹது'*

**(பொருள்)** முஹம்மதே! சத்து, சித்து, ஆனந்தம், சமம் ஸ்திரம், சாட்சி யென்ற பிரஹ்மமே அலல்லாஹ்வாயிருக்குமென்றும் ஏகமென்னும் பிரஹ்மமாகிய இன்ஸான் எப்போதும் சகல

ஹரித்திலும், யாவரும் நாடப்பட்டவனென்றும், அவன் ஒருவரை பெறவுமில்லை! அவனை ஒருவரால் பெறப்படவுமில்லை! ஒருவரும் அவனுக்கு நிகராகயிருக்கவுமில்லை! என்று சொல்லும் இதற்கிணங்க சந்யாசி கீதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது:

**'ஆண் பெண்ணில்லா ஆன்மாவானது**

**எவர்க்கே தந்தை எவர்க்கே மைந்தன்**

**எவர்க்கே பகையது எவர்க்கே உறவது'**

ஐ! இன்சானே! அத்வைதமென்பதற்கும், துவைதமென்பதற்கும், அத்தியாரோபமென்பதற்கும், அபவாதமென்பதற்கும் பொருள் அறிந்து புத்தியால் தெரிந்து கொள்க.

(**வினா**) அத்துவைதம் என்றால் என்ன?

**(விடை**) அத்துவைதமென்றால் அத்-துவைதம் என்று இரண்டு பதமும் சேர்ந்து அத்துவைதமாயிற்று. அத்-இல்லை என்றர்த்தம். துவைதம் என்றால் இரண்டு என்று பொருள். இரண்டு பதத்தையும் ஒன்றாக்கினால் இரண்டற்றது ஒன்றேயுள்ளது. அதாவது, ஆத்மாவாகிய பரப்பிரஹ்மம் ஒன்றேயுள்ளது. மற்ற பூத பௌதிகங்களெல்லாதம் பொய் என்பதாம்.

(**வினா**) பார்க்கும் பிரபஞ்சமெல்லாம் பொய்யா? இதென்ன ஆச்சரியம்?

**(விடை**) ஆம்! பொய்தான். அதாவது அத்தியாரோபம் அபவாதம் இவைகளினால் தத்துவ நிர்ணயத்தை அறிந்தால் பார்க்கப்பட்ட பூதபௌதிகாதி பிரபஞ்சங்களெல்லாம், வெறும் கற்பனை என்னும், பிரஹ்மம் ஒன்றே சத்தியமாயிருக்கிறதென்றும் நன்கு விளங்கும்.

**(வினா)** அத்தியாரோபம் என்றால் என்ன?

**(விடை)** அதி-ஆ-ரூப! முப்பதமும் சேர்ந்து அத்தியாரோபமென்றாயிற்று. அதாவது, தோற்றப்பட்ட வஸ்துவின் ரூபம் பொய் என்றாகும். ஆனால் அதில் 'அதி' என்றால் வஸ்தென்றும், 'ஆ' என்றால், பொய் என்றும், 'ரூபம்' என்றால் உருவம் என்றும் அர்த்தம். அதாவது கிளிஞ்சியினிடத்தில் வெள்ளியும், கயிற்றினிடத்தில் பாம்பும் எவ்விதமாய் கற்பித்திருக்கின்றதோ? அதேபோல் பிரபஞ்ச மற்றதாகிய ஆன்ம வஸ்துவிற் பிரபஞ்சத்தை கற்பிப்பதேயாம்.

(**வினா)** இந்த கற்பனை உண்டாகக் காரணம் என்ன என்று கேட்கில்?

**(விடை**) அது ஆத்மாவின் ஸ்வயரூப ஞானமில்லாமையாலே வந்தது. இதற்காக வேண்டி ஹக்கு சுப்ஹானஹூத்தஆலா குர்ஆனில் 'ஆலம்' என்கிற உஜூதை பொய்யாக்கி திருவுளமாயிருக்கிறான்.

*(இன்ஹாதா யில்லக்திலாகுன் ஐ யிபுக்குன்)*

**(பொருள்)** இந்த கல்க்கென்றது பொய்யல்லாது மெய்யன்று. எதுபோலெனில், கண்ணாடியின் தோற்றமானது பார்க்கிறவன் அன்றி வேறில்லை. அதின் ஸிபத்;தும், செயலும், பார்க்கிறவன் ஸிபத்தும், செயலும் அல்லாமல், அது தனக்கு ஒரு செயலில்லை. இதற்காகவேண்டி அல்லாஹுத்தஆலா குர்ஆனில் திருவுளமாயிருக்கிறான்..

*வல்லாஹு கலக்கும் வமா தஃமலூன்*

**(பொருள்)** அல்லாஹு தஆலா அவன் தன்னை நீங்களாக வெளிப்படுத்தி அவன் செயலை உங்கள் செயலாக வெளிப்படுத்தினதெல்லாம் மேற்சொல்லிய உவமானம் போலாயிருக்கும். ஆனால், அத்தியாரோப யுக்திக்குக் கூடிய அர்த்தமாவது என்னவென்றால், ஒரு வஸ்துவில் மற்றொரு வஸ்து தோற்றப்படுவது.

அது எதுபோலவெனில், திருஷ்டாந்தத்தில் கிளிஞ்சியினிடத்தில் வெள்ளியும், கயிற்றினிடத்தில் பாம்பும், கட்டையினிடத்தில் கள்வனும், கானலிடத்தில் ஜலமும், ஆகாயத்தினிடத்தில் நீல வர்ணமும், எப்படிக் கற்பிக்கப்பட்டனவோ அப்படியே திருஷ்டாந்தத்தில் நிஸ்பிரபஞ்ச சொரூபமான ஆத்மாவினிடத்தில் பிரபஞ்சம் கற்பிதமாய் தோற்றப்பட்டிருப்பதே அத்தியாரோமாம்.

**(வினா)** இனி அபவாத யுக்தியாவது யாதென்று கேட்கில்?

**(விடை)** காரணத்துக்கு அந்நியமாய் காரியமில்லை என்பதாம். அது எதுபோலவெனில், மண்ணால் உண்டாக்கப்பட்ட கடம் முதலிய பாண்டங்கள் மண்ணுக்கு அந்நியமாய் எப்படி காணவில்லையோ, நூலினால் உண்டாக்கப்பட்ட புடவைகள் நூலுக்கு அந்நியமாய் எப்படி காணவில்லையோ, பொன்னால் உண்டாக்கப்பட்ட ஆபரணங்கள் பொன்னின்றி அந்நியமாய் எப்படி காணவில்லையோ, இரும்பால் உண்டாக்கப்பட்ட ஆயுதங்கள் எப்படி இரும்புக்கு அந்நியமாய் காணவில்லையோ, அப்படிப்போல ஆத்மாவினால் உண்டாக்கப்பட்ட பிரபஞ்சங்கள், ஆத்துமா அன்றி வேறில்லை என்பதாம்.

ஆகையால் ஆத்ம ஸ்வரூபத்தை அறிவது, (ஐ) இன்சானே! உனக்கு கடமையாகும். ஆனால், அஞ்ஞான சொரூபத்தை அறியாமல் ஆத்ம ஸ்வரூபத்தை அறிய முடியாது.

**(வினா)** அஞ்ஞான சொரூபம் என்னவென்று கேட்கில்?|

**(விடை)** தன்னைத்தான் அறியாதிருப்பதே அஞ்ஞானமாம்.

**(வினா)** எவர்களும் தன்னைத் தான் அறியார்களாவென்று கேட்கில்?

**(விடை)** ஆம். அறியார்கள்.

**(வினா)** எவரானாலும் தன்னைத் தான் அறியாமலிருக்கிறார்கள் என்று சொல்லலாமா என்றால்?

**(விடை)** ஆம். சொல்லலாம்.

**(வினா)** ஆனால், தன்னை மற்றெப்படி அறிந்திருக்கிறார்களென்று கேட்கில்?

**(விடை)** நான் மனிதன். நான் பெண். நான் புருஷன், நான் துருக்கன், நான் சத்திரியன், நான் வைரியன், நான் கிறிஸ்துவன், நான் சந்நியாசி, நான் நாராயணன், நான் ஸைது என்று இவ்விதம் தன்னை அறிகிறார்களே அல்லாமல் வேறாய் அறியவில்லை.

ஆகையால் தன்னுடைய ஆத்ம ஸ்வயரூபத்தை அறிவது பிரஹ்ம ஸ்வயரூபத்தை அறிவதாம். பிரஹ்ம ஸ்வயரூபத்தை அறிவது ஆத்ம ஸ்வயரூபத்தை அறிவதாம். தானென்பது அறிவாகிய ஆத்மாவாகயிருக்கும்.

**(வினா)** ஆத்மாவாவது என்ன?

**(விடை)** ஆத்மாவானது சரீர இந்திரியங்களுக்கும், பஞ்ச கோஷத்திற்கும், அந்நியமாயும் அவஸ்தாதிரியங்களுக்கு சாட்சியாயுமிருக்கிற ஸச்சிதானந்த சொரூபமே ஆத்மாவென்று சொல்லப்படும்.

இதற்காக வேண்டித்தான் கீழக்கரையில் அடங்கி மறைந்து வாழும் மெஞ்ஞான சொரூபராகிய எங்கள் நாயகம் 'தைக்கா சாகிபு' ஆண்டவர்கள்,

**'தானென்றது ரூஹு அதிலே நின்றும்**

**தனியோன் ஸிபாத்துகள் வெளியானதால்**

**பானியானவ ரதுகளைத்தான்**

**படைத்தோன் அளவிலே சேர்ப்பார்களே'**

என்று சொல்லியிருக்கிறார்கள்.

ஐ! இன்சானே! தத்துவங்கள் 96ல் முக்கியமாய் 36 தத்துவத்தை அறியாமல், 'நீ' என்ற உண்மை உனக்கு விளங்காது.

**(வினா)** அந்த 36 தத்துவங்கள் எவை என்று கேட்கில்?

**(விடை)** முப்பத்தாறு தத்துவத்தில் எப்போதும் தானாக விளங்குவது அறிவு ஒன்றே! இவ்வறிவே அவன் தாத்திரியங்களுக்கு சாட்சியாக இருக்கிறது. மற்ற முப்பத்து ஐந்து தத்துவங்களுக்கு விலட்சணமாயிருந்து அவைகளில் ஒன்றுமே தானல்ல என்று பகுத்தறிந்ததுவே பேரறிவாகிய ஞானாத்மாவாம். இது கூடஸ்த சைதன்னியமும், சுத்த பிரஹ்மமுமாம். இதில்லாவிடில் ஜீவர்களுக்கு அறிவில்லை. அந்த அறிவு கொண்டு கருத்தாவது சுட்டறிவு கெட்ட சுகாதீத அறிவாம். அதாவது ஸச்சிதானந்த லட்சணம் பொருந்தியது. இதற்கு அறியாமை என்பது கிடையாது.

மேலே சொல்லிய முப்பத்தைந்து தத்துவங்களில் தனக்கு அந்நியமாய் விளங்குவது (7) தத்துவம். அவை பஞ்சபூதம்(5) மாயை(1) மாயையில் பிரதிபிம்பித்த ஈஸ்வரன்(1) ஆக தத்துங்கள் ஏழாம்.

**(வினா)** மாயை என்றும், ஈஸ்வரனென்றும் சொல்வது என்னவெனில்?

**(விடை)** மாயை என்பது நிதார்த்த சொரூபத்தைத் தெரியாத மயக்கமாம். அந்த மயக்கத்தினால் ஏற்படுத்திக் கொண்ட மதவாதிகள் தெய்வம் ஈஸ்வரனாம். இவற்றில் பிருதிவியில்லையாகில் சகல ஜீவர்களுக்கும் ஆகாரமும், அப்புயில்லையாகில் பானமும், அக்னியில்லையாகில் பாகப்படுத்துதலும், வாய்வு இல்லையாகில் சுவாசம் விடுதலும், ஆகாயமில்லையாகில் திரிதலும், மாயை இல்லையாகில் பிரபஞ்சமும், ஈஸ்வரன் இல்லையாகில் சகல மதங்களுக்கும் தெய்வம் இல்லையாம். மேற்சொல்லிய ஏழு தத்துவங்களின் ரகசியமாகிய பஞ்சகிர்த்தியமென்ற ஆக்கல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளுதல் ஆகிய தச அவதார முதலியவை, ஜீவர்களுடைய தொழிலல்ல.

ஆகையால், மேற்சொல்லிய ஏழு தத்துவங்களும் தனக்கு அந்நியமாயிருக்கின்றனவாம். மற்ற (28) தத்துவங்களையும், ஜீவர்கள் கற்பிதமாகவும், தாமாகவும், தமக்கந்நியமாகவும் வழங்குவார்கள்.

தூல சரீர தத்துவங்கள் ஆறையும் அதாவது சர்மம் (தோல்), உதிரம்(இரத்தம்), மாமிசம், சானயிவு (நரம்பு), அத்தி (எலும்பு), மச்சை (மூளை) இவைகளை ஒன்றாய்ச் சேர்த்து யான் பகுத்தேன். யான் இளைத்தேன், என்று தாமாகவும், என் சரீரம் பருத்தது, என் சரீரம் இளைத்தது என்று தமக்கன்னியமாகவும் வழங்குவார்கள்.

இனி குஷ்ம சரீர தத்துவம் (20) அதாவது, அந்தக்கரணம் என்ற மனம், புத்தி, சித்தம், அகங்காரம், உள்ளம் ஆக (5)ம், ஞானேந்திரியம் என்ற காது, உடம்பு, கண், நாவு, நாசி ஆக (5)ம் கன்மேந்திரியம் என்ற வாய், கை, கால், ஆசனம், குறி ஆக (5)ம், வாய்வு என்ற வியானன், (சர்வ அங்கமும் வியாபித்திருக்கும்), பிராணன்(நாசி வழியாக நடக்கும்), அபானன் (பின் துவாரத்தில் நிற்கும்), சமானன் (தொப்புளில் நிற்கும்), உதானன் (கண்டஸ்தானத்தில் நிற்கும்) ஆக (5)ம்,

ஆகக் கூடிய தத்துவங்கள் இருபதையும் யான் கேட்டேன், ஸ்பரிசித்தேன், பார்த்தேன், தின்றேன், முகர்ந்தேன், உரைத்தேன் என தாமாகவும், நாவு சுவை அறிந்தது, நாசி முகர்ந்தது, வாய் பேசியது, கை கொடுத்தது, கால் நடந்தது, ஆசனம் மலஜலங்களைத் தள்ளியது, லிங்கம் ஆனந்தமடைந்தது என தமக்கன்னியமாக காரண சரீர தத்துவங்களாகிய அஞ்ஞானமும், ஜீவனும் எனக்குத் தெரியும், தெரியாதென தாமாகவும், என் அஞ்ஞானம், என் ஜீவன் என தமக்கந்நியமாகவும் வழங்குவார்கள்.

ஆகையால் உனக்கன்னியமாக விளங்கப்பட்ட தத்துவத்தை 'நீ'யாகவும், உனக்கந்நியமாக விளங்கப்பட்ட தத்துவத்தை நீக்கி, எப்போதும் விளங்கப்பட்ட அறிவு ஒன்றே 'நீ'யாயிருக்கும். அந்த அறிவே சுத்த பிரஹ்மம்.

அந்த நீயென்ற சுத்த பிரஹ்மத்தையே தியானி. உன் சாக்கிரம் என்ற விழிப்பில் இந்திரிய மன வியாபாரங்களில்லாமல் அறிவு மாத்திரமாயிருப்பாய். இதனை அறிதுயிலென்றும், தூங்காத தூக்கமென்றும், யோக நித்திரை என்றும் சொல்லப்படும்.

ஐ! இன்சானே! சடத்தை நீக்கி ஸச்சிதானந்தமென்றதை உடல், பொருள், ஆவியாக்கி அதீத நிலையில் நில். இதுவே உன் சொந்த நிலை. எந்த நிலையும் இதற்கு ஈடாகாது.

இதற்காக வேண்டித்தான் கீழக்கரையில் வாசஞ்செய்து மறைந்து வாழும் என்னுடைய குருபிரான், 'செய்யிது அப்துல் காதிர்' என்று நாமம் சூட்டப்பட்ட 'கல்வத்து ஆண்டவர்கள்' அவர்களுடைய இருபாதமும் என் சிரமீதில் கொண்டேன். அவர்கள் எனக்குப் போதித்த பிரஹ்ம உபதேசத்தில் நின்றுமுள்ளது. அதாவது:

'**தாத்து தாத்தோடே, சுரக்குடுக்கை ஆத்தோடே**' என்றார்கள்.

அதாவது, உன்னுடைய உள்ளமை ஹக்குடைய உள்ளமை. ஹக்குடைய உள்ளமை உன்னுடைய உள்ளமை. ஆகையால் உனக்கந்நியமாய் விளங்கும் தத்துவத்தையும், உன்னையும் பாழ்படுத்தி, 'நீ' என்ற தாத்தை ஹக்குடைய தாத்துடனே ஐக்கியப்படுத்தி ஐக்கியப்படுத்தினோமென்ற போதமும் கெட்டு, நிராம்ஸமாய் நிற்பாய்.

நீயாகவும், உனக்கந்நியமாகவும், விளங்கப்பட்ட தத்துவங்கள் என்ற சுரக்குடுக்கையை, வாஸ்தவத்தில் இல்லாததாகிய மாயை என்னும் பெரும் வெள்ளத்தில் விட்டுவிடு! கிஞ்சித்தும் நினையாதே! என்றார்கள்.

(ஐ)இன்சானே! தேகத்தை நீ என்றும், உலகத்தை சத்தியமென்றும், எண்ணாதே! அது உன்னுடைய கொடிய சத்துரு. எது வந்தாலும், எது போனாலும், கைசேதப்படாதே. தேகவாதனையும், மனவாதனையும், உனக்குள்ளதென்றும், அதனால் கஷ்டப்படுவதாயும் எண்ணாதே.

நீயாகிறது பிரஹ்மமாகிய அரூப அம்ஸத்தை சேர்ந்தவனாயிருப்பதால், உனக்கு ஒன்றுமில்லை, கிஞ்சித்தும் பயப்படாதே. கஷ்டமும், கவலையும் முக்கரணமென்ற மனம், வாக்கு, காயத்திற்குள்ளது. இதற்கிணங்க சொரூப சாரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

**'ஏதேது வந்தாலும் மேதேது செய்தாலும்**

**மேதேதி லின்புற் றிருந்தாலும் -மேதேதுந்**

**தானாகா வண்ணம் தனியே தெரிந்திருக்கும்**

**ஞானகாரம் தானே நாம்'**

குணங்குடி மஸ்தான் சாகிபு அவர்கள் திருப்பாடலில்,

**'வஞ்ச வேல்கொடு மார்பி லெறியினும்**

**விஞ்சவே தழல் மூட்டி யெரிக்கினும்**

**நஞ்சி னாரழ னாக நலியினும்**

**அஞ்சிடா தவ ரானந்த மாவரே**' என்றார்கள்.

(ஐ)இன்சானே! 'நீ' என்றதை விசாரிப்பதே உனது கடமை. ஆனால் நீ இந்த உடலா! இந்த உடல் நீயாயின் நீ தூங்கும்போது இவ்வுடலில் சர்ப்பம் ஊர்ந்தாலும் நீ அறியமாட்டாய். அப்படியிருக்க நீ உடலாவாயா? ஆக மாட்டாய்.

இவ்வுடலுக்கு நீ வேறாயுள்ளவனாயிருக்கிறாய். நீ தூங்கும்போது கான காணுகிறாயே அந்தக் கனாவில் உன்னை ஊதோ ஒருவனாய் எண்ணிக் கொள்கிறாய். அவ்வொருவன் நீயா? 'நீ'யல்ல.

அவ்வொருவன் நீயாயிருந்தால் விழித்தவுடன் அவனை எங்கே? என்றாலும் அவன் என்று எண்ண வெட்கமாகும்.

'நீ' அவ்வடிவத்திற்கு வேறாயுள்ளவன். 'நீ' அயர்ந்து தூங்கும் சுழுத்திதான் உன் வடிவமோ, அதுவுமல்ல. என்கிலும் அதை ஒப்புக் கொள்ளவும் சம்மதம் இராது. ஏனென்றால் அறிவற்ற நிலைமையை ஒப்புக் கொள்ள மாட்டாய்.

நீ அறிவுள்ளவனானபடியால் அறிவற்ற நிலைமை உன்னிலைமை அல்ல. நீ அதற்கு வேறாயுள்ளவன். மூவித உடலும் அவைகளின் புறம்பிலுள்ளதும் நீயல்ல.

இம்மூவகை வடிவமும் இரு வகையில் அடங்கும். அதாவது ஒன்று அறியும் நிலைமை. மற்றொன்று அறியா நிலைமை. இந்த இரு வகை நிலைமையில் அறியும் நிலைமை சாக்கிரத்திலும், சொப்பனத்திலுமிருக்கிறது. அறியா நிலைமை சுழுத்திலிருக்கிறது.

இந்த இருவகை நிலைமையும் உன் சொந்த நிலைமையல்ல. நீ இந்த இருவகை நிலைமைக்கும் வேறாயுள்ளவன். இதை துரியமென்று சொல்லப்படும்.

அது எப்படியென்றால், சுட்டறியும் அறிவும், அறியாமையில்லாத அறிவாகாரமானது. அந்த துரியத்தை ஒரு லட்சணமாவது கண்டவன் உண்மையைக் கண்டவனாவான். அத்துரியமே 'நீ', நீயே பிரஹ்மம், இந்தி நிலையில் நில். இதை எப்பொழும் மறக்காதே.

உனக்கன்னியமாய் ஒன்றையும் கற்பிக்காதே. இதே அபேத நிலை, கண் மூடினாலும், விழித்தாலும் எது வந்து நேரிடினும், உனக்கு ஒரே நிலைதான். இதுவே பிரஹ்ம நிலையாகும். இதற்கு மேலில்லை.

நீ, எப்போதுமுள்ளவன். உனக்கு ஆதியில்லை. நீ நஸியாதவன். உனக்கு அந்தமில்லை. நீ பூரணமானவன். உனக்கு சுகதுக்கமில்லை. தேகம் இருப்பதைக் கொண்டு பிறந்தவனும், இருக்கிறவனுமல்ல. அதுபோவதைக் கொண்டு சாகிறவனும், போகிறவனுமல்ல. தெய்வமென்பது அருள் வடிவம். அதே 'நீ'.

இந்த நிலைமையை அறிந்தவன் கடவுளை அறிந்தவன் என்று வேதங்களில் புகழப்படுகிறான். உலகத்தில் அடையவேண்டியதும் செய்ய வேண்டியதும், இந்த அபேத நிலையேயாம். இதற்காகத்தான் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் திருவுளமானார்கள்.

*'மன் அறப நபுசஹு பகத் அறப றப்பஹு'*

**(பொருள்)** தானென்று சொல்வதை அறிந்தவன், தானென்றதே 'ரப்பென்று' அறிந்து கொள்வான். இன்னும் 'அஹ்லுல்லாக்'களிடத்தில் ஈமானும், இஸ்லாமுமாகிறது உன் தொடக்கத்தை ஹக்குடைய தொடக்கமென்பது கொண்டும், உன்னுடைய ஒடுக்கத்தை ஹக்குடைய ஒடுக்கமென்பது கொண்டும், உன்னுடைய ளாஹிரை ஹக்குடைய ளாஹிர் என்பது கொண்டும், உன்னுடைய அகத்தை ஹக்குடைய அகமென்பது கொண்டும், திடப்படுத்தியிருப்பதாம்.

இதைக் குறித்து ஜாமிவுல் உஸூல் என்னும் கிதாபில் சொல்லப்பட்டிருக்கிறது. இன்னும் அருள் வடிவமாகிய அஹ்மதுத ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய அருமை ஹதீதில் சொல்லப்பட்டிருக்கிறதாவது:

*'வஹுவம அகும் அய்னமா குந்தும்'*

**பொருள்:** நீங்கள் எங்கிருந்தாலும் அல்லாஹ் உங்களுடனேயாயிருக்கும்.

கருத்தாவது, ஹக்குத்தஆலாவுடைய 'தாத்து' நீங்களென்ற ஸிபத்துடனிருக்கும். ஏனென்றால், 'குத்ரத்'தின் குணப்பாடு 'குத்ரத்' தானாயிருக்கும். ஸிபத் என்னும் இலட்சணம் உடையானுக்கு அன்னியமாகாது. வண்ணிப்பும் வண்ணிப்புடையதும் ஒன்றே. இன்னும் வண்ணிப்பும் வண்ணிப்புடையதைக் கொண்டே ஒழிய நிலைபெறாது. இன்னும் வண்ணிப்பு வண்ணிப்புடையதில் நின்றுமே ஒழிய வெளியாகாது.

ஆகையால் ஸர்வமும் பிரஹ்ம மயம் என்றாயிற்று. இப்படி 'எவாக்கீதெ'ன்னும் கிதாபிலும், 'ஹிகமு'டைய ஷறஹ் 'யீகாளுல் ஹிமம்' என்ற கிதாபிலும் கண்டு கொள்க.

இதைப்போல் அபூபக்கர் ஷிப்லீ ரலியல்லாஹு அன்ஹு கூறியுள்ளார்கள்: அதாவது (ஐ) இன்சானே! நான் உனக்கு அச்சமூட்டுகிறேன். துவிதம் கொள்ளாதே. தப்பிதத்தை துடராதே. நீ பிரஹ்மம் என்று நில் என்றார்கள்.

**(வினா)** ஆனால் அந்தப் பிரஹ்மம் இப்பொழுது எங்கேயிருக்க வேண்டுமென்றால்?

**(விடை)** அறிவென்ற ஸிபத்திலிருக்கிறவிடத்தில் பிரஹ்மமிருக்க வேண்டும். ஆனால் அறிவு அவனை விட்டும் பிரியாததினால் அவன் இருக்கிறவிடத்தில் இந்த அறிவிருக்க வேண்டும்.

**(வினா)** இந்த அறிவு எங்கேயிருக்க வேண்டுமென்றால்?

**(விடை)** இந்த அறிவானது நம்முடைய சரீரத்திலிருக்கிறதனாலே, இந்த அறிவையுடைத்தான அந்த சிவனும் நம்முடைய சரீரத்திலேயே இருக்க வேண்டும்.

**(வினா)** அறிவு வேறு, அந்த அறிவுடைத்தானவன் வேறு என்று சொல்லலாமா என்றால்?

**(விடை)** சொல்ல இடமில்லை. ஏனென்றால் ஜுவாலை வேறு. ஜுவாலையுடைத்தான அக்கினி வேறு என்று சொல்ல எப்படி இடமில்லையோ, அதுபோலவே அறிவு வேறு, அறிவை உடைத்தான அந்த சிவன் வேறு என்று சொல்ல இடமில்லை.

எப்படி ஜுவாலையே அக்கினியாகவும், அக்கினியே ஜுவாலையாகவும் இருக்கிறதோ அப்படியே அந்த சிவனே அறிவாகவும், அந்த அறிவே சிவனாகவும் இருக்கிறான். ஆனதினால் அந்த அறிவே சிவம். அந்த சிவனே அறிவு. அவனே பரப்பிரஹ்மம். அப்பிரஹ்மமே நாம்.

இதனாலேதான் 'பிரக்ஞான பிரஹ்மமெ'ன்னும் வேதமானது கூறியிருக்கிறது: இப்படி அறிவு மாத்திரமாயிருக்கின்ற நம்மை எவனாவது அடிக்கலாமா? கத்தியினால் குத்தலாமா? அக்னியினால் எரிக்கலாமா? ஜலத்தினால் நனைக்கலாமா? நாம் ஒருவர் கையிலும் கண்ணிலும் கட்டுப்படுகிறவனல்லன்.

அறிவு மாத்திரமாக இருக்கின்ற நமக்கு இந்தச் சொத்துக்களாலும் ஈஸனாத்திரயங்களாலும் ராகத்து வேஷாதிகளாலும் அன்னபானாதிகளாலும் என்ன பிரயோஜனங்களிருக்கின்றன.

ஆகையால் பிரபஞ்சம் முழுவதும் சொல்லும் தோற்றமுமாமியிருப்பதால், நாம் கழித்த மலமாகும். ஆத்மாவை அறிந்தவனிடத்தில் ஸர்வமும் அசத்து. அசத்தே மிகவும் கெட்ட விடக்கு.

விடக்கை உகப்பது நாய். ஞானிக்கு உலகம் தான் கழித்த மலசத்தி போலாம். திரும்ப உகப்பவன் மலசத்தியை தின்றது போலாகும். ஆனதால் விதியை எடுத்து விலக்கை தவிர்ந்து கொள். உஷார்!உஷார்!! ஹக் அல்ஹம்துலில்லாஹ்.

**(வினா)** எல்லா ஜீவனும் பிரஹ்மமாயிருந்தால் ஒருவரையொருவர் துவேசிப்பது ஏன் என்று கேட்டால்?

**(விடை)** துவேசிப்பது சொரூப அம்ஸத்தைச் சேர்ந்தது. அந்தச் சொரூப அம்ஸமோ பூதக் கூட்டுறவினால் உண்டாக்கப்பட்டது. பூதக்கூட்டுறவுகள் ஒவ்வொரு ஜீவர்களிலேயுமிருக்கிறது.

அதாவது, அப்பு மிஞ்சின ஜீவர்களும், அக்கினி மிஞ்சின ஜீவர்களும் வாய்வு மிஞ்சின ஜீவர்களும், பிருதிவி மிஞ்சின ஜீவர்களுமாயிருக்கின்றன. எந்த ஜீவர்களில் எந்த பூதம் விசேடித்ததோ அந்த குணத்திலிருப்பவர்கள். குணங்களுடைய வேறுபாட்டால் துவேஷமுண்டாகிறது. ஆகையால் சொரூப அம்ஸத்தை மாயா சம்மந்தமென்று மாற்றிவிடுவானாகில் துவேஷம் வரக் காரணமில்லை.

**(வினா)** பிரஹ்மத்துக்கு எவ்விடத்திலுமுள்ள சங்கதிகள் தெரியுமே. இந்த சுவாதீத அறிவு பிரஹ்மமாயிருக்கும் பட்சத்தில் இதற்கும் அவ்விதமாக தெரிய வேண்டுமே என்று கேட்கின்?

**(விடை)** அந்தப் பிரஹ்மம் எங்கும் நிறைந்தது. ஆனபடியால் அவ்விடத்திலேயேயிருந்து அறிந்து கொள்கிறது. அந்தப்படியே இந்த ஜீவனாகிய அறிவும் அந்த சரீரங்களிலே நிறைந்திருப்பதினால் இவைகளில் நடக்கிற காரியங்களெல்லாம் அறிந்து கொண்டிருக்கிறது.

எதுபோலெனில், அக்கினியின் அம்ஸமான சூரியப் பிரகாசத்தால் உலக முழுவதும் பிரகாசிக்கப்பட்டிருக்கிறது. அந்தச் சூரிய அம்ஸமான கியாஸ் லைட் ஒரு வீதியைப் பிரகாசமாக்கி வைக்கிறது போலவே தீபம் வீட்டைப் பிரகாசமாக்கி வைக்கிறது. பெரும் ஜோதியின் அம்ஸமான சிற்ஜோதியான ஜீவனும், சரீரங்களில் பிரகாசிக்கச் செய்கிறது.

ஆனால், முன்கூறிய ஐந்து வகை ஈமானுக்கு உவமானம் சொன்னாலல்லாது சரியாய் விளங்கிக் கொள்வது அரிதாகும் என்று சிவப்பிரகாச தேசிகராகிய என்குருநாதன் கல்வத்து ஆண்டவர்கள், அவர்களது 'உலூமித்தீனெ'ன்னும் கிதாபிலும் சொல்லியிருக்கிறார்கள்.

அறிந்துகொள். ஒருவன் ஒருவனிடத்தில் வந்து ரூஹென்ற ஆத்மா என்ன வென்று கேட்கின்? சரீரத்தை ஆட்டி வைக்கிறது அல்லது அது நீங்கினவுடன் மரணமென்று சொல்கிறதுமுண்டு. அதில் யாதொன்றும் யோசிக்காமல் உண்மையாய் நம்பிக் கொள்வதுமுண்டு.

அதுபோல் அல்லாஹ்வைக் கொண்டு ஈமான் கொள்வது முதல் மற்ற ஐந்து காரியங்களையும் ஒருவர் சொல்லைக் கேட்பது கொண்டு ஒப்பிக் கொள்கிறது. இதுதான் சாதாரண ஜனங்களுடைய ஈமான்.

அப்பால் 'ரூஹென்பது' எதாயிருக்குமென்று யோசித்ததில் சரீரத்தைப் போல் இருப்பதுடன் அது கொண்டு சரீரம் இரட்டித்துப் போகிறதில்லை. அது நீங்கினவேளை சரீரம் குறைந்து போகிறதுமில்லை.

ஒரு குத்து உப்பும், ஒரு குத்து அப்பும் (தண்ணீரும்) சேர்ந்து ஒரு குத்தாகவே இருப்பதுபோல் இருக்கிறதென்று அநேக அத்தாட்சிகளைத் தேடி ரூஹென்று ஒன்று உண்டாயிருக்கிறதென்று வைப்பதுபோல், ஈமானுடைய ஆறு காரியத்திலும் கல்புடைய ஆழத்தால் யோசித்து உண்மை கொள்கிறது, இதுதான் இல்ஹாமைத் தொட்டும் உண்டாகிற அத்தாட்சியைக் கொண்டு ஈமான் கொள்கிறவர்களுடைய ஈமான்.

அப்பால் ரூஹென்பதை ஒரு ரூபமாகக் கண்டு கொள்வதுதான் கண் காட்சியைத் தொட்டும் உண்டாகிற தெரிசனை உடையவர்களுடைய 'ஈமான்'. அப்பால் ரூஹை பிரத்தியட்சமாகக் கண்டிருப்பதுடன் அதனுடைய இரகசியம் இன்னதெனத் தெரிந்து கொள்வதுதான் நிச்சயத்தைத் தொட்டும் உண்டாகி, மன்னன் அல்லாஹ்வைத் தன்னில் கண்டு கொண்ட 'ஆரிபீன்களுடைய' ஈமான். அப்பால் இரகசியத்துக்கு இரகசியமானதுதான் எப்போதும் ஹக்கின் இரகசியத்தில் தரித்திருக்கிற 'வாகிபூன்'களுடைய 'ஈமானா'யிருக்கும்.

இன்னும் ஐந்து வகை ஈமானில், ஈமானுன் கல்பி, ஈமானுன் ஸிர்ரிய்யி, ஈமானுன் ரூஹிய்யி, ஈமானுன் ஸிர்ரிரூஹிய்யி, ஈமானுன் ஸிர்ரிஸ்ஸிர்றீ என்று சொல்லப்பட்டிருக்கிறது. இன்னும் சொல்லப்படும்.

*அல்ஈமானு யிபாறதுன் அன்விஜ்தானில் ஹக்கி வதஸ்தீகுன் பில்கல்பி வயிக்றாறுன் பில்லிஸானி*

**பொருள்:** ஹக்கென்கிற பார்வையாக கல்பு நிச்சயப்படுகிறதும், நாவினால் அதுவாய் விண்ணப்பம் செய்கிறதும் ஈமான் என்று சொல்லப்படும்.இதெப்படி,

*'லாயிலாஹ இல்லல்லாஹு'*

வின் மஃனாவை யறிந்து 'ஈமான்' கொள்ள வேண்டும்.

*'லாவுஜூத இல்லல் வுஜூதல் ஹக்கி'*

**பொருள்:** மெய்யா உஜூதில்லை ஹக்குத்த|ஆலாவின் வுஜூதைத் தவிர. அதாவது, ஸர்வமும் பிரஹ்மமயமாயிருப்பதாகும் என்றும்,

*'முஹம்மதுர் ரதூலுல்லாஹி'*

**பொருள்:** அல்லாஹ் தன்னில் நின்றும் தன்னளவில் முஹம்மதென்னும் திருநாமங்கொண்டு யாத்திரையானன் என்றும் ஈமான் கொள்கிறதாயிருக்கும்.

கருத்தாவது, ஹக்கின் அம்சத்தைக் காட்ட வந்த அம்முஸியாகிய முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுமாயிருக்கும் என்று ஈமான் கொள்கிறதாயிருக்கும்.

எதுபோலெனில், சூரியன் அம்சத்தைக் காட்டுவதற்கு அதின் 'அம்முஸி'யாகிய அக்கினியைப் போல், அவனுடைய அருள்வடிவத்தைக் காட்ட வந்த அருட்கோலமாகிய முஹம்மதாயிருக்கும். இதற்காக வேண்டித்தான் ஹக்கையறிந்த ஆரிபீன்கள் கூறியுள்ளார்கள்.

*(பைத்து)*

*'லகத் ஜாவு மவ்லானா பீஸூறதி அஹ்மதி*

*வயில்லா பகைபல் ஹக்கு யுஃறபு வயுக்ஸது'*

**பொருள்:** நம்முடைய வல்லவனாகிய ஹக்கு அருட்கோலமான 'அஹ்மதுடைய' கோலத்தைக் கொண்டு உண்மையாக அவதரித்தான். அப்படி அவதரிக்காவிட்டால் ஹ்கசை எப்படி அறியப்படும்? எப்படி நாடப்படும்? என்றும்,

*(பைத்து)*

*'தஜல்லா இலாஹு தாக்க ஷக்ல முஹம்மதின்*

*இதா மாத்த ஜல்லல் ஹக்கு அய்ன முஹம்மது'*

**பொருள்:** அருட்கோலமான முஹம்மதுடைய நாயன் முஹம்மதுடைய கோலமாகத் தோன்றினான். அப்படிஅ அவன் தோன்றினானேயானால் முஹம்மதை எங்கே? முஹம்மது 'ஹக்காகவே'யிருக்கின்றார்கள் என்றும்,

*(பைத்து)*

*'அலல் மீமு பற்குன் பைன அஹதுன் வஅஹ்மதி*

*வயிஹத்த ஹய்யறு தாக்கனூறு முஜயது'*

**பொருள்:** அறிந்து கொள்! அஹதென்ற பதத்திற்கும், 'அஹமதென்ற' பதத்திற்கும் மத்தியில், 'மீம்' விதர்ப்பத்தைக் காட்டிக் கொண்டிருக்கிறது. அந்த விதர்ப்பத்தில் தட்டழிவு உண்டாயிருக்கிறது.

(ஐ)இன்சானே! நீ தட்டழிய வேண்டாம். அருள் கோலமாகிய முஹம்மது நித்தியமாகிய பெருஞ்சுடராயிருக்கும். ஆகையால் ஹக்கை அறிவதற்கு 'ரஹ்மத்' வேண்டும். ரஹ்மத் வேண்டின் வணக்கம் வேண்டும். வணக்கமில்லாவிட்டால் ரஹ்மத்தில்லை. ரஹ்மத்தில்லாவிட்டால் ஹக்கை அறிய முடியாது.

வணக்கமென்பது ஸலவாத்து. 'ஸலவாத்து' ஓதுவதைக் கொண்|டு ரஹ்மத்துண்டாகும். ரஹ்மத்துண்டானால் ஹக்கை அறிவது உண்டாகும். இதற்காக வேண்டித்தான் அவன் அன்பான திருமறையில் அருளியிருக்கிறான்

*'வமா அர்ஸல்னாக்க யில்லா ரஹ்மதன் லில் ஆலமீன்'*

**பொருள்:** ஓ! முஹம்மதே! நாம் உம்மைக் காணப்பட்ட ஆலத்துக்கும், காணப்படாத ஆலத்துக்கும், அத்துவிதத்தைக் கொண்டு ரஹ்மத்தாக அல்லாது அனுப்பவில்லை என்றான்.

ஆகையால், மிகுதியாக ஸலவாத்தை ஓதிக் கொள். இன்னும் அந்த நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் எப்படிப்பட்டவர்கள் என்றால், மனு தந்தையான ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் உடலுயிராகிய இரண்டிற்கிடையே சேர்மானமாகி ஓர் உருவாய் தோற்றப்படும் முன்பாக அல்லாஹுத்தஆலா அவர்களை நபியாக ஆக்கியிருந்தான்.

அப்பால் காலத்திற்கு காலம் பிந்தி வரும, முறையே பரிசுத்தமான முதுகந்தண்டுகளில் நின்றும் பரிசுத்தமான கெர்ப்பக் குவளறைகள் அளவில் ஒன்றின்பின் ஒன்றாக அவர்களை இறக்கித் திருப்பிக் கொண்டு வந்தான். இதற்கிடையே அவர்களால் நேர்ந்த சில மகத்துவங்களாவது ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தனது குற்றத்திற்காக மன்னிப்புத் தேடி தெளபாச் செய்யும்போது, அந்த நாயகத்தைக் கொண்டே ஆண்டவனிடத்தில் ஸிபாரிசுத் தேடி மன்னிப்புக் கேட்டதால் அவர்களுக்குப் பாவமன்னிப்பும் தெளபா கபூலும் கிடைத்தது.

நூஹு அலைஹிஸ்ஸலாம் அவர்களும், அவர்களுடைய உம்மத்துக்களும், கப்பலேறிப் போகும்போதும், 'தூபா' என்னும் ஆழியப் பெரும் வெள்ளத்தில் கொடிய அமளியாகும் போதும், அந்த அமளியை விட்டும் அந்த நாயகத்தினாலேயே ஈடேற்றமானார்கள்.

இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களை ஹலாக்காக்க வேண்டி கொடும் பாதகனான நம்ரூத்தென்னும் அரசன் வளர்த்த நெருப்பானது அந்த நாயகத்தினாலேயே குளிர்ச்சியாகவும், ஸலாமத்துக் கொடுப்பதாகவும் மீண்டது.

மேலும், அந்த நாயகமவர்களின் சிறப்பும், சங்கையும் மிக்க வலுப்பத்திற்காகவே இஸ்மாயில் அலைஹிஸ்ஸலாம் அவர்களை அறுத்து குர்பான் கொடுக்கத் திட்டம் செய்து கை, கால்களையும் கட்டி, கழுத்தில் கத்தியும் வைக்கப்பட்டபோதும், இஸ்மாயில் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு சுவனலோகத்தின் தும்பை ஆட்டைப் பகரமாக்கி அவர்களை ஸலாமத்தாக்கப்பட்டது.

'சஹ்றாக்' குடும்ப பெண்களின் நாயகியான ஆமினா ரலியல்லாஹு அன்ஹா அவர்களுக்கும் 'ஹாஷிம்' குடும்ப புருட நாயகரான அப்துல்லாஹ் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுக்குமிடையே அல்லாஹுத்தஆலா அந்நாயகத்தை வெளித் தோற்றமாக்கி வைக்கிறவரையிலும்,

அநேக மகத்துவக் காரணங்களோடு ஒரு முதுகுந் தண்டில் நின்றும், வேறொன்றளவிலும், ஒரு கெர்ப்ப ஸ்திரீயில் நின்றும் மற்றொரு கெர்ப்ப ஸ்திரீ கெர்ப்ப குவளறையளவிலும், திரும்புதல் பெற்று வருகிறவர்களாக இருந்தார்கள். குறித்த ஹாஷீம் கிளை ஸஹ்றாக் கிளையார்களாகிய இரு கூட்டத்தில் சிறந்த வம்சமும், முர்ரத்து என்பவரின் நற்றவப் புத்திரரான கிலாபு என்பவரிலே போய் ஒன்றாய்ச் சேர்ந்திருக்கிறது.

ஆனதால் அந்த நாயகமானவர்கள், தகப்ன் வமிசத்தால் குறைசிகளின் நடுமாலையில் தரித்த ஆணிமுத்தாகவும், பலத்தோடும், தலைமைத் தனத்தளவில் சேர்ந்த பேர்களாகவும், தாய் வமிசத்தாலும் ஜடலத்தாலும், மகா பரிசுத்தமானவர்களாகவும்,

உலகத்தார் யாவர்களிலும், மாதா, பிதா இவர்களால் பெரும் சிறப்புற்றவர்களாகவும் உலகத்தில் இவர்களுடைய பிதாக்களைக் காண சங்கையான பிதாக்களை வேறொரு பிள்ளைகளுக்கும், இவர்களைக் காண சங்கையான பிள்ளைகளை வேறே பிதாக்களுக்கும் கொடுக்கப்படாத, இன்னும் இவர்களைக் காணச் சிறந்த ஒரு நபியை அனுப்பி வையாத மஹா மேன்மைக்குரிய நபியாகவும் இருக்கின்றார்கள். அந்த நாயகத்துக்கே என்னுடைய உடல், பொருள், ஆவி தத்தம்,தத்தம்.

இன்னும் அந்த நாயகமே உபாதானம் காரணமாய் இருக்கின்றார்கள். அந்த நாயகமில்லாவிடில் உலகம் வெளியாகக் காரணமேயில்லை. இதற்காகத்தான் ஷெய்குனா புகாரி ரலியல்லாஹு அன்ஹு மீதில், ஷெய்குனா உமர் ஒலி காஹிரி ரலியல்லாஹு அன்ஹு சொல்லியிருக்கிறார்கள்:

**'அல்லா அஹது அஹமதுவும் ஹாமிதுவும்**

**எல்லாம் முஹம்மதென்று யேகமாய் கண்டோர்பால்**

**பொல்லாத தொன்று வரப்போர தில்லை மென்மேலும்**

**கல்லாத கல்வியெல்லாம் கைவசமா மெனவரியே'**

ஐ!இன்ஸானே! மேலே 'அஹதென்ற' பதத்திற்கும் 'அஹ்ம'தென்ற பதத்திற்கும், மத்தியில் 'மீம்' என்ற அட்சரம் மிரட்டுகிறது என்று கூறினோம். அதன் கருத்தாவது மூன்று உடலாயிருக்கும். அதாவது, ஸ்தூலம், சூட்சுமம், காரணம் ஆக இந்த மூன்று உடலுக்கும் சரீரமென்றும் தேகமென்றும், சொல்லப்படும். சரீரமென்றால் நஸிக்கிற வஸ்து என்று பொருள். தேகமென்றால் தகிக்கப்படுகிறதெதுவோ அதுவே தேகமென்று சொல்லப்ப|டும்.

(**வினா**) ஆனால் ஸ்தூல சரீரம்தான் அன்ன, பானாதிகளில்லாவிட்டாலும், வியாதி முதுமைகளினாலும், நஸிக்கும் சூட்சும சரீரமும், காரண சரீரமும் எப்படி நஸிக்கும் என்றால்?

**(விடை)** சூட்சம தேகம், இராகத்துவேஷாதி, அந்தக்கரண, விர்த்தியினால் விதிதலும், விரிவின்மையினால் சுருங்குதலும் உண்டு. இப்படிச் சுருங்குதலே நஸித்தல் என்று சொல்லப்படு|ம்.

**(வினா)** இராகத்து வேஷாதிகளௌவை? எனில்,

**(விடை)** (இராகம்) ஸ்திரீகளிடத்தில் சித்த விருத்தி, (துவேசம்) அபகாரம் செய்தவனுக்கு பிரதி செய்ய விச்சித்தல், (காமம்) நிலம், பொருட்களை சம்பாதிக்க விரும்புதல்,(குரோதம்) தன் இச்சைக்கு விரோதமானவரிடம் கோபித்தல், (லோபம்) பொருளை நல்ல விசயத்தில் செலவு செய்ய விரும்பாதிருத்தல், (மோகம்) பணச் செருக்கால் இன்னது செய்யத் தக்கது, இன்னது செய்யத் தகாதது என யோசிக்காமல் மந்தனாயிருத்தல், (மதம்) செல்வச் செருக்கால் தன்னால் செய்யக் கூடாத காரியமில்லை என்று எண்ணுதல், (மாச்சரியம்) சம்பத்தினால் தனக்கு சமானமாயிருப்பவனைக் கண்டு பொறாமை கொள்ளுதல், (ஈருசை) பிறருடைய துக்கம் அவரை விட்டும் நம்மிடம் எப்படி வந்ததென்றெண்ணுகிற சித்த விருத்தி.

(அசூயை) சுகம் தனக்கேயுள்ளது, மற்றவருக்கில்லை என்று எண்ணுகிற சித்தி விருத்தி, (டம்பம்) ஒரு தருமத்தில் தனக்குப் பிரசித்தி அதிகமுண்டாக வேண்டுமென்ற சித்தவிருத்தி, (தர்ப்பம்) தனக்குச் சமானமானவனில்லை என்றெண்ணுதல், (அகங்காரம்) சகல விசயத்திலும் தனக்கு சக்தி உண்டென்று எண்ணுதல், (இச்சை) உண்ணல், கழித்தல், கருமம் செய்ய விரும்பல். ஆகையால் இக்குணங்கள் பதினான்கும் சூட்சும தேகமாகும். இக்குணங்களை விடுதலினால் சூட்சும தேகம் நாசமாகும்.

இனி காரண சரீரத்திற்கு நான் ஜீவனென்கிறதே விருத்தி, அதை ஒழித்துவிடு. 'நான் பிரஹ்மமாயிருக்கிறே' னென்பது சுருங்கல். அதுவே நஸித்தலாம். ஆகையால் சூட்சும தேகமும், காரண தேகமும், பாழாகாவிட்டால் மோட்சமும், முக்தியும் கிடையாது. மோட்சமும், முக்தியுமில்லாதவன் துக்க ரூபியாகும். துக்க ரூபிக்கு அணுவளவும் ஆனந்தமேயில்லை.

ஆனதால் இம்மூன்று உடலையும் விட்டு பரவெளியாகிவிடு. உஷார்!உஷார்!! அழியும் தன்மையை விட்டு அழியா நிலையில் நில்! நில்!! இதற்காக வேண்டித்தான் நமது நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், அடிமையென்பதை அழித்து ஆண்டானாய் ஒருமையாகி உலகத்தை விட்டு ஒருமை பெறு! என்று அருமை வாயால் அருளினார்கள்.

*'அனா அஹ்மது பிலாமீமின்'*

**(பொருள்)** நாமரூப மென்ற 'பீமை' நீக்கி நாயனாய் இருக்கின்றேன் என்றார்கள். ஆனதால் 'மீமென்ற' பந்தத்தை நீக்கி மோட்சமடைவாய்.

அதாவது பந்தம் என்றால் பிடிப்பு, மோட்சமென்றால் விடுதல், பிடிப்பாகிய மூன்று உடலையும் நீக்கி மோட்சமுக்தியடைவாய். ஆனால் மோட்சமும், முக்தியும், மூடமாகிய மூன்று உடலையும் கடக்காமல் உண்டாகமாட்டாது. ஆகையால் மூன்று உடலையும் கடந்து கொள், கடந்து கொள்!! உஷார்! உஷார்!!

இதற்காக வேண்டித்தான் தென்காசியில் வாசஞ்செய்யா நென்ற ஞான தேசிகராகிய உயிர் பிதா குரு ஷெய்கு அப்துல்காதிர் ஷாஹன்ஷா நபீ நப்ஸில் காதிரி வஷ்ஷாதுலி என்று நாமம் சூட்டப்பட்டவர்கள் அருகிய 'முபீதத்தில் முஃமினீன்' என்னும் புத்தகத்தில் மெய்யறிவைப்' பற்றிய பதத்தில் கூறியுள்ளார்கள்.

**'தூலமென்னும் தேசம் கடந்து –தொகுப்பிலுள்ள**

**தொல்லவழியை விட்டு நடந்து**

**கோலமென்னும் ஆலம் கடந்து –குதாயிருக்கும்**

**குரிபில்லா மஹாலில் நுழைந்து**

**ஆலமடங்கள் தன்னை நோக்க –மாலை மணமிட்டதாக**

**வாலைரூபம் கொண்ட கூட்டம் - வல்ல அல்லாஹ் தன்னை நோக்க'**

(ஐ)இன்சானே! அறிந்து கொள், பூத கூட்டுறவால் உண்டாகிய நாம ரூபத்தை நீக்காமல், அத்துவிதமென்ற பதவியை அடைய முடியாது. இதற்காக 'ஷெய்கு அப்துல் வஹ்ஹாபுஸ் ஸஃறானி' ரலியல்லாஹு அன்ஹு சொல்லியிருக்கிறார்கள்:

**'லாயஸிஹ்ஹு தவ்ஹீதுல் ஹக்கி யில்லா பினப்யில் மிஸாஜி**

**மன் வஜதஹு பியிதுத பாத்தில் மிஸாஜி பலா பர்க**

**பைன யிஹ்திகாதிஹி வயிஹ்திகா தின்னஸாறா**

**(பொருள்)** ஹக்கை ஒருமைப்படுத்துவது பூதக் கூட்டுறவாலாகிய தோற்றப்பட்ட சரீரத்தை நீக்குவது கொண்டே ஒழியக் கூடாது. யாராகிலும் பூதக்கூட்டுறவாலாகிய தேகத்தைத்

தரிப்படுத்துவது கொண்டு ஹக்குத் தஆலாவை ஒருமைப்படுத்துவானேயானால் அவன் கொள்கைக்கும் நஸராக்களுடைய கொள்கைக்கும் இடையில் வித்தியாசமில்லை. ஆகையால் தேகத்தை நீக்கி 'தவ்ஹீது'ச் செய்து கொள்.

ஐ! இன்சானே! 'பாலம்' கடப்பது 'தூலம்' கடப்பதுதான், தூலம் கடப்பது| முக்தி, முக்தி என்றால் தேகநிவர்த்தி. ஆனால் முக்தி இருவகைப்படும். அதாவது 'ஜீவ முக்தி' என்றும், 'விவேக முக்தி' என்றும் கூறப்படும்.

1 ஆவது ஜீவித்திருக்கும்போதே நான், எனதென, அபிமானம் விடுபட்டவனே! ஜீவ முக்த்தனாம். அதாவது, தேகாதி பிரபஞ்சம், பொய்யாகத் தோன்றிக் கொண்டிருக்க பிரஹ்ம சொரூபமாக நிலைத்தலே ஜீவ முக்தியாம்.'

2 ஆவது விதேக முக்தியென்றால் (வீ என்னும் பதத்திற்கு இல்லையென்று அர்த்தம். (தேக) மென்னும் பதத்திற்கு சரீரமென்று அர்த்தம். இரண்டு பதமும் ஒன்றானால் 'தேகமில்லை' அல்லது 'சரீரமில்லை' என்றர்த்தம். அதாவது தேகாதி பிரபஞ்சம் பொய்யாகவே தோன்றுதலின்றி 'பிரஹ்ம சொரூபமாக' நிலைத்தல் 'விவேக முக்தி'யாம்.

ஆனால் முக்தி நிலையில் உனக்கு அடிமுடி நடுவில்லை, அகம் புறமில்லை'. அதாவது, கால முதலியவை நஸித்தும் தான் நஸியாதிருத்தலின் உனக்கு அந்தமில்லை. இடையின்றித் தான் பூரணமாக விளங்குவதால், உனக்கு நடுவும், அகம், புறமும் இல்லை. எப்போதும் தான் 'சுயமாய்ப்;' பிரகாசிப்பதால் உனக்கு 'ஆதியில்லை' இதற்கொத்த வண்ணம் கைவல்லிய நவநீதம் கூறுவதாவது:

**'கடமெனு முபாதிபோனாற் ககனமொன் றானார்போல**

**உடலெனு முபாதிபோன வுத்தரஞ் சீவன் முத்தர்**

**அடிமுடி நடுவுமின்றி யகம்புற மின்றிநின்ற**

**படி திகழ் விதேகமுக்திப் பதமடைந் திருப்பார்ரென்றும்'**

சிகாமணியே! 'யான், எனதென்னும்' இரு சோட்டையும் அகற்றிவிடு. ஏனென்றால், அது 'அறியாமை' என்கிற கழுதைத் தோலால் செய்யப்பட்டது. அதை மாட்டினவானக அல்லாஹ் உடைய 'ஹளரத்தில்' செல்ல முடியாது. ஆகையால், போக்கச் சொன்னதை நீக்கிக் கொள். இதற்காகவே இறைவன் மூஸா அலைஹிஸ்ஸலாமுக்குச் சொன்னான்:

*(பக்ல. நஃலைக்க)*

**(பொருள்)** 'யான், எனதென்னும்' இரு சோட்டையும் கழற்றிவிடும் என்று உத்திரவு கொடுத்தான்.

இன்னும் இதற்கொத்த வண்ணம் மகாபிரபு என் குருபிதாவாகிய 'ஆலிமுல் அரூஸ் செய்யிது முஹம்மதென்று நாமம் சூட்டப்பட்ட நாயகமவர்கள் அவர்களுடைய 'மெஞ்ஞான அகந்தெளி'வில் சொல்லியிருக்கிறார்கள்.

**'மூஸாவை' வாதில் 'முகத்தஸில்' முன்னவன்**

**நீக்க மொழிந்ததைப் போக்கி கமலத்துள்**

**'ஈஸா' செய்யும் 'தௌஹீதை' யிருத்திவொன்**

**ஈராறினால் தோத்தும் 'நூரானி' யென்றே.**

ஐ!இன்சானே! உன் இரு சோட்டையும் கழற்றி உன் 'உஜூ'தென்னும் மலையைக் காணாதகற்றிவிடு. இன்னும் உன் 'ஜடலம்' உப்புநீர். 'ரூஹென்பது' நந்நீர். இரண்டுக்கும் மத்தியில் 'பகா'வென்னும் முத்து இருக்கிறது.

இன்னும் வேறென்கிற ஊற்றைவிட்டும் நீக்கினால் பகளமிருக்கிறது. இந்த இரு வஸ்துவையும் எடுத்துக் கொள். உன் சரீரத் திரவியங்களை நீக்கி ஆனந்த சொரூபியாகிக் கொள். அதுவே 'மாவுல் ஹயாத்தாகும்'. அதாவது நிதிய சுகத்தைக் கொடுக்கும் 'அமிர்த பானமா'கும்.

அதை உணர்ந்தறிந்து அன்னிலைக்குப் போனவர்களை கிளுறு அலைஹிஸ்ஸலாம் என்றும், மூஸா அலைஹிஸ்ஸலாம் என்றும், இஸ்கந்தரென்றும் சொல்லப்படும். அந்த மாவுல் ஹயாத்தை உனக்குப் புறம்பாகத் தேடாதே. உஷார்! உஷார்!!

இந்த அரிய பெரிய விசயத்தை 'இன்சான் காமிலில்' கண்டு கொள்க. இதற்கொத்த வண்ணம் நம்முடைய நாயகம் மஹ்பூபு சுபுஹானி கிந்தீலின் நூரானி முஹையித்தீன் அப்துல் காதிர் ஜெய்லானி ஆண்டவர்கள் திருவாய் மலர்ந்தருளிய 'அந்தும்புரூனி' என்ற பைத்தில் சொல்லியிருக்கிறதாவது:

என்னுடைய 'உஜூ'தென்ற மலை தகர்ந்து போனதால் என்னுடைய காலத்தில் நான் 'மூஸா' வாயிருக்கும் என்றார்கள். ஏனென்றால்|, உலகத்தில் தோன்றிய 'குத்பு' கௌது, அவ்லியாக்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு ரஸூல்மார்களுடைய வாரிதாகவும், ஒவ்வொரு நபிமார்களுடைய வாரிதாகவும் இருப்பார்கள்.

ஐ!இன்சானே! உன்னை அஞ்ஞானம் என்ற ஷைத்தான் மிரட்ட வேண்டாம். 'துவித'மென்ற மரத்தருகே செல்லாதே. ஏனென்றால், ஆண்டவன் 'ஆதமை' சிருஷ்டித்து தன் உள்ளமையை அறிவித்து, எல்லாவற்றிற்கும் நீரே தலைமையானவர் என்றும், ஆசீர்வதித்து தன் 'அம்முஸி'யாகிய 'ஆதமுக்கு' வானவர்களை சாஷ்டாங்கம் செய்யும்படி ஏவினான். எல்லாரும் ஆதமுக்கு சாஷ்டாங்கம் செய்தார்கள். 'அஞ்ஞானமென்ற' 'ஷைத்தான்' மறுத்து விட்டான்.

ஆகையால், அவன் பேரில் முனிவு செய்தான். அதுபோலவே நீயும் துவிதம் கொண்டு அஞ்ஞான வடிவமாகிய ஷைத்தானாய் தன் 'அம்முஸி'யாகிய ஆதமுக்குச் சுஜூது செய்யாமல் முனிவு பெறாதே.

இன்னும், |ஆண்டவன் துவிதமான அமானிதத்தை எடுத்துக் காட்டி எல்லா வஸ்துக்களிடத்திலும் உங்களில் யாராவது சுமக்கக் கூடுமாவென்று கேட்டான். எல்லாம் மறுத்துவிட்டன. மனிதன் அந்த அமானிதத்தை சுமந்து மூடனாகவும், அநீதக்காரனாகவும் ஆனான். ஆனதால் நீ துவிதத்தை சுமந்து மூடனாகவும், அநியாயக்காரனாகவும் ஆகாதே.

இன்னும், ஆண்டவன், 'ஆதமை' துவிதமாகிய மரத்தருகில் முடுக வேண்டாம் என்று கட்டளை செய்தான். ஷைத்தான் அவர்களை ஏமாற்றி அதன் சமூகத்தில் முடுகும்படி செய்துவிட்டான். ஆனதால் அல்லாஹுத்தஆலா அவர்கள் பேரில் கோபமாகி பாவிகள் என் சமூகம் இருக்கக் கூடாது என்று துரத்திவிட்டான். அதனால் ஆதம் மிகவும் சஞ்சலப்பட்டார்கள். ஆண்டவன் அவர்கள் பேரில் கிருபையாகி அவர்கள் 'துவிதத்'தைப் போக்கி உபதேசித்து அவர்கள் பாவத்தையும் மன்னித்தான். ஆகையால் நீ 'துவிதத்'துக்கு இடம்கொடாதே.

ஐ!இன்சானே! நீ நாமரூபத்தில் கட்டுபட்டு உன்னை சிறிய பொருளாய் அறிந்திருக்கிறாய். நீயோ முடிவில்லாத அகண்டமானவன். காலம் உன்னை அறிந்து கொள்ளாது உன் தத்துவங்களுக்கோ முடிவில்லை. ஸர்வமும் உனக்கு அடிமை. நீ கடவுள் அரூப அம்ஸத்தைப் போல் விரிவாக்கி கொள். உன் அஞ்ஞானம் நாசமாகட்டும். உனக்கு உடல் இல்லை, உயிர் இல்லை, நாமரூபமில்லை, ஆகாயமில்லை, நீ ஆத்மாவுமில்லை, நீ யாரென்று பார். உன் தத்துவங்களை ஞாபகம் செய். இவ்விதமாயிருப்பாயாகில், உனக்கு 'வறுமை'யும், 'பிணி'யும் 'இயலாத்தனமும்' நீங்கும். ஹக் அல்ஹம்துலில்லாஹ்!

ஐ!இன்சானே! 'உன்னைப் பார்', நீ இதற்குமுன் எங்கே இருந்தாய். தாய் தகப்பரின் இந்திரியமாயிருந்தாய். அதற்கு முன் உணவாயிருந்தாய். அதற்கு முன் மண்ணாயிருந்தாய். அதற்குமுன் ஜலமாயிருந்தாய். அதற்குமுன் வாயுவாயிருந்தாய். அதற்குமுன் அக்கினியாயிருந்தாய். அதற்குமுன் ஆகாயமாயிருந்தாய். அதற்குமுன் அறிவாகயமாயிருந்தாய். அதற்கு முன் அல்லாஹ்வின் உள்ளமாயிருந்தாய், அதற்கு மேல் உனக்கு பதவியில்லை. ஹக்கின் பதவியே பதவி. நீ ஹக்காய் நில்.

உன் அஞ்ஞானமென்ற செய்த்தான் உனக்கு சந்தேகத்தை வருத்தி, துவிதத்தை போதித்து, ஹக்கை விட்டும் தூரமாக்கிவிடுவான். ஹக்கை விட்டும் தூரமாக்குவதை விட கொடிய நரகம் ஒன்றுமில்லை. பயந்து கொள்! ஹக்கானியத்தைச் சேர்த்துக் கொள். உன்னுடைய சொந்த மகத்துவத்தை நீ அறியவில்லையானால் ஹக்குடன் இரண்டறக் கலப்பதற்கு முடியாது.

இதற்காக வேண்டித்தான் நமது நாயகம் குத்புல் அக்பர் செய்யிதினா முஹையத்தீனு; அப்துல் காதிருல் ஜெய்லானி ஆண்டவர்கள் 'மிஃராஜுக்கேகி' ஹக்குடன் பேசும்போது கௌதுல் அஃலமே! என்றழைத்துச் சொன்னான். இன்சானில் நான் வெளியாயிருப்பதுபோல் எந்த வஸ்துவிலும் வெளியாகவில்லை என்றான். இன்னும் சொன்னான் கௌதுல் அஃலமே!

இன்சானாகிறவன் என்னுடைய ஸிபத்தாயிருக்'கும். நான் அவன் 'உஜூது' என்ற உள்ளமையாயிருக்கும். அதாவது அவனே நான், நானே அவன் என்றான்.

ஆகையால் உன் நிஜ சொரூபத்தை அறியாமல் இருக்கும் காலமெல்லாம் உன்னை அடிமை என்று நினைத்து அழிபொருளாகத்தான் இருப்பாய். அழிவற்ற பொருளாவது உன் நிஜ சொரூபத்தை அறிவது கொண்டே. ஆனால் உன் நிஜ சொரூபத்தை அறிந்து அடிமைத்தனத்தை நீக்கி ஆண்டானாகுவதற்கு ஓர் உவமானம் கூறுவோம். அதனைக் கொண்டு அறிந்து கொள்.

ஒரு ராஜகுமாரன் விவேகமில்லாத சிறுவயதில் ராஜனை விட்டும் தவறிவிட்டான். அவனை ஒரு பறையன் எடுத்து வளர்த்து வந்தான். வளர்த்தவன் வாசைன ராஜகுமாரனுக்கு மிகைத்து தன்னைப் பறையனென எண்ணி தாழ்மைப்படுத்தி மற்றவர்களை எஜமானாக எண்ணி தொண்டு புரிந்து வந்தான். அப்படியிருக்கும் காலத்தில் அனேக அத்தாட்சிகளைக் கொண்டு தன்னை ராஜகுமாரனென அறிந்து ராஜாவை அடைந்தான். தொண்டு செய்த அடிமைத் தனத்தை நீக்கி ஆண்டானானான். அந்த ராஜகுமாரனை அடிமையாக்கி வைத்தது அறியாமையே. ஆண்டானாக்கி வைத்தது அறிவே.

ஆகையால் ஹக்கின் அம்ஸமாகிய அறிவை அறிந்து, அடிமைத்தனத்தை நீக்கி, ஆண்டானாகி, சரி செய்யும் காரணத்தை நீக்கி, உன் தற்சொரூபத்தை நாடி, மதுவுண்டவன்போல் இருப்பாயாக. இதற்காக வேண்டி செய்யிதினா முஹிய்யத்தீன் இப்னு அரபி ஆண்டவர்கள் சொல்லியிருக்கிறார்கள்:

*'அல்அப்து அப்துன் ஒயிந்த றக்கா வர்றப்பு றப்புன் வயிந்த னஸ்ஸல்'*

**பொருள்:** எவன் அடிமையாயிருக்கின்றானோ அவன் ஜாதியைக் கொண்டும், தனத்தைக் கொண்டும், இல்மைக் கொண்டும், அமலைக் கொண்டும், எவ்வளவோ உயர்ந்தாலும் ஆண்டானாகான். எவன் தன்னை இழந்து ஆண்டவனாக இருக்கின்றானோ, அவன் இல்லாமையைக் கொண்டும், தாழ்மையான ஜாதியைக் கொண்டும் எவ்வளவோ தாழ்ந்தாலும் அடிமையாகான்.

இதற்காக வேண்டித்தான் நம்முடைய மார்க்கத்தில் ஆண்டவனை அடிமை கொள்ளக் கூடாது. அடிமையை அடிமைகொள்ளலாம். அடிமைத்தனம் நீங்கினால் ஒருமையாகி விடுவான்.

எவனுக்கு சுயஞானம் உண்டாகவில்லையோ, அவனுக்கு அடிமைத்தனம் நீங்காது. ஆகையால் நீ சிஷ்யனை அடிமையாக வேலைவாங்கி சுயஞானத்தைப் போதித்து உரிமைவிடு. இதுவே அடிமைகொண்டு உரிமைவிடுவதின் இரகசியம். இதற்கிணங்க அருணகிரியந்தாதியில் சொல்லப்படுகிறது:

**கற்றதனால் தொல்லைவினை கட்டறுமோ நல்லகுலம்**

**பெற்றதனால் போமோ பிறவிநோய்**

அன்பனே! உன்னை ஹக்கனிடத்தில் சாற்றிவிடு. சாற்றாதபட்சத்தில் உன்னுடைய அமல்கள் என்கிற உடல்கள் உயிரற்ற உருவமாக ஆகிவிடும். உன்னை ஹக்கினிடத்தில் சாற்றுவதே உனது பாக்கியம். அப்படி சாற்றிப் பேர்பெற்ற நாதாக்களினின்றும் ஒருவரை இங்கு கூறுவோம்:

அதாவது 'மன்சூரிப்னு உம்மார்'ரலியல்லாஹு அன்ஹு வபாத்திற்குப் பின் அவர்களை ஒரு ஆரிபு நிஷ்டையில் கண்டு: அல்லாஹுத்தஆலா உம்மை என்ன செய்தான்? என்று கேட்டார்கள். அப்போது அவர்கள் ஹக்கு சுப்ஹானஹுவத்தஆலா தன்முன் என்னை தரிப்படுத்தி வைத்து மன்ஸுரே! என்ன வஸ்துவைக் கொண்டு என்னிடத்தில் வந்தீர்கள் என்று கேட்டான். அப்போது நான் முன்னூற்றி அறுபது தரம் குர்ஆனை ஓதி உன்னுடைய சங்கையான வஜ்ஹுக்காக வேண்டி கத்தம் செய்தேன் என்றேன். அப்போது அல்லாஹு சுப்ஹானஹுவத்தஆலா எனக்கு முன்னூற்று அறுபது கத்தமில் நின்றும் ஒன்றையும் நான் கபூல் செய்யவில்லை என்றான்.

பின்பு, மன்ஸுரே! என்ன வஸ்துவைக் கொண்டு என்னிடம் வந்தீர் என்று கேட்டான். அப்போது முப்பத்தி மூன்று ஹஜ்ஜைக் கொண்டு வந்தேன் என்றேன். அப்போது அவன் அந்த ஹஜ்ஜில் நின்றும் ஒன்றையும் ஒப்புக் கொள்ளவில்லை என்றான்.

பின்பு, என்ன வஸ்துவைக் கொண்டு வந்தீர் என்று அழுத்திக் கேட்டான். அப்போது 'யா இலாஹி!' உன்னைக் கொண்டு உன்னிடத்தில் வந்தேன் என்று சொன்னேன். அப்போது, என் அன்பனே! என்று ஆதரிதததுக் கொண்டான் என்றார்கள்.

ஐ!இன்சானே! உன் சரீரம் இந்த ஆலத்தையுடையது. 'நீ மறைவான ஆலத்தை உடையவன்'. நீ இந்த ஆலத்தில் சொற்ப காலத்திற்குச் சில கருமங்களை நிறைவேற்றிக் கொள்ள இந்த சரீரத்தில் பரதேசியாயிருக்கின்றாய். நீயோ 'அரூபி'. உன்னை ஒருவரும் காணக் கூடாது. நீ சரீரத்திலிருந்து உறுப்புகளை உசுப்பச் செய்கிறதும், கண்ணைக் கொண்டு பார்க்கச் செய்கிறதும், நாவைக் கொண்டு பேசச் செய்கிறதும், உனது வேலை. நீ உள்ளமையில் எப்போதும் மறைவான ஆலத்தில் இருக்கின்றாய். ஆகிலும் இந்த சரீரத்தில் உன் அம்முஸி கொளுகியிருப்பதால் இந்த ஆலத்தைச் சேர்ந்தவனாக இருக்கின்றாய்.

நீ இந்த சரீரத்தை விட்டும் உன்னுடைய அம்முஸி கொளுகியிருப்பது நீங்கிவிடுமானால், உன்னை மையித்து என்று சொல்லப்படும். உனக்கு அழிவில்லை. உன் சரீரத்திற்கே அழிவு. இதை எவ்வேளையும் நினைத்தால், உன் சரீரம் உன்னை விட்டும் வேறாகக் காண்பாய். மற்றவர்களையும் அவ்விதமே சரீரத்தை விட்டும் நீக்கிக் காண்பாய். ஆகிலும் இது புத்திக்கு விளங்கினால், எவ்வேளையும் உன் மனதில் தரிபடாது.

ஆகையால் அடுத்தடுத்து ஞாபகம் செய்துகொள். ஹக்களவில் செல்பவனுக்கு இந்த அறிவு மிகவும் உதவியாயிருக்கும். ஹக்களவில் செல்பவன் முதன்முதல் கண்டிப்புடைய ஆலத்தை விட்டும் நீங்குவது கடமை. நீ கண்டிப்பற்றவனாய், கண்டிப்பற்ற ஆலத்தைச் சேர்ந்து கொள்.

இன்சானென்று சொல்வதும், நீயென்று சொல்வதும் நானென்று சொல்வதும், அகண்ட வடிவமான சுயசொரூபத்துக்கே. அந்த சுயசொரூபத்தைக் குறித்தே அல்லாஹு சுப்ஹானஹுவத்தஆலா சுருதியில் சொன்னான்.

*லகத் கலக்னல் இன்ஸான பீஅஹ்ஸனி தக்வீமின்*

**பொருள்:** இன்சானை உயர்த்தியான தன்மையில் படைத்தேன் என்று சொல்லி, அந்த இன்சான் இந்த சரீரத்தை கொளுகியிருப்பதைக் குறித்து,

*றும்ம றதத்னாஹு அஸ்பல ஸாபிலின்*

**பொருள்:** கீழ்மையிலும் அதிகக் கீழ்மையாக்கினேன் என்று சொன்னான். மேலும் நமது நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் 'ஹஜருல் அஸ்வது' என்ற கல்லானது, பாலை விட வெண்மையாக இருந்ததென்றும், மனுக்களின் பாவமானது அக்கல்லை மங்க வைத்துவிட்டதென்றும், அமுதவாக்கால் அருளினார்கள்.

ஆனால் 'ஹஜ்ருல் அஸ்வது' கொண்டு கருத்தாவது 'லத்தீபத்துல் இன்ஸானிய்யா என்றும் அதிசூக்கும அறிவாயிருக்கும். அதாவது 'சுகாதீத' அறிவாயிருக்கும்.இந்தப்படி 'இன்ஸான் காமிலில்' கண்டு கொள்க. ஹக் அல்ஹம்துலில்லாஹ்.

ஐ!இன்சானே! இன்னும் பூமியிலுள்ள பொருள்களின் வகை தெரியாமல், உன் உன்னத பதவி தெரியாது. பூமியிலுள்ள பொருள்களெல்லாம் நான்கு வகையாயிருக்கும். (1ஆவது) 'ஜமாத்தியா' என்ற நிரஸ வஸ்து, அதாவது மண்', கல் போலுள்ளவைகள். (2ஆவது) 'நபாத்தியா' என்ற தாவர வஸ்து (3ஆவது) 'ஹைவானிய்யா' என்ற பிராணிகள் (4ஆவது) மனிதன் என்ற 'இன்ஸானிய்யா'. இந்த நான்குக்கும் நான்கு ரூஹு இருக்கிறது. ஜமாதுக்கு 'ரூஹுல் ஜமாதிய்யா' என்று சொல்லப்படும். இந்த ரூஹுக்கு இரண்டு ஸிபாத்துகள் என்னும் குணங்கள் இருக்கின்றன. அதாவது 'திக்லத்' என்னும் 'கனமும்' 'கிப்பத்' என்னும் 'லேசு'ம் ஆகும்.

2ஆவது ரூஹுல் நபாத்தியா. இதற்கு 'வளரச் செய்யும் தத்துவமெனப்படும். இதற்கு ஏழு தத்துவங்கள் இருக்கின்றன. 1. 'ஜாரிபா' வெளியிலுள்ள உணவுகளை உள்ளே எடுக்கும் தத்துவம். 2. 'மாஸிகா'. உள்ளே சென்றது வெளியே வராமல் தடுத்துக் கொள்ளும் தத்துவம். 3. 'ஹாளிமா'. ஜீரணிக்கச் செய்யும் தத்துவம். 4. 'முமையிஸா'. ஜீரணமாக்கியதை கூறாக்கி, பல உறுப்புகளுக்கும் செலுத்தும் தத்துவம். 5. 'முஸவ்விரா'. அவைகளை பல நிறங்களாய்ச் செய்யும் தத்துவம். அதாவது இரையின் சாராம்சத்தை ஜடலத்துடைய நிறமாக ஆக்கி வைக்கும் தத்துவம்.; 6. 'தாபிஆ'. தேவையற்றவைகளை வெளியே தள்ளும் தத்துவம். அதாவது மரத்தில் நின்றும் வெளியாகும் பிசின் அல்லது பால் போலொத்த மஷ்டைகளை சடத்தை விட்டும் நீக்கி வைக்கும் தத்துவம். 7. 'முவல்லிதா' பலுகச் செய்யும் தத்துவம். அதாவது தன்னில் நின்றும் தன்னைப்போல் உண்டாவதற்காகத் தன் ஜடலத்துடைய சாராம்சத்தை சேகரித்து, மேலே கொண்டு வரும். அதாவது மரம் அல்லது புல், பூண்டு இனங்களின் வித்தென்றும்,

ஹைவானினத்தின் நுத்பா என்ற வித்தென்றும் சொல்லப்படும். இந்த 7 தத்துவங்களும் தாவர வஸ்துக்குரிய தத்துவங்கள்.

3ஆவது ரூஹுல் ஹைவானிய்யா. இது உயிர் பிராணிகளுடைய ரூஹு. அதாவது தன் ஜடலத்தை தன்|னுடைய தெரிவுதலைக் கொண்டு உசுப்பி அல்லது அசைத்து வைக்கும் தத்துவம். இன்னும் வஸ்துக்களை தன்னுடைய ஐயறிவுகளைக் கொண்டு தெரிந்து கொள்ளும் தத்துவம். இந்த ரூஹுல் ஹைவானிய்யாவுக்கு ரூஹுல் நபாத்தியாவாகிறது பணிவிடைக்காரனாக இருக்கும். இன்னும் இந்த ரூஹுல் ஹைவானிய்யாவுக்கு வேறே (12) தத்துவங்கள் இருக்கின்றன.

அதாவது வெளி ஐயறிவு (5ம்), உள் ஐயறிவு (5ம்), கோபம் (1ம்), ஆசை (1ம்) ஆக பன்னிரண்டு தத்துவங்களாயிருக்கும். வெளி ஐயறிவாகிறது கேள்வி, பார்வை, முகர்தல், சுவைத்தல், தொடுதல், இந்த அறிவுகள் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு வேலை உண்டாயிருக்கின்றது. அந்த வேலையை மற்றொன்றால் நடத்திவர இயலாது.

அதாவது கேள்வி என்ற தத்துவம், சொற்களையும் சப்தங்களையும் எத்திக் கொள்ளும். அப்படி எத்திக் கொள்வதினால் சத்தியம் இன்னது, அசத்தியம் இன்னது என்றும், ஒழுங்கு இன்னது, பிசகு இன்னது என்றும் தெரிந்து கொள்ளும்.

பார்வை என்ற தத்துவம் ரூபங்களையும் நிறங்களையும் எத்திக் கொள்ளும். அப்படி எத்திக் கொள்வதினால் அழகு இன்னது, அவலட்சணம் இன்னது என்றும், தூரம் இன்னது, சமீபம் இன்னது என்றும் அறிந்து கொள்ளும்.

முகர்தல் என்ற தத்துவம் வாசனையை எத்திக் கொள்ளும். அப்படி எத்திக் கொள்வதினால் வாசனை இன்னது, துர்நாற்றம் இன்னது என்று அறிந்து கொள்ளும்.

சுவைத்தல் என்ற தத்துவம் சுவைகளை எத்திக் கொள்ளும். அப்படி எத்திக் கொள்வதினால் இனிப்பு, கசப்பு, புளிப்பு, துவர்ப்பு, இளைப்பு, கரிப்பு இன்னது என்று தெரிந்து கொள்ளும்.

தொடுதல் என்ற தத்துவம் மெல்லினம் இன்னது, வல்லினம் இன்னது, சூடு இன்னது, குளிர்ச்சி இன்னது, நைப்பு இன்னது, வறட்சி இன்னது, கனம் இன்னது, லேசு இன்னது என்று தெரிந்து கொள்ளும். அப்படித் தெரிந்து கொள்வதினால் மெல்லினம், வல்லினத்துக்கும், சூடு குளிர்ச்சிக்கும், கனம் லேசுக்கும் இவைகளுக்கு இடையிலுள்ள வித்தியாசங்களையும் அறிந்து கொள்ளும்.

உன் ஐயறிவாகிறது அந்தக்கரணமென்ற மணம், புத்தி, சித்தம், அகங்காரம், உள்ளம் ஆக உள் ஐயறிவு ஐந்து, அரபி மொழியில் உள் ஐயறிவாகிறது 'ஹிஸ்ஸமுஸ்தரீக்கா' அதாவது இரண்டு கண்களால் பார்க்கும் பொருளை இரு பொருளாய் காட்டாமல் ஒரு பொருளாய்க் காட்டும் தத்துவம். (கியால்) என்னும் பல தோற்றம். (வஹ்மு) என்னும் சந்தேகம். (ஹிபுளு) என்னும் ஞாபகச் சின்னம். (பிக்ரு) என்னும் யோசனைகளாயிருக்கும்.

'ஹிஸ்ஸமுஸ்தரீக்கா' என்றால் தலை மூளையில் மற்ற நான்கு அறிவுகளுக்கும் முன்னிலிருக்கிற தத்துவம். அது ஒரு கண்ணைக் கொண்டு பார்க்கப்பட்ட சூரத்தையும், மறு கண்ணைக் கொண்டு பார்க்கப்பட்ட சூரத்தையும் சேகரித்து, ஒன்றாய்த் தெரிந்து கொள்ளும்.

ஏனென்றால் ஒருவன் தன்னுடைய இரண்டு கண்களில் ஒன்றைக் கொண்டு ஒரு சொரூபத்தைப் பார்த்தால் அதை ஒன்றாகக் காணுகிறான். இன்னுமொரு கண்ணை மூடிக் கொண்டு மற்றொரு கண்ணைக்' கொண்டு அந்த சொரூபத்தைப் பார்ப்பானாகில் அதை ஒன்றாகக் காணுகிறான். இன்னும் அவன் இரண்டு கண்களைக் கொண்டு பார்த்தால், அப்போது அந்த சொரூபத்தை ஒன்றாகக் காணுகிறான்.

ஆனால் அந்த 'ஹிஸ்ஸமுஸ்தரீக்கா' இரண்டு கண் பார்வைக்கும் இடையில் இல்லாவிட்டால் இரண்டு கண்ணின் பார்வையால் ஒரு சொரூபம் இரண்டாகத் தெரியவரும். அதெப்படி என்றால், பார்வை கோணின (அஹ்வல்) என்ற ஓரக்கண்ணனைப் போல்.

ஏனென்றால் 'ஹிஸ்ஸமுஸ்தரீக்கா' அறவே அவனுனக்கு இல்லாததாலும் அல்லது இரண்டு கண்ணுக்குமிடையில் பிசகு விசயமாகியருப்பதாலும் ஆகும். இதற்காகத்தான் அந்த அறிவுக்கு 'ஹிஸ்ஸமுஸ்தரீக்கா' என்று சொல்லப்பட்டது.

'கியா'லென்னும் பல தோற்றங்களாகிற ஒரு தத்துவம் அது வெளியிலுள்ள ஐயறிவுகளில் நின்றும் அறிந்தானே, அந்த சொரூபத்தை அவனுடைய அறிவில் சொரூபமாக்கி வைக்கும்.

எதுபோலவெனில், ஒருவன் ஒரு பட்டணத்தைப் பார்த்துவிட்டு போய்விட்டானாகில், பின்பு அந்த பட்டணத்துடைய ஸூரத்தை எப்போதாவது பார்க்க வேண்டும் என்றும் மனதில் நாடுவானாகில் கண்ணால் பார்க்கிறதன்றி பார்ப்பது போலும், அல்லது ஒரு சொல்லைக் கேட்பானாகில் பின்பு அந்தச் சொல்லுடைய பொருளை எப்போதாவது எத்திக் கொள்ள வேணுமென்று நாடினால் மறுவிடுத்தம் கேட்கிறதன்றி எத்திக் கொள்வது போலாம்.

வஹ்மென்னும் சந்தேகமாகிறது, அது காதினால் கேட்ட வஸ்துவாயிருந்தாலும், கேட்காத வஸ்துவாயிருந்தாலும் சரி அல்லது பார்த்த வஸ்துவாயிருந்தாலும் அல்லது பார்க்காத வஸ்துவாயிருந்தாலும் சரி அல்லது நிஜமாயிருந்தாலும், பொய்யாக இருந்தாலும் சரி இப்பேர்ப்பட்ட வஸ்துக்களை எத்திக் கொள்ளும்.

இதற்கு உதாரணமாவது வானத்தில் ஆயிரம் சூரியன் உண்டாயிருக்குமென்று எண்ணுவது போல். இன்னும் புவியில் ரத்தினத்தால் ஆயிரம் மலைகள் உண்டாயிருக்குமென்றெண்ணுவது போல் அதுவோ உண்டாகிற காரியமாயிருந்தாலும் சரி, உண்டாகாத காரியமாயிருந்தாலும் சரி. ஆனால் இந்த வஹ்மு மிருக ஜாதிகளுக்குடைய புத்தியைப் போல் இருக்கிறது.

ஆனதினால் தான் இடையனுடைய கிருபையும், ஓநாய் அல்லது நரி இவைகள் போலொத்த வகைகளுடைய கிருபையின் தன்மைகளையும் அறிந்து கொள்கிறது. சில பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

வஹ்மாகிறது ஷைத்தானைப்போல் என்றார்கள். ஏனென்றால் மனிதன் தத்துவங்களடங்களையும் வசப்படுத்திக் கொள்வான், வஹ்மைத் தவிர.

இதற்கு உதாரணமாக மலாயிகத்துகள் அல்லாஹுத்தஆலாவுக்கு வழிபட்டு ஸஜ்தா செய்தார்கள். இப்லீஸைத் தவிர. ஆகையால் அந்த வஹ்மாகிறது பொய் பிசகை விட்டும் இன்னும் இல்லாமையான காரியத்தை யோசிக்கிறதை விட்டும் தவிர்ந்து கொள்கிறதில்லை.

ஹிபுளு என்னும் ஞாபகச் சின்னமாவது, வெளி அறிவுகளில் நின்றும் உள் அறிவுகளில் நின்றும் அதற்கு எத்தியதைக் காத்துப் பேணிக் கொள்ளும். ஆனதினால்தான் ஒருவன் ஒரு வஸ்துவை ஒரு விடுத்தம் பார்த்த பின்பு அதைத் தெரிந்து கொள்கிறான்.

பிக்ரு என்னும் யோசனையாகிறது, மேற்சொன்ன ஹிபுளு என்னும் தத்துவத்தில் பதிந்து இருக்கிற (நக்ஸை) ரூபத்தை கண்டு கொள்ளும். இன்னும் அந்த பிக்ரு என்னும் ஆலோசனையாகிறது (அக்லை) புத்தியை துயர்ந்தாகிவிட்டால் (தாக்கிரா) என்னும் நினைக்கிறது என்று சொல்லப்படும்.

இன்னும் (முதபக்கிரா) என்னும் யோசிக்கிறது என்றும் சொல்லப்படும். இன்னும் அது 'வஹ்மை' துயர்ந்ததாகிவிட்டால் அதற்கு ((முகையலா) என்னும் பல தோற்றம் செய்கிறது என்றும் சொல்லப்படும். ஆனதால்,

பிக்ரு என்கிற ஆலோசனை பலகையில் எழுதப்பட்டதை ஓதுகிறவனைப் போல் இருக்கிறது. இந்தத் தத்துவங்கள் மூளையில் இருக்கிறது.

கோபமாகிறது அது தனக்கு தங்கடமாகிற வஸ்துவை தட்டி வைக்கிறதற்கும் அல்லது மற்றவன் பேரில் மிகைப்பதற்கும் உசுப்பிவிடும். அகங்காரமாயிருக்கும் ஆசையாகிறது பிரயோசனம், இன்ப சுகம் இவைகளை தன்னளவில் இழுத்துக் கொள்வதற்கு உசுப்பிவிடும். விருப்பம் மேற்சொன்ன 'ரூஹுஹைஹவானி' நமது இருதய கமலத்திலிருக்கிற குழியில் இருந்து புகைபோல் வெளியாகி நரம்பு வழியாக சரீரம் முழுவதும் பரந்து ஹயாத்தைக் கொடுக்கிறது.

அது விளக்கைப் போல் இருக்கும். விளக்கு வீட்டின் மத்தியில் இருந்து பிரகாசித்து வீட்டின் பற்பல கோணங்களுக்கும் ஒளி கொடுப்பதுபோல ஹயாத் என்ற ஒளியையும் பார்வை, கேள்வி முதலிய தத்துவங்களையும் கொடுக்கும். இம்மூன்று ரூஹுகளும் சரீரமிருந்தால் நாம் மிருகங்களிலோர் மிருகமாயிருப்போம்.

ஏனென்றால் ரூஹுல் இன்ஸானுடைய லட்சணம் இல்லாததால் நான்காவது ரூஹுல் இன்'சானி இது பகுத்தறிவு யோசனை முதலிய குணங்களெல்லாம் இந்த ரூஹுக்குரியவைகள். அதாவது நான்கும் ஐந்தும் இத்தனை என்றும் ஐந்தில் இரண்டைக் கழித்தால் இத்தனை என்றும் மிருகங்களால் கணிக்க முடியுமா? முடியாது.

இந்த ரூஹு நமது சரீரத்தை அடுத்திருக்கும்வரைக்கும் நப்ஸு நாத்திகா என்றும் சுருக்கமாய் பேசும்போத நப்ஸு என்றும், சொல்லப்படும். நான் இப்பொழுது சொல்வதை விளங்குகிறதும்

யோசிக்கிறதும் உன் நப்ஸே. நினைக்கிறதும் அல்லாஹுத்'தஆலாவை அறிய விரும்புகிறதும் அந்த நப்ஸே. அந்த நப்ஸ்தான் 'நீ'. இதை ஸ்திரமாகப் பிடித்துக் கொள்.

சரீரம் உனது வீடு. உன் வீட்டையும் உன்னையும் ஒன்றாயச் சேர்த்து நீ என்றும் நினைத்திராதே. கோபமும் மோகமும், இச்சைகளும் ரூஹுல் ஹைவானியின் குணமென்பதையும், பசி, தாகம், உறக்கம் முதலியவைகள் உனது இயற்கையின் குணமென்பதையும் விளங்கிக் கொள். இதுவே ஷைத்தான். இதை விட்டு காவல் தேடும்படி அல்லாஹு சுப்ஹானஹுவத்தஆலா அருள்மறையில் (குல்அவூது பிரப்பின்னாஸில்) திருவுளம் பற்றியிருக்கிறான். உஷார்! உஷார்!! ஹக் அல்ஹம்துலில்லாஹ்

ஐ!இன்சானே! உன்னுடைய அழகிய கோலத்தைக் கொண்டும், உன் முதலைக் கொண்டும், உன் அமலைக் கொண்டும், ஹக்கினிடத்தில் பதவியிருக்கிறதென்றும் கிஞ்சிற்றும் நினையாதே. ஹக்கினிடத்தில் உனக்கு குணத்தைக் கொண்டுதான் பதவி ஏற்பட்டிருக்கிறது. குணத்தை அறிந்து குணாதீதனாகு. குணங்களாவது மிருகத்தின் குணம், ஆசையும், பயமும், ஊண், தூக்கமும் புணர்தலுமாம். அதில் கெட்ட மிருகம் சீறிப் பாயும். பீறிக் கிழியும். இக்குணங்களை தவிர்த்துவிடு. இக்குணங்களுள்ளவன் மிருகம்தான்.

ஏனென்றால் குணங்களே கருத்தாகும். கோலமல்லா கோலத்தைக் கொண்டு ஆலத்தை மிரட்ட வேண்டாம். இக்குணத்தை எடுத்து ஷைத்தானாகாதே. மலக்கின் குணத்தைக் கொண்டு மனதை ஸ்திரப்படுத்து. மலக்கின் குணமாவது அல்லாஹுத்தஆலாவுடைய ஜமாலை தரிசிக்கிறதாம். இக்குணத்தில் மிகவும் உத்தம குணமானது ஹக்கின் குணமாகும்.

அதாவது தேக விந்திரியங்களால் பரிணமித்த திருவித குணங்களால் சகல கருமமும் செய்யப்படுகிறது. அவைகளுக்கு சாட்சியாயும், அசங்கனாயும், நிர்விகாரியாயும், இருக்கின்NறுJன் என்று நிர்ணயம் கொள்ளுதல். இப்படி நிர்ணயம் நிலைத்து நிலை பெறுவதாம். இவரையே குணாதீதனென்று சொல்லப்படும்.

மேலே சொல்லப்பட்ட ரூஹுன் நாத்திகா என்ற ரூஹுல் இன்ஸானை **ரூஹுல் அஃலமென்று** சொல்லப்படும். அந்த ரூஹுல் இன்சான் பேர்வுலகமென்ற ஆலம் கபீரில் **அக்லுல் அவ்வலென்றும், கலமுல் அஃலாவென்றும், லவ்ஹுல் மஃபூலென்றும், ஹகீகத்துல் முஹம்மதிய்யா** என்றும், **ரூஹுல் முஹம்மதிய்யா** என்றும், **நூரென்றும், நப்ஸுல் குல்லி** என்றும் சொல்லப்படும்.

சிற்றுலகமாகிய ஆலம் இன்சானில் அந்த ரூஹுல் இன்சானுக்கே அக்பா என்றும், கபீ என்றும், சிர்ரென்றும், சிர்ருல் ஸிர்ரென்றும், ரூஹென்றும், கல்பென்றும், நப்ஸு நாத்திகா என்றும், லதீபத்துல் இன்சானிய்யா என்றும், கலீபத்துல் அக்பரென்றும், சிர்ருல் அஃஎமென்றும், கலிமாவென்றும், புஆதென்றும், ஸதர் என்றும், அக்லென்றும், நப்ஸென்றும் கூறுவதாம்.

இன்னும் இஹ்யா உலூமித்தீன் என்ற கிதாபில் சொல்கிறார்கள்: நப்ஸு என்பதும் கல்பு என்பதும், ரூஹு என்பதும் ஒன்றுதான்!

ஏனென்றால் அடிக்கடி பிரளுகிறதினால் அதற்கு கல்பென்றும், கெடுதியை ஏவுகிறதனால் அதற்கு நப்ஸ்சென்றும், ஜடலம் உயிர் பெற்றிருப்பதினால் ரூஹென்றும்,? ஆலோசிக்கிற புறத்தால் அக்லென்றும் கூறுவதாம்.

ஆனால் நப்ஸு இன்சானிய்யாவுக்கு அதாவது கல்புக்கு மிகுந்த மாட்சிமைகளுண்டு. அதில் சிலதை சொல்லப்படுகிறது: அதென்னவென்றால் கல்பாகிறது துவர்க்கத்திலான ஒளியாயிருக்கும். இன்னும் அது உலகத்தின் கண்ணே 'இன்ஸான்' அளவில் அல்லாஹுத்தஆலாவை பார்க்கிறதற்கு இறக்கி வைத்த மேலான ஒரு சிர்ராயிருக்கும். இன்னும் அல்லாஹுத்தஆலா ஆதமை படைத்துச் சொன்னான்

*பனபக்து பீஹி மின் ரூஹி*

**பொருள்:** ஆதமுடைய அவதாரத்துள் என்னுடைய பரிசுத்த ஆவியை ஊதிவிட்டேன் என்று சொன்ன ரூஹாயிருக்கும் என்றும்,

இன்னும் அந்த கல்பாகிறது அல்லாஹுத்தஆலாவுடைய அக்லென்றும் இன்னும் அல்லாஹுத்தஆலா அதிலே பிரசன்னமாகியிருக்கிறான் என்றும், இந்த கல்பாகிறது உஜூதுகளுடைய உள்ளமையைப் பார்க்கின்ற கண்ணாடி போலென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

ஏனென்றால் நமது நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடத்தில் ஸஹாபாக்கள் யாரஸூலல்லாஹ் அல்லாஹுத்தஆலா வானத்திலிருக்கிறானா? பூமியிலிருக்கிறானா? என்று கேட்டார்கள்.

அப்போது நாயகம் சொன்னார்கள், அல்லாஹுத்தஆலாவாகிறவன் மூமினாகிய அடியார்களுடைய கல்புகளில் இருக்கின்றான் என்றார்கள்.

ஆனால் மேற்கூறப்பட்ட ஆயத்தால் ஊதப்படாத ரூஹு ஒன்றிருக்கிறதென்றும், ஊதப்பட்ட ரூஹு ஒன்றிருக்கிறது என்றும் தெரியவருகிறது. ஊதப்படாத ரூஹாகிறது, நுட்பமான ஆவி என்னும் ரூஹுல் ஹைவானிய்யாயிருக்கும். இந்த ரூஹாகிறது எல்லா உயிர்பிராணிகளுக்கும் பொதுவாயுள்ளது.

ஊதப்பட்ட ரூஹாகிறது நுட்பமான பரிசுத்த ஆவி என்னும் ரூஹுல் இன்ஸானியாயிருக்கும். இந்த ரூஹு இன்சானுக்கே சொந்தம். இந்த மூஹு பாகத்தை ஏற்காது. ஆதலால் கண்டிப்பில்லை. அல்லாஹ்வுடைய மஃரிபா இதில் இலங்குகின்றனது.

அல்லாஹுத்தஆலா ஒருவனாயும், எப்படிப் பாகத்தை ஏற்காதவனாயும் இருக்கின்றானோ, அப்படியே அவனை அறியும் அறிவு ஒன்றாயும், பாகத்தை ஏற்காததாயும் இருக்கிறது. எது ஒன்றாயும் பாகத்தை ஏற்காததாயும் இருக்கின்றதோ அதில்தான் அந்த மஃரிபா உண்டாகும்.

ஆகையால் 'நீ' என்பதற்குப் பொருள், கையுமல்ல, காலுமல்ல, வயிறுமல்ல, இந்த சரீரமான கூடுமல்ல. மனம், புத்தி, சித்தம், அகங்காரமும் அல்ல. உன் ஜீவாத்மாவும் அல்ல. 'நீ' என்பது நுட்பமான பரிசுத்த ஆவி என்னும் ரூஹுல் இன்சானிய்யாயிருக்கும்.

இதற்காக வேண்டி உபதேச உண்மையில் கூறப்பட்டிருக்கிறது. 'அந்த அறிவே சைதன்யம் அதுவே உனது வடிவமாகும். அந்த அறிவே வுபாதி வசந்தமாகும் போது முக்கியமாம். அந்த அறிவே லட்சியமாம் அழுத்தும் வுபாதிதனை பிரியில் அந்த அறிவே நீயாகும். அறியும் 'வேத முடிவிதுவே'.

**'ஆழியக் கடலைத்தான் வருத்திட்டாலும்**

**அமரர் வந்தேவல் செய்திட்டாலும்**

**பாழாம் சவம்பேச வைத்திட்டாலும்**

**பகரும் பொன்வெள்ளி சமைத்திட்டாலும்**

**நாடும் மழைபெய்ய செய்திட்டாலும்**

**நலமாம் வானமட்டும் பறந்திட்டாலும்**

**வாழும் தெளஹீதுஅல்ல வென்று**

**வள்ளல் முஹம்மதுத நபி ஓதினார்'**

-பெரிய நூஹு வலியுல்லாஹ் -பூவாறு

**'பொன்வெள்ளி செய்தோனும் பெரியோனல்ல**

**புகழான அஷ்டசித்தி பெரியோனல்ல**

**முன்னின்ற வைத்தியனும் பெரியோனல்ல**

**மூச்சடக்கி யெழும்புவனும் பெரியோனல்ல**

**சின்னமென்ற குழியிருப்பும் பெரியோனல்ல**

**திரமான கெவனமிட்டோன் பெரியோனல்ல**

**தன்னிலை அறிந்தவனே பெரியோனாகும்**

**தரணியில் இதை அறியார் சண்டிமாடே'**

ஐ!இன்சானே! இன்சான் என்ற பதத்திற்கு கண்பிள்ளை என்று அர்த்தம். அந்தக் கண்பிள்ளையைக் கொண்டு உலகத்திலுள்ள பொருள்களைப் பார்க்கின்றோம். அதுபோல

ஹக்கின் கண்பிள்ளையாகிய ரூஹுல் இன்சானைக் கொண்டு முழு ஆலத்திலும் தன்னுடைய ஸிபாத்து, அஸ்மா, அப்ஆலைப் பார்த்து ஆனந்த ரூபியாயிருக்கின்றான். அந்த ஆனந்த ரூபியாயிருக்க வேணுமென்றால் உன் சொந்த நிலையை விட்டும் அந்நிய நிலைக்குப் போகாதே.

இன்னும் (இன்ஸா)னென்னும் பதத்தில் பஞ்சாச்சரமிருக்கின்றன. அதில் முந்திய அச்சரம் 'அலிபும், நூனுமாக' இருக்கிறன்றது. இதில் பிந்திய அச்சரமும் 'அலிபும் நூனு'மாக இருக்கின்றது. இரண்டுக்கும் மத்தியில் (ஸீன்) என்ற (ஸிர்) பொருந்தியதாயிருக்கின்றன. அதாவது 'சிவ' அகங்காரத்தையும் 'ஜீவ' அகங்காரத்தையும் ஐக்கியம் பண்ணும்படியான அறிவு அகங்காரமாய் நிற்கின்றன இதற்காகத்தான்.

**'அறிவும் சிவனும் ஒண்ணு**

**அறியாதவன் வாயில் மண்ணு'**

என்று சொல்லப்பட்டது. ஆகையால்(காயினாத்)தென்னும் முழு உலகமும் உன் அறிவாகிய நினைவுதான். 'நீயும் நானு'மானதும் உன் நினைவுதான். 'நீ' அழிந்துபோகிறதும் உன் நினைவால்தான். 'நீ' ஹக்காவதும் உன் நினைவால்தான். நினைவை ஹக்காக்கிக் கொள்.

உனக்கு அன்னியமாய் ஹக்கைத் தேடாதே. இந்த நிர்ணயமே ஈமான். அதில் நிலைத்த சொல் இஸ்லாம். நினைவுவேறு இறைவன் வேறென்றால், நிச்சயமாய் குபிராம். கலங்காத நினைவு அல்லாஹ், அல்லாஹ்வாகக் காண்பதே காட்சி. அந்தக் காட்சியே ரஸூலாகயிருக்கும்.

அருமையானவனே! நீ சந்தேகமின்றி முடிவில்லாத நித்தியனாயிருக்கின்றாய். உன் சரீரம் மண்ணால் உண்டாக்கப்பட்டிருக்கினும், உன் ரூஹுடைய உண்மை அல்லாஹுத்தஆலாவைச் சேர்ந்ததாயிருக்கின்றது. உன் தேகக் கூட்டில் மேய்கிற மிருகங்களுடைய குணமும், துஷ்ட மிருகங்களுடைய குணமும், ஷைத்தானுடைய குணமும் கலந்திருக்கினும், அவற்றை நீக்கும் பொருட்டு பாடுபடுவாயாகில், அந்தக் குணங்களை விட்டும் சுத்தமாகி அல்லாஹுத்தஆலாவுடைய திருச் சமூகமென்னும் ஐக்கிய நிலைக்கு அருகனாவாய்.

ஆனால் கீழ்த்தரத்துக்குக் கீழ் இறங்குவதும், மேல் தரத்துக்கு மேலேறுவதும் எல்லாம் உன்னுடைய செய்கையினால் உண்டாகின்ற இறக்கமும் ஏற்றமுமாயிருக்கும்.

உன்னுடைய கீழ்ப்பதவி என்னவென்றால், மிருகங்களுடையவும், துஷ்ட மிருகங்களுடையவுமான வேலையை எடுத்து ஆசையும், பயமுமான வலையில் சிக்குவதாலயிருக்கும்.

உன்னுடைய மேல் பதவி என்னவென்றால் மலக்குடைய பதவியில் சேர்ந்து ஆசையும், கோபமுமான பிடிப்புக்குள் சிக்காமல் அவ்விரண்டும் உனக்கு சிறையாகி அவைகளுக்கு அரசனாகுவதாயிருக்கும். இந்த ராஜரீகத்துக்கு நீ செல்வாயாகில் அல்லாஹுத்தஆலாவுடைய திரு சமூகத்தில் ஐக்கிய நிலையை உண்டாக்கிக் கொண்டாய்.



www.sufimanzil.org

உன்னுடைய பூரண பதவியாவது அல்லாஹுத்தஆலாவுடைய ஜமாலை தரிசிப்பதாகும். அப்படி அல்லாஹுத்தஆலாவின் ஜமாலை நீ தெரிசிப்பதால் உண்டாகுமின்பம் ஒரு மூச்சாவது அதைத் தெரிசிக்காமலிருக்க சக்தி பெறமாட்டாய். அந்த ஜமாலை தெரிசிப்பதே உனக்கு சொர்க்கமாகும்.

எந்த சொர்க்கத்தில் கண்ணுக்கும், வெட்க உறுப்புக்கும் பிரயோஜனமுண்டோ, அந்த சொர்க்கம் உனக்கு அற்பமாகத் தெரியும். இன்னும் 'நீ' 'நீசன்' என்றும், 'ஈசன்' என்றும் குறிக்கிறதற்குப் போதுமான பொதுப் பதமாயிருக்கின்றாய்.

நீ மிருகங்களுடைய குணத்திலும், ஷைத்தானுடைய குணத்திலும் இருந்தால் 'நீசனா'யிருக்கின்றாய். நீ மலக்குகளின் குணத்தைக் கொண்டும், ஹக்கின் குணத்தைக் கொண்டும் மிருகத்தின் குணத்தையும், ஷைத்தானுடைய குணத்தையும் சுத்தப்படுத்தி வைப்பாயாகில், மாற்றேறிய தங்கமாகிவிடுவாய்.

அதாவது நீ சகல பற்றையும் நீக்கி எல்லா விதத்தாலும் உன்னை அல்லாஹுத்தஆலாவிடம் ஒப்புவிப்பதேயாம். இதுவே 'இரஸவாதம்' என்று சொல்லப்படும். இதைத் தவிர வேறு 'இரஸவாதம்' கிடையாது. அன்பனே மனமிறந்து மாற்றேறிய தங்கமாய் அழியாத சுகத்தை அடைந்து கொள்வாய். ஹக் அல்ஹம்துலில்லாஹ்.

ஐ!இன்சானே! அறிந்துகொள்! மனிதன் தன்னை இழந்து, மனிதப் பண்பான தன்னுடைய உஜூதென்னும் உள்ளமையைக் களைந்து, அப்தென்னும் 'நூரு நூர்ந்து' சிருஷ்டிக்கப்பட்ட ஆத்மாவை அழித்துப் போக்கி விட்டானோ, அந்த மனிதன், தாத்தியத்தான, ஸிபாத்தியத்தான 'தஜல்லியாத்தைக்' கொண்டும் அருகனாகிவிடுகிறான். பின்பு தாத்தைக் கொண்டோ அல்லது ஸிபாத்தைக் கொண்டோ தஜல்லியாக அந்த மனிதன் பேரில் ஹக் தஆலா நாடுவானாகில், தன்னுடைய உள்ளமையில் நின்றும் தஜல்லியை ஏந்துக் கொள்ளும்படியான நுட்பமான பக்குவத்தை முன் களைந்ததற்குப் பகரமாக அந்த மனிதனில் தரிபடுத்தி வைப்பான். அந்த நுட்பமான பரிசுத்த ஆவியாகிய பக்குவமென்னும் தத்துவத்துக்கு **ரூஹுல் குத்ஸி** என்று சொல்லப்படும். இதற்காகத்தான் ஹக்தஆலா அருமைத் திருவசனத்தில்,

*வஜயத்னாஹு பிரூஹில் குத்ஸீ*

**பொருள்:** ஈஸா அலைஹிஸ்ஸலாம் பரிசுத்த ஆவியைக் கொண்டு தஜல்லியத்தை ஏற்றுக் கொள்ளும்படியான பக்குவத்தால் பலப்படுத்தினோம்! என்று திருவுளமானான்.

ஐ!இன்சானே! இந்த உலகத்துக்கெல்லாம் நீ அஸலாயிருக்கிறாய். எதுபோலெனில் விருட்சத்துக்கு அஸல் வித்தாயிருப்பது போலாம். நாம் கவனிப்போம் ஆலம் பழத்தை உடைத்தோமானால் அதில் ஒரு சிறிய வித்திருக்கின்றது. அந்த வித்தை உடைத்தோமானால் ஒரு பெரிய ஆலமரமிருக்கின்றது. அன்புள்ளவனு அதை கவனிப்பாயாக!

இவைகளுக்கெல்லாம் ஆத்மாவாகிய ஆதாரம் சத்தியம் அது ஜெகத்துக்கெல்லாம் ஆத்மா. ஜெகமெல்லாம் ஆதேயம். நீ அதுவாயிருக்கின்றாய். நீயே அகண்ட சச்சிதானந்த

ஸ்வயரூபமாய் பாவிக்கப்பட்ட சுத்த பிரஹ்ம வஸ்து நீயே. ஆத்மா, வஸ்து என்பதும் நீயே! பிரஹ்ம வஸ்து என்றாலும், ஆத்மா வஸ்து என்றாலும் ஒன்றே.

துரியாதீதமான ஞானப்பிரகாசமே, உனது ஸ்வயரூபம். உன்னைத் தவிர வேறே வஸ்துக் கிடையாது. நீ தன்னந் தனியனாக இருக்கின்றாய். அதாவது இரண்டற்றிருக்கின்றாய். 'சுசாதி' 'விசாதி' 'சுவகத பேதரகித' வஸ்து நீ!

அதாவது மரம் ஒன்றிருக்கிறது. வேறொரு மரம் இருந்தால் சுசாதியாம். வேறொரு ஜாதியாக மாடு அல்லது வேறு ஏதாவது இருந்தால் விசாதியாம். மரத்திற்கு கிளைகள் சுவகதமாம். இதுபோல பிரஹ்ம வஸ்தில்லை. உன்னைத் தவிர வேறொரு வஸ்துவுமில்லை. உனக்குப் பிரிவுகளாகவும் ஒன்றுமில்லை. நீ பரந்த ஆகாயம் போல் இருக்கின்றாய். நீ சர்வ வியாபகன், ஸர்வசக்தன், ஸர்வேந்திரியாமி, சுகதுக்கங்களாகிய ஆண், பெண் அலைகளுள் சதா கோஷித்துக் கொண்டிருக்கும் இப்பிரபஞ்ச சமுத்திரமும் நீயேயாகும். உனக்கு சத்து, சித்து, ஆனந்தமே ஸ்வயரூபமாகும். அதாவது நீ திரிகாலத்திலும் அழிவற்ற வஸ்து. சுயம் பிரகாசமான வஸ்து. நீ சதானந்த வஸ்து.

**(வினா)** ஆனால் நம்மை தவிர வேறில்லை என்று இருந்த போதிலும் அனந்தகோடி வஸ்துக்களை பார்க்கின்றோமே என்று கேட்பாயாகில்?

**(விடை)** அன்பனே! நீ அனாதி அவித்தியா வாசனையால் உன் எதார்த்த ஸ்வய ரூபத்தை மறந்து வியஷ்டியாகிய மாயையால் இப்பிரபஞ்சமானாய். இம்மாயையால் நீயே சகலமுமானாய். இம்மாயையால் உன்னையே வேறு வேறு ரூபமாகப் பார்க்கின்றாய்.

அவித்தையை நீக்கினாலும் பிரஹ்ம வஸ்துவானாய். மாயையை ஒழித்தாலும் பிரஹ்ம வஸ்துவானாய். ஆனால் அவித்தையும், மாயையும் நீங்காமல் துக்கத்தை விட்டும், கஷ்டத்தை விட்டும் நீங்க முடியாது.

அறிந்து கொள்! சாட்சாத் அகண்ட சைதன்ய பிரஹ்ம வஸ்துவானது மாயா சகிதமாய் ஸமஷ்டியாகிய ஈஸ்வரனைப் பேர் பெறும். அதே பிரஹ்ம வஸ்துவானது அவித்தியா சகிதமாய் வியஷ்டியாகிய ஜீவனெனப் பேர் பெறும். ஈஸ்வரனும் ஜீவனும் முறையே அவித்தையம் ரகிதமானால் சுத்த பிரஹ்ம வஸ்துவே இச்சீவன்.

அவித்தியாசம் மந்தத்தால் பிரஹ்ம ஸ்தானத்திலிருந்து இழுக்கப்பட்டு காரணம், சூக்குமம், ஸ்தூலம் என்று சொல்லப்பட்ட முவ்வகை சரீர உபாதியுடையவனாய் ஜனன மரண சக்கரத்தில் குலாலன் திருகையைப் போல் சுழன்று அலை கடல் துரும்பு போல் சுக துக்க வலைகளில் சிக்குண்டு கஷ்டப்படுவாய்.

அவித்தையே உனக்கு காரண சரீரமாகும். இதுவே அஞ்ஞானம். இவ்வஞ்ஞானத்தில் நின்று உண்டாகும் சங்கர்ப்பமே மனம் என்று பெயர் பெற்று வாசனையாகிய விதைகளை அடக்கிய சூட்சும சரீரமாகும். இதில் நின்றும் வாசனையின் முதரிர்ச்சியினால் கை, கால் முதலிய

அவயங்களுடன் ஸ்தூல சரீரமுண்டாகும். இந்த ஸ்தூல சரீரத்தையே நானென்று அகங்கரித்து அபிமானித்த ஜீவனானவன் இடைவிடாது துக்கத்தையே அனுபவிப்பான்.

அவித்தையாகிய காரண சரீரமே ஸ்தூல சூட்சும சரீரங்களுக்கு விதை போன்றிருப்பதாலும் துக்கத்திற்குக் காரணமாயிருப்பதாலும் அவித்தையா நாசமே ஆனந்தத்திற்கு விதையாகும். பிரஹ்ம வஸ்துவினுடன் அஞ்ஞானமானது எப்போது கலந்தது? ஏன் கலந்தது? என்று கவனிக்க வேண்டாம். வஸ்திரத்தில் பட்ட அழுக்கை உடன் நீக்க வேண்டுமேயல்லாது எப்படிப்பட்டது? என்று கவனித்துகாலம் போக்க வேண்டாம்.

அருமையானவனே! நித்திய வஸ்துவை சார்ந்து கொள். அநித்திய வஸ்துவாகிய உலகத்தை விட்டு நீங்கிவிடு. உன்னுடைய நினைவு நித்திய வஸ்துவாகிய ஹக்காயிருக்குமேயானால் நீ அழியமாட்டாய். உன்னுடைய நினைவு அநித்தியமாகிய கல்காயிருக்குமேயானால் நீ அழிந்து போவாய். எதுபோலெனில் ஆதார வஸ்துவுக்கு அழிவு நேரிட்டால் ஆதேயம் அழிவதற்கு யாரிடத்திலும் கேட்க வேண்டுமா?

எதுபோலெனில் ஒரு மேசையின் பேரில் ஒரு பீங்கான் கோப்பை இருக்கிறதாக வைத்துக் கொள்வோம். மேசை ஆதாரம். பீங்கான் கோப்பை ஆதேயம். மேசையாகிய ஆதாரம் நிலைத்திருக்கும் வரை கோப்பையாகிய ஆதேயத்திற்கு அழிவு நேரிடாது. மேசைக்கு அழிவு நேரிட்ட காலத்தில் கோப்பையும் விழுந்து கெடும்.

அதுபோலவே நாம் நம்முடைய சுகமாகிய நினைவென்னும் கோப்பையை ஸ்திரமாகிய மேசை போன்றவைகளாகிய பொன், மண், பெண்களென்னும் அநித்திய பொருள்களில் ஆசை வைக்கிறோம். இவைகளுக்கெல்லாம் ஒரு காலத்தில் அழிவு நேரிடும்.

ஆகையால் அக்காலத்தில் நம்முடைய சுகத்துக்கும் அழிவு உண்டாயிருக்கின்றது. என்றைக்கும் அழியாமல் நித்தியமாயுள்ள வஸ்து எதுவோ, அதனிடத்தில் நம்முடைய சுகமாகிய நினைவை வைத்தால் நாம் நித்தியானந்தர்களாகலாம். தவிரவும் நாம ரூபத்தால் கட்டுப்'பட்டிருக்கும் ஒவ்வொரு வஸ்துவும் கால தேச வர்த்தமானங்களுக்குட்பட்டதென்றும் அறிய வேண்டும். காணப்பட்டது அடங்களும் அழியப்படத்தக்கதாம்.

**(வினா**) பிரபஞ்சமானது பிரஹ்மத்தில் நின்றும் எங்ஙனம் உண்டானது என்று கேட்பாயாகில்?

**(விடை)** ஐ!இன்சானே! அநேகவித ஞாயங்களில் மூன்றே பிரபலமாய் எடுக்கப்பட்டிருக்கின்றது. அம்மூன்றில் இரண்டு அடிபட்டு ஒன்றே பிரகாசித்துள்ளது. அவை முறையே ஆரம்ப வாதம், பரிணாம வாதம், விவற்றா வாதம் எனப்படும்.

ஆரம்பவாதமானது, நூலில் நின்னும் வஸ்திரம் எங்ஙனம் உண்டாகின்றதோ, அங்ஙனமே பிரஹ்மத்தில் நின்றும் பிரபஞ்சமுண்டாயிற்று என்பதாம். இது கூடாது. ஏனெனில் ஒரு நூலால் வஸ்திரமுண்டாவது அசம்பாவிதம். பல நூல்கள் சேர்ந்தே வஸ்திரம் உண்டாகின்றது.

ஆகையால் பல பிரஹ்மம் கூடியே இப்பிரபஞ்சம் உண்டாதல் கூடும். ஆனதால் பிரஹ்ம வஸ்துவானது ஏகம் என்றும், சுசாதி, விசாதி, சுவகதரகிதம் என்றும், வேதங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன.

தவிர பல நூற்கள் சேர்க்கைக்கு ஒரு நெசவுகாரனது முயற்சி அவசியமாகும். அதுபோல் பிரபஞ்சத்தையும் பிரஹ்மத்தையும் தவிர வேறொருவனுடைய முயற்சி அவசியமாகிறது. எப்பொழுது இரண்டு மூன்று வஸ்துக்கள் அவசியம் என்றாயிற்றோ, அப்பொழுதே அகண்டமான வஸ்து இருத்தல் கூடாது.

தவிர நூலுடைய லட்சணமும் வஸ்திரத்துடைய லட்சணமும் ஒன்றாவது போல அதாவது, நூல் சிகப்பாக இருந்தால், வஸ்திரம் சிகப்பாக இருப்பது போலவே, பிரஹ்மத்தின் லட்சணமும் பிரபஞ்சத்தின் லட்சணமும் ஒன்றாக வேண்டும். ஆனால் பிரஹ்ம வஸ்துவானது சத்திதானந்த லட்சணங்களை உடைத்தாயிருக்கின்றது.

பிரபஞ்சமானது அதற்கு நேர் விரோதமான அநுர்த்த ஜட துக்க லட்சணங்களை உடைத்தாயிருக்கின்றது. ஆகையால் நூலிலிருந்து வஸ்திரமுண்டாவது போல், பிரஹ்மத்திலிருந்து பிரபஞ்சம் உண்டாயிற்று என்று சொல்லும் இவ்வாரம்ப வாதமானது அடிப்பட்டு போயிற்று.

இனி பரிணாம வாதத்தைப் பற்றிப் பேசுவோம். அதாவது பாலில் நின்றும் தயிர் எங்ஙனம் பரிணமிக்கின்றதோ, அங்ஙனமே பிரஹ்மத்தில் நின்றும் பிரபஞ்ம் உண்டாயிற்றென்பது. இது கூடாது. ஏனெனில் சாதாரண பாலானது தயிர் ஆகாமல், முன்னிருந்த மோரின் சம்பந்தத்தால் தயிராவது போல், இப்பிரபஞ்சமும் பிரபஞ்சமாகாமல் முன்னிருந்த பிரபஞ்சாம்சத்தால் பிரபஞ்சமாயிருக்க வேண்டும். ஆதலால், பிரஹ்மத்தில் நின்றும் பிரபஞ்சமுண்டாவதற்கு முன்னமேயே பிரபஞ்சாம்சம் தேவை.

தவிர, பால் தயிராகிய பின் அதில் நின்றும், மோர், வெண்ணெய், நெய் எடுப்'பது போல் பிரஹ்மம் பிரபஞ்சமாகிய பின் அதில் நின்றும் வேறொரு வஸ்துக்கள் உண்டாக வேண்டும். ஆனதால் பிரபஞ்சம் வேறொன்றாகக் காணவில்லை.

இன்னும் தயிர் பாலாக மாறவோ, தயிரில் நின்றும் பாலைத் திரும்ப எடுக்கவோ முடியாதது போல், பிரபஞ்சத்தில் நின்றும் பிரஹ்மம் உண்டாகவே முடியாது. ஆனதால் பிரஹ்மமானது பூர்வீகமே. இது மகான்களினது துணிவு. ஆகையால் பாலில் நின்றும் தயிர் உண்டாவது போல் பிரஹ்மத்தில் நின்றும் பிரபஞ்சம் உண்டாதல் கூடாது.

இனி, விவற்றா வாதத்தைப் பற்றிப் பேசுவோம். அதாவது, ஒரு மனிதன் இருட்டும் வெளிச்சமும் சந்திக்குமிடத்தின் வழியே போய்க் கொண்டிருக்கின்றான். வழியில் ஒரு கயிற்றைக் கண்டு சர்ப்பமெனப் பிரமித்து மயிர் சிலிர்த்து வேர்த்து மூர்ச்சையாய் விடுகின்றான். சிறிது நேரத்திற்குப் பின் சில மனிதர்கள் இவன் போட்ட பயங்கரக் கூச்சலைக் கேட்டு, விளக்கை எடுத்துக் கொண்டு வந்து கயிற்றை வெளிச்சத்தில் காண்பித்து, நீ வீண் பிரம்மையால் பயந்து

சப்தமிட்டாய். நீ பார்த்தது சர்ப்பமல்ல. கயிறு என்று சொல்ல, அந்த மனிதன் பார்த்து மனதிலே சந்தோசமாகி தனது மூடத் தனத்திற்குத் தானே இறங்கித் தெளிவு கொள்கின்றனர்.

கயிற்றைக் காணுமுன் சர்ப்பப் பிரமையில்லை. கயிற்றைக் கண்ட இடத்தில்தான் பாம்பென்று பயம் உண்டாயிற்று. ஆனதினால் பாம்பு உண்மையில் இல்லை. கண்டு தெளிந்த பின்னரும் இல்லை.

அதுபோலவே பிரபஞ்சத்தின் தோற்றமும் விவற்றோபச்சமாம். நல்ல சூரிய வெளிச்சத்தில் கயிறென்று நன்றாய் புலப்படும். ஆகையால் பயத்துக்குக் காரணமில்லை. நல்ல இருட்டில் கயிற்றின் இருப்பு தெரியாது. ஆகையால் சர்ப்பமென்ற கற்பிதம் உண்டாகாது. இங்ஙனம் ஒளியும், இருளும் கலந்த இடத்தில் மயக்கத்திற்குக் காரணமாகின்றது. அதுபோலவே பூரண ஞானிகளும், முழு அஞ்ஞானிகளும் கிலேசப்படுவதில்லை. இவ்விரண்டிற்கும் மத்தியிலுள்ளவர்களுக்கே இப்பிரபஞ்சம் சர்ப்பமாக இருக்கின்றது.

இப்பிரபஞ்சமே மாயை. ஆனால் மாயையின் அர்த்தமாவது யா-ம-ஸா-மா-யா எது இல்லாததோ அது மாயை என்பார்கள். அதின் இலட்சணம் என்னவென்று விசாரிப்போம். அது ஸத்தோவென்றால் அது திரிகாலத்திலும் உள்ளதாயிருத்தல் வேண்டும். அது இல்லாததே ஆகையால் ஸத்துமல்ல. அல்லது அஸத்தோ என்றால், அது இல்லாததாயிருக்க வேண்டும். இல்லாவிடில் பயத்துக்கு ஏதுவானதென்ன? ஆகையால் அஸத்துமல்ல அல்லது 'சதஸத்தோ'வென்றால் அதுவும் கூடாது. வெளிச்சமும் அந்தகாரமும் சேர்ந்திருப்பது எங்ஙனம்?

ஆகையால் சத்துமல்ல, பின் அதின் லட்சணமென்னவென்றால், வாக்கினால் சொல்லுந்தரமன்று. இப்பேர்ப்பட்ட இந்திரஜால, மகேந்திரஜாலமுடையது மாயை. இதையே மூலப்பிரகிருதி என்றும், அவித்தையென்றும், பல விதமாய்க் கூறுவார்கள்.

இம்மாயையானது சுத்த பிரஹ்மத்தில் நின்றும் நெருப்பின் சூடு போலிருக்கும். இச்சக்தியின் சலனமே மாயை எனப்படும். இதுவே மனமெனவும் சொல்லப்படும். நிர்ச் சலனமே பரமானந்தமாகும். வெளிச்சம் கொண்டுவந்து பிரமையைத் தீர்த்தவர்களே குருக்களாவார்கள். அக்குருக்களே ஞானதீபத்தால் அஞ்ஞான இருளை நீக்குவார்கள். அவர்களுடைய உதவியன்றி தெளிவது அறிவு. அவர்களே மாயையாகிய சர்ப்பத்தைப் போக்கும் மகா வித்துவான்கள் போன்றவர்கள். அனுபோக முகமாய் பிரபஞ்ச பிரமையை காட்ட வல்லவர்கள்.

அஞ்ஞானமென்பது மாயையே. மாயையிலேதான் வித்வானாகவும், மூடனாகவும் காண்பது, மாயையிலேதானக் 'ஈஸ்வரனும் ஜீவனு'முள்ளார்கள். மாயையிலேதான் ஜனன, மரணமுண்டாகும். ஐ!இன்சானே! மாயா சம்பந்தத்தால் நீ வேறு, உலகம் வேறு என்று எண்ணுகிறாய். மாயை நீங்கினால் நீயே உலகம், உலகமே நீ.

**(வினா)** ஆனால், நான் வேறு, உலகம் வேறு என்று எனது பிரத்தியட்ச அனுபவத்தில் நான் பார்த்துக் கொண்டிருக்க, நானும் உலகமும் ஒன்றாயிருப்பது எங்கனமென்று கேட்பாயாகில்?

**(விடை)** நான் எனது சிறு பிராயத்தில் ஒரு அற்புதமான கனவு கண்டேன். அது வெகு விநோதமானது. இயற்கைக்கு விரோதமானது. அது என்னவென்றால், நான் ஒரு சிறிய தோணியில் ஏறிக்கொண்டு ஓர் ஆற்றை அக்கரை கடக்க வேண்டி அத்தோணியிலேறி மற்றொருவர் யாருமின்றி நான் ஒருவனாகவே தோணியைத் தள்ளிக் கொண்டு போகையில், கால்றாக் கண்டது. வயிற்றுப்போக்காலும், வாயாலும் கக்கினதால் நானே அடிக்கடி சுத்தம் செய்து கொண்டேன். காற்றில் அலைந்து, தண்ணீரில் மூழ்கி விடாமல் தோணியைத் தள்ளிக் கொண்டிருந்தேன். நானே காலறா உபத்திரவத்தினால் அவஸ்தைப் பட்டேன். நானே சுத்தம் செய்து கொண்டேன். சிறிது நேரம் கழித்து உபத்திரவம் தாங்க முடியாமல் மரணித்தேன்.

என்னுடைய மரணத்தைக் குறித்து நான் வாய்விட்டலறி எழுந்தேன். தோணியில் மையித்தைப் போட்டுக் கொண்டு நல்லடக்கம் செய்ய விரும்பி அக்கரை சேர்ந்தேன். நானே மையித்தைக் குளிப்பாட்டினேன். பின் கபனிட்டேன். அப்பால் பள்ளிக்குச் சுமந்து கொண்டு போனேன்.

பள்ளியில் வைத்துவிட்டு கபர் தோண்டினேன். பின் தொழுவித்தேன். பின் மையித்தைச் சுமந்து கொண்டு போய் கபரில் நல்லடக்கம் செய்தேன். பின்னால் தல்கீன் ஓதினேன். பின் பாத்திஹா ஓதி என் வாசல் தளத்துக்கு வந்தேன். வந்தவர்களுடன் முசாபஹாச் செய்தேன். பின்னால் ஐய்யோ எனது வாழ்நாள் முடிந்ததே என்று அழுதேன்.

பின்னால் நானே கபரில் நின்றும் புரண்டெழும்பினேன். நான் படுத்திருந்த இடம் விட்டு வேறு இடத்திலானேன். கண்ணை விழித்தேன். சுற்றிலும் பார்த்தேன். நான் இருந்த இடத்திலேயே இருந்தவிதமாயிருக்கின்றேன். நான் தோணியில் போகவுமில்லை. காலறாக் காணவுமில்லை. மையித்தாகவுமில்லை. விசனித்து அழவுமில்லை. மையித்தை தொழ வைத்து நல்லடக்கம் செய்யவுமில்லை.

இக்கனவை நினைத்து அர்த்தம் தெரியாமல் திகைத்தேன்! ஆச்சரியப்பட்டேன். அடிக்கடி கனவை நினைத்துக் கொண்டேன். அர்த்தம் புலப்படவில்லை. ஆனால் மெல்ல மெல்ல உலகப்பற்று நழுவிவிட்டது. அவைகளைக் களைந்தேன். சர்க்குரு கடாட்சம் பெற்றேன். அப்பொழுது ஒருநாள் இக்கனவைப் பற்றி குருவிடம் சொன்னேன். உண்மையை அறிந்தேன். அறிவுக்கறிவாய் நின்று உணர்த்திய அருள் இறைவனைக் கொண்டாடினேன்.

ஐ!இன்சானே! சொப்பனத்தில் இச்செய்கைகளெல்லாம் நான் வாஸ்தவமென்று நம்பியல்லவோ இருந்தேன். நானே தோணியைத் தள்ளுவதும், எனக்கே பேதி காண்தும், நான் இறப்பதும், நானே என் மையித்தைக்கொண்டு மையவாடிக்குச் சுமந்து செல்வதும், என் மையித்தைத் தொழவித்து நல்லடக்கம் செய்வதும், சலித்ததும் எங்கனம் நம்பமுடியாத காரியமாயிருந்தும், சொப்பனத்தில் பரிபூரணமாய் நம்பினேனன்றோ.

கபரிலுள்ள புழுப்பூச்சிகளின் கடி பொறுக்கமுடியாமல் புறண்டு விழுந்து நித்திரை தெளிந்து பார்த்தபோது பொய்யாகிவிட்டது. அது போலவே நீயும் உனது மாயா நித்திரையில் இப்பிரகிருதி சொப்பனத்தில் உன்னை வேறு வேறாகப் பார்த்துப் பிரமித்து சுகதுக்கங்களிலுழகின்றாய். ஏககாலத்தில் உனக்கு இப்பபிரபஞ்ச துக்கம் பொறுக்க முடியாமல்

நீ தீவிர விரக்தி பெற்று உலகநிலையிலிருந்து புறண்டு விழுந்து உனது மாயா நித்திரையில் நின்றும் என்று தெளிவாயோ? அக்காலத்தில் உனது ஸ்வயரூபம் உனக்குப் பிரத்தியட்சமாகும். அப்பொழுதுதான் உண்மை வெளிப்படும். வேறு வேறாய் கருதிய பிரபஞ்சம் மித்தையாம் பிரஹ்ம வஸ்துவாகிய நீயே சத்தியமாம். பிரபஞ்சம் உனக்கு அந்நியமில்லை.

ஏனென்றால், ஆத்மா பிரஹ்ம சொரூபி. ஆதலினாலும் அதுவே ஜகத்துக்கு ஆதாரமாக இருப்பதினாலும் அவ்வாத்மா ஸ்புரிப்பேமனமாதி அந்தக்கரணங்கள் அதனிடம் ஆகாசம், வாயு, அக்கினி, ஜலம், சகலத்தையும் தாங்குகின்ற பூமி இவைகளுண்டாகின. ஆதலின் இவையாவும் பரமாத்துமாவின் அபின்னாசிற் சத்தி சங்கற்ப உல்லாசமே விசித்திரமான ஜகமாகத் தோன்றுகின்றது என்று உணர்வாயாக. இதற்கொத்தவண்ணம் ஆன்றோர் கூறியுள்ளார்கள்:

**வொன்றாஞ் சத்தின் சித்தினிடத் துன்றாஞ் சித்தம் ஜகமாகி**

**நின்றே பலவாய் விரிகின்ற நானா நாமரூபம்**

**என்னைத் தவிர மற்றிங் கேதுமில்லை யென்னாணை**

**பொன்னைத் தவிர விலாபூடனம் போல் (சொரூபசாரம்)**

**கற்பிதமாம் மறுசிகையில் கானல் ஜலங்காணும்**

**அப்படிப்போ லிப்பிரபஞ்ச மறிவிடத்தே தோணும்**

(அத்துவித கீர்த்தனம்)

**சராசர மாமுல கனைத்தும் மனரூபத் தாற்றான்**

**செய்யும் விளையாட்டாஞ் சகமாய் நின்றும்**

**தன்னைத்தானே வெள;வேறாய் சமைத்துக் கண்டு**

**விளையாடும்.** (ஞானவாசிட்டம்)

ஐ!இன்சானே! அப்பரமான்மாவான பிரமசாகரத்தில் நின்றும் பரம், அபரம் அல்லது பின்னை, அபின்னை என்கிற இரண்டு அலைகளுண்டாகின.

பின்னா சத்தியால் திரிசியம் (உலகம்) விளங்குகிறது. அபின்னா சத்தியால் திருக்கு (கடவுள்) விளங்குகிறது. இத்திருக்கு ஜீவன், ஈஸனென இரு வகையாம். சூரியன் இச்சையன்றி வருச கிரணத்தினால் வருஷித்தும், பனியால் பாதுகாத்தும், தனதுஷ்ண கிரணத்தினால் நீரை வற்றச் செய்தும், தான் சாட்சியாயிருத்தல் போல ஈஸனுக்கு சிருஷ்டியாதி வியாபாரங்களிலும் ஜீவனுக்கு ஜனன, மரண வியாபாரமும் கற்பிதமாகத் தோன்றுகின்றன.

இவைகளனைத்தும் ஞானகாரமான ஆத்மாவில் கற்பிதமாம். ஆதலால், ஆன்மா சத்திய சொரூபனுக்கு இவை அந்நியமும் அல்ல. உண்மையும் அல்ல. அறிவின் திருஷ்டியிலிவை

வேறு தேற்றமேயாம். திருஷ்டிக்கு முன் சத்தா மாத்திரமாயும் சதோதயமாயும் பிரகாசிக்கின்றன.

பிரஹ்மத்தின் கன்னிதி மாத்திரத்திலேயே உலகம் உற்பத்தி, திதி, நாசங்களடைகின்றன. இம்மூன்றிலும் அதிஷ்டான சைதன்னியம் சாட்சியாயுள்ளது என்றறி. மேலும் இவ்வவத்தாத்திரயம், ஆன்மவறிவில் தினமும் காற்றாடிபோல் சுழன்று வருவதும், அல்லது சித்திரப் படத்தை விரிப்பதும், சுருட்டுவதும், போலுமாம்.

சைதன்னியமான ஆன்மா நிரவயமானதால், உலகம் தானுமாகாது, தன்னையன்றி உலகமுமில்லாது. உலக உற்பத்திக்குத் தான் கர்த்தாவும் போக்தாவுமாகானென்றறி. மே|லும் சுழுத்தியை நித்திய பிரளயமென்றதினால் தினமும் பிரகிருதியிலயமடைந்து மீண்டும் உலகசங்கற்பத்தால் சிருஷ்டியாகிறது. ஆதலின் உன் நினைவில் தோன்றி நினைவு மாறும்போது அதாவது, சுழுத்தியில் திரிபதார்த்தமும் அதாவது சிருஷ்டி, திதி, சம்ஹாரம் இம்மூன்றும் உன் நினைவளவே. ஜக, ஜீவ, பரம் ஜனன மரணமுமாம்.

ஐ! இன்சானே! நாயனென்று பேர் சொல்லப்படுகிறது, தாத்தைக் கொண்டும், சிபாத்தைக் கொண்டும் அஸ்மாவைக் கொண்டும், அப்ஆலைக் கொண்டுமாயிருக்கும். எதுபோலெனில், நாலுகால் சேர்ந்து ஒன்றாவது போல நாலுகாலில் ஒரு காலை நீக்கினமேயானால் ஒன்றென்பது நிரப்பமாகாதது போல.

தாத்தும், ஸிபாத்தும், அஸ்மாவும், அப்ஆலும், இவைகளில் ஒன்றை நீக்கினால் நாயனென்றது நிரப்பமாக மாட்டாது. ஆகையால் தாத்தே அதிஷ்டானமாயிருந்து அதனிடத்தில் ஸிபாத்து, அஸ்மா, அப்ஆல் தோன்றுகிறது. இன்னும் சரீரம் நிற்கிறது சூரத்தாக மாட்டாது. ரூஹு உறுப்புகளில் உண்டாயிருந்தே ஒழிய.

எதுபோலவெனில், இரத்தம் இன்சானிலே காணப்பட்டதாக இருக்குமேயானால், அவன் ஹயாத்தாக இருக்கிறான். அதைக் காணப்படாதிருந்தால் இன்ஸான் ஹயாத்தாக இருக்கின்றது சூரத்தாக மாட்டாது.

இதுபோல்தான் அல்லாஹ்வாகிறவன் வஸ்துகள் அடங்களையும் காணப்பட்டவனாகயிருக்கிறான். அல்லாஹ் சகல வஸ்துக்களில் காணப்படாதிருந்தால் வஸ்துக்களை காணப்படாது. இன்னும் அவனாகிறவன் தலத்தை விட்டும், ஆலத்தை விட்டும், அவனுடைய உள்ளமைக்கு தகுமல்லாததை விட்டும் துய்யவன்.

அது எதுபோலவென்றால், ரூஹாகிறது உறுப்புகளில் இருந்துமொரு உறுப்பிலேயும் தரிபடுகிறது இல்லை. உறுப்புகள் அடங்களிலும் இருக்கிறது. இதுபோல்தான் அல்லாஹுத் தஆலா ஒரு வஸ்துவில் தரிபடுகிறதில்லை. என்கிலும் அவனாகிறவன், வஸ்துக்கள் அடங்களிலும் இருக்கிறான்.

ஆகவே மனிதன் தன்னுடைய இருப்பைக் கொண்டும் ஹக்குடைய இருப்பையும், தன் கை,கால் முதலிய உறுப்புக்களை பகுத்தறிவதினால் ஹக்குடைய சூரத்தாகிய வல்லமையையும்,

உறுப்புக்களுடைய புதுமையான பிரயோஜனங்கள், பூராயங்கள், இவைகளை உற்றறிவதினால் ஹக்குடைய இல்மென்னும் பூரண ஞானத்தையும், இன்றியமையாததற்காக அல்லது தேவைக்காக அல்லது அழகுக்காக படைக்கப்பட்டிருக்கிற ஒவ்வொரு பொருளிலும் நோட்டமிடுவதினால், ஹக்குடைய ரஹ்மத்தென்னும் கிருபையையும் அறிந்து கொள்வான்.

இவ்விதமாக தன்னை அறிவது ஹக்கை அறிவதற்கு திறவுகோலாகும். எப்படியென்றால், தன் ஸிபத்துக்களைக் கொண்டு அல்லாஹ்வுடைய ஸிபத்துக்களையும், தன்னிருப்பைக் கொண்டு அல்லாஹ்வுடைய இருப்பையும் எப்படி அறிந்தோமோ, அப்படிப்போல் அவனுடைய தன்ஸீஹென்னும் தூய்மையை உன்னுடைய தூய்மையினால் அறி.

மேற்சொல்லப்பட்ட தாத்து, சிபாத்து, அஸ்மா, அப்ஆல் ஒன்றை விட்டும் ஒன்று நீங்கினதல்ல. எல்லாம் சேர்ந்தே நாயனாக இருக்கிறது. ஹக்தஆலாவினுடைய தாத்து பரிசுத்தமாயிருப்பதுடன் அவனுடைய ஸிபாத்து, அஸ்மா, அப்ஆல்கள் உலமாக இருக்கிறது. இதற்காக வேண்டியே என்னுடைய குருபிரான் கல்வத்து ஆண்டவர்கள் எனக்குச் செய்த நன்றி பிரஹ்ம உபதேசத்தில்:

**'முக்காலும் காலுமொன்று**

**உன் அக்காளும் நானுமொன்று**' என்றார்கள்.

ஐ!இன்சானே! ஹக் தஆலாவுக்கு இரண்டு தன்மையுண்டு. அதாவது (தன்ஸீ)ஹென்ற தூய்மையையும் (தஸ்பீ)ஹென்ற ஒப்பும் அல்லது அருவ அம்சம், உருவ அம்சம் என்றதாயிருக்கும்.

ஹக்தஆலாவுடைய உள்ளமை பூர்வீகமும், நித்தியமுமானது. கூடுதலும் குறைதலுமில்லாதது. எல்லையும், பேதகமுமற்றது. தத்துவ அம்சங்களால் தடிப்பும், உவமையுமில்லாதது. ஒரே தன்மையானது. அவன் கோலத்தையன்றி மூலத்தைக் காணக் கூடாதது. அவன் பூரணமானவன். ஒரு வஸ்துவும் உண்டாகவில்லை அழியவுமில்லை. மறைந்து இருந்ததே வெளியாகிறது. வெளியானதே மறைகிறது. அல்லது அவன் அரூப அம்ஸமே அவன் சொரூப அம்சங்களாக வெளியாகி மறைகின்றது.

எதுபோலவெனில், பொன் என்ற ரூபத்திலும் வளைதல், குவிதலால் பணியாகி பேதகப்பட்டாலும், பொன் என்ற உள்ளமை பேதகப்படாதது போல கடவுளின் அரூப அம்ஸமும் பொன்னை எந்த எந்த ரூபத்திலும் காணலாம்.

அவன் அரூப அம்ஸத்தை எந்த ரூபத்திலும் காணக் கூடாது. அதுவோ தடிப்பற்றது. நீர் கட்டி, குமிழி, அலை, ஜலமாக இருப்பது போல பந்தம், தீவட்டி, விளக்கு என நாமம் வேறு வேறாயினும் ஒரே அக்கினிதான். ஆனால் சிறிய அக்கியும், பெரிய அக்கினியுமாக விரிவாக்கிக் கொள்ள சக்தியுள்ளது. ஹக்கின் அரூப அம்சத்தைப் போலவே சொரூப அம்சங்களும் முடிவில்லாதது. பூலோகத்தில் ஒரு வித்தையாவது அல்லது அதன் தோற்றத்தையாவது மட்டுப்படுத்த முடியாது. அவன் அரூப அம்சமும் அறிவின் மயமானது.

எல்லாம் அவன் அறிவின் ரூபம். எல்லாம் அவன் சுயம். ஹக்கின் அரூப அம்சமோ அஞ்ஞானமில்லாதது. தேவையற்றது. இன்பதுன்பம் இல்லாதது. அவன் சொரூப அம்சங்களோ கனவைப் போல் அஞ்ஞானமுள்ளது. அவன் அரூப அம்சத்திற்கு பிணியில்லை. சுரூப அம்சத்துக்கு உண்டு. அதற்கு உறக்கமில்லை. இதற்கு உண்டும். அதற்கு ஜோடியில்லை. இதற்கு உண்டு.

இல்லாததை உண்டுமென கண்டதே அஞ்ஞானம். மாயை அதே தீமை துவிதமாகவும் அந்நியமாகவும் காணாமல் சுரூப அம்சத்தை விட்டு விழித்தவர்களுக்கே அஞ்ஞானமும், மாயையும் தீமையுமில்லை. இல்லாததை உண்டுமெனக் கற்பித்துக் கொண்டவனே ஹக்குக்கு கொடிய பகைவன். சரீரத்தை விட்டவன் இறந்தவனல்லன். தன் செயலுக்குத் தகுந்தபடி எந்த உலகத்திலாவது தன் செயலின் பலனை அனுபவித்துக் கொண்டிருப்பான்.

இறந்தவன் பிறக்கமாட்டான். ஹக்கின் அரூப அம்சத்தை அடைந்தவன் கோலத்தை மாற்றப்படுவதில்லை. மாமிசம் புசியாமலிருப்பது சைவமாகாது. துவிதமில்லாதிருப்பதே சைவம். சன்யாசங் கொள்வது துறவறமாகாது. துவிதமில்லாதிருப்பதே துறவறம்.

ஒன்றும் புசியாமலிருப்பது உபவாசமாகாது. துவிதமற்றிருப்பதே உபவாசம். எந்த ஆராதனையும் தவமாகாது. துவிதமில்லாதிருப்பதே தவம். ஹக்கின் மெய் வடிவமோ அரூபம். அவன் பொய் வடிவமோ சொரூபம். அஞ்ஞானம் அவன் அம்சத்தில் நின்றுமுள்ளது. எல்லாம் அவன் வடிவு.

எல்லாம் அவன் அம்சம். ஒன்றையும் வேற்றுமையாய்க் காணாதே. வேற்றுமையில்லாதவன் அஞ்ஞானமில்லாதவன். மாயை அற்றவன். பாவமில்லாதவன். அவன் அரூப அம்ஸத்தை அடைந்தவன். திரை நீங்கினவன். அவன் தத்துவத்தை பிரயோகிக்க வல்லவன்.

நாற்றமுள்ள பிணமும், மல ஜலமும், வெயிலையும், நிலவையும், ஆகாயத்தையும், அசுத்தமாக்காது. ஹக்காகிறவன் அரூபமானவன். அவனை எந்த வஸ்துவும் தொடாது. மலடி கனவில் பிள்ளை பிறக்கக் கண்டதுபோல் பிணம், மலஜலம் என்பதே பொய். கானலை நீராகக் காண்பதுபோல் ஜகத்துருவோ பொய். ஹக்கின் அரூப அம்சப்படி அவனுக்கொன்றுமில்லை. சுரூப அம்சப்படி எல்லாமுண்டு.

ஹக்கின் அரூப அம்சத்தின் நின்றும் சொரூப அம்சமுண்டானது. அவன் சுரூப அம்சத்தில் நின்றும் அரூப அம்சமுண்டானதன்று. ஆகையால் அரூபத்தின்படி அவனல்ல. சொரூபத்தின்படி எல்லாம் அவனே. ஹக்தஆலா எல்லாமாகவும் எல்லாம் அல்லவுமாகவும் இருக்கிறான். எல்லாம் அவன் தானாகவே இருக்கிறான்.

அவன் உண்மை மகாத் தூய்மையானது. அரூபமே அவனுக்கு மெஞ்ஞான வடிவம். மற்றதெல்லாம் அவன் போலி வடிவம். ஜெகம் அவன் நாம ரூபங்களுக்கு அடையாளமாகவும், அவன் செயல், அவன் தத்துவங்களுக்குக் கண்ணாடியாகவும் இருக்கின்றது. சூரியனை சூரியனின் ஒளியைக் கொண்டே காண வேண்டும். பந்தம், தீவட்டி வெளிச்சத்தினால் காணக்

கூடாது. அவ்வாறே அல்லாஹ்வின் உண்மையை அவன் உள்ளமையைக் கொண்டே அறிய வேண்டும். புத்தி புலன்களைக் கொண்டல்ல.

ஐ!இன்சானே! ஹக் தஆலாவினுடைய தாத்து, சிபாத்து, அஸ்மா, அப்ஆல்கள் பரிசுத்தமுள்ளது. அதை நீ தூய்மையாக்க வேண்டியதில்லை. அவன் எப்போதும் தன்ஸீஹென்னும் தூய்மையாகவே இருக்கிறான். உன்னை தன்ஸீஹென்னும் தூய்மையாக்குவது உனது கடமையாகும். உன்னை நீ தூய்மையாக்காவிடில் துக்கம் ஒழியாது. உன்னை நீ தூய்மையாக்கிக் கொள்.

உன்னுடைய நிஜ ரூபம் ஹக்தஆலாவின் அரூப அம்சத்தை சேர்ந்தது. உன்னுடைய ரூபமானது ஹக்தஆலாவின் சுரூப அம்சத்தை சார்ந்தது. அது சுத்தப் பொய். ஆகையால் உன்னுடைய சுரூபத்தைக் கிஞ்சித்தும் நினையாதே. அதாவது உன்னை ஜீவனென்னும், சம்சாரி என்றும், துக்கி என்றும், தேகமுடையவன் என்றும், கர்த்தா என்றும், போக்தா என்றும் எண்ணாதே. நீ சிவனென்றே நில்.

ஏனென்றால் நீ சிவனாகிய ஹக்தஆலாவின் அம்சமானபடியால் அம்முஸியாகிய ஹக்கை அடைந்;து கொள். ஹக்காக நில். தன்ஸீஹ் செய் என்றும் தஸ்பீஹ் செய் என்றும், 'தன்ஸீஹ் மஹ்ளாக' நில் என்றும் ஏவல் வந்ததெல்லாம் உன்னை நீ தன்ஸீஹாக்கும்படி வந்ததே அல்லாது ஹக்கை தன்ஸீஹாக்கும்படி வரவில்லை. ஹக்தஆலா குத்தூஸென்ற பரிசுத்தமாக இருக்கிறான்.

ஐ!இன்சானே! அறிந்து கொள்! மவுஜூதென்று சொல்லப்பட்டது இரண்டு வகைப்படும்.

1ஆவது மவுஜூது மஹ்ளு. அதாவது கலப்பற்ற சுயமான மவுஜூதாயிருக்கும். அல்லது அல்லாஹ்வுடைய தாத்தாயிருக்கும்.

2ஆவது மவுஜூதுன் அதமிய்யுன். அதாவது இல்லாவை என்னும் அதமைச் சேர்ந்த மவுஜூதாயிருக்கும். அல்லது கல்குகளுடைய தாத்தாயிருக்கும். அல்லாஹுத்தஆலாவுடைய உஜூதுக்கு (ஹகீகீ) உள்ளமையைச் சேர்ந்த உஜூது என்றும், கல்குகளுடைய உஜூதுக்கு (மஜாஸி) இரவலான உஜூதென்றும் பேர் சொல்லப்படும்.

ஆக இந்தப்புறத்தால் ஹக்தஆலாவுக்கும் உஜூது உண்டாயிருக்கிறது. கல்குக்கும் உஜூது உண்டாயிருக்கிறது. ஆகையால் ஹக்தஆலாவுக்கும் மௌஜூதென்றும் சொல்லப்படுகிறது. கல்குக்கும் மவ்ஜூதென்றும் சொல்லப்படுகிறது. அப்படிச் சொல்லப்பட்ட போதிலும் கல்குடைய உஜூது தன்னைக் கொண்டு தரிபட்டதல்ல. ஹக்குடைய உஜூது தன்னைக் கொண்டு தரிபட்டது. ஆகையால் கல்குக்கு உஜூதில்லை என்றாக்கி ஹக்குக்கு உஜூதை தரிபடுத்தி வைக்கவேண்டும்.

இதற்காகத்தான் 'ஹிகம்' என்ற கிதாபில் சொல்லுகின்றார்கள்: ஹக்குக்கு அந்நியமாய் ஒன்றுமில்லை. அது உன்னைத் திரை போடவுமில்லை என்கிலும் உன் சந்தேகமே உன்னை அவனை விட்டும் திரை போட்'டுக் கொண்டிருக்கிறது. கருத்தாவது, அல்லாஹ் அல்லாத

வஸ்துவுக்கு உஜூது உண்டென்று எண்ணுகிற சந்தேகமே தவிர, அதற்கு உஜூது கிடையவே கிடையாது.

ஆகையால் அல்லாஹ்தஆலாவுக்கும் உனக்குமிடையில் திரையாயிருக்கும் வஸ்துவில்லை. ஆனால் நீ அகப்பார்வையைக் கொண்டு ஆலத்தளவில் பார்த்தால் ஆலம் நிழல் போல் இல்லாததாக தோன்றும். தோற்றத்திற்கு உவமையாகிறது நிழலுக்கு உஜூது உண்டாயிருப்பது போலாயிருக்கும். நிழலாகிறது உஜூதுடைய எந்த வகை கொண்டு பார்த்தாலும், நிழல் உண்டான வஸ்துவுமல்ல. அல்லாத வஸ்துவுமல்ல.

ஏனெனில் உள்ளதாயின் நிழலுக்கு உடையானன்றி நிற்க வேண்டும். அப்படி நிற்காததாலுள்ளதல்ல. அது சுத்தப் பொய். நிழல் தோன்றுகிறதே என்று கேட்பாயாகில், தோணப்பட்டது அடங்களும் கானல் ஜலம் போல் பொய்யாகும்.

ஏனென்றால் ஒரு வஸ்து இரட்டிப்பாக வேண்டுமானால் அந்த வஸ்துபோல் ஒத்த ஒரு வஸ்துவைக் கொண்டு இரட்டிப்பாக்கப்படுமே தவிர வேறொரு வஸ்துவைக் கொண்டு இரட்டிப்பாக்கப்படாது. ஆகையால் ஆலம் தன்னைக் கொண்டு தனித்த மௌஜூதில்லாத நிழலென்று தீர்ந்தபடியால் திரையில்லை. உன் சந்தேகமே திரையாயிருக்கிறது.

சந்தேகித்தவனுக்கு உவமையாகிறது, ஒரு மனிதனைப் போலாயிருக்கும். அந்த மனிதன் ஒரு தலத்தில் இராத் தரித்திருந்து பின்பு வெளிக்கிட நாடும்போது அவ்விடத்திலருந்த ஒருப் பொத்தலில் நின்றும் வெளிப்பட்ட காற்றிரைச்சலைக் கேட்டு இது வேங்கையினுடைய சீறுதலென்று எண்ணி இரவல்லாம் வெளிக்கிடப் பயந்து வீட்டுக்குள்ளிருந்து விட்டு விடிந்தபிறகு பார்க்க வேங்கையுமல்ல. வேங்கையுடைய சீறுதலுமல்ல. கேட்டது காற்றிரைச்சலென்று கண்டவனைப் போலாயிருக்கும்.

ஐ!இன்சானே! நீ பிறந்ததையும், இறந்ததையும் கண்டு நீ பிரஹ்மமாயிருப்பதில் சந்தேகம் கொள்ளாதே. இதற்காகத்தான் ஆரிபீன்களில் ஒருவர் சொல்கின்றார்கள்: அல்லாஹ் அல்லாத வஸ்துவைக் காணும்படி என்னை ஏவப்பட்டால் நான் அவைகளைக் காண சக்தி பெறமாட்டேன்.

ஏனென்றால் அவனுடன் அவனல்லாத வஸ்தில்லை என்றார்கள். இன்னும் என்னுயிர் பிதா குருபிரான் செய்யதினா அபுல்ஹசன் அலி சாதுலி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் நான் ஈமான் என்னும் கண் கொண்டும், எக்கீன் என்னும் கண் கொண்டும் அல்லாஹுத்தஆலா அளவில் பார்த்தேன். அது நம்மைத் தவிர தலீலை விட்டும், அத்தாட்சிகளை விட்டும் தேவையறச் செய்துவிட்டது. நாம் ஹக்கைக் கொண்டும் கல்கைக் கண்டுப் பிடிக்கிறோம்.

ஆலத்தில் ஹக்கானவன் ஒருவனைத் தவிர வேறொன்றுமில்லை. அப்படியே வேண்டுமென்றால் ஆகாயத்தில் பறக்கும் அணுவைப் போல் கல்கை நாம் காண்போம். கல்கை நீ உற்றுணர்ந்து பார்த்தால் அவைகளை நீ ஒரு வஸ்தாகவும் காணமாட்டாய் என்று சொன்னார்கள்.

இன்னும் இன்சான் காமில் என்னும் கிதாபில் சொல்கிறார்கள்: ஆலத்திற்கு உவமையாகிறது பனிக்கட்டியைப் போலாயிருக்கும். ஹக்குத்தஆலாவாகிறவன் இந்த பனிக்கட்டிக்கு அசலான தண்ணீரைப் போலாயிருக்கும். ஆனபோதே கட்டியாய் உறைந்த அந்த தண்ணீருக்குப் பனிக்கட்டி என்று பெயர் இரவலாகவும், சொல் அளவாகவும் தோற்றமாகவும் இருக்கிறதேயல்லாது வாஸ்தவத்தில் தண்ணீர் என்றும் பேருள்ளதாக இருக்கிறது. உள்ளதை நினைத்து இல்லாததைக் கணிக்காதே. இன்னும் அந்தக் கிதாபில் சொல்லுகிறார்கள்:

*வலாகின் பிதவ்பித் தல்ஜி யுறுபஉ ஹுகுமஹு*

*வயூளவு ஹுகுமுல் மாஇ வல்அம்று வாக்கிஉ*

**பொருள்:** பனிக்கட்டி உருகுகிறது கொண்டுதான் பனிக்கட்டி என்னும் ஹுக்மை நீக்கி, தண்ணீரென்னும் ஹுக்மை அதற்குக் கொடுக்கப்படுமென்று சொன்னார்கள். ஆகையால், பனிக்கட்டி உருகினால் மாத்திரம் பனிக்கட்டி என்னும் ஹுக்கும் நீங்கி தண்ணீரென்னும் பெயரை நடத்தப்படுமே தவிர, உருகாதிருக்கும்போது பனிக்கட்டி என்னும் பெயர் நீங்காதென்றாகிறது. ஆகையால், அந்தச் சொல்லிலிருக்கும் நுட்பத்தைக் கண்டு பிடித்துக் கொள். வரம்பைத் தாண்டாமல் நின்று கொள். உஷார்!உஷார்!

அறிந்து கொள்ளும். புத்திசாலிகளுக்குச் சைக்கினை போதுமென்று கருதி விவரிக்காமல் அல்லாஹ்வைக் கொண்டு ஈமான் கொள்வதில் இம்மட்டில் சுருக்கி ஹக்கின் வல்லமையைக் கொண்டு முடித்தேன்.

'ஹக் அல்ஹம்துலில்லாஹ் யா முஹம்மத்'

## 2 ஆவது ருக்குனாவது

### வமலாயிகதிஹி

ஹக்குத் தஆலாவின் தத்துவம் என்னும் மலாயிகத்துகளைக் கொண்டு ஈமான் கொள்கிறது. அதாவது, அல்லாஹ்வுக்குக் கூறாக்குவதை ஒப்புக் கொள்ளாத ஒரு நுட்பமான (ஜவ்ஹர்) இருக்கிறது. அது ஹக்குடைய இராதா வின் கூறை அர்ஸில் நின்றும் குர்ஸுக்குச் செலுத்தி அங்கிருந்து மற்றும் பொருட்களுக்குச் செல்கின்றன. அந்த ஜவ்ஹரை மலக்கென்றும், ரூஹென்றும், ரூஹுல் குத்ஸென்றும் சொல்லப்படும்.

ஆனால் மலாயிகத்தென்பதற்குத் தமிழால் தேவர்கள் என்று அர்த்தம் சொல்லப்படுவதில் தேவர்கள் என்று இன்ன வஸ்துவுக்குச் சொல்லப்படுவதென்பது நிச்சயமாகாதபடியால் நாம் நிச்சயிப்போம். அதாவது (தேவன்) என்றால் அம்ஸமென்று அர்த்தம். அல்லது ஹக்கின் தத்துவம். அந்த தத்துவம் அன்பியாக்கள் முதலானவர்களிடத்தில் அவதாரமெடுத்து வரும். அப்படி அவதாரமெடுத்து வருபவர்களுக்கு தேவதூதரென்று சொல்லப்படும்.

இதற்காகத்தான் இமாம் கஸ்ஸாலி ரஹிமஹுல்லாஹ் அவாக்ள் ஒருவனுக்கு அல்லாஹ்வை அறிகிறதற்காக கஸ்பு உண்டாகும்போது சில நுட்பமான இல்முகள் கல்பில் வருமென்று அவர்கள் சொல்லி வருவதில் மலாயிகத்து என்பதுடைய மஹ்னூவுடைய அந்தரங்கத்தை அறிகிறதை அந்த நுட்பமான இல்மில் ஒன்றாக இதையும் ஏத்தி எண்ணினார்கள்.

ஆனால் மலாயிகத்துகளுடைய வர்ணிப்புகளைக் கொஞ்சம் விபரிப்போம். ஆகையால் கருத்துள்ளவனாயிருப்பாயாகில் அது விசயத்தில் யோசனையை அதிகப்படுத்தி இந்த ருக்குன் (மூலப் பொருள்) என்ற விருட்சத்திலுள்ள கனியை அருந்திக் கொள்வாய். அறிந்து கொள்!

ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்:

*கலகல்லாஹு ஆதம அலா சூரதிஹி*

**பொருள்:** அல்லாஹுத்தஆலா ஆதமைத் தன்னுடைய கோலத்தின் பேரில் படைத்தானென்று அருமை வாயால் அருளினார்கள். ஆதம் என்பது நூரென்கிற ஒளிக்குப் பெயர். அது அனாஸிரென்னும் சரீரத்திற்குரிய பெயரல்ல.

இதற்காகத்தான் ஆரிபீன்களில் ஒருவர் ஓ! ஆஷிகே!! ஒரு நூரென்கிற ஜோதியானது சரீரமென்னும் குகையில் புகுந்து ஆதமென்னும் பெயரைப் பெற்றது என்று சொல்லியிருக்கின்றார்கள். ஆனால் ஆதமென்பது இன்சானாயிருக்கும். அல்லது ஹகீகத்துல் இன்சானாகிய முஹம்மதிய்யாவாகிய ரூஹாயிருக்கும். இன்னும் ஆதமுடைய கோலமென்பது ஸிபத்தாயிருக்கும். தான் என்பது தன்னுடைய சிபத்து. சிபத்தையறிந்தவன் தன்னை அறிந்தான். தன்னை அறிந்தவன் தலைவனை அறிந்தான்.

ஏனென்றால் தானென்ற ஸிபத்து ஹக்குக்குள்ளதாயிருப்பதால் தன்னை ஹக்காக அறிந்து ஹக்காகவே இருக்கின்றான். இன்னும் ஆலமென்னும் பெரிய இன்சான் அல்லாஹ்வென்கிற இஸ்முடைய சூரத்தாகவும், அதினுடைய மள்ஹராகவும், அதுகள் எல்லாவற்றையும் பொதிந்த சிபாத்தாகவும் வெளியானது.

பஸரிய்யத் என்னும் புளவு சேர்ந்து வெளிரங்கத்தில் மட்டுத் திட்டங்களுக்குள் அடங்கியும் வாஸ்தவத்தில் அடங்காமலும் வெளியாகிய பெரிய பிதா ஆதமாக இருக்கும். ரூஹு முஹம்மதிய்யாவாகிறது எல்லா வஸ்திற்கும் அசலாயும் பெரிய பிதாவுமாயிருக்கும்.

ஆகையால் மொத்த தொகையில் அல்லாஹ்வென்னும் சூரத்திற்கு மாதிரி ரூஹு முஹம்மதிய்யா. அதற்கு மாதிரி நம்முடைய பிதா ஆதம். அப்பால் அதற்கு மாதிரி இன்சானுடைய எல்லா ஒவ்வொன்றும்.

ஆனால் ஆலத்தைப் பார்க்கிலும் இன்சானுடைய எல்லா ஒவ்வொன்றையும் வெளிசூரத்தால் மிகச் சிறியதாயிருந்த போதிலும், ஹகீகத்தில் இரண்டும் ஒன்றாயிருப்பதுடன் பதவியில் இது பாரதூரமானது.

ஏனென்றால் ஆலமென்னும் அடையாளமெல்லாம் இன்சானில் சுருண்டு கிடக்கின்றன. இன்னும் ரூபத்தில் சிறியதானாலும், மஃனாவில் பெரியதாயிருக்கின்றான். இன்னும் இன்சான் ஆலத்துக்கு அல்லாஹ்வுடைய கலிபாவாகையால் பெரிய ஆலமாயிருக்கும்.

மலாயிகத்துகள் என்பது கலிபாவாகிய இன்சானில் எல்லா ஒவ்வொன்றிலும் இருத்தாட்டி வைக்கிற குவ்வத்துக்களாகவும், ரூஹாயும், கல்பாயும் இருக்கும் என்றறிவாய். இன்னும் இன்சானில் ரூஹானிய்யத்தாகிய குவ்வத்துக்களும், ஐயறிவில் சேர்க்கப்பட்ட குவ்வத்துக்களும் நானென்ற பிரஹ்மத்தின் சன்னிதான பலத்தினால் சேடித்து செய்கைகளை செய்கின்றன.

அது எதுபோலவெனில் காந்தக்கல்லானது அசைவற்றிருக்க அச்சன்னிதான பலத்தினால் ஜடமான ஊசி சேடித்து அக்காந்தத்தைப் பார்த்துப் பிடிப்பது போலும். சூரியன் இச்சையற்றிருக்க அச்சன்னிதான பலத்தினால் ஜடமான சூரிய காந்தக் கல்லினால் அக்கினி ஜனித்து அதனால் பல கிரியைகள் நடப்பது போல. ஆத்மா பிரகாசத்தினால் பிரதிபலித்த சாயையானது விருத்தி ரூபமாயச் சாக்கிர சொப்பனங்களிலுள்ள விசயங்களை இந்திரிய வழிகளால் அறிந்து வியவகரிக்கின்றது. சுழுத்தி மூர்ச்சை சமாதிகளில் விருத்தியின்மையால் ஒரு அறிதலும் விவகாரங்களுமில்லை. ஆத்மா சன்னிதான பலத்தால் தொழில் படுவதன்றி இந்திரியங்களால் அல்ல. இதையொத்து கைவலிய நவநீதத்திலும் காண்க.

**'செய்கையுஞ் செய்விக்கையு மற்றிருக்கும் காந்தச்**

**சிலைமலைமுன் னிருங்புகள் சேட்டிக்குமாபோல்**

**செய்கையுஞ் செய்விக்கையு மற்றிருக்குமென்முன்**

**சடமான உலகமெல்லாஞ் சேட்டை செய்யும்**

**மெய்கலந்த விந்திரிய விகார ரூப**

**விவகார விருத்திக்கு விருத்திதானாம்**

**மெய்கலந்த சமாதிக்குஞ் சாட்சியே நான்**

**வெயில் போலென் றுரைத்தவனே விபுமாகர்த்தன்'**

**பொருள்:** அத்துவிதமான எனது சன்னிதியில் நடக்கும் தேக முதலிய விவகாரங்களுக்கு இவைகள் இறந்து நின்ற ஞான சமாதிக்குச் சாட்சி நானே என்று அவைகளோடுங் கூடாமல் கூடியிருப்பவனே மாகர்த்தன் என்பதாம். இவரை ஜீவன் முத்தரென்றும் சொல்லப்படும்.

இதற்காகத்தான் குத்புஸ்ஸமான் முஹையிதீன் இப்னு அரபி ரஹிமஹுல்லாஹு அன்ஹு கூறியுள்ளார்கள்:

*வமல் அக்வானு யில்லா நஹ்னு ஹத்கன்*

*வயின்னா காயினாதுன் மும்கினாதுன்*

**பொருள்:** ஆலத்தில் உண்டாகியிருக்கிறதெல்லாம் திட்டமாக நாமே ஒழிய வேறில்லை. இன்னும் நிச்சயமாய் நாம்தான் உண்டான வஸ்துக்களும் இன்மேல் உண்டாகிற வஸ்துக்களுமாயிருக்குமென்று சொல்லி இருக்கிறார்கள்.

அன்பனே! அறிந்து கொள்! ஹகீகத் முஹம்மதிய்யாவென்றும், ரூஹூல் அஃலமென்றும், ரூஹூல் இன்சான் என்றும், மள்ஹருல் தாத்துல் இலாஹிய்யா என்றும், இன்னும் பின் விவரிக்கிறபடி பல பேர்களும் அந்தந்த மள்ஹருக்கு தக்க பேர் சொல்லப்படுகிறதெல்லாம் மலக்குகளுக்Nகு அல்லாது வேறில்லை.

ஏனென்றால் இன்சான் காமிலென்னும் கிதாபில் 51 ஆவது பாபில் மலக்குடைய விபரம் பேசுவதில் சொல்லுகிறார்கள்: ரூஹென்று ஒரு மலக்குண்டும். அவர்களை ஸூபியாக்கள் ஹக்குல் மக்லூக்கென்றும், படைக்கப்பட்ட ஹக்கென்றும், ஹகீகத் முஹம்மதிய்யா என்றும் பேசுகிறார்கள்.

இன்னும் அவர் முதலாவது படைப்பிக்கப்பட்ட மலக்காயிருக்கும். ஜிப்ரீல், மீகாயீல், இஸ்றாயீல், இஸ்றாபீல் என்னும் நான்கு மலக்குகளும், இன்னும் லௌஹூல் மஹபூல் பலகையைச் சுமந்த நூனென்ற மலக்கும், கலமென்ற மலக்கும், குர்ஸை சுமந்த முதப்பிரென்ற மலக்கும், இன்னும் அவர்களைப் போலுள்ள மலக்குகள் அடங்களும், இந்த மலக்கில் நின்றும் படைக்கப்பட்டது.

இன்னும் வருகிறது: அல்லாஹுத்தஆலா இந்த மலக்கைத் தன்னுடைய நூரில் நின்றும் படைத்தான். இவரில் நின்றும் ஆலத்தைப் படைத்தான். இவரை ஆலத்தில் நின்றும் தன்னுடைய பார்வைக்குத் தலமாக்கினான். இவருக்கு அம்ருல்லாஹ் - அல்லாஹ்வுடைய கருமமென்று பெயர். இவர்தான் ஹக்குடைய தாத்திற்குக் கண்ணாடி. ஹக்தஆலா அவனுடைய தாத்தைக் கொண்டும் இந்த மலக்கிலே ஒழிய வெளியாக மாட்டான்.

மற்றும் கல்குகளில் வெளியாகிறதெல்லாம் ஸிபாத்தைக் கொண்டுதான் வெளியாவான். இவர் மௌஜூதாத்துகள் அனைத்திலும் சிறப்பானவர். இவருக்கு மேல் ஒரு மலக்குமில்லை. இவர்தான் துன்யவிய்யத்தான ஆலம் உக்றவிய்யத்தான ஆலம் அடங்களுக்கும், இதற்கு மேலுள்ளவர்களுக்கும், குத்பாயிருக்கும். இவர்களை அல்லாஹ்வுடைய கல்குகளில் இன்சான் காமிலைத் தவிர யாரும் அறியார்கள். ஒரு ஒலி இவர்களை அறிந்தால் எல்லா வஸ்துக்களையும் அறிந்து கொள்வார். அப்படி அந்த வஸ்துக்களை கொண்டு நிச்சயமாக அறிந்து கொண்டாராகில் உஜூதென்ற திரிகை அவரில் சுற்றி ஆடுகிற குத்பாகி விடுவார்.

ஆயினும் அந்த மலக்குக்கு இவர் பிரதிநிதியாயிருப்பார். ஏனென்றால் வாஸ்தவத்தில் குத்பென்பது அந்த மலக்குதான். மற்றவர்களுக்குக் குத்பானிய்யத்து இரவலான ஹூக்மைக் கொண்டாயிருக்கும். இந்த மலக்கை ஆதமுக்கு ஷுஜூது செய்யும்படி ஏவவில்லை. ஏவாததற்குக் காரணம், ஆதம் அவர்களுடைய அம்ஸமாயிருப்பதினால் ஆகும். இதற்காகத்தான்

இப்லீஸ் ஆதமுக்கு சுஜூது செய்வதை விட்டும் மறுத்தபோது அல்லாஹுத்தஆலா இப்லீஸை நோக்கி,

*அ அஸ்தக்பர்த அம்குந்தமினல் ஆலீன்*

**பொருள்:** நீ பெருமையாயிருந்து விட்டாயோ அல்லது ஆலூன் கிளையில் நின்றுமுள்ளவனோ? என்று உருக்கி வற்புறுத்தினான். ரஹ்மானுடைய சூரத்தைக் கொண்டும் படைக்கப்பட்டவனே! சூரத்தென்பதில் நிறமும், கோலமும், உடலுமல்ல.

சூரத்தென்பது சிபத்தும், குணமுமாயிருக்கும். அதாவது ஹக்தஆலாவுடைய (360) குணமாயிருக்கும். இதற்காகவே ஹக்தஆலா நம்முயைட நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை நோக்கி:

*வ இன்னக லஅலா குலுகின் அளீம்*

**பொருள்:** நபியே! திட்டமாக நீங்கள் வலுப்பமான குணத்தைப் பூண்டிருக்கிறீர்கள் என்று அருளினான். இன்னும் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அல்லாஹ்வுக்கு (360) குணமுண்டாயிருக்கிறது. தௌஹீதுடனே அதில் நின்றும் ஒரு குணத்தைக் கொண்டாவது அல்லாஹ்வைச் சந்தித்தால் சுவர்க்கம் புகுவானென்று அருளினார்கள்.

அப்போது அபூபக்கர் சித்தீக் ரலியல்லாஹு அன்ஹு அல்லாஹ்வுடைய ரஸூலே! அந்தக் குணத்தில் நின்றும் ஏதாவது என்னிடத்தில் உண்டாயிருக்கிறதா? என்றார்கள்.

அப்போது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்: ஆம்! அந்தக் குணம் முழுவதும் உங்களிலுண்டாயிருக்கிறது என்றார்கள்.

ஆகையால் ஹக்குடைய உன்னத பதவியைப் பெறுவதற்குக் காரணம் குணமல்லாது கோலமல்ல. ஏனென்றால் கானகத்தில் இன்சானுடைய ரூபத்தில் எத்தனையோ ஹைவான்களுடைய ரூபமிருக்கிறது. அது கொண்டு சங்கை ஏற்படவில்லை.

இன்சானே! இன்சானுடைய ரூஹாகிறது நூராயிருக்கும். ஷைத்தானுடைய ரூஹாகிறது நெருப்பாயிருக்கும். ஆடு, மாடு, ஒட்டகம், பறவை முதலானவைகளின் ரூஹு காற்றாயிருக்கும். நூரென்னும் ஜோதி விளக்கே மிருகத்தின் குணமாகிய ஆசை, பயம், பேருண்டி, பெருந்தூக்கம், புணர்தலாகிய காற்றைக் கொண்டு நூத்து விடாதே. ஏத்தமாகிய உன் உன்னத பதவி நூரு. நூராகவே இருக்கட்டும். நூரின் குணம், ஹக்கை அறிந்து ஹக்காயிருப்பதாம். ஹக்காயிருக்கும்போது தூக்கமெதுக்கு? வேண்டாம். வேண்டாம். உஷார்!உஷார்!!

ஷைத்தானுடைய குணமாகிறது, கலக்கத்தை எழுப்புவதும், கபடம் செய்வதுமாகிய நெருப்பைக் கொண்டு இன்சானிய்யத்தாகிய உஜூதை சுட்டுக் கரித்து எடுத்தெறியப்பட்ட ஷைத்தானாக வேண்டாம். உஷார்! உஷார்!!

மலக்கின் குணமாகிய ஹக்தஆலாவுடைய ஜமாலை தெரிசிக்கிறது கொண்டு மலக்காயிரு. இதற்காகத்தான் ஷரஹுடைய ஒழுங்கின்படி நடந்தவன் மலக்கென்றும் அல்லாவிட்டால் மிருகமென்றும்,vஷைத்தானென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

ஆகையால் ஹக்கின் குணம்கொண்டு ஹக்காயிரு. உன்னைவிட்டு ஒன்றாவது உனக்கு அந்நியமாய் விளங்காதே. அப்படியானால் கதையாக முடியும். கெட்ட குணங்களை அடக்கியாண்டு ஆண்டவனாயிரு. கெட்ட குணங்கள் உன்னை ஆண்டு நீ அடிமையாயிராதே. இன்னும் மலக்குகள் இரவிலும், பகலிலும், முரவண்ணமாகிறவர்களும் உண்டு.

அதாவது விழிப்பென்ற பகலில் சாட்டப்பட்ட மலக்கென்னும் தத்துவம் (35). அதாவது ஞானேந்திரியம் (5), கன்மேந்திரியம்(5), இவ்விரண்டின் விசயங்கள் (10), வாய்வுகள் (10), அந்தக்கரணம்(4), உள்ளம்(1) ஆக (35) கருவிகளுடனே லலாட ஸ்தானம் என்ற புரவ மத்தியிலே நின்று வேலை செய்வார்கள்.

சொப்பனம் என்ற இரவில் சாட்டப்பட்ட மலக்கு என்னும் தத்துவம் (25) அதாவது மேலே சொல்லப்பட்ட தத்துவங்களின் ஞானேந்திரியம் (5)ம் கன்மேந்திரியம் (5)ம் நீங்கலாக மீதமாகிய தத்தும் (25) கருவிகளுடனே கண்ட ஸ்தானத்தில் நின்று வேலை செய்வார்கள்.

இன்னும் சித்தமும், பிராணவாயும், உள்ளமுமாகிய மூன்று கருவிகளுடனே இருதய ஸ்தானத்தில் நின்று வேலை செய்யும்போது சுழுத்தியென்றும், சித்தமிருதயத்தில் நிற்க. பிராண வாயும், உள்ளமும், நாபியில் நின்று வேலை செய்யும் போது துரிதமென்னும் பிராண வாயு நாபியில் நிற்க. உள்ளம் மூலாதாரத்தில் அடங்கினபோது, துரியாதீத மென்றும் சொல்லப்படும்.

அன்பனே! உன்னில் சாட்டப்பட்டது போல வெளி உலகத்திலும் சாட்டப்பட்டிருக்கிறது. ஆனால் உன்னிலும் வெளி உலகத்திலும் சாட்டப்பட்ட மலக்குகளில் உள்ளமை ஒன்றே ஒழிய இரண்டில்லை. ஒன்றே ஒன்றுதான் வேறென்று எண்ணாதே. இதே அது. அதுவே இது.

ஏனென்றால், ஆலமடங்களும் ஒரே உள்ளமையாய் இருப்பதினாலாம். அதாவது முதல்வனாகிய ஹக் தஆலாவினுடைய சக்தி ஒன்றே. காரிய பேதங்களினால் பல நாகமங்களைப் பெறுகின்றன. சக்திக்கு நாமபேதமன்றி வஸ்து பேதமல்ல.

ஆனால் பிரஹ்மத்தில் அனந்'த சக்திகளுண்டு. அந்த அனந்த சக்தியினால் பிரஹ்மமே பிரபஞ்சமாக தோன்றுகிறது. சரீரத்தில் சிற்சக்தியும், ஆகாயத்தில் நிரவய சக்தியும், வாயுவில் சலன சக்தியும், கல்லில் கடின சக்தியும், ஜலத்தில் சீதள சக்தியும், அக்கினியில் உஷ்ண சக்தியும், மற்றும் அனந்த சக்திகளும், பிரஹ்மத்தின் காரியத்தினால் காணப்படுகின்றன.

சிருஷ்டிக்கு முன் இந்த சக்தி முட்டையில் சூட்சுமமாய் குஞ்சு இருப்பது போலவும், வித்தில் மரமிருப்பது போலவும், காணப்படாமல் பிரஹ்மத்திலிருந்ததென்றும், தேச கால விசித்திரத்தினால், பூமியில் பயிர்கள் முளைப்பது போல் பிரஹ்மத்தின் சக்தியுமாம். ஒருக்கால், ஜகத்தென்கிற ரூபமாய் விளங்கும் நாம ரூபம் பொய்.

எதுபோலவெனில், மண்ணின் சக்தி அநேகம் பொய்களைச் சிருஷ்டித்தது போலவும், நித்திரா சக்தியானது கூடாத சொப்பனங்களை சிருஷ்டித்தது போலவும், பிரஹ்மத்தினிடத்திலே மாயை சிருஷ்டித்தது பொய்யல்லவோ? இத்தனையும் பொய் என்று பார்த்துத் திட்டப்பட்டிரு.

ஏனென்றால், நித்திரா சக்திக்கோ இத்தனை சக்தி உண்டானால், மாயா சக்தியானது நிருவிகாரமாயிருக்கிற பிரஹ்மத்தில் ஜகங்களையும், ஜடங்களையும், சிதாபாசங்கள் என்னும் விகாரங்களையும், கற்பிப்பது பிரமாதமோ? பிரமாதமல்ல. அல்ல!! இதற்கிணங்க கைவல்லிய நவநீதத்திலும்:

**'சக்தி சத்தனைத் தவிர வேறென்றுகாண் சத்தனாமாயாவி**

**வித்தைகாட்டிய விந்திரசாலம்போய் வித்வானாம்போல**

**புத்திமைந்தனே சத்திமானாகிய பூரணவான்மாவின்**

**வஸ்துநிர்ணயஞ் சொன்ன திட்டாந்தத்தின் வழிகண்டு தெளிவாயே'**

**பொருள்:** சத்தனைத் தவிர சக்தி என்று ஒரு வஸ்து வேறில்லாமையாலும், அச்சத்து இல்லாதவிடத்தும் சத்தன் இருக்கையாலும், அச்சத்தனும், சத்தியும் எங்ஙனம் ஒன்றாமோ? அங்ஙனமே ஒன்றாம். ஆகையால் இல்லாததாகிய சத்தியை நீக்கி சத்தனாயிருப்பாய். உஷார்!உஷார்!!

இன்னும், ஹக் தஆலாவினுடைய தத்துவங்களென்னும் மலக்குகள் ஆணுமல்ல. பெண்ணுமல்ல. அவர்களுக்கு ஊணும் குடிப்பும, தஸ்பீஹூம், தஹ்மீதும், தக்பீரும், தஹ்லீலும், மு.ஃமினானவர்களுக்கு துஆ செய்வதுமாயிருக்கும்.

அன்பனே! உன்னுடைய தத்துவங்களை அழித்து ஹக்கின் ஏவலை எடுத்து விலக்கல்களை தவிர்த்து, ஹக்கை ஷுஹூது செய்வதைக் கொண்டும் மூழ்கினால் உன்னுடைய ஊணும், குடிப்பும், தஹ்பீஹு, தஹ்மீது, தக்பீரு, தஹ்லீலாகவே இருக்கிறது. அது கொண்டு மலக்குடைய பதவியை அடைந்து மலக்காகவே இருக்கிறாய். நீ ஆணுமல்ல. பெண்ணுமல்ல.

இன்னும் மலாயிகத்துகளில் அர்ஷை சுமக்கிறவர்களும் உண்டு. அர்ஷென்பது மு.ஃமீன்களுடைய கல்புகளாயிருக்கும். கல்பென்ற அர்ஷைச் சுமக்கிற மலக்குள் (8) பேர்கள். அவர்களாகிறது: அக்லென்னும் புத்தி, வஹ்மென்னும் சந்தேகம், பிகிர் என்னும் யோசனை, கியாலென்னும் பலதோத்திரவு, முசவ்விரத் என்னும் ரூபம், ஹாபிளாவென்னும் ஞாபகங்களைப் பேணிக் கொள்கிறது, முத்ரிகா என்னும் ஏதேதையும் இவ்விதமென்று எத்திக் கொள்கிறது. நப்ஸென்னும் மனம் ஆக இந்த எட்டுப் பேர்களாயிருக்கும்.

ஐ! மாசற்ற மைந்தனே! கல்பென்ற தற்கு அர்த்தம் பிறழுகிறதாம். எந்த கல்பானது கல்காயிருந்து ஹக்காக பிரண்டு விட்டதோ, அதுவே கல்பாகும். அதுவே அர்ஷாகும்.

ஹக்காய்ப் பிரள்வதற்கு உபகாரமாயும் ஹிம்மத் என்னும் வைராக்கியமாயும், இருக்குமாகில் மேல் சொல்லப்பட்ட தத்துவங்கள் எட்டுபேர்களும் அர்ஷை சுமக்கும் மலக்காவார்கள். அப்படி அல்லாவிட்டால் மலங்களை சுமக்கும் தோட்டியாவார்கள்.

ஆகையால் உன் கல்பு அர்ஷாகவேயிருக்கட்டும். மேல்சொல்லிய உன்னுடைய தத்துவங்கள் அர்ஷை சுமக்கும் மலக்காகவே இருக்கட்டும். இதற்காக வேண்டி அல்லாஹு ஸுப்ஹானஹுத்தஆலா

*இன்ன பீதாலிக லதிக்றா*

*லிமன் கான லஹு கல்புன்*

**பொருள்:** திட்டமாக எவனுக்குக் கல்பு இருக்கிறதோ அவனுக்கு உபதேசம் புண்ணியச் செய்யுமென்று திருவுளமாயிருக்கின்றான். ஆனால் கல்பென்பது இறைச்சித்துண்டல்ல. அப்படியாயின் பிரேதங்களுக்கும், ஹைவான்களுக்கும் அது உண்டு. அதனால் ஒரு சிறப்பும் கிடையாது.

இன்னும் மலக்குகளில் பைத்துல் மஹ்மூரில் எப்போதும் நுழைந்து கொண்டு வெளிக்கிடாதவர்களும் உண்டு. அதாவது வைராக்கியத்தீரனே! நீ ஸச்சிதானந்த வடிவமாகி மற்றொன்றையும் நினையாமல், மனம் குவிந்து ஒருமுகப்பட்டு ஊன்றி நிற்பாயாகில் உன் உள்ளத்தில் உதிக்கும் உதிப்பும், உள்ளத்தில் அடங்குமே தவிர வெளி உலகமாகிய பஞ்சேந்திரிய பிரவிர்த்திக்கு வரமாட்டாது. இதுவே அதன் சிர்ராம்.

கல்பென்பது பல ஊசாட்டங்கயும் அடக்கி ஒடுக்கி அன்பனாகிய ஹக்கின் பேரில் நாடித் தேடி ஏக்கமுற்று ஏகாந்தமாய் இருப்பதாம். அந்த ஏகாந்தமாகிய இயல்பே அல்லாஹ்வின் அர்ஷும், இன்சானிலே பைத்துல் மஹ்மூருமாம். இதற்காக வேண்டித்தான் இன்சான் காமிலில் சொல்லியிருக்கிறார்கள்:

*அல்கல்பு அற்ஸுல்லாஹி துல் யிம்கானி*

*ஹுவபைத்து ஹுல் மஹ்மூறு பில் யின்சானி*

**பொருள்:** கல்பு, விஸ்தீரணத்தையுடைய அல்லாஹ்வுடைய அர்ஷாயிருக்கும். கல்பு ஒருமுகப்படுவது இன்சானிலே பைத்துல் மஹ்மூராயிருக்கும். இதற்கிணங்க நிஷ்டானுபூதியில் சொல்லியிருக்கிறது:

**'நிடடையதனால் கருத்தடங்க நிறுத்தலதுவே சிவயோக**

**நிட்டைவிடாது சாதிப்போ நித்தமெய் வீடுறுவாரே'**

அன்பனே! உன் கருத்தை வீண் போக்காதே. வீண் போக்கி ஷைத்தானாகாதே! இதற்காக வேண்டி உமர் ரலியல்லாஹு அன்ஹு சிறப்புற்ற வாயால் செப்பினார்கள்: கடைவீதி மீதில்

திரிபவனும், துக்கம் கொள்பவனும், ராஜனை தோஸ்துப் பிடிப்பவனும், லாகிரி வஸ்து திண்பவனும், அவனைத் தோழமைப் பிடிப்பவனும்,

வீண் வினைகளை உடையவனும், மஜூஸியைத் தோழமைப் பிடிப்பவனும், இல்லாத வீண் செய்திகளை இட்டுண்டாக்கி கொள்பவனும், அகங்காரம் கொண்டு ஸலாம் சொல்லாமலும், திக்கிர் செய்யாமலிருப்பவனும், வீட்டிலுள்ளவர்களுடன் பிணக்குச் செய்பவனும்,

பிணக்கை உண்டாக்கி வைப்பவனும், ஒளு, தொழுகை முதலிய இபாதத்துகளில் வஸ்வாஸூ கொள்பவனும், வஸ்வாஸை உண்டாக்கி வைப்பவனும், இவர்களெல்லாம் ஷைத்தானுடைய பிள்ளைகளென்றார்கள். ஆகையால் மேற்சொல்லப்பட்ட துற்குணங்களை விட்டுவிடு.

அபூ உமாமத்துல் பாஹிலி ரலியல்லாஹு அன்ஹு முஃமின்களுக்கு வந்த கஷ்டத்தை தட்டி விடுகிறவர்கள் மலக்குகளென்றும், கண்ணை வீண் பார்வையை விட்டுக் காப்பவனும், காதை வீண் கேள்வியை விட்டுக் காப்பவனும், வாயை வீண் பேச்சுக்களை விட்டுக் காப்பவனும், கையை அநீதத்தை விட்டுக் காப்பவனும், வயிற்றை ஹராமான தீனிகளை விட்டுக் காப்பவனும், அபத்தை ஜினாவை விட்டுக் காப்பவனும் மலக்குகளென்றும், இவர்களே முஃமீன்களுக்குச் சாட்டப்பட்ட எழுமலக்குகளென்றும், மகிமை வாய்ந்த வாயால் அருளினார்கள். அன்பனே! அறிவுகளைப் பேணி ஹக்காயிரு. ஹக் அல்ஹம்துலில்லாஹ்

2ஆவது ருகுன் முற்றிற்று.

## 3 ஆவது ருக்குனாவது

## வகுதுபிஹி

ஹக்கின் செயலென்கிற வேதத்தைக் கொண்டு ஈமான் கொள்கிறது.

*அல் மௌஜூதாத்து கலிமா துல்லாஹ்*

**பொருள்:** உண்டாக்கப்பட்டது அடங்களும் அல்லாஹ்வுடைய கலிமாக்களென்னும் வார்த்தைகளாயிருக்கின்றது. அறிந்து கொள்! ஒருவன் உலகத்தை அறிவின் கண்கொண்டு உற்று நோக்குவானாகில், அவனுக்கு ஒரு கிதாபும் வேண்டாம். ஏனென்றால், வேதமோ ஹக்கின் சொல்லின் வாக்கியம். சிருஷ்டிப் பொருட்களோ அவன் செயலின் வாக்கியம். வேதத்தைக் கண்கொண்டு வாசிக்கின்றோம். சிருஷ்டிப் பொருட்களை அறிவின் கண்கொண்டு வாசிக்கின்றோம். ஹக்கின் சொல்லின் வாக்கியம் அவன் செயலின் வாக்கியம், அவனின் செயலின் வாக்கியத்திற்கு வேறாகாது. ஒன்றுதான். அறிவோ அவன் சொல்லின் வாக்கியத்தைச் சார்ந்தது.

ஆகையால் வேதம் அறிவுக்கு மாற்றமாகாது. வேதத்தை அறிவுக்கு மாற்றமாகக் கண்டால், அதைக் கொண்டு மனிதனுக்கு நம்பிக்கை உண்டாகாது. ஆகையால் அதன் பொருளைத் தீர விசாரிக்க வேண்டும்.

ஹக்கின் சொல்லின் வேதம் கடிதத்திலும், அவன் செயலின் வேதம் ஆகாயத்திலும், வரைந்திருக்கின்றது. அவன் சொல்லின் ஏட்டை வாசிப்பவர்கள், செயலின் ஏட்டை தவறார்கள். ஹக்கின் சொல்லின் ஏடு அநுமானமாகவும், அவன் செயலின் ஏடு பிரத்தியட்சமாகவும், சிலருக்குத் தோன்றுவதால் அவருக்கு ஒரு வேதமும் வேண்டாம்.

எதுபோலவெனில், ஒரு மனிதனை நேரில் கண்டால், அவர் கடிதம் வேண்டாதது போலாம். இதற்காகத்தான் ஒரு இமாம் ஆயிரம் அத்தாட்சிகளை எடுத்தெழுதி ஒரு கிதாபு கோர்வையாக்கினார். அதை ஒரு கிழவி அறிந்து மிகுந்த ஆச்சரியமாகி வாஹ்! ஸுப்ஹானல்லாஹ் இந்த இன்சானுடைய அக்லு இவ்விதம் மழுங்கிப் போச்சுதே என்றெண்ணி இந்தப் பைத்தைச் சொன்னாள்.

**சாமவுன் வஅற்லுன் வதும்மல் ஜிபாலுன்**

**கதாகல் பிஹாறு லஹு ஷாஹிதுன்**

**வபீ கு;லி ஷையின் லஹு ஆயதுன்**

**ததுல்லு அலா அன்னஹு வாஹிதுன்**

பொருள்: வானம், பூமி, கடல், மலை, இதிலுள்ள வஸ்துக்களில் எல்லா ஒவ்வொன்றும் அவனுக்குச் சாட்சி சொல்லுகிறது. அவன் ஏகன் என்கிறதின் பேரில் அறிவிக்கும் அத்தாட்சி என்கிற வேதம் எல்லா வஸ்துவுமாயிருக்கும் என்ற இந்த பைத்தை சொன்னவுடன் இதை அறிந்து அந்த இமாம் சரியென்று ஒப்புக் கொண்டார்கள்.

வஸ்து என்பதில் தானும் புகுந்துவிட்டபடியால், தன்னை மறந்து ஆராய்வது சரியல்ல. என்கிலும் மடமைத் தனம். உறியிலே தயிரிருக்க, ஊரில் வெண்ணெய் தேடி அலையலாமா?

ஆகையால் மனிதனே! உன்னுடைய ஹகீகத்தை உற்றுணர்ந்து பார்த்தாயாகில் செத்திறந்து போகக் கடவது என்பது, நீ பனாவானவுடன் பகாவிலாகி விடுவாயென்றும், இவ்விதமாக ஆராய்வதெல்லாம் விளையும் துயை கல்பானதால், முஃமீன்களுடைய கல்பு அல்லாஹ்வுடைய அர்ஷென்று சொல்லப்பட்டது.

இன்னும் ஷெய்குல் அக்பர் முகையதீன் இப்னு அரபி ரலியல்லாஹு அன்ஹு அவர்களிடம் ஒரு அரபி வந்து (ஜனல்லாஹ்) அல்லாஹ் எங்கே இருக்கிறான் என்று கேட்ட போது, கண்காட்சியுடன் எங்கே என்று தேடுவாயோ? என்றார்கள்.

அதாவது ஆலமடங்களும் ஹக்கின் பேரில் அறிவிக்கும் கிதாபாயிருப்பதால், எங்கே என்று ஏன் கேட்கிறாய்? என்று சொன்ன கருத்தை விளங்கி அவர் ஆரிபாகிவிட்டார். இன்னும் காட்டிள்ள பிழுக்கை ஆட்டின் பேரில் அறிவிக்கும். விட்டை கழுதையின் பேரில் அறிவிக்கும் என்றார்கள். சொன்ன சைக்கினையை விளங்கிக் கொண்டார்கள்.

**வினா:** ஆனால், அல்லாஹ்வையறிகிற பாதை இலேசாக இருக்க இலட்சத்தில் ஒருவர்தானே ஆரிபாகிறார்கள். அதன் காரணமென்ன என்று கேட்பாயாகில்?

**விடை:** இன்ஷானுடைய அக்லு மிகவும் கூர்மையானதாகவும், அந்த இன்சானில் அல்லாஹ் வெளியாகி இருப்பது மிகவும் கொடூரமாகவும் இருப்பதால் அறிவு மறைந்து விட்டது. இதற்கு காரணம் யாதெனில், பிராணிகளில் சகலத்திலும் கண் பார்வையில் கூரிய பார்வையுள்ளது வௌவால்.

அதற்கு அத்தாட்சி ஒரு பிராணிக்காவது, கடிந்த இருளில் கண் தெரியாதிருக்கிற நேரம், வௌவாலுக்குக் கண் தெரிகின்றது. அப்படிப்பட்ட வௌவாலுக்கு சூரிய பிரகாசமுள்ள பகலில் கண் தெரியாதிருப்பது, அதின் கண் அதிகக் கூர்மையானதால் அதிக பிரகாசம் அதில் கூர்மையானதற்கு வெளியாக மாட்டாது. இதையொத்து ஒரு பெரியோர் சொல்லியிருக்கிறார்கள்.

*அன்னா யகீபு வலைஸ யூஜது கொய்றஹு*

*வலாகின் அஷத்து லுஹூரிஹி அக்பாஹு*

**பொருள்:** ஹக்கல்லாததைக் காணப்படாமல் இருக்கிறபோது, அவன் எப்படி மறைவான்? என்கிலும் அவன் வெளியாயிருப்பதுடைய கொடூரம், அவனை மறைத்துப் போட்டது.

அதாவது, மனிதப் பண்பான குணாகுணத்தின் ஊத்தைகளில் துவண்டு அதிலே பார்வையைக் கூர்மையாக்கிக் கொண்டே வாழ்நாளை வீணாக்கி, நாளையும், பொழுதையும், தொலைத்து ஹக்குடன் இரண்டறக் கலர்வதெனும் நாட்டம் கெட்டு, நல்லறிவில்லாதிருப்பகால், கண் முழித்திருந்தாலும், கல்பு குருடாகிவிட்டபடியால் ஹக் தஆலாவுடைய ளுஹூர் மறைந்து விட்டது.

அறிந்து கொள்! (கலாம்) என்னும் வேதமாகிறது ஹக்குடைய தாத்தைக் கொண்டு தரிப்பட்ட சிபாத்தாயிருக்கும். அதற்கு அட்'சரமும், தொனியும் இல்லை. அவனுடைய உஜூது மற்ற உஜூதுக்கு ஒப்பாகாதது போல், அவனுடைய கலாம் மற்றவர்களுடைய கலாமுக்கு ஒப்பாக மாட்டாது.

இன்னும் ஹகீகத்தில் கலாமென்றது, மனதிலுண்டாயிருக்கிறதே அதுதான். மனதிலுண்டான கலாம் பேரில் கை காட்டலும், அசைதலும், அறிவிக்கிறது போல் சுத்தமும், ஹர்புகளென்னும் அட்சரங்களை, நாவிலிருந்து எடுத்து மனதிலுண்டான கலாம் பேரில் அறிவிக்கின்றது. இதற்கிணங்க ஒரு பெரியார் சொல்லியிருக்கின்றார்:

*இன்னல் கலாம லபில் புஆதி வயின்னமா*

*ஜுயிவல்லி ஸானு அலல் புஆதி தலீலா*

**பொருள்:** திடனாக கலாமாகிறது மனதிலுண்டாயிருக்கிறது. நானை மனதில், உண்டாயிருக்கின்றதன் பேரில் அறிவிக்கும் தலீலாக்கப்பட்டதென்று சொன்னார்கள்.

ஆகையால், கலாமென்கிறது மனதிலுண்டாயிருக்கிறதென்றபோது, மனதிலுண்டாயிருக்கிற கலாமில் ஹர்பு சௌத்தென்னும் அட்சரமும், தொனியுமில்லை. இன்னும் நாதம் பிறந்தவிடம் வேதம் பிறந்தது. அழியும் அட்சரம் உடல். அழியா அட்சரம் உயிர். வேதமென்ற பதம் வடமொழி. அது வித்து என்னும் தாதுவில் நின்றும் பிறந்தது. உஷார்! உஷார்!!

அறிந்து கொள்! ஹக்கின் தாத்து குர்ஆனாயிருக்கும். ஹக்கின் ஸிபாத்து புர்கானாயிருக்கும். ஸபூர் வேதமாகிறது, ஹக்கின் செயல்களின் சிபாத்துக்களுடைய தோற்றத்தைத் தொட்டும் வக்கணை.

தௌறாத் வேதமாகிய ஹக்கின் சிபாத்தின் நாமங்களுடைய மொத்தமான தோற்றத்தைத் தொட்டும் வக்கணை. இன்ஜில் வேதமாகிறது ஹக்கின் தாத்தின் நாமங்களுடைய தோற்றத்தைத் தொட்டும் வக்கணை.

ஆனால் வேதங்களின் முடிவுகளாவது: ஸபூர் வேதத்தின் முடிவு சர்வமும் ஹக்கின் செயல், தௌறாத்து வேதத்தின் முடிவு சர்வமும் ஹக்கின் நாமரூபம், இன்ஜீல் வேதத்தின் முடிவு சர்வமும் ஹக்கின் தத்துவம். குர்ஆன் வேதத்தின் முடிவு சர்வமும் ஹக்கின் உள்ளமை.

இன்னும் நீ அவனென்பது ஆகமம். அவன் நான் என்பது வேதம். இன்னும் 1ஆவது வேதத்தில் பிரஹ்மமிருந்தபடி இருக்கிறதென்றும், 2ஆவது வேதத்தில் ஒன்றொழிய இரண்டாவதில்லை என்றும், 3ஆவது வேதத்தில் பிரஹ்மமும் நீயும் வேறல்ல என்றும் கூறும். மேலும் இருந்தபடி இருக்குமென்றபோது விகாரமில்லாமையால் ஒன்றேயென்றும் ஒன்றொழிய இரண்டாவதில்லை என்றபோது ஒன்றே என்றும், பிரஹ்மமும் நீயும், வேறல்ல என்றபோது ஒன்றேயென்றும், அதுவே நீயானாய் என்றபோது ஒன்றேயென்றும் பொருளாவதால் நான்கு வாக்கியமும் ஒரே பொருளைப் பயக்கும்.

**வினா:** வேதங்களில் மஹா வாக்கியமாவது எவை? அவை எத்தனை? அவற்றின் பொருள் என்ன? என்று கேட்பாயாகில்?

**விடை:** வேதத்தில் விதி வாக்கியம், நிசேத வாக்கியம், சித்தாந்த போத வாக்கியமென மூவகை வாக்கியங்கள் உண்டு. 1ஆவது சத்தியத்தைப் பேசு, தர்மம் செய் முதலிய வாக்கியங்கள் விதி வாக்கியமாம். 2ஆவது சூதாடாதே, லாகிரி வஸ்துக்கள் சாப்பிடாதே என்னும் விலக்கல் முதலிய வாக்கியங்கள் நிசேத வாக்கியமாம். 3ஆவது விதி விலக்கன்றி கூடஸ்த பிரஹம ஐக்கியத்தைப் போதிக்கும் வாக்கியங்கள் சித்தாந்த போத வாக்கியமாய்.

அச்சித்தாந்த போத வாக்கியம் 4 வகையாம். அவைகள் பிரஞ்ஞான பிரஹ்மம், அகம் பிரஹ்மாஸ்மி, தத்துவமஸி அயமான்ம பிரஹ்மம் என்பனவாம்.

பிரஞ்ஞான பிரஹ்மம் என்னும் வாக்கியம் ருக் வேதத்தின் அத்திரிய உபநிசத்தின் கண் இருப்பதாம்.

அகம் பிரமாஸ்மி என்னும் வாக்கியம், யஜூர் வேதத்தின், பிறகு தாறன்னிய உபநிசத்தின் கண் இருப்பதாம்.

தத்துவமாஸி என்னும் வாக்கியம், சாம வேதத்தின் சாந்தோக்கிய உபநிசத்தின் கண் இருப்பதாம்.

அயமான்மா பிரஹ்மமென்னும் வாக்கியம் அதர்வண வேதத்தின் மாண்டோக்கிய உபநிசத்தின் கண் இருப்பதாம்.

இவற்றின் பொருள் முறையே, 1ஆவது (பிரஞ்ஞான பிரஹ்ம) மென்றால், சுத்த அறிவாகிய ஆத்மாவே பிரஹ்மமென்றும், 2ஆவது (அகம்பிரமாஸ்மி) என்றால் நான் பிரஹ்மமாயிருக்கிறேன் என்றும், 3ஆவது (தத்துவமஸி) என்றால், அது நீயா யிருக்கின்றாயென்றும், 4ஆவது (அயமான்மா பிரஹ்ம)ம் என்றால், இந்த ஆத்மா பிரஹ்மம் என்று சொல்லப்படும்.

இவற்றுள் பிரஞானம் - அகம். துவம் - அயம் என்னும் பதங்களுக்கு, வாஸ்தவத்தில் இல்லாமல் சொல் அளவாகிய வாச்சியார்த்தம் ஜீவனாம். உண்மையில் இருப்பதாகிய லட்சியார்த்தம் கூடஸ்த வடிவ ஆன்மாவாம். பிரஹ்மம் தத்து ஆன்மா என்னும் பதங்களுக்கு வாச்சியார்த்தம், ஈஸ்வரனாம். லட்சியார்த்தம் சுத்தப் பிரஹ்மமாம்.

அஸிமி- அஸி என்பனவற்றின் பொருள் முறையே இருக்கின்றேன், இருக்கின்றாய் என்பனவாம். இவ்வாக்கியார்த்தங்களில் வாச்சியார்த்தத்துக்கு ஐக்கியம் பொருந்தாமையின் லாட்சியார்த்தத்துக்கு ஐக்கியம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

இவற்றுள் தத்துவமஸி என்னும் மகா வாக்கியம், உபதேச வாக்கியமாம். அகம் பிரமாஸ்மீ வாக்கியம் அனுபூதி வாக்கியமாம். பிரஞ்ஞான பிரஹ்மம் என்றும் வாக்கியம் அப்பியாசமாம். அயமான்மா பிரஹ்மமென்னும் வாக்கியம் சம்மத வாக்கியமாம். தத்துவமஸி மகா வாக்கிய ஞான பிரஹ்மம் என அப்பியாசம் செய்து, அயமான்மா பிரஹ்மம் என்பதற்குச் சம்மதித்து, அகம் பிரமாஸ்மி என்னும் அகண்டார்த்த சுக பரிபூரண சுரூபமாய் விளங்க வேண்டுமென்பது இவற்றினது திரண்ட தாத்பரியமாம்.

இதற்காக வேண்டித்தான் அப்துல் கரீமுல் ஜீலி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் சொல்லுகிறார்கள்:

*இன்னல் கலாமா ஹுவல் உஜூதுல் பாரிஸி*

*பீஹி ஐறா ஹுக்முல் உஜூதுல் ஜாயிஸி*

**பொருள்:** கலாமாகிறது வெளியாகிய உஜூதாயிருக்கும். அதிலே ஆமாகிய உஜூதுடைய ஹுக்மு நடந்தது.

*பஹீயல்லதீ பில் யில்மி கானத் அஹ்ரூபன்*

*லாதப்குறு இதுலைஸ தத்மத மாயிசுன்*

**பொருள்:** அந்தக் காலம் அச்சரமம் தொனியுமில்லாமல் இல்முலே இருந்ததே அதுவாயிருக்கும். ஏனென்றால், அந்த அறிவிடத்தில் தாத்தென்றும், ஸிபாத் என்றும் பிரிக்கிறதற்கு யாதொன்றும் இல்லை.

*பதமைஸத் யின்தல் லுஹூரி பஅப்பறு*

*அன்ஹு பிலக்தத்தின் குன்வி யத்றில் பாயிசு*

**பொருள்:** ளுஹூரென்னும் அவதாரத்தினிடத்தில் தாத்தென்னும் குர்ஆனும், சிபாத் என்னும் புர்கானும் பிரிவாகிவிட்டது. ஆகையால் ஜெயம் பெறுகிறவன் இந்த சூட்சாதி சூட்சத்தைப் பிரித்து அறிவதற்காக 'குன்' என்ற பதத்தைக் கொண்டும், அந்த அவதாரத்தைத் தொட்டும் ஆரிபீன்கள் வக்கணையிட்டுப் பேசினார்கள். இன்னும் அலி கர்ரமுல்லாஹ் வஜ்ஹஹு சொல்லியிருக்கின்றார்கள்:

*அந்தல் கிதாபுல் முபீனுல்லதீ*

*பி அஹ்று பிஹி யல்ஹருல் முல்மறு*

**பொருள்:** எந்த வேதத்தில் அச்சரங்களைக் கொண்டு மறைக்கப்பட்டது எல்லாம் வெளியாகுமா? அந்த வெட்ட வெளிச்சமான வேதம் நீதான்.

*பலா ஹாஜத லக பீகாரிஜி*

*வலிக்ருக பீக வமா தப்குறு*

**பொருள்:** இன்சானே! வெளி உலகில் உனக்குத் தேவையில்லை. உன்னை விசாரிப்பது உனது கடமை. நீ கிஞ்சித்தும் யோசிக்கிறாயில்லை. உனக்கந்நியமாக வேதமிருக்கிறதென்றும் நாடாதே. தேடாதே. இன்'னும் ஷெய்குல் அக்பர் ரலியல்லாஹு அன்ஹு சொன்னார்கள்:

*அனல் குற் ஆனு வஸ்ஸபுவுல் மதானி*

*வரூஹுர் ரூஹி லாரூஹுல் அவானி*

**பொருள்:** நான் குர்ஆனும் புகழப்பட்ட ஏழு ஆயத்துக்களும், உயிருக்கெல்லாம் உயிருமாயிருக்கும். சரீரத்திற்கு மாத்திரம் ரூஹென்கிறதில்லை என்றார்கள். ஆகையால், புத்திசாலிகளுக்கு அதிகமாய்ச் சொல்வது தேவையல்ல என்று. இம்மட்டுக்கு இந்த ருக்னை முடிக்கலானேன்.

ஹக் அல்ஹம்துலில்லாஹ்!

3ஆவது ருகுன் முற்றிற்று

**4 ஆவது ருக்குனாவது**

**வரஸூலிஹி**

நல்உதிப்பென்னும் ஹக்கின் ரஸூல்மார்களைக் கொண்டு ஈமான் கொள்கிறது. அதாவது:

*வல் வாரிதாத்து ருஸ்லுல்லாஹ்*

**பொருள்**: நீ ஒன்றையும் நினைக்காமல், யோசிக்காமல் நிஷ்டையில் மனதை அடக்கி, ஒடுக்கி, ஒருமுகப்பட்டிருக்கும்போது, கருத்தில் வருகிற நல்லெண்ணங்கள் அடங்களும், அல்லாஹுத்தஆலாவுடைய தூதர்களாயிருக்கும். இவ்விதம் சொல்லப்பட்டதைக் கொண்டு வெளியில் வந்த ரஸூல்மார்கள் ரஸூல் அல்லவென்று சொல்லாதே.

ஏனென்றால், மறைவான ஆலத்தில் பரிசுத்த உதிப்பாயும் வெளியான ஆலத்தில் மானைப் பிடிக்க வேடன் மான் வேடங் கொண்டது போலும், பரிசுத்த மனு அவதாரம் கொண்டு, மனிதர்களை நேர்வழியில் அழைத்தார்கள். ஆனதால் உள் ஆலத்தில் வரும் ரஸூலே, வெளி ஆலத்தில் வரும் ரஸூலாகும். அவர்களே இவர்கள். இவர்களே அவர்கள். பேதமாக எண்ணாதே.

ஆனால், அல்லாஹ்வை ஒன்றுபடுத்துவதில் மயங்கும் ஊசாட்டத்தைத் தள்ளிவிடு. இதற்காகத்தான் சொல்லப்பட்டிருக்கின்றது பாத்தினிய்யத்தாகிய ரஸூலை ஒருவன் ஒப்புக் கொள்ளவில்லையானால் லாகிரிய்யத்தான் ரஸூலை ஒப்புக் கொண்டவனல்லன்.

வெளித் தோற்றமாய் வந்த ரஸூல்மார்கள் மனிதர்களை அத்துவிதத்தின் பேரில் உஷார் ஊட்ட வந்தார்கள். அவர்களே உள் ஆலத்தில் அத்துவிதத்தை ஒப்புக் கொள்ள வருவார்கள். அந்த உள் ஆலத்தில் வரும் ரஸூலைத் தேடு. நாடு. ஏக்கமுற்று ஏகாந்தமாய் இரு.

ஐ! இன்சானே! உதிப்பே ஹக்கின் தூது. சொல்லே அவன் வாக்கியமாம். நுபுவ்வத் என்பது ஹக்கைத் தொட்'டும் செய்தி அறிவித்துத் துவித மார்க்கக் கொள்கையை நிர்த்தூளியாக்கும் உத்தியோகத்திற்கே நுபுவ்வத் என்றும், தீர்க்கதரிசனை என்றும் சொல்லப்படும்.

விலாயத் என்பது, தன்னைத் தொட்டும் செய்தி அறிவித்து, அத்துவித மார்க்கத்தை தரிபடுத்தி நடைபெறச் செய்யும் உத்தியோகம் என்று சொல்லப்படும். ஆனால் நுபுவ்வத் என்னும் துவித மார்க்கத்தை நம்முடைய நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் முடிவு செய்து விட்டார்கள். ஆகையால் அவர்களுக்கு காத்தமுன் நபி என்ற பேர் சொல்லப்பட்டது.

நுபுவ்வத் என்னும் துவித மார்க்கம் முடிவாகிவிட்டன. இனி விலாயத் என்னும் அத்துவித மார்க்கந்தான் நடைபெற வேண்டும். முன்னுள்ள நபிமார்கள் தேவபூஜை கூடாதென

புத்துக்களை உடைத்திருக்கின்றார்கள். அப்படியிருக்கப் பின்னுள்ள புத்தியில்லாதவர்கள் புத்துக்களை வெளிப்படையாய் வணங்காவிட்டாலும், அதற்குப் பதிலாக தங்கள் மனத்தின் கண் தேவ பூஜையை ஏற்படுத்திக் கொண்டார்கள். தன்னை இன்னானென்றும், இன்ன வஸ்துவென்றும், அறியாமற் போனார்கள். மனதிலே ஏற்படுத்திய புத்தைத் தகர்த்தவனே ஞானியாவான்.

ஒரு நபியாவது நுபுவ்வத் என்னும் துவித மார்க்கத்தை முடிவு செய்ததாகச் சொல்லவேயில்லை. நம்முடைய நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மட்டும் சொல்லியிருக்கின்றார்கள். அப்படியிருக்க அந்த மார்க்கத்திலிருந்து கொண்டு துவிதம் கொள்வது ஆச்சரியம்தான்.

ஞானத்தை உபதேசிக்க வந்தவர்களே தீர்க்கதரிசிகளாம். இத்தீர்க்கதரிசிகளாகிய நபிமார்களில் அநேகருக்கு துவித மார்க்கத்தை முற்றிலும் கண்டித்து விலக்கி, அத்துவித மார்க்கத்தை நிலைநிறுத்த சமயமும் காலமும் வாய்க்கவில்லை.

ஏனென்றால், மனிதர்கள் அவாக்ள் காலத்தில் அத்துவித உபதேசத்திற்கு யோக்கியமற்றவர்களாக இருந்தார்கள். துவித மார்க்கத்தை நபிமார்கள் உபதேசிக்கவில்லை. நபிமார்கள் அவரவர்கள் மார்க்கத்தில் அழைப்பதற்கு முன்னமேயே மனிதர்கள் தங்களுக்காக துவித மார்க்கத்தை அநியாயமாக ஏற்படுத்திக் கொண்டார்கள். அப்படி அவர்கள் ஏற்படுத்தி ஹலாக்காய்ப் போனது பாத்தினிய்யத்தான ரஸூலையும் ளாகிரிய்யத்தான ரஸூலையும் ஒப்புக் கொள்ளாததாலேயாம்.

இன்சானே! நீ ஒன்றையும் நினைக்காமல், யோசிக்காமல், நிஷ்டையில் மனதை ஒடுக்கி அடக்கி ஒருமுகப்பட்டிருக்கப் பழகு. அப்படி நீ ஒருமுகப்பட்டிருக்கும்போது கருத்தில் வருகிற நல்லெண்ணங்கள் என்ற ரஸூல்மார்களுக்கு நீ வழிபடு. மற்ற மனித விசயமான எண்ணங்களுக்கு வழிபடாதே.

இதற்காகத்தான் நம்முடைய நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஜாபிர் ரலியல்லாஹு அன்ஹுவை அழைத்து 'ஜாபிரே! அல்லாஹ் படைத்ததில் முந்தினது அக்லென்றும், இன்னொருபோது அல்லாஹ் படைத்ததில் முந்தினது கலமென்றும், மற்றொருபோது அல்லாஹ் படைத்ததில் முந்தினது உம்முடைய நபியுடைய ரூஹென்றும், மூன்று விதமாகச் சொன்னார்கள். இப்படி மூன்றுவிதமாகச் சொல்லி இருப்பதின் கருத்தும் ஒன்றேயல்லாது வேறில்லை.

ஆனால் அத்துவிதத்தைத் தரிபடுத்தி வைக்கிறதில், ஆம் என்றும், அல்ல என்றும், சொல்லாமல் மயங்கினது அக்லுல், மஆஷி அல்லாது வேறில்லை.

இன்சானே! அக்லாகிறது, அக்லுல் அவ்வலென்றும், அக்லுல் குல்லி என்றும், அக்லுல்மஆஷி என்றும் மூன்று வகையாயிருக்'கும். அல்லாஹ் படைத்ததில் முந்தினது அக்லென்றதில் அதுகொண்டு கருத்து: ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் உடைய அஸல் நபி

ஸல்லல்லாஹு அலைஹி வஸல்'லம் அவர்களாயிருப்பதால், மனதை அடக்கியொடுக்கி, ஏக்கமுற்றிருக்கும் வேளையில் ஆரம்பமாய் வரும் அத்துவித எண்ணம் அக்லுல் அவ்வலாம். அவர்களுக்கு வழிப்பட்டு அசையாதிருந்தவர்கள் பாத்தினிய்யத்தான ரஸூல் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு வழிப்பட்டவர்களாம். முந்தின எண்ணத்திற்கு வழிபடாமல் மனம் அசைவது அக்லுல் குல்லியாம்.

பலவிதமான உத்தேசமும், பொய்யான ஊசாட்டமும் கொண்டு வருவது 'அக்லுல் மஆஷியாம்', அக்லுல் மஆஷிக்கு வழிப்படுவது ஷைத்தானுக்கு வழிப்படுவதுவதாம். இதற்காக வேண்டித்தான் ஆதமுடைய மக்கள் அடங்களுடனே ஷைத்தான் இருக்கின்றான். அவர்கள் அவனுக்கு வழிபட்டு அவன் மயமாகிவிட்டார்கள். என் ஷைத்தான் எனக்கு வழிப்பட்டு என்மயமாகிவிட்டான் என்று நமது ஆண்டவர்கள் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அருமையான வாயால் அருளினார்கள். ஸுப்ஹானல்லாஹ்.

எனதன்பனே! 'ரஸூலுல்லாஹ்வில் பனாவாகி, உன்னை ரஸூலுல்லாஹ்வாகக் கண்டு உன் ஷைத்தானை உன் மயமாக்கி, உன் உதிப்பென்னும் ஜோதியை மருகிக் கொள். இதற்காகத்தான் உமருல் காஹிரி ஆண்டவர்கள் அவர்களுடைய மெஞ்ஞானப் புலம்பலில் கூறியுள்ளார்கள்.

**'தானாய் அஹதிய்யத்தில் தன் வஹ்தத்திலமைந்த**

**மானார் முஹம்ம தொளி மருவு நாளென்னாளோ?'**

இன்னும், ஷெய்கு முஹ்யித்தீன் இப்னு அரபி ரலியல்லாஹு அன்ஹு அவாக்ள் சொல்லியிருக்கின்றார்கள்:

*ரசூலுன் ஜாஇ மின்னா பஃத தாலிக*

***அலைனா முன்பிய்யுன் பில் முஹ்ஜிஸாத்தி***

**பொருள்:** பரிசுத்த நிலைமைக்குப் பின் திருஷ்டாந்தங்களை கொண்டு செய்தி அறிவிக்கும் ரஸூல், நம்மில் நின்றும், நம்மின் பேரில் வந்தார்கள் என்று சொன்னார்கள்.

அறிந்து கொள்! தனக்கந்நியமாய் பிரஹ்மமில்லை. பிரஹ்மத்துக்கு அந்நியமாய் நானுமில்லை. ஆன்மாவே சுத்தப் பிரஹ்மம் என்று தன்னிந்திரியங்களாகிய புலன்களைப் புத்தியிலும், புத்தியை மனத்திலும், மனத்தை ஆன்மாவிலும் ஒடுக்கி அதாவது, தன்னை யாதொரு தத்துவ அம்ஸங்களான தடிப்பின்றி, அகண்டமான முடிவற்றதானாய்த் தனியாய் என்றைக்குமுள்ள அறிவும், சுயமான சுத்த ஆகாயத்தைப் போன்ற வெறும் வெட்ட வெளியாகிய சர்வத்துக்கும் அதீதமான மனதாலும், வாக்காலும், எடுத்துரைக்கவொண்ணாது,

சர்வமும் இறந்து இல்லாமையாயிருக்க, இல்லாமைக் கில்லாமையான உள்ளமையாகிய தன் சுய வடிவான, சுத்த மயமான அறிவாகாயத்தில் சேர்ந்து, முன்னும் பின்னும், மேலும் கீழும், இடப்புறமும் வலப்புறமும், தன் சிந்தனையினால் முடிவில்லாத அரூபத்திற்கு அரூபமான

ஆகாய அரூபத்தைச் சிந்தித்து, தன் சரீரமுள்பட சரீரத்தையும், அதில் நஸித்து இறக்கும்படி செய்து,

அலையற்ற சமுத்திரம் போல் தனது எண்ணம் அசையாமல் வெளித் தோற்றமாகிய ஜகத்தையும், உள் தோற்றமாகிய மனதில் உண்டாகும் பல எண்ணமான விசய சொரூங்களையும்,அதில் அழித்து, கரையும்படிச் செய்து சுத்த மெய்யான தன் சுய வடிவினால் ஐக்கியப்பட அப்பியாசித்து சர்வமும், அதில் லயப்பட்டுத் தானே தானாயிருக்கும்போது நபிமார்களுக்கு மெய்யான உதிப்புண்டாகி, நமக்கு மெய்யான வார்த்தைகளை நபிமார்கள் அறிவித்தார்கள்.

ஆகையால், அவர்களின் உதிப்பே ஹக்கின் தூதும், அவர்களின் வார்த்தையே ஹக்தஆலாவின் வாக்கியமாம். இவர்களைத்தான் தீர்க்கதரிசிகள் என்று சொல்லப்படும். ஆனால் சாதாரண உதிப்பே ஹக்கின் தூது. அவ்வாறான சொல்லே ஹக்கின் வாக்கியம். இது மனிதனுக்கு மட்டும் சொந்தமல்ல. எல்லா ஜீவர்களுக்கும் உடையது.

தேவ ஆவியால் பரிசுத்த ஆவியின் உதவியைக் கொண்டுள்ள உதிப்பே ஹக்தஆலாவின் தூது. அவ்வாறான சொல்லே அவன் வாக்கியம். இதுவே மனித வர்க்கத்துக்குச் சொந்தமானது. இதை ஒருவராலும் தள்ளமுடியாது. இந்த வேதத்தையும் இந்த ஆஸானையும் யாவரும் அனுசரிப்பது அவசியமாம். இதை அனுசரிப்பவர்களுக்கு வாசிப்பவர்களை விட ஹக்கின் பக்தியாலுண்டாகும் ஞானம் வியக்கத் தக்கது.

இன்னும் இவர்கள்தான் துவைதிகளை அத்துவைதிகளாக்க வந்தவர்கள். இவர்களின் முக்கிய நோக்கம் தேவபூஜையாகிய விக்கிரகத்தை நிக்கிரகம் செய்து, மானத பூஜையை கற்பிக்க வேண்டுமென்பதுதான். இவர்களின் மதத்தில் அணுவேனும் துவிதம் கூடாது.

மானத பூஜை என்பது விக்கிரக ஆராதனை முதலிய தேவ பூஜை முதலானதல்ல. வணக்கமில்லாத வணக்கமாகிய தன்னைத் தான் வணங்கும் வணக்கமேயாம். மனதின் விக்கிரகத்தை, நிக்கிரகம் செய்வதுதான் அவர்களின் முக்கிய கருத்து.

துவைதிகளின் மதமும் கொள்கையும், கனவைப் போல் அது மானமும் சந்தேகமும் நிறைந்த சுத்தப் பொய் வடிவமாகவும், அத்துவைதிகளின் மதமும் கொள்கையும், விழிப்பைப் போல் சந்தேகமற்ற பிரத்தியட்சமான சுத்த மெய்வடிவமாகவும் இருக்கின்றது.

தீர்க்கதரிசிகள், அத்துவித ஞானத்தைத் துவைதிகளுடைய மதத்திற்கும், கொள்கைக்கும், விரோதமில்லாமல் தந்திரமாய்ப் பேசி அவர்கள் மதத்தையும், கொள்கையையும் நிர்த்துளுயாக்கியிருக்கின்றார்கள்.

ஆகையால் கருத்து விளங்காமல் அவர்கள் துவித மார்க்கத்தை உபதேசித்ததாக நினைக்கக் கூடாது. அப்படியானால், விக்கிரக நிக்கிரகமேன் செய்தார்கள்? துவித மார்க்கத்தை உபதேசிக்கிறதாக இருந்தால் விக்கிரகத்தை நிக்கிரகம் செய்ய ஒரு காரணமும் இல்லை.

மனோ விருத்தியாகிய மனதின் விசய சுரூபத்தை வணங்குகிறதும், கல்லை வணங்குகிறதும் சரிதான். என்கிலும், கல்லைப் பார்க்கினும், மனதின் விசய ரூபம் சற்று பேதப்பட்டு, அழியக் கூடியதாக இருப்பதும் அன்றி கல் கையால் சமைத்த ரூபமாயும், விசய ரூபம் மனதால் சமைத்த ரூபமாயும் இருக்கின்றது.

இதைச் சுரூபமாகக் காணாமல் அரூபமாகக் கண்டாலும், இந்த அரூபமும் ஒருவகை நிலையற்ற எண்ணத்தின் சுரூபம்தான். தன் மனத்தாலுண்டாக்கின அரூபத்தையாவது, சுரூபத்தையாவது, வணங்குவதைப் பார்க்கிலும் அந்த இரண்டையும் படைத்த ஆண்டவனாகிய நம்மையே வணங்குவது மேலல்லவா? மனதின் விக்கிரமாகிய வம்பான தேவ பக்திதான் வெளியிலுள்ள விக்கிரகங்களுக்குக் காரணம்.

வெளி விக்கிரகங்களைத் தவிர்த்து, உள் விக்கிரகத்தை மனதில் வம்பாக ஏற்படுத்திக் கொண்ட தேவ பூஜை, தேவபக்தி என்னும் விக்கிரகத்தை நிக்கிரகம் செய்ய வேண்டுமென்ற தாத்பரியமே ஒழிய வேறல்ல.

துவைதிகள் ஹக்தஆலா எங்கும், எல்லா வஸ்துவிலும் இருக்கிறான். ஆதலால், கல்லை வணங்கினால்தான் என்ன? செம்பை வணங்கினால்தான் என்ன? கூடாதென்று தீர்க்கதரிகளுடன் வம்பாக தர்க்கித்தார்கள்.

அதற்கு நபிமார்கள் சொன்னதாவது: தம் உடலுக்கு உயிர் எப்படியோ, அதுபோல் உலகத்திற்குக் கடவுள். நம் உயிருக்கு உடல் எப்படியோ, அதுபோல் கடவுளுக்கு உலகம். அப்படியானால், உடலும் உயிரும் சேர்ந்தால்தான் பூரணமாகும்.

தன்ஸீஹாகிய ஹக்தஆலாவுடைய அரூப அம்சமும், தஸ்பீஹாகிய ஹக்கின் சுரூப அம்சமும் சேர்ந்தாலன்றி பூரணமாகாது. அப்படியிருக்க சுரூப அம்சத்தை மட்டும் வணங்கலாமா? நீங்கள் அரூப அம்சத்தை அறியவில்லை என்றே வைத்துக் கொள்வோம். சுரூப அம்சத்தையாவது நீங்கள் பூரணமாக வணங்குகிறீர்களா?அல்ல.

ஏனெனில், மனிதன் என்றால், மனிதனுடைய எல்லா அவயங்களும் அதில் சம்பந்தப்பட்டிருக்க வேண்டும். கை அல்லது கால் அல்லது விரலில் ஏதாவது ஒரு உறுப்பைக் கண்டித்துப் பேசினால், மனிதனின் ஒரு அங்கத்தை மட்டும் அறிவிக்குமே தவிர அவன் முழு அங்கத்தைத் தொட்டும் அறிவிக்காது.

ஆகையால், ஜெகமெல்லாம் ஹக்தஆலாவின் சொரூபமாயிருக்க, ஒரு சொரூபத்தை மட்டும் கண்டித்து எப்படி வணங்கலாம்? ஒருக்கால், நீங்கள் அதை கடவுளை விட்டும் நீங்கினதல்ல என்பீர்கள்.

நாங்கள் சொல்கிறோம் காது அல்லது கண் என ஏதாவது ஒரு உறுப்பைக் கண்டித்தால் அதுவும் மனிதனை விட்டும் நீங்கினதல்ல. என்றாலும் அது முழு மனிதனாகுமா?

ஆகையால், சர்வமும் பிரஹ்மமாயிருக்க, ஒரு ரூபத்தை மட்டும் கண்டித்து எப்படி வணங்கலாம்? ஒருக்கால் நீங்கள் ஒரு ரூபத்தையா வணங்குகின்றோம் என்பீர்கள். அப்படியானால், வணங்குகிற உருவங்களுக்கிடையில், சர்வ லோகங்களின் உருவங்களும் அடங்குமா? அடங்காது. சிலதை வணங்கினால் சர்வத்தையும் வணங்கினதாக எப்படியாகும்?

ஆகையால், குறிப்பின்றி மட்டுப்படுத்தாமல் சர்வத்தையும் மொத்தமாக அல்லவா வணங்க வேண்டும்? நீங்கள், ஹக்தஆலாவெங்கும் எல்லா வஸ்துவிலுமிருந்தால் எதை வணங்கினால் என்ன என்கிறீர்கள்? உங்கள் சொற்படிக்கே சர்வமும் ஹக்காயிற்று. நீங்களும் அந்தத் துகையிலுள்ளவர்கள்தானே! அப்படியிருக்க, நீங்கள் ஏன் ஹக்கை வணங்க வேண்டும்? அவன் உங்களை விட்டும் நீங்கியாயிருக்கின்றான்? உங்களையே நீங்கள் வணங்கினால் போதாதா? என்றார்கள்.

அதற்குத் துவைதிகள், நாம் ஹக்காயிருக்க நம்மைத்தான் ஏன் வணங்க வேண்டும்? என்றார்கள். அதற்கு நபிமார்கள் நம்மை நாம் வணங்க வேண்டிய தேவையில்லை. நாம் நமது மூலத்தை அறிந்து அதில் ஐக்கியப்பட்டாலன்றி, நமது மெய்யான தத்துவங்கள் வெளியாகாது என்றார்கள்.

துவைதிகள்! நாம் நமது மூலத்தை விட்டும் பிரிந்தாயிருக்கின்றோம் என்றார்கள். அதற்கு நபிமார்கள் நாம் அதை விட்டுப் பிரியவில்லை என்பது உறுதிதான். என்றாலும், உங்களின் வேறென்ற எண்ணத்தின் பழக்கவாசனை உங்களை விட்டும் நீங்குமளவும், அதில் ஐக்கியப்பட வேண்டும். அப்படி ஐக்கியப்பட்டால் நமக்கு மெய்யான அறிவும், மெய்யான தத்துவமும் உண்டாகும். இல்லாத வரையில் உண்டாகாது என்றார்கள்.

ஏனென்றால், நமது மனமானது ஆன்மாவின் ஆரோபமான வடிவு. ஆனதால் ஜனனமெல்'லாம் இதற்கே. ஆன்மாவுக்கன்று. எவன் தன்னை அசைவற்ற ஆன்மா என்று சிந்திக்கின்றானோ அவனுக்கு மனம் அதில் லயப்பட்டுப்போகின்றது. அப்போது அவனின் மெய்யான அறிவும், மெய்யான தத்துவங்களும் வெளியாகின்றது. மற்றவர்களில் அப்படி வெளியாகாது. எவனுக்கு மனம் ஆன்மாவில் இறந்து விட்டதோ, அவன் சுத்தப் பிரஹ்மமாகி விட்டான். அவனில் அநேகமாக மனிதப் பண்பிராது.

ஒருவன் தன்னை பிரஹ்மமெனவும், பிரஹ்மமத்தின் வடிவு இன்னதெனவும் சந்தேகமற விளங்கி அதையே உறுதி கொண்டிருப்பானாகில் அதற்கு 'இல்மு பனா' என்று சொல்லப்படும். இந்த உறுதியானது அவன் மரணம் வரையில் அவனை விட்டும் நீங்காதிருக்குமாகில், சந்தேகமின்றி அவன் முக்தனாவான். அவனுக்கு ஜென்மமில்லை.

எவன் தன் மனதை ஆன்மா அல்லது பிரஹ்மத்தில் லயப்படுத்திவிட்டானோ, அதாவது தன்னை பிரஹ்மம் ஆன்மா என சிந்தித்துத் தன் மனதை அதில் அழித்து விட்டானோ, இத்தன்மையை ஹாலபனா என்று சொல்லப்படும். இவனில்தான் மெய்யான அறிவும், ஹக்கின் தத்துவமாகிய ஆன்ம தத்துவமும் வெளியாகும். இவன்தான் பல அற்புதங்களைச் செய்யக்கூடும். எவனுக்கு இல்மு பனா கிட்டுமோ, அவனைத்தான் இஸ்லாமானவன் என்று சொல்லப்படும்.

இஸ்லாம் என்ற பதத்திற்கு 'முக்தி' என்று பொருள்படும். நூஹு அலைஹிஸ்ஸலாம், இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம் உடைய மார்க்கத்தையே வைத்துக் கொண்டு இதுதான் முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் மார்க்கம் என்றும், முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய உபதேசம் இன்னதென்று விளங்காத ஜனங்கள் வழக்கடிக்கின்றார்கள்.

குர்ஆனில் சரஹ் மார்க்கமும், நூஹு அலைஹிஸ்ஸலாம், இப்றாஹிம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுடையதே என்று வருகின்றது. எல்லா நபிமார்களும் சர்வமும் பிரஹ்ம மயமாகவே இருக்கிறதென்றும், ஹக்கல்லாததில்லை என்கிற ஹத்து எல்லை வரையில் ஞானத்தை உபதேசித்து துவித மார்க்கத்தைத் தந்திரமாக அத்துவித மார்க்கத்திற்கு சமீபமாக்கும்படி செய்து, துவித மார்க்கத்தின் அங்கங்களை எல்லாம் அநேகமாக மாற்றிவிட்டார்கள். என்றாலும், சிலருக்கு அத்துவித ஞானத்தை இரகசியமாகப் போதித்தே இருக்கின்றார்கள். பகிரங்கமாக உபதேசிக்க முடியவில்லை.

அப்படியிருக்கும்போது, மகா மகத்துவம் தங்கிய, நபிகள் நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வந்து, அத்துவிதமாகிய சுய ஞானத்தை யாதொரு மறைவின்றி பகிரங்கமாய் யாவருக்கும் போதித்து, சகல மதங்களிலும் வேதங்களிலும் சொல்லப்பட்ட ஹக்கின் லட்சியார்த்தமான குறிப்பு நாமே! நமது இலட்சணத்தையும், குறியையுமே அவர்கள் அப்படிக் கூறுகின்றனர்.

நம்மையன்றி வேறே ஹக்கில்லை என்று உபதேசித்து முந்தின மதங்களையும், வேதங்களையும் மாற்றி அவைகளில் எல்லாம் அத்துவிதமான சுயஞானத்தை ஸ்தாபித்தார்கள். இன்னும் தனக்குப் பின் நபியே இல்லை என்றும் நுவுவ்வத் என்னும் தீர்க்க தரிசனத்தை தன்னோடு முடிவு செய்து விட்டார்கள்.

ஏனென்றால், நுபுவ்வத் என்பது ஹக்கைத் தொட்டும் செய்தி அறிவிப்பது. இதுவும் துவிதம்தான். இது துவைதிகளுக்காக அவர்கள் கொள்கையைப் போல் தந்திரமாகப்பேசி தாங்கள் மதத்தை ஸ்தாபித்து, அவர்கள் மதத்தை உடைக்க இவர்கள் தாங்களே ஏற்படுத்திக் கொண்ட உத்தியோகம். இந்த உத்தியோகம் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்குப் பின் அவசியமில்லாமற் போயிற்று.

ஏனென்றால் இவர்கள் காலத்தில் துவிதங்கள் எல்லாம் இரத்தாகிவிட்டது. மேலும், தனக்கன்னியமாய்க் காணும் ஹக்தஆலாவின் விசுவாசம் பக்தி, என்னும் பெரிய விக்கிரகத்தை முற்றிலும் தகர்த்து விட்டார்கள். அதிலிருந்து அத்துவித ஞானமாகிய சுயஞானம் பிரகாசிக்க ஆரம்பித்து விட்டது. இனிமேல் தன்னைத் தொட்டும் செய்தியறிவிக்கிறவர்களேயல்லாது ஹக்கைத் தொட்டும் செய்தியறிவிக்கிறவர்கள் வரமாட்டார்கள்.

விலாயத் என்னும் அத்துவித ஞானமானது பூமியில் நன்றாய் வேரூன்றிக் கொண்டது. துவைதிகள் அதைப் பிடுங்கவியலாது. துவைதிகளின் கொள்கையும் மதமும் மாற்றப்பட்டு

போய்விட்டது. முனாபிக்குகள் உள் விக்கிரகங்களை ஆராதணை செய்து வருவார்கள். நவூதுபில்லாஹி மின்ஹா.

இன்னும் நம்முடைய நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஆதம் முதல் ஒவ்வொரு நபிமார்களில் அவதாரமெடுத்து, அத்துவிதத்தி அந்தந்த உம்மத்துக்களையும் அழைத்தார்கள். முன்னுள்ள நபிமார்கள் ஹகீகத்தில் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய அவதாரமாக இருப்பதால், உண்மையில் அவர்கள் முன்னெடுத்த அவதாரத்தால் அத்துவிதம் பூர்த்தியாகவில்லை. பின் முஹம்மதென்னும் நாம கோலத்தில் அவதாரமெடுத்து நுபுவ்வத் என்னும் துவித மார்க்கத்தை முடிவு செய்து, விலாயத் என்னும் அத்துவித மார்க்கத்தைப் பூர்த்தி செய்தார்கள்.

அப்பால் காமிலான செய்குமார்களின் அவதாரம் கொண்டு, அவரவர்களின் காலத்தில் விலாயத் என்னும் அத்துவித மார்க்கத்தை நிலை நிறுத்தாட்டி வைக்கின்றார்கள். அந்தத் தொகையில் நின்றும் உள்ளவர்கள்தான் மஹ்தி அலைஹிஸ்ஸலாம், ஈஸாஅலைஹிஸ்ஸலாம் ஆகியோர்களுமாம்.

இப்போது சொல்லப்பட்டதில் நேர்வழி காட்ட வந்தவர்களடங்களும் ரஸூலாக இருக்கின்றார்கள். இதற்கிணங்க அப்துல் கரீமுல் ஜீலி ஆண்டவர்கள் ஹிஜ்ரி 796 ஆம் வருடம் சுபைத்து என்னும் ஊரில் என்னுடைய ஷெய்கு ஸர்புத்தீன் இஸ்மாயிலில் ஜபரூத்தியுடைய கோலத்திலே இருக்கிற நிலைமையில் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைச் சேர்ந்தேன் என்று சொல்லியிருக்கிறார்கள்.

இன்னும் இன்ஸான் காமிலில் சொல்லப்பட்டிருகு;கிறது: ஷிப்லி ரலியல்லாஹு அன்ஹுவுடைய சூரத்தில் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவதாரமானபோது, ஷிப்லி தங்களுடைய சிஷ்யர்களுக்கு திட்டமாக நான் அல்லாஹ்வுடைய ரசூலாக இருக்கும் என்று ஷாஹிதுச் சொல்லுங்கள் என்றார்கள். அவர்களுடைய சிஷ்யர்கள் திரை நீங்கினவர்களாக இருந்ததால், உண்மையான அவர்களுடைய ஹகீகத்தை அறிந்து, உண்மையாக நீங்கள்தான் அல்லாஹ்வுடைய ரஸூல் என்று ஷாஹிதுச் சொல்கிறோம் என்றார்கள்.

இன்னும் நமது நாயகம் மஹ்பூபு சுப்ஹானி ஆண்டவர்கள் அல்லாஹ்வின் பேரில் சத்தியமாக அப்துல் காதருடைய உஜூது என்னுடைய ஜத்து ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய உஜூதாயிருக்கும் என்றார்கள். ஆகையால் உலகத்தில் நேர்வழி காட்ட வந்தவர்களடங்களும் ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய அவதாரம் என்றாயிற்று. (பிலாசக்) 'ஷக்கில்லை' ஹக் அல்ஹம்துலில்லாஹ்.

அறிந்து கொள்! வஹியாவது நபிமார்களுக்கு அல்லாஹுத்தஆலாவால் அருளப்பட்ட ஞான அருட்சியாயிருக்கும். இதற்கு அல்லாஹுத்தஆலாவின் பேச்சென்றும் சொல்லப்படும். அது மூன்று விதமாக வரும். 1ஆவது நபிமார்களின் கல்புகளில் அல்லாஹுத்தஆலாவில் நின்றும் வரும். 2ஆவது ஓர் மறைவுக்குப் பனின்னாலிருந்து பேச்சாகவும் வரும்.

எதுபோலெனில், மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு மரத்திலிருந்தும், மலையிலிருந்தும் பேச்சு வெளியானதுபோல். 3ஆவது மலாயிக்கத்துமார்கள் வழியாகவும் வரும். குர்ஆன் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கல்பில் மலாயிகத்துகளால் வெளியாக்கப்பட்டது போல். இல்ஹாமாவது, ஹக்தஆலாவால் நப்ஸுக்கு நேரே உண்டாகிற அறிவுகள் கல்பு எந்தமட்டுக்கு சுத்தமாகவும், துப்புரவாகவும் இருக்குமோ, அந்த மட்டுக்கு ஹக்தஆலாவின் ஒளி பிரகாசிக்கும்.

அக்லுல் அவ்வலில் நின்றும் வஹி வரும். நப்ஸு குல்லியிலிருந்து இல்ஹாம் வரும். வஹியாவது அன்பியாக்களுடையவும், ரஸூல்மார்களுடையவும் ஆபரணமாக இருக்கும். இல்ஹாம் ஒலிமார்களுடைய பதவியாயிருக்கும்.

இல்முல்லதுன்னி நபிமார்களுக்கும், ஒலிமார்களுக்கும் உண்டாகும். அது ஹக்தஆலாவில் நின்றும் நேரே அவர்கள் கல்புக்குண்டாகும். அறிவுகள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைக் கொண்டு வஹியுடைய வாசல் அடைபட்டு: விட்டது. இல்ஹாம், நப்ஸ் குல்லியில் நின்றும் தகுதியுடையவர்களுக்கு எக்காலமும் உண்டாகும்.

வஹி தொடக்கத்தில் சொப்பனத்தில் வெளியாகும். அவ்விதம் வந்தால் அதற்கு ரூஹிய்யா என்று சொல்லப்படும். மலாயிகத்துகள் வஹியை மனு ரூபமாய் வந்து வெளியாக்குகிறது உண்டு. நபிமார்களுடைய கல்பில் வெளியாக்குகிறதும் உண்டு. நபிமார்களுடைய கல்பில் சென்று தெரிவிக்கிறதும் உண்டு.

ஆனால் ரூஹுல் அமீனாகிய ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் வரும் தலமாகிறது, கல்புடைய ளாஹிராக இருக்கும். அந்த கல்புக்கு கேள்வி, பார்வை உண்டாயிருக்கிறது. இதைக் குறித்துதான் அல்லாஹுத்தஆலா

*மா கதபல் புஆத்து மாறஆ*

**பொருள்:** கண்டதை கல்பு பொய்யாக்காது என்று திருவுளமானான். இது இல்முல் யகீனாக இருக்கும். இத்தலத்தை ஸித்ரத்துல் முன்தஹா என்று சொல்லப்படும்.

ரூஹுல் குத்ஸு வரும் தலமாகிறது கல்புடைய பாத்தினாயிருக்கும். அதாகிறது, ஊதுகிறதின் மஹல்லாயிருக்கும். இந்த மஹல் அளவில் சைக்கினைச் செய்து நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் திட்டமாக ரூஹுல் குத்ஸாகிறது என் சட்டையில் ஊதப்பட்டது.

அஃதாவது என் கல்பில் ஊதப்பட்டதென்றார்கள். ஊதினதின் கருத்து ஐனுல் யகீன் முஷாஹதாவைக் கொண்டு கஸ்பையும், இல்ஹாமையும் ஹக்தஆலா கருத்தில் போடுவானே அதுவாயிருக்கும். இத்தலத்தை அர்ஷென்றுறு சொல்லப்படும்.

ரூஹுல் அம்ரு வரும் தலமாகிறது சிர்ராகயிருக்கும். அதாவது பாத்தினுடைய பாத்தினாக இருக்கும். இதைக் குறித்து அல்லாஹு ஸுப்ஹானத் தஆலா

*வகதாலிகா அவ்ஹைனா இலைக்க ரூஹன் மின்*

*அம்றினா மாகுந்த தத்ரீ மல்கிதாபு வலல் ஈமானு*

**பொருள்:** மற்ற ரஸூல்மார்கள் அளவிலே வஹி அறிவித்ததுபோல், நம்முடைய கருமத்தில் நின்றும், உம்மளவிலே ரூஹென்னம் குர்ஆனை வஹி அறிவித்தோம். குர்ஆனுக்கு முன் குர்ஆன் இன்னதென்றும், ஷரீஅத்து இன்னதென்றும் நீர் அறியவில்லை என்று திருவுளமானான். இன்னும், இதைக் குறித்தே அல்லாஹுத் தஆலா திருவுளமாயிருக்கின்றான்.

***பாஅவ்ஹா இலா அப்திஹி மாஅவ்ஹா***

**பொருள்:** அல்லாஹ்வுடைய அடியார் முஹம்மதளவிலே ஜிப்ரீல் அறிவித்ததெல்லாம் அறிவித்தார். இன்னும், ரூஹுல் அமீன், ஆலம் ஷஹாதாவைத் தொட்டும் மொழியும் ரூஹுல் குத்ஸு ஆலம் மலக்கூத்தைத் தொட்டும் மொழியும். ரூஹுல் அம்ரு ஆலம் ஜபரூத்தைத் தொட்டும் மொழியும். இதை ஹள்ரத் ரப்பானிய்யா என்றும் சொல்லப்படும்.

இந்த ருக்னில் கூறியுள்ளதை உனக்கன்னியமாக நாடாதே! தேடாதே! உன்னளவிலே நாடு! தேடு! உன் எதார்த்த சுரூபமாக நில்! ஹக் அல்ஹம்துலில்லாஹ்.

4ஆவது ருக்னு முற்றிற்று

**5ஆவது ருக்னாவாது**

**வல்யவ்மில் ஆகிரி**

கல்குகளுடைய நாம ரூபங்கள் அழிவின் ஒடுக்கம் ரப்பாகி விடுமென்ற நாளைக் கொண்டு ஈமான் கொள்கிறது. அதாவது அல்லாஹ்வுடைய சொல்லாயிருக்கும்.

*குல்லுன் இலைனா ராஜிவூன்*

**பொருள்:** அடங்களும் நம்மளவில் மீள்கிறவைகளாக இருக்கும். இன்னும் அல்லாஹுத் தஆலா:

*எவ்ம துபத்தலுல் அற்லு கொய்றல் அற்ளி வஸ்ஸமாவாத்தி*

**பொருள்:** மனுசனென்னும் பூமியை ஹக்காகவும், ரூஹு என்னும் வானத்தை ஹக்காகவும், பதில் செய்யும் நாளே கியாம முடிவென்று திருவுளமாயிருக்கின்றான். கியாமம் என்பது நிலைப்பாடு. ஆகிரம் என்பது ஒடுக்கம். நம்முடைய ஒடுக்க நிலை ஹக்காகவே இருக்க வேண்டும்.

பூமி மட்டும் அழிவது சின்ன அழிவு. ஹக்கின் உண்மையைத் தவிர எல்லாக் கிரகங்களும், வஸ்துக்களும் அழிவதே பெரிய அழிவு. இதன் காலத்தைக் கணிக்க முடியாது. மனிதன் தன் விகாரங்களைக் கடந்து, ஹக்கின் பூரண அரூப அம்ஸத்தை அடைந்து, அவனாகவே ஆகிக்

கொள்வதே பெரிய அறிவென்று சொல்லப்படும். பூலோகம் அழிவதற்கு முன்னமேயே மனிதன் இந்தப் பதவிக்கு ஆளாகலாம்.

அறிந்து கொள்! நாளென்பது இரண்டு நாள்தான். அதாவது, ஒன்று ஜீவன் உன் சரீரத்திலிருக்கும் நாள். மற்றொன்று ஜீவன் உன் சரீரத்தை விட்டும் நீங்கிய நாள். அந்த நாளைக்குப் பின் இருப்பதால் இந்த நாளை ஒடுக்கத்து நாளென்று சொல்லப்படும்.

இதற்காகவே நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எவன் மௌத்தானானோ அவன் கியாமநாள் முடிந்து விட்டது என்றார்கள்.

ஜிப்ரில் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் கியாமநாளின் அடையாளத்தைத் தொட்டும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் கேட்டபோது, அதன் அடையாளமாகிறது, இன்சானென்ற வெள்ளாட்டி நாச்சியான் என்ற ஹக்கைப் பெறுவதும், அதாவது அப்து மறைந்து ஹக்கு வெளியாகுவதும்,

எங்ஙனமெனில், இவன் கேள்வி, அவன் கேள்வியாகவும், இவன் பார்வை அவன் பார்வையாகவும், இவன் கை அவன் கையாகவும், இவன் கால் அவன் காலாகவும் கண்டு நிற்பதாம். இன்னும் அஸ்மாக்களென்கிற செருப்பில்லாதவர்களும், ஸிபாத்துக்கள் என்கிற துணியில்லாதவர்களும், ஹக்கின் ஜேரி என்கிற ஆடு மேய்ப்பவர்களும், ஹக்கின் உஜூதை வேண்டிக் கொண்ட பிச்சைக்காரர்களும், இவர்களெல்லாம் ஐதுபால் மஃரிபாக்கள் என்கிற வீடுவாசல்களை உயர்த்திக் கட்டுவதுமாயிருக்கும் என்றார்கள்.

இதற்காகத் தான், இஸ்லாம் என்னும் வீட்டை ஐந்து தூணின் பேரில் எடுக்கப்பட்டதென்றும், இன்னும், இன்சான் குல்லியத்தான பனாவைக் கொண்டு ஹக்குடைய உஜூதை நன்கொடையாய் பெற்றபோது, தீனுடைய நாள் என்று சொல்லப்பட்டது.

அருமையானவனே! ஒருவன் ஆகிரம் இன்னதென்று தெரிந்து கொள்ள வேண்டுமாயின், அவன்' மௌத்து இன்னதென்று தெரிந்து கொள்ள வேண்டும். மௌத்து இன்னதென்று அறிய வேண்டுமானால், ஹயாத்து இன்னதென்று அறிய வேண்டும். ஹயாத்தை அறிய வேண்டுமானால், ரூஹை அறிய வேண்டும். ரூஹை அறிவதற்கு நப்ஸை அறிய வேண்டும். நப்ஸை அறிவதைப் பற்றிய சில விபரம் மேலே கூறப்பட்டிருக்கிறது.

அறிந்து கொள்! மனிதன் இரண்டு வஸ்துக்களால் சேர்க்கப்பட்டிருக்கிறான். ஒன்று ரூஹு. மற்றொன்று சரீரமாகிய கூடு. ரூஹானது ஏறுகிறவன் போலும், சரீரமானது ஏறப்பட்ட வாகனம் போலும் இருக்கின்றது. ரூஹுக்கு சரீர சம்பந்தத்தினால் ஆகிறத்தில் ஒரு பதவி கிடைக்கும். அதாவது, சொர்க்கம் புகும். அல்லது நரகம் புகும்.

இன்னும் ரூஹுக்கு சரீர சம்பந்தமில்லாமல் அதன் சுய தாத்தினாலும் ஒரு பதவியுண்டு. சரீரமில்லாமலும் அதற்கு சொர்க்க, நரகங்களும், நற்பதவி, துற்பதவிகளுமிருக்கின்றன. அப்படிச் சரீர சம்பந்தமின்றி ரூஹுக்கு மாத்திரம் கிடைக்கிற இன்ப சுகங்களுக்கு ஆன்ம

சொர்க்கமென்றும், அதற்குண்டாகிற கஷ்ட நஷ்டங்களுக்கு ஆன்ம நரகமென்றும் சொல்லப்படும்.

நாம் சொல்லுகிறோம் சரீர சம்பந்தமான சொர்க்க நரகங்கள் பிரசித்தமாயிருக்கின்றன. அதனுடைய இன்பங்களும் பரிசுத்தமாயிருக்கின்றன. அதை நாம் சொல்லத் தேவையில்லை. இவ்விடத்தில் மௌத்து இன்னதென்றும், ஆன்ம சொர்க்க நரகங்களின் விபரத்தையும் எழுதுவோம். ஏனென்றால், இந்த விசயம் ஒவ்வொருவருக்கும் தெரிந்திருக்கின்றது.

அல்லாஹுத்தஆலா ஹதீது குத்ஸியில் என்னுடைய சாலிஹான அடியார்களுக்கு யாதொரு கண் பார்க்காததும், யாதொரு காது கேட்காததும், மனிதனுடைய கல்பின் பேரில் ஊசாடாததுமான, நிஃ'மத்துகள் சித்தமாயிருக்கின்றன என்று திருவுளமாயிருப்பது ஆன்ம சொர்க்கத்தைக் குறித்தேயாம்.

கல்புக்குள்ளிருந்தும், ஆலமுல் மலக்கூத்தென்னும் ஆன்ம லோகத்தின் பக்கம் ஒரு வழியிருக்கிறது. அதனால் இந்த விசயங்கள் வெளியாகின்றன. இதில் யாதொரு ஐயம் திரிபுகளிருக்கின்றது இல்லை. யாருக்கு இந்த கல்பு வழி திறக்குமோ, அவன் ஆகிறத்துடைய நற்பதவி, துற்பதவிகளைச் சந்தேகமின்றி தெரிந்து கொள்கிறான். அப்படித் தெரிந்து கொள்வது கேள்வி மூலம் அல்ல. மேலும் பிரத்தியட்சமாய் தெரிகின்றது. அதாவது, வைத்தியனானவன் இவ்வுலகத்தில் சரீர சுக துக்கங்களாகிற சௌக்கியத்தையும், பிணியையும் அறிந்திருக்கின்றான்.

இன்னும், அதற்கு மருந்து பத்தியம், அதிகம் புசித்தல், பத்தியம் தவிர்த்தல், இவைகளை எப்படி அறிந்திருக்கின்றானோ அப்படியே, ரூஹுகளும், சுகதுக்கங்களும் உண்டென்று முஷாஹதாவினால் தெரிய வருகிறது. மஃரிபத்தும், இபாதத்தும் அதன் சௌக்கியத்திற்கு காரணமான அமுதமாயிருக்கின்றது. அறிவின்மையும், பாவமும் அதைக் கொல்லுகிற நஞ்சாயிருக்கின்றது. இந்த இல்மு மிகவும் அருமையானது. அநேக உலமாக்கள் இதை மறந்தவர்களாக இருக்கிறார்கள். மேலும், நிராகரிக்கிறவர்களாயும் இருக்கிறார்கள். சரீர சம்பந்தமான சொர்க்க நரகங்களை மாத்திரமே இவர்கள் அறிந்திருக்கிறார்கள். ஆகிறத்துடைய விசாரணையில் இவர்கள் கேள்வி மூலமாகவும் தக்லீதினாலும் தெரிந்து கொண்டார்களே அதையன்றி வேறொன்றும் அறியவில்லை.

ஆனால், எவன் புத்திமானாகவும், பாரபட்ச முதலிய அழுக்குகளை விட்டும் மனம் சுத்தமானவனாகவும் இருக்கிறானோ, அவன் இந்த வழியை அடைவதற்கும் ஆகிறத்துடைய சங்கதி மனதில் அமைவதற்கும், போதுமான அளவாய் சில அறிவுரைகளை இந்த கிதாபில் எழுத நாடுகிறேன்.

அதாவது, மௌத்து இன்னதென்று அறிய நாடுவாயாகில், அறிந்து கொள்! மனிதனுக்கு இரண்டு ரூஹுகள் இருக்கின்றன.

அவற்றில் ஒன்று மற்றும் ஜீவராசிகளுடைய ரூஹைச் சார்ந்தது. அது ரூஹு ஹையவானி என்றும் சொல்லப்படும். ரூஹு ஹையவானுக்கு இடம் இருதய கமலமாகும்.

இருதய கமலமென்பது மார்பின் இடது பக்கத்தில் அமைக்கப்பட்டிருக்கிற ஒரு சதைக் கட்டியாகும். ரூஹு ஹைவானி என்பது சுபாவம் சரியானதும் அதிநுட்பமானதுமான ஒரு ஆவியாயிருக்கும். அந்த ஆவியானது சரீரத்தின் உதிர, வாத, பித்த, சிலேஷ்மங்களால் உண்டாகின்றது. இந்த ஆவியான ரூஹானது இருதயத்தில் நின்றும் புறப்பட்டு நரம்புகள் வழியாய்த் தலை மூளைக்கும், மற்றும் உறுப்புகளுக்கும் செல்லுகிறது. ஐயறிவுகளின் அசைவுதலுடைய சக்திக்கு இதுவே ஆதாரம். இது தலைமூளைக்குச் செல்லுமாகில், அதன் சூடு தணிந்து மிதமாகின்றது. அதனால் கண்ணானது பார்க்கும் சக்தியும், காதானது கேட்கும் சக்தியையும் அடைகின்றது.

இதுபோலவே, மற்றும் பொறிகள் அதனதன் தொழிலுக்குரிய சக்தியைப் பெறுகின்றன. இந்த ரூஹுக்கு உவமானமாகிறது: விளக்கின் ஒளி போலாம். எப்படியென்றால், விளக்கொளியானது வீட்டில் வியாபித்து அது எங்கே எங்கே செல்லுகின்றதோ அங்கங்கே வீட்டில் சுவர்கள் வெளிச்சமடைகின்றன.

பின்பு எப்படி விளக்கின் வெளிச்சமானது அல்லாஹுத்தஆலாவுடைய வல்லமையினால் சுவரின்மேல் வெளியாகின்றதோ, அப்படியே இந்த ரூஹுடைய குணத்தினால் கண், காது, முதலிய எல்லா உறுப்புகளிலும் பார்வை, கேள்வி முதலிய சக்திகள் உண்டாகின்றன. யாதொரு நரம்பில் முடிச்சு விழுந்துபோனால் அந்த முடிச்சுக்கு அப்புறமிருக்கிற பாகம் தொழிலற்றும், திமிர்த்துப் போகின்றது. அறிவும், அசைவும் அதில் இருக்கின்றதில்லை. வைத்தியன் தன் சிகிச்சையினால் அந்த முடிச்சை அவிழ்க்கத் தக்கதான வழியில் பிராயாசைப் படுகிறான்.

இன்னும் ஒருவாறு இந்த ரூஹாகிறது விளக்கின் சுடர் போலவும், இருதய கமலமானது விளக்கின் திரி போலும், ஆகாரமானது விளக்கின் எண்ணெய் போலும் இருக்கின்றது. எண்ணெய் வார்க்காததினால் விளக்கு நூத்து போகின்றது. அப்படியே ஆகாரம் அருந்தாததினால் அந்த ரூஹின் சுபாவம் கெட்டு மனிதன் மாண்டு போகின்றான்.

இன்னும் அதிகநாள் எண்ணெயில் ஊறி அழுக்கேறிய திரியானது, பின்பு எண்ணெயை எப்படி ஏற்கின்றதில்லையோ, அப்படியே, இருதயமும் முதிர் வயதினால் ஆகாரம் ஏற்காததாய் போகின்றது. இன்னும் எண்ணெய்யும் திரியும் இருந்தும் விளக்கின்மேல் யாதொன்றும் தட்டுகிறதினால் எப்படி, அது நூந்து போகின்றதோ, அப்படியே மனிதனுக்கும் யாதொரு பெரிய காயம்பட்டால் அவன் மடிந்து போகின்றான்.

இன்னும் இந்த ரூஹின் சுபாவம் சரியாயிருக்கிறவரையில் அல்லாஹ்வுடைய உத்திரவைக் கொண்டு மலக்குகளுடைய ஒளிகளின் மூலமாய் ஆட்டம், அறிவுகளுடைய சக்தியை இது ஏற்கின்றது. உஷ்ண சீதளம் மேலிட்டதினால் அல்லது

இன்னும் யாதொரு காரணத்தினால் எப்போது இந்த ரூஹின் சுபாவமிருக்கின்றதோ, அப்போது இந்தச் சக்தியை இது ஏற்கின்றதில்லை. கண்ணாடியானது எதுவரையில் தெளிவாயிருக்கின்றதோ அதுவரையில் வஸ்துக்களின் நிழலாகிய பிரதிபிம்பம் அதில்

தோன்றுகிறது. அதில் அழுக்கேறும்போது, வஸ்துக்களின் நிழல் அதில் தோன்றுகிறதில்லை. அப்படித் தோன்றாமலிருப்பது வஸ்துக்கள் அழிந்து போயின என்றல்ல.

மேலும் அதில் ரூபத்தை ஏற்கும் தகுதியில்லை. ஆதலால், வஸ்துக்களிலிருந்தும், அவற்றின் ரூபம் அதில் தோன்றவில்லை. இதுபோலவே அந்த நுட்பமான ஆவியென்னும் ரூஹு ஹைவானியின் சக்தியாகிறது, அதன் சுபாவம் சரியாயிருப்பதின் பேரில் நிலைபெற்றதாயிருக்கிறது. சுபாவம் கெடுமானால் அது அந்தச் சக்தியை ஏற்காது. அப்படி ஏற்காததினால் உறுப்புகள் அதன் ஒளியை அடையாமல் அறிவும், ஆட்டமும் அற்றுப் போகின்றன. அப்போது அவன் மௌத்தாகிப் போனான் என்று சொல்லுகிறார்கள்.

இதுதான் மௌத்துக்குப் பொருள். இந்தச் சுபாவம் சரி தப்பிப் போகும்படியான காரணங்களைச் சேகரிக்கிறவர்கள் அல்லாஹ்வுடைய படைப்புக்களில் நின்றும் ஒரு படைப்பாயிருக்கின்றார். அவரை மலக்குல் மௌத் என்று சொல்லுகிறார்கள். ஜனங்கள் அவருடைய பேரை அறிந்திருக்கிறார்களே தவிர அவருடைய ஹகீகத்தை அறிவது கஷ்டமாயிருக்கிறது. ஹையவானாத் என்னும் ஜீவராசிகளின் மௌத்தின் விளக்கம் இதுவேயாகும்.

ஆனால், மனிதனுடைய மௌத்து வேறே விதமாக இருக்கின்றது. ஏனென்றால், அவனுக்கு இந்த ஹைவானிய்யத்தான ரூஹைத் தவிர இன்னுமொரு ரூஹு இருக்கிறது. அதை ரூஹுல் இன்சானி என்றும், கல்பென்றும் சொல்லுகிறார்கள்.

இந்த ரூஹு பாகத்தை ஏற்காது. ஆதலால் இது ஜிஸ்மல்ல. அல்லாஹ்வுடைய மஃரிபா இதில் இறங்குகின்றது. அல்லாஹுத்தஆலா எப்படி ஒருவனாயும், பாகத்தை ஏற்காதவனாயும் இருக்கின்றானோ அப்படியே அவனையறியும் அறிவு ஒன்றாயும், பாகத்தை ஏற்காததாயும், பாகத்தை ஏற்கிற எந்த வஸ்துவிலும் அடங்காததாயும் இருக்கின்றது. எது ஒன்றையும், பாகத்தையும் ஏற்காததாயிருக்கின்றதோ அதில்தான் அந்த மஃரிபா உண்டாகும்.

பின்பு, விளக்கின் திரியையும், சுடரையும், ஒளியையும் நோட்டமிடு. திரியாகிறது சரீரம் போலும், சுடராகிறது ரூஹுல் ஹைவானி போலும், ஒளியாகிறது ஒருவாறு ரூஹுல் இன்சானியைப் போலும் இருக்கிறது.

ஒளியானது சுடரிலும் அதி நுட்பமானதாயும் சைக்கினையால் காட்டக் கூடாததாயும் இருக்கிறதுபோல் ரூஹுல் இன்சானியாகிறது ரூஹுல் ஹைவானியிலும் அதி நுட்பமானதாயும் சைக்கினையால் காட்டக் கூடாததாயும் இருக்கின்றது. நுட்பமென்பதை நோக்குவாயாகில் இந்த உவமானம் சரியாகும். வேறே விதத்தினால் பார்த்தால் சரியாகாது.

ஏனென்றால், ஒளியானது சுடரைத் துடர்ந்ததாயும், சுடரோடு ஒழிந்து போவதாயும் இருக்கிறது. ரூஹுல் இன்சானி அப்படி ரூஹுல் ஹைவானியைத் தொடர்ந்ததல்ல. மேலும் அது தன்னிலையான ஆதாரப் பொருளாயிருக்கிறது. ரூஹுல் ஹைவானி அழிந்து போகிறதினால் இது அழிகிறதில்லை.

ஆதலால் நீ அதற்கு சரியான உவமானத்தை நாடுவாயாகில், விளக்கின் ஒளியிலும் அதிநுட்பமானதாயும், அதன் நிலை விளக்கினால் அல்லாமல், விளக்கின் நிலை அதனால் ஏற்படுவதாயும் இருக்கிற ஒரு ஒளியை நியமகம் செய்து கொள். அப்போது இந்த உவமானம் சரியாகும். பின்பு இந்த ரூஹூல் ஹைவானியாகிறது ஒரு விதத்தில் ரூஹூல் இன்சானிக்க வாகனமாயும், ஒருவிதத்தில் அதற்கு ஆயுதமாயும் இருக்கின்றது.

எப்போது இந்த ரூஹூல் ஹைவானியின் சுபாவம் கெடுகின்றதோ அப்போது சரீரம் சாகின்றது. ரூஹூல் இன்சானிய்யோ சாகாமல் நிலைத்திருக்கின்றது. என்கிலும் ஏறும் வாகனமும், ஆயுதமும் இல்லாமல் தனித்து விடுகின்றது. வாகம் சாகிறதினால் ஏறுகிறவன் சாவதில்லை.

இதுபோல் ஆயுதம் முறிவதால் ஆயுதபாணிக்கு யாதொரு அழிவில்லை. இந்த ஆயுதத்தை இவனுக்கு கொடுத்தது எதற்கெனில், அல்லாஹ்வுடைய மஃரிபாவையும், முஹப்பத்தையும் வேட்டையாடுவதற்கேயாம். வேட்டையாடி முடிந்தால் ஆயுதம் ஒழிந்து போவது அவனுடைய நன்மைக்குக் காரணமாகும். ஏனென்றால் அதன் சுமை அவனை விட்டும் நீங்கி விடுகின்றது.

**வினா:** மௌத்தானது முஃமீனுக்கு காணிக்கையாயிருக்கும் என்று நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் திருவுளமாயிருக்கின்றார்களே என்று கேட்பாயாகில்?

**விடை:** அதற்குப் பொருள் யாதெனில், வேட்டையாடுவதற்கென்று வலையைத் தூகு;கி சுமக்கின்ற ஒருவனுக்கு வேட்டை கிடைத்த பிறகு வலையொழிந்து போவது அவன் விசயத்தில் நன்மையாயிருக்கும் என்பதேயாம். ஆனால் அப்படி வேட்டை அகப்படும் முன் வலை கிழிந்து போனால் அவன் பெரிய கைசேதத்திலும், துக்கத்திலும் விழுவான். அல்லாஹுத்தஆலா காப்பானாகவும். இந்தத் துக்கமும், கைசேதமும், முந்தி கப்ருடைய அதாபாயிருக்கும்.

தெரிந்து கொள்! ஒருவனுடைய கை, கால்கள் சுத்தமாய் சொரணையில்லாமல் திமிர்த்து போகுமாகில், அவன் ஸலாமத்தாயிருக்கின்றான். ஏனெனில், அவன் என்பதற்கு கை, கால் முதலிய உறுப்புகள் பொருள் அல்ல.

மேலும், அவை அவன் வழங்கும் அலங்காரங்களாயிருக்கின்றன. 'நீ' என்பதற்கு பொருள் கையுமல்ல, காலுமல்ல, வயிறுமல்ல, முதுகுமல்ல. இந்த சரீரமான கூடுமல்ல. வேண்டினபோது இந்த எல்லா உறுப்புகளும் திமிர்த்துப் போனால் நீ ஸலாமத்தாய் இருக்கலாம் என்று ஆயிற்று. இப்படிச் சரீர முழுவதும் சொரணை இல்லாமல் திமிர்த்துப் போவதற்கே மௌத்துக்குப் பொருளாகும்.

ஏனென்றால், கை திமிர்த்துப் போவதின் பொருளாகிறது, அதை உன் இஷ்டப்படி எடுக்கவும், வைக்கவும் அது உனக்கு ஐக்கியப்படாமலிருப்பதேயாம். அப்படி ஐக்கியப் படுவதற்குத் தத்துவம் என்று சொல்லப்படுகின்ற ஒரு குணமே காரணமாயிருந்து, அந்தக் குணம் என்பது ரூஹூல் ஹைவானியான விளக்கில் நின்றும் அதற்கு வந்து கொண்டிருந்த ஒரு ஒளியேயாம். எப்போது

அந்த ரூஹு வரும் வழிகளாகிய நரம்புகளில் முடிச்சுக்கள் உண்டாயினவோ, அப்போது அவ்வுறுப்பில் அந்தத் தத்துவம் போய்விட்டதால், வசப்படுவது கஷ்டமாயப் போய்விட்டது.

இதுபோலவே, சரீரம் முழுவதையும் உனக்கு வசப்பட்டு வரும்படி செய்வதானது ரூஹுல் ஹைவானியின் மூலமாயிருக்கிறது. பின்பு எப்போது அதன் சுபாவம் கெட்டுப் போகின்றதோ, அப்போது சரீரம் உனக்கு வசப்படாது. அப்படி வசப்படாமலிருப்பதற்கே மௌத்து என்று சொல்லுகிறார்கள்.

நீ உன் ஸ்தானத்தில் நிலையாயிருக்கின்றாய். உனக்கு வசப்பட்டு வந்த உன் தேகம் அழிந்துபோனாலும் சரி. இப்படியாயிருப்பதில் நீ என்பதற்கு உன் தேகம் எப்படி பொருளாகும்? ஆகாதென்றால் உன் இருப்பு இந்த உடலைக் கொண்டல்ல. இது அழிந்து போனாலும் பரவாயில்லை. நீ உன் சுயதாத்தினால் இது போலவே ஜீவித்திருப்பாய்.

ஆனால் உன்னுடைய குணங்கள் இருவகைப்படும். அவற்றுள் ஒருவகை சரீரம் சம்பந்தமானவை. உதாரணமாக, பசி, தாகம்,நித்திரை போன்றவை. இவைகளுக்குச் சரீரம் தேவையாயிருக்கிறது. இவை மௌத்துக்குப் பின் நிலைத்திருப்பனவல்ல. மற்றொரு வகை சரீர சம்பந்தமில்லாதவை. அவை அல்லாஹுத்தஆலாவை அறிவதும், அவனுடைய ஜமாலைத் தரிசித்து ஆனந்தமடைவதும் போன்றவைகளேயாம். சரீர சம்பந்தமில்லாத இக்குணங்கள் உன் சொந்தமான சுபாவக் குணங்களாயிருக்கின்றன. இவை மௌத்துக்குப் பின் உன்னோடிருக்கும்.

*பாக்கியாத்துஸ் ஸாலிஹாத்து*

**பொருள்:** நிலைத்திருக்கும் நன்மைகள். அதாவது, அல்லாஹ்வை அறிவதற்குப் பதிலாக, அறிவின்மையை உண்டாக்கிக் கொள்வாயாகில், அதாவது, அல்லாஹ்வை அறியாமலிருந்தாயாகில், இதுவும் உன் குணமாயிருக்கின்றதாகையால் இந்த அறியாமையும் உன்னோடிருக்கும் வித்தாயுமிருக்கின்றது.

எவன் இந்தத் துன்யாவில் குருடனாக இருக்கின்றானோ, அவன் ஆகிறத்திலும் குருடனே என்றும், அவன் பெரிய வழிகேடனென்றும் அல்லாஹுத்தஆலா திருவுளமாயிருக்கின்றான்.

பின்பு நீ இந்த இரண்டு ரூஹுகளையும், இவைகளில் ஒன்றோடு மற்றொன்றுக்கு இருக்கின்ற சம்பந்தத்தையும், இவ்விரண்டுக்கும் உள்ள வித்தியாசத்தையும் அறியாமலிருக்கிறவரையில், மௌத்து இன்னதென்று உனக்கு ஒருபோதும் தெரியலாகாது.

அறிந்து கொள்! இக்கீழ் உலகத்தைச் சேர்ந்த ரூஹுல் ஹையவானியானது உதிர, வாத, பித்த, சிலேத்துமங்களால் உண்டாகின்ற நுட்பமான ஆவியாலுண்டானது. மேற்சொன்ன நாடிகளுக்கு மூலம் மண், தண்ணீர், காற்று, நெருப்பேயாகும்.

ரூஹுல் ஹையவானியின் சுபாவம் பேதப்படுவதும், சரியாயிருப்பதும், உஷ்ணம், சீதளம், வறட்சி இவைகளின் கூடுதல் குறைவுதலால் உண்டாவதேயாகும். இந்த ரூஹுல் ஹையவானயானது, ரூஹுல் இன்சானியாவுக்கு வாகனமாயிருக்க வேண்டிய நிமித்தம் மேற்கண்ட நான்கு

நாடிகளையும் கூடாமல், குறையாமல், ரூஹில் மிதமாய் வைக்கும் முறைமையைக் காட்டுவதற்கே வைத்திய சாஸ்திரம் ஏற்பட்டது.

ரூஹுல் இன்சானியானது இவ்வுலகத்தில் முஸாபிரைப் போல் வந்திருக்கிறது. இவ்வுலகம் அதன் சுயதேசமல்ல. என்றாலும், அது இப்பிரதேசத்தில் வந்தது எதற்கெனில், அல்லாஹுத்தஆலா திருவுளமாயிருப்பதுபோல், அவன் வழிகாட்டலால் சரியானபடி நேரே நடந்து தனக்கு வேண்டிய தங்கரிப்புகளைச் சம்பாதித்துக் கொள்ளவேயாம்.

அதாவது, நீங்கள் எல்லோரும் இதை விட்டிறங்குங்கள். பின்பு, என்னில் நின்றும் உங்களுக்கு வழிகாட்டல் வருமாகில், யார் என் வழிகளைத் துயர்ந்தார்களோ, அவர்கள் மீது அச்சமில்லை. அவர்கள் துக்கப்படவுமாட்டார்கள் என்று நாம் சொன்னோம் என்பதே.

இன்னும், திடனாக நான் மண்ணில் நின்றும் மனிதனை உண்டாக்குகிறவனாக இருக்கின்றேன். பின்பு, நான் அவனைச் சரிபடுத்தி என்னுடைய ரூஹில் நின்றும் அவனில் ஊதினேன் என்று அல்லாஹுத்தஆலா திருவுளமாயிருக்கிற ஆயத்தில் இந்த இரண்டு ரூஹுகளையும் குறித்த சைக்கினையாயிருக்கின்றது.

ஒரு ரூஹை மண்ணின் பக்கம் சேர்த்து, அதன் சுபாவம் சரியாயிருத்தலுக்கு நான் சரிபடுத்தினேன் என்றும், மற்றொரு ரூஹை தன் பக்கம் சேர்த்து என்னுடைய ரூஹில் நின்றும் அவனில் ஊதினேன் என்றும் திருவுளமானான். அதாவது, அவனை நான் தயார் செய்து என்னுடைய ரூஹை ஏற்கும் பக்குவத்திலாக்கினேன் என்பதாகும்.

எதுபோலவெனில், கித்தான் திரியைத் தீ பற்றும் பக்குவத்தில் ஆக்கி, பிறகு அதை நெருப்பில் காட்டி ஊத, அது பற்றிக் கொள்கிறதை ஒருவாறு இதற்கு உவமானிக்கலாம்.

எப்படியென்றால், ரூஹுல் ஹையவானிக்கு ஒரு நிதானமான சுபாவமிருக்கின்றது. இன்னும் அந்த ரூஹை ஹலாக்குச் செய்கிற நோயைக் கண்டித்து அதைக் காக்கும்பொருட்டு வைத்திய சாஸ்திரத்தில் அந்த நிதானத்தின் முறைகளை எப்படிக் கூறப்பட்டிருக்கின்றனவோ, அப்படியே ரூஹுல் இன்சானிக்கு ஒரு நிதானமும், அந்த நிதானத்தைக் காக்கும் முறைகள் கூறப்பட்டுள்ள ஷரீஅத்துக்கு ஒற்றுமையான இல்மு அக்லாகும்.

மேலும் இல்மு ரியாளத்தும் உண்டாயிருக்கின்றன. இது அதன் ஆரோக்கியத்திற்கு காரணமாகும். ஆகையால், மனிதனுடைய ரூஹுகளின் உண்மையை எவன் அறியவில்லையோ அவன் ஆகிறத்துடைய உண்மையை அறியமாட்டான் என்று இதனால் தெரியலாயிற்று.

எப்படி நப்ஸை அறிவதானது அல்லாஹ்வை அறிவதற்குத் திறவுகோலாயிற்றோ, அப்படியே ரூஹுகளுடைய உண்மையை அறிவதானது, ஆகிறத்தை அறிவதற்குத் திறவுகோலாயிருக்கின்றது. அல்லாஹ்வின் பேரிலும், ஆகிறத்தின் பேரிலும், ஈமான் கொள்வதே தீனுடைய அமல் என்னும் அடித்தளமாயிருக்கின்றது. இதன் நிமித்தமே இந்த மஃரிபாவை முற்படுத்தினோம்.

ஆனால் எல்லா சக்திகளாலும் மனிதனுடைய ரூஹானது தன்னிலே நிலையாயிருக்கிறதென்றும், அது தன் தாத்'து, சிபாத்துகளுடைய நிலைக்குச் சரீரம் தேவையற்றதென்றும் அறிந்திருப்பாய். மௌத்து என்பதற்குப் பொருள் அது மரித்துப் போனதென்பதல்ல. மேலும் சரீரத்தை விட்டும் அதன் அநுபோகம் நின்று போவதே கருத்தாகும்.

*ஹஷ்ருபஹ்து*

**பொருள்:** இல்லாமையில் நின்றும் பின்பு அந்த ரூஹு உண்டாக்கப்படுகிறதென்றல்ல. மேலும் அதற்குச் சரியான அர்த்தம் அதற்கு ஒரு சரீரம் கொடுக்கப்படுமென்பதேயாம்.

அதாவது, முன் கொடுக்கப்பட்டிருந்ததுபோல் ஒரு சரீரத்தை அதான் அநுபோகத்தில் ஆக்கப்படும். இது மிகவும் இலேசு. முன்னே சரீரம், ரூஹு இவ்விரண்டையும் உண்டாக்க வேண்டியதாயிருந்தது. இப்போது ரூஹுல் இன்சானியோ நிலையாயிருக்கிறது.

இன்னும் சரீரத்தின் பாகங்களும் உள்ளதாயிருக்கின்றன. புதிதாக உண்டாக்குவதை விட அவைகளை ஒன்று சேர்ப்பதுத நமது நோட்டத்தில் இலேசாக இருக்கின்றது. என்கிலும், அல்லாஹுத்தஆலாவுடைய செயலில் கஷ்டம் இலேசென்னும் பண்புகளுக்கிடமில்லை.

ஏனெனில், அவன் இக்குணங்களை விட்டும் சுத்தமானவனாகயிருக்கின்றான். மறுதரம் உயிர் கொடுத்து எழுப்புவதற்கு முன் இந்த சரீரமே வேண்டுமென்ற அவசியமில்லை. ஏனென்றால், சரீரமானது குதிரையைப் போல் ஏறும் வாகனமாயிருக்கின்றது. குதிரை மாறிப் போனாலென்ன? ஏறுகிறவன் அவனாகவேயிருக்கிறான்.

குழந்தைப் பருவத்திலிருந்து முதுமை வரையில் சரீர பாகங்கள் ஆகார பாகங்களால் மாறுதலடைந்து கொண்டிருக்கின்றன. ரூஹுல் இன்சானியோ ஆதியிலிருந்தபடியே இருக்கிறது. அதில் யாதொரு மாறுதலும் உண்டாயிருக்கவில்லை.

மறுதரம் உயிர் கொடுத்தெழுப்புவதற்கு இதே சரீரம் வேண்டுமென்று வாதிப்பவர்கள் மேல் பலரால் பல ஆட்சேபணைகள் நடந்தன. அந்த ஆட்சேபங்களுக்குப் பலஹீனமான விடையளித்தார்கள். அந்த ஆட்சேபங்களாவது: ஒரு மனிதன் மற்றொரு மனிதனைத் தின்று இருவருடைய அவயங்களும் ஒன்றாய்ப் போனால் அஸலில் யாருடைய சரீரம் யாருக்கு கொடுக்கப்படும்?

மனிதனுடைய தேகத்தில் நின்றும் ஒரு உறுப்பை அறுத்தெடுக்கப்பட்டு அதன்பிறகு அவன் இபாதத்துச் செய்தால், கியாமத்து நாளில் அவனெப்படி தவாபு பெறுவான்? மேலும் அந்த அறுப்புண்டான உறுப்பு அவனோடு இருக்குமா? அல்லது இருக்காதா? இருக்காதென்றால் கை, கால், கண் முதலிய உறுப்புகளில்லாமல் அவன் சுவர்க்கம் போவதெப்படி?

அந்த அறுப்புண்ட உறுப்பு அவனோடிருக்குமென்றால், இபாதத்துச் செய்யும் போது மற்ற உறுப்புகளோடு அதுவும் சேர்ந்து இபாதத்துச் செய்யவில்லையே! பின்பு தவாபு பெறுவதில்

மட்டும் அவைகளோடு சேருமென்பவைகளே! ஜனங்கள் இப்படியான அநேக வீண் ஆட்சேபங்களை அவர்கள் மேல் எழுப்புகிறார்கள். அதற்கு அவர்கள் பலஹீனமான சமாதானங்கள் கூறுகின்றார்கள். இவ்வளவு சிரமம் எடுத்துக் கொள்ள வேண்டிய அவசியமில்லை.

அருமையானவனே! கேள். மறுதரம் உயிர் கொடுத்தனுப்புவதற்கு இதே சரீரம் தேவையில்லை என்று அறிந்து கொண்டாய். ஆதலால் இம்மாதிரியான வீண் ஆட்சேபங்களை எழுப்பவும், சிரமப்பட்டு அவைகளுக்குச் சமாதானம் கூறவும் தேவையில்லை.

இந்த ஆட்சேப சமாதானங்களுக்கு மூலகாரணம் யாதெனில், தானென்பது இந்த தேகந்தான் என்று அவர்கள் பொருள் கொண்டிருக்கிறார்கள். ஆதலின், இதே தேகமாயிராமல் போனால் அவன் முன்னிருந்த மனிதனாக மாட்டான் என்று மறுக்கின்றார்கள். இதன் நிமித்தமே அவர்கள் தேகத்தில் ஆழ்ந்தார்கள். அவர்களுடைய கோட்பாட்டின் ஆதாரம் உறுதியானதன்று.

உன் சரீரம் சாகிறது கொண்டும் உன் தாத்து, சிபாத்துகளும், அழிந்துபோகிறதில்லை என்றும், ஆனால் உன் தலை, மூளை முதலிய கருவிகளின் மூலமாய் உள்ளிலேயிருந்த ஐயறிவுகளும், ஆட்டங்களும், நினைவுகளும் ஒழிந்து போகின்றன என்றும், இங்கிருந்து எப்படிப்போனாயோ அப்படியே அங்கும் தனித்து ஒண்டியாயிருப்பாய் என்றும், நீ உறுதியாய் எண்ணிக் கொள்.

எப்போது, ஏறும் புரவியாகிய குதிரை சாகின்றதோ, அப்போது, ஏறுகிறவன் அறிவில்லாதவனாக இருந்தால், அறிவுள்ளவனாக மாட்டான். குருடனாகயிருந்தால், கண்ணுள்ளவனாக மாட்டான். ஆனால் வாகனமில்லாத கால் நடை ஆளாகுவான். சரீரமானது குதிரையைப் போல் ஏறும் புரவியாயிருக்கின்றது. நீயோ ஏறுகிறவனாயிருக்கின்றாய்.

இதனாலேதான் தன்னையும், இவ்வுலகத்தையும், மறந்து தன்னிலும் அல்லாஹ்வுடைய திக்ரிலும் ஆழ்ந்து இருக்கின்றவர்களுக்கு ஆகிரத்துடைய சங்கதிகள் தெரியலாகின்றன.

ஏனென்றால், அவர்களுடைய ரூஹுல் ஹையவானியானது தன் சுபாவம் சரியாயிருப்பதை விட்டு மாறவில்லையானாலும், அல்லாஹ்வுடைய பயமும், ஆகிரத்துடைய அச்சமும் உண்டாகி விட்டால் அப்போது ரூஹுல் ஹையவானியானது அவர்களை தன் பக்கம் பராக்குச் செய்ய வைக்காது. இவர்களுடைய நிலைமையானது, மௌத்தானவர்களுடைய நிலைமைக்கு அடுத்திருக்கின்றது.

ஆதலால், எந்த விசயம் மற்றவர்களுக்கு மௌத்துக்குப் பிறகு வெளியாகின்றதோ அந்த விசயம் இவர்களுக்கு இவ்விடத்திலேயே வெளியாகும். உஷார்! உஷார்!!

இப்போது, நாம் ஆன்ம சம்பந்தமான நரகமென்றதில் நமது கருத்து, சரீர சம்பந்தமில்லாமல் ரூஹுக்கு மாத்திரம் உண்டாகிற நரகமேயாகும்.

*நாறுல்லாஹில் மூகத துல்லதி தத்தலிஉ அலல் அபுயிததி*

**பொருள்:** அல்லாஹ்வுடைய நெருப்பாகிறது எரிக்கப்பட்டதாயிருக்கிறது. அது கல்புகளைத் தாவிப் பிடிக்கின்றதென்று, அல்லாஹுத்தஆலா திருவுளமாயிருப்பது இந்த நரகத்தைப் பற்றியே சைக்கினையாயிருக்கின்றது.

மேலும் அறிந்து கொள்! ஆன்ம சம்பந்தமான நரகத்தில் மூன்று விதமான நெருப்புகளுண்டு. அவற்றுள் முதலாவது: துன்யாவில் உவந்திருந்த பொருள்களை விட்டும் பிரிவதலுண்டான நெருப்பு. இரண்டாவது: அருவருப்பான பாவங்களாலுண்டாகிய நெருப்பு. மூன்றாவது நெருப்பு: அல்லாஹுத்தஆலா உடைய ஜமாலை தெரிசிக்க அருகனல்லாமலே அதன் ஆதரவு நீங்கிப் போகிறதினால் உண்டாகிய நெருப்பு.

இந்த மூன்று நெருப்புகளும் சரீரத்தைக் கொளுகினதல்ல. ரூஹைக் கொண்டு கொளுகினவைகளாயிருக்கின்றன. ஜனங்கள் இம்மூன்று நெருப்பையும் இவ்வுலகத்திலி; இருந்தே தங்களோடு கொண்டு போகிறார்கள்.

**வினா**: ஆனால், 7 நரகநெருப்பனெ;றும், 7 சுவர்க்கமென்றும் ஈரேழு பதினான்கு லோகமிருப்பதாக சொல்லுகிறார்களே என்று கேட்பாயாகில்?

**விடை:** நீ எந்த கிரகத்துக்கு சந்தோஷமாய் அனுப்பப்படுவாயோ, அல்லது எந்த கிரகத்தில் கோபமாய் தூரப்படுவாயோ, அதன் உள்ளமை உனக்கு இன்னதென்று விளங்காது. ஆனால், உலகங்கள் எண்ணிக்கையற்றதாயிருக்கின்றன. ஒருசமயம் பூமியில்தான் சிறப்புற்றிருப்பாயோ அறியமாட்டாய்.

எல்லாக் கிரகங்களும், ஒரே சுபாவமானதல்ல. சில கிரகங்கள் ஏக இருளாயிருக்கும். அதில் பிசாசுகள் வாசம் செய்யும். மகா பயங்கரமானது. சில கிரகங்கள் ஏக வெளியாயிருக்கும். அதில் வானவர்கள் வாசம் செய்வார்கள். மகா ஆனந்தமாயிருக்கும். சில கிரகங்கள் மிகச் செழிப்பாயிருக்கும். அவ்விடத்தில் வறுமையும், பிணியுமில்லை. நல்ல சவுந்திரியமாய் ஆண்களும்,பெண்களும் நல்ல ஆடை ஆபரணங்களை அணிந்திருப்பார்கள். நல்ல கனி வர்க்கங்களும், குடிப்பு வகைகளும் இருக்கும். சதாவும் பருவகாலமாயிருக்கும். வித்து தரையில் விழுந்தவுடன் அறுவடை செய்யத்தக்க பருவமாகிவிடும்.

சில கிரகங்கள் ஏக அக்கினியாய் இருக்கும். அதிலுள்ள வஸ்துக்களெல்லாம் அக்கினி மயமாகவே இருக்கும். இதில் வஸ்துக்களைப் போட்டால், பற்றி எரியும். சில கிரகங்கள் ஏக இருளாயிருக்கும். அதில் அக்கினி கூட ஜீவிக்காது. சில கிரகங்கள் மிகப் பாழானதாய் இருக்கும். அதில் வறுமையும், பிணியுமாயிருக்கும். கொடிய விஷ ஜந்துக்கள் மிகுதமாய் வசிக்கும். வெயில் ஆகோரமாய் இருக்கும். சகிக்க முடியாது. புல், பூண்டுகள் எல்லாம் கருகிப்போய் இருக்கும். மழை அருமையாயிருக்கும்.

சில கிரகங்களுக்கு நாலு சந்திரன் பிரகாசிக்கும். சில கிரகங்களுக்கு எட்டு சந்திரன் பிரகாசிக்கும். சில கிரகங்களுக்கு பச்சை, சிகப்பு, நீலம், மஞ்சள் நிறமுள்ள சூரியன் மாறி மாறிப் பிரகாசிக்கும். அவ்விடத்து புஷ்பங்களும். விருட்சங்களும், பட்சிகளும், எவ்வளவோ

ஆனந்தமாயிருக்கும். சில கிரகங்களில் மனித வர்க்கமேயில்லை. சில கிரகங்களில் புல்,பூண்டுகளே இல்லை. சில கிரகங்களில் ஜீவ ஐந்துக்களே இல்லை. சில கிரகங்களில் வாயுவே இல்லை. சில கிரகங்களில் ஜலமேயில்லை.

**வினா:** ஆனால், ஹக்கு ஸுப்ஹானஹுத் தஆலா இந்த உலகங்களை யாருக்காக படைத்திருக்கின்றான் என்று கேட்பாயாகில்?

**விடை:** நரகத்திலும், சுவர்க்கத்திலும் கூட திரும்புதலுண்டு. ஆனால் எவன் கடவுளுடைய அரூப அம்சத்தை யடைந்து தன்னைக் கடவுளாகப் பெற்றுக் கொண்டானோ அவனைத் தவிர மற்றவர்களுக்குண்டு.

நரகத்தில் கோபத்தால் கொலை செய்தவர்களைப் புலியாகவும், தந்திரத்தால் வஞ்சிப்பவர்களை நரியாகவும், திருட்டுத் தனமுள்ளவர்களை பெருச்சாளியாகவும், மூடத்தனமான செய்கையுடையவர்களை மாடு அல்லது கழுதையாகவும், குறும்புத்தனமான துஷ்டத்தனமுள்ளவர்களை குரங்குகளாகவும், நன்றியில்லாதவர்களை குதிரையாகவும், கொடிய கோபமுள்ளவர்களை ஒட்டகையாகவும்,

பொறாமையுள்ளவர்களை யானையாகவும், நீசத்தனமுள்ள செய்கையுடையவர்களையும் ஸ்திரீ போகத்தில் மிதமிஞ்சிய ஷஹ்வத்தென்னும் இச்சையுடையவர்களைப் பன்றியாகவும், அநியாயக்காரர்களை ஓநாயாகவும், கேவலப்புத்தியுடையவர்களை நாயாகவும், ஒருவன் பொருளை நியாயமில்லாமல் அபகரிக்கிறவர்களைப் பருந்தாகவும் ஆக்கப்பட்டிருக்கும். அவரவர்கள் குணம் செயலுக்குத் தக்கபடி மிருக ரூபங்களில் வசிப்பார்கள். பிராணிகளில் கேவலமான புழுவாகவும், புல் பூண்டுகளில் கேவலமான பாசியாகவும், இதை விடக்கேவலமான மண்ணாகவும் இருப்பார்கள்.

பாவம் செய்யாமலிருப்பதே உபவாசம். கடவுளுக்கு வழிபடுவதே தவம். சில தேசத்தார் செயல் சில தேசத்தாருக்கு அநாகரீகமாகவும், சில மதத்தார் சொல் சில மதத்தாருக்கு நியாய விரோதமாகவும் தோன்றும். மிகுதமதத்தாருடைய ஒற்றுமையும் உனக்கு எது நியாயமாய்த் தோன்றுகிறதோ, அதை எடுத்துக் கொள்.

அறிந்து கொள். பாவ வாசனைகள் சகலமும், இருள் நிறங்கொண்டது. மனமாதி அந்தக் கரணங்களை மலினப்படுத்தி சூட்சும சரீரங்களைப் பற்றி ஆன்ம அறிவை மறைத்துக் கொண்டு நிற்கும். புண்ணிய கன்ம வாசனை வெகுலேசாய் ஒளிமயமாய் ஆன்ம அறிவைப் பிரகாசித்துக் கொண்டு நிற்கும்.

புண்ணிய ஆன்மாக்கள் ஒளிமயமான உலகங்களையும், பாவ ஆன்மாக்கள் இருள் மார்க்கமாய் இருளையடைந்து துன்பம் நிறைந்த உலகங்களையும் அடையும். உலகங்களாவது நட்சத்திர வடிவாய் வானத்தில் காணப்படும் அண்டங்களேயாம். யோக வலிமையால் மும்மலங்களைத் தவிர்த்து, எங்கும் தானாயிருப்பவர்கள் காண்பார்கள். அண்டங்கள் யாவும் பஞ்ச பூதங்களால் உண்டாக்கப்பட்டது.

அவைகள் பிருதிவி அண்டம், அப்பு அண்டம், தேயு அண்டம், வாயு அண்டம், ஆகாய அண்டம் என நிற்கும். பூமி, சந்திரன், சூரியன், கிருத்திகை, செவ்வாய், பிரகஸ்பதி, திருவாதிரை முதலியன அக்கினி அண்டமாம். சந்திரனும், பூமியும் நீரு நிறைந்த அண்டமாம். இவற்றுக்கு மேலான மற்றைய அண்டங்களும் உள்ளன. இவற்றுள் நாம் கவனிக்க வேண்டிய அவசியமுள்ளவை சூரிய, சந்திர அண்டங்களேயாம்.

இவ்வண்டங்கள் எல்லாம் ஜீவர்களுக்கு இடமாய்ப் போக போக்கியங்களைக் கொடுத்துக் கொண்டிருக்கின்றன. அவ்வவ்வுலகங்களுக்கு தக்கவாறு சரீரமிருக்கும். பூலோகத்திலுள்ள ஜீவ ஆன்மாக்கள், நாம் காணப்படுகிற சூரியனுடைய சக்தியில் சுழன்று கொண்டிருக்கிற அண்டங்களையே சென்றடையும். மகா புண்ணியங்களைச் செய்தவர்கள் சிருஷ்டி, திதி, சம்ஹாரக் கர்த்தாக்களான பிரஹ்மா, விஷ்ணு ருத்திரர்களுடைய உலகங்களை அடைவார்கள். இதற்குமேல் உள்ளவை மோட்ச உலகங்'களேயாம்.

இந்த ஆன்ம சரீரத்தில் மூளை, லலாடம், இருதயம், நாபி இவற்றையே இடமாக்கிக் கொண்டு வசிக்கின்றது. ஆனால் மூளையே பிரதானம். அதுவே அறிவுக்கு இருப்பிடம். ஜீவன் உச்சி வழியால் உள்ளே சென்றதால் அவ்வழியால் வெளியாகும். போனவழி திரும்பும். அவ்வழியாகவே திரும்ப வேண்டும். அதுவே சரியான மௌத்து. அப்பொழுதுதான் தேவ பதவியை அடையும்.

இன்னும் மும்மலத்தை நீங்கினவர்களின் ஆன்மா கயாலத்தைப் பிளந்து மோட்ச உலகம் செல்லும். மும்மலம் நீங்காத ஆன்மாக்கள் கண், காது, வாய் முதலியன வழிகளால் வெளிப்பட்டு துன்ப உலகம் செல்லும். ஆன்மாக்கள் செல்லும் மார்க்கம் ஊர்த்துவகதி, தூமகதி, அதோகதி என மூவகைப்படும்.

1ஆவது ஊர்த்துவகதி என்பதுசூரிய கிரகண மார்க்கம். அதுவே மேல் நோக்கும் மார்க்கமாம். அதைச் சொர்க்கம் என்றும் சொல்லப்படும். 2ஆவது அதோகதி என்பது சந்திர கிரகணத்தைப் பற்றி நிற்கும். அது கீழ் நோக்கும் மார்க்கமாம். இதை நரகமென்றும் சொல்லப்படும். 3ஆவது தூமகதி என்பது புகை மார்க்கம். அது விலக்கலான கருமங்களைச் செய்து தமது சூட்சும சரீரத்தைப் புகை மயமாக்கி பிசாசங்களாக ஆக்கிக் கொண்டிருக்கும் மார்க்கமாம். மேலும்,தேவஞான மார்க்கமென்றும் ஒரு கதியுண்டுமெனச் சொல்லப்பட்டிருக்கிறது.

***குல்லு ஷையின் யற்ஜிஉ இலா அஸ்லிஹி***

**பொருள்:** வஸ்துக்கள் அடங்களும் அதினுடைய அஸலளவில் மீளுமென்ற ஹதீதின் சொற்படிக்கு உலகங்கள் யாவும் அஸலாகிய காரணத்தளவில் மீளும். அதாவது, உலகில் எந்த வஸ்துவை நோக்கினாலும் அது சூட்சும நிலையிலிருந்தே பிறகு ஸ்தூல வஸ்துவாயிருக்கின்றதென்பது நன்றாய் விளங்குகிறது.

உதாரணமாக, கண்ணுக்குப்' புலப்படாத சிறு விதையிலிருந்து பெருங்கூட்டம் தங்கியிருக்கிறதற்கு தக்க நிழலைத் தருவதாகிய ஆலமரமுண்டாகின்றது. அவ்வளவு பெரிய

ஆலமரமானது அச்சிறிய விதையில் பூர்வமெப்படி அடங்கியிருந்தது எனில், சத்தி வடிவமாயிருந்து பிறகு மூளையாகிய சூட்சும வடிவம் பெற்றுப் பிறகு ஸ்தூல விருட்சமாகின்றது என்க.

அவ்விதமே அக்கினியும் சுவாலை ரூபமாகிய ஸ்தூலத்தன்மையைப் பெறுவதற்கு முன் காரண ரூபமாகயிருந்து பிறகு ஆக்சிஜன்'(உட்கொள்ளும் பிராணவாயு இது சுத்தம்) கார்பன் டைஆக்ஸைடு (வெளியே விடும் காற்று இது அசுத்தம்) என்னும் இரண்டும் சேர்ந்து கொஞ்சம் உஷ்ணம் உண்டாகும் போது, சூட்சும ரூபமாயிருந்து பிறகு ஜுவாலை ரூபமாகி, ஸ்தூலத் தன்மையைப் பெறுகின்றது.

இவ்விதம் உலகிலுள்ள எந்த வஸ்துவைப் பற்றி யோசித்தாலும் ஸ்தூலம், சூட்;சுமம், காரணம் என்னும் மூன்று நிலைமை பெற்றுள்ளது என்பதை நன்றாய்ப் புலப்படுகின்றது. இந்த நியாயத்தைச் சற்று இப்பிரபஞ்சத்திலும் பொருத்திப் பார்க்க வேண்டும்.

உலகினில் நம்மால் காணப்படுவது பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என ஐந்து பூதங்களேயாம். சமுத்திரம், ஏரி, தடாகம், நதி, மலை, காடு, நாடு, நகரம், மனிதர், பறவை, மிருகம், ஊர்வன முதலிய இப்பிராணிகளின் தேக முதலிய இப்பொருள்களின் கூட்டமாகிய உலகத்தைப் பரிசோதித்தால் மண், தண்ணீர், நெருப்பு, காற்று, வெளி என்னும் பஞ்ச பூதங்களுக்கு அந்நியமாய் யாதுமில்லை. ஆதலால், பஞ்ச பூதத்திலே உலகம் அடங்கியிருக்கின்றது என்பது நன்றாய் விளங்கும்.

இவ்விதங்களாகிய பஞ்ச பூதங்களுக்கும், பூர்வம், சூட்சம நிலைமை, காரண நிலைமை என்னும் நிலைமைகள் இருக்க வேண்டுமல்லவா? காரணம், சூட்சும நிலைகளைப் பெறாமல் ஸ்தூல நிலைமை ஏற்படுவதில்லை என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறமையால் இதில் சங்கை செய்வதற்கு இடமில்லை.

ஆதலால், ஸ்தூலங்களாகிய பஞ்ச பூதங்களுக்கு சூட்சும, காரண நிலைமைகள் உள்ளன என்பதை ஒத்துக் கொள்ள வேண்டிய அவசியமாகின்றது. அவ்விதம் பூதங்களுக்குள்ள காரண நிலைமையைச் சேருவதே பிரளயமென்றும், அதாவது உலகமுடிவென்றும் சொல்லப்படுகின்றது.

அறிந்து கொள்! ஈஸ்வர சிருஷ்டியென்றும், ஜீவ சிருஷ்டியென்றும், இரண்டு வகையாய் கூறப்படும் ஈ,ஸ்வர சிருஷ்டியாகிறது பஞ்ச பூத பௌதியங்களான ஜகங்களை பொதுவாய் ஹக்தஆலா படைத்ததாம்.

ஜீவ சிருஷ்டியாகிறது, நாமென்னும் அகந்தையும், அபிமானமும், துவேசங்களும், ஆசைகளும் ஆகிய இவைகளை ஜீவன் படைத்ததாம். ஈஸ்வர சிருஷ்டியான பஞ்ச பூதப் பௌதிகங்கள் பிரளய காலத்தில் அழியும். அந்த அழிவை நாம் பார்க்கத் தேவையில்லை. அதனால் நமக்கு மோட்சமும், முக்தியும் கிடையாது.

நாம் பார்க்க வேண்டிய கியாமநாளாகிறது, ஜீவ சிருஷ்டியும், ஜீவனும் அழிந்து சிவனாகும் நாளாம். இந்த கியாமநாளாகிறது தேச காலம். தேகம் முதலிய ஈஸ்வர சிருஷ்டி அழியாதிருக்கும்போதே ஹக்கை அறிந்து, ஹக்காகி, ஜீவ சிருஷ்டியான காம முதியவைகள் நஸித்து விவேகத்தினால் ஜீவ முக்தனாகி, விதேக முக்தனாவதாம். ஆதலால் நாம் நடக்க வேண்டியதும், தேட வேண்டியதும் அறிய வேண்டியதும் நமது கடமை|யும் நமது அழிவேயாம்.

சரீரத்தை விட்டவன் இறந்தவன் அல்ல. தன் செயலுக்குத் தக்கபடி எந்த கிரகத்திலாவது தன் செயலின் பலனை அனுபவதித்துக் கொண்டிருப்பான். இறந்தவன் பிறக்கமாட்டான். ஹக்கின் அரூப அம்ஸத்தை அடைந்தவன் திரும்புகிறதில்லை.

மேற்சொல்லப்பட்ட இரண்டு கியாமநாளின் உள்ளமை ஒன்றுதான். எதுபோலெனில், மனிதன், ஆடு, மாடு, முதலியவைகள் கோலத்திலும், குணத்திலும், வேறாய்த் தோன்றின போதிலும், உயிரென்ற உண்மையில் ஒன்றாய் இருப்பது போலாம்.

ஹக்கின் ஜோதி வெளியாகி அவனளவில் மீண்டு அவனாகும் தன்மையான ஒடுக்க நாளைப் பற்றிப் பிடித்துக் கொள். இதற்காகத்தான் சர்வமும் நம்மளவில் மீளுமென்று அல்லாஹுத்தஆலா திருவுளமானான். ஹக்கின் மயமாகி ஹக்காமு முபாயம் மௌத்து இராதி யாவைக் கொண்டாம். அதை மௌத்து ஹகீகி என்றும் சொல்லப்படும். இதற்கு மூலாதாரம் அல்லாஹுத்தஆலா.

*யா அய்யது ஹன்ன புசில் முத்மயின்ன துற்ஜிஈ யிலா றப்பிகி றாளியதன் மற்ளியா*

**பொருள்:** ஒடுங்குதலுண்டாகிய யகீனுடைய ஒளியைக் கொண்டு ஒளிவு பெற்று துளும்புதலை விட்டும் ஹக்களவிலே ஒடுங்குதலான நப்ஸே அல்லாஹ்வைப் பொருந்திக் கொண்டதாகவும், அவன் உன்னைப் பொருந்திக் கொண்டிருப்பதாகவும் நீ உன்னுடைய ரப்பளவிலே மீளு.

அதாவது உனக்கந்நியமாய் ஹக்கைக் காணாதே. ஹக்குக்கு அந்நியமாய் உன்னைக் காணாதே. ஹக்காய் நில்லு. உஷார்! உஷார்!! ஸுப்ஹானல்லாஹி வல்ஹம்து லில்லாஹி வலாயிலாஹ இல்லல்லாஹு வல்லாஹு அக்பர்.

5ஆவது ருகுனாவது முற்றிற்று.

## 6ஆவது ருக்குனாவது

## வல் கத்ரி கைரிஹி வஷர்ரிஹி மினல்லாஹி தஆலா

**பொருள்:** நலமும், நஷ்டமும் நாயனின் நாம தோற்ற அவதாரமென்று உண்மை கொள்கிறது. அதாவது, ஆலம் இஸ்முகளையும், ஸிபாத்துகளையும் காட்டும். இஸ்மும், சிபாத்தும் குணியாகிய தாத்தென்ற உள்ளமையைக் காட்டும். தாத்தன்றுதும் உஜூதென்றதும் ஒன்றுதான்.

உஜூதெல்லாம் ஹகீகத்தில் ஒன்றுதான். அது பல தஜயுனாத்துகள் என்கிற நாம ரூபங்களைக் கொண்டு பலதாயிருந்தாலும் சரி. எப்படியென்றால், ஒன்று என்றது அதன்

எண்ணிக்கைகளுடைய மர்தபாக்கள் மிகுதமாகி விட்டாலும் சரி. அந்த மிகுதத்துடைய ஒவ்வொன்றும் ஒன்று என்கிற நாமத்தை விட்டும் நீங்கி விடாது.

கருத்தாவது: ஒன்று பத்து, நூறு, ஆயிரம், பதினாயிரம், லட்சம் என்ற எண்ணிக்கைகள் அளவற்றதாயிருந்தாலும், அவைகள் ஒவ்வொன்றும் அசலாகிய ஒன்றென்பதை விட்டும் நீங்காதது போலாம்.

இன்னும் ஹக்கின் தாத்து, சிபாத்து என்ற காரணத்தின் பிரகாசத்தால் காரியமென்னும் முழு ஆலமும் விளங்குகின்றது. காரணத்துக்கந்நியமாய் காரியமில்லையாம்.

எதுபோலவெனில், காரணமாகிய மண்ணுக்கு அந்நியமாய் காரியமாகிய பாண்டங்கள் இல்லாதது போலேயாம். இன்னும் ஜெகம் ஹக்கின் நாமரூபங்களுக்கு அடையாளமாகவும், அவன் செயல் அவன் தத்துவங்களுக்குக் கண்ணாடியாகவும் இருக்கின்றது.

ஆகையால், ஆலமாகிறது முஹீது, காலிகு, பாரிவு, முஸவ்விரு முதலானவைகளைக் காட்டும் அடையாளமாயிருக்கும். அதற்கு சொந்தமாகிய ரூபம் முரீதென்கிற இஸ்மால் உண்டாயிற்று.

அல்லாஹுத்தஆலாவுடைய காதிர் என்கிற இஸ்மால் ஆலம் வெளியாக்கப்பட்டது. அல்லாஹ்வுடைய காலிகு என்கிற இஸ்மால் மக்லூக்கு படைக்கப்பட்டவைகள் உண்டாயின.

இரணம் கொடுக்கப்பட்டவைகளுக்கு ராஸிக்கு இரணம் கொடுக்கிறவன் காரணமாயிருக்கிறான். இதுபோலவே, அல்லாஹுத் தஆலாவுடைய தொண்ணூற்று ஒன்பது இஸ்முகளும், அதற்குரிய குணங்களையும் தத்துவங்களையும் வெளியாக்கி ஆலம் நடைபெற்று வருகின்றது.

எதுபோலவெனில், ஒரு மனிதனுக்கு கருமான் தொழில் தெரிந்திருந்தால் தெரிந்ததற்கு சிபர்தென்றும், அந்த சிபத்தையுடையவனுக்குக் கொல்லன் என்ற இஸ்முமாயிருக்கும். ஹயாத்தையுடைய தன்மையிருந்தால் ஹயாத்தையுடையவன் என்றும், 'குத்றத்து' என்கிற சிபத்திருந்தால் அதை உடையவனுக்குத் 'தத்துவமுடையவன்' என்றும், 'இல்மெ'ன்கிற சிபத்து இருந்தால், அதையுடையவனுக்கு 'ஆலிமெ'ன்றும்,

'பஸீர்' என்கிற சிபத்திருந்தால் அதை உடையவனுக்கு 'பஸீரெ'ன்றும், 'கலாமெ'ன்கிற சிபத்து இருந்தால் 'முதகல்லிமெ'ன்றும், ராஜாங்கம் செய்கிற சிபத்து இருந்தால் ராஜன் என்கிற இஸ்மு தோன்றும்.

இன்னும், 'கஹ்ர்' அடக்கியாளுகிறவன் என்கிற இஸ்மு வெளியாக அடக்கி ஆளப்பட்டவன் தேவையாயிருக்கும். 'ரப்'பென்கிற இஸ்மு வெளியாக 'மர்பூபு' அல்லது 'அப்து' வேண்டியதாயிருக்கும். இதுபோலவே மற்றும் அஸ்மாக்களும், காரணத்திலில்லாது காரியத்தில் வராது.

ஹக்கின் ஹயாத்தின் பிரகாசத்தால் படைப்புகளுக்கு ஹயாத்திருக்கும். இந்தப் பிரகாசமென்கிற தஜல்லியாத்தைக் கொண்டே உயிராயிருக்கிறது இன்னும் நாம ரூபமாகிய ஜடப் பொருளுடைய அனாசிரென்னும் பூதங்கள் நாலு வகையாயிருக்கும்.

1ஆவது மண். அந்த மண்ணாகிறது ஹக்குடைய ஹகீமென்னும் இஸ்மின் அவதாரமாயிருக்கும். இரண்டாவது காற்று. இந்தக் காற்றாகிறது அவனுடைய கவீ என்னும் இஸ்மின் அவதாரமாயிருக்கும். 3ஆவது தண்ணீர். அந்தத் தண்ணீராகிறது அவனுடைய முஹ்யி என்னும் நாமத்தின் அவதாரமாயிருக்கும். 4ஆவது நெருப்பு. அந்த நெருப்பாகிறது அளீம் என்னும் இஸ்மின் அவதாரமாயிருக்கும். இன்னும் காணும் வஸ்துவின் உஜூது ஹக்கின் உஜூதின் நிழலாகும்.

உலகில் ஹயாத் என்பது அவனுடைய ஹயாத்தின் நிழலாயிருக்கும். இல்மாகிறது ஹக்கின் இல்மின் நிழலாயிருக்கும். உலகத்தின் நாட்டங்கள் நாயனின் இராதத்தின் நிழலாகும். தத்துவங்கள் தக்கோனின் குற்றத்தின் நிழலாகும். கேள்வி கிருபையுடையோனின் சம்யின் நிழலாகும். பார்வை பார்த்திபனின் பஸரின் நிழலாகும். பேச்சு பெரியோனின் கலாமின் நிழலாகும்.

உலகத்தில் 'வகீ' என்னும் பேர் பெற்றவன் வல்லோனின் 'வகீலெ'ன்ற நாம நிழலாகும். உலகத்தில் பைல்வான் என்று கூறுவது பிரஹ்மத்தின் 'கவீ' என்ற நாம நிழலாகும். 'ஒலி' என்ற உலகோர் அழைப்பது உண்மையாளனின் 'வலீ' என்ற நாம நிழலாகும்.

உலகில் புகழ் பெறுதல் புண்ணியோனின் ஹமீதென்ற நாம நிழலாகும். உலகில்' ஆண்மை அடர்ந்தேத்தியம் செய்பவன் அல்லாஹ்வின் 'ஜப்பாரி'ன் நாம நிழலாகும். ஒருவன் மற்றொருவனின் மேல் கோபம் கொள்ளுதல், கொற்றோனின் கஹ்ஹாரின் நாம நிழலாகும். நியாயாதிபதி என்று பெயர் வாங்குவோன் பெரியோனின் ஹாக்கீம் என்ற நாம நிழலாகும். நீதவான் என்று பேர் பெறுதல் நிர்மலனின் ஆதிலென்ற நாம நிழலாகும்.

கணக்கனென்று பேர் பெறுதல் கப்பாரின் ஹஸீப் என்ற நாம நிழலாகும். அமர்க்கையுடையோனென்று பேர் பெறுதல் ஹலீமென்ற நாம நிழலாகும். தாகித்தோருக்கு வழி காட்டல், தனி முதலோனின் ரஸீதென்ற நாம நிழலாகும். தாய், தந்தை பேரிலும் பிள்ளைகள், பேரிலும் உகப்பு வைப்பவன் வல்லானின் வதூது என்ற நாம தோற்றம்.

பிறந்த பிள்ளை பிழைத்திருத்தல் முஹ்யிதென்ற நாம தோற்றம். இறந்தானென்று பேர் பெறுவது முமீத் என்ற நாம தோற்றம். இல்மைத் தேடிப் படிப்பவன் ஆலிமென்ற நாம தோற்றம். பல நாட்டங்கள் உதிப்பதெல்லாம் முரீத்தென்ற நாம தோற்றம்.

மனுவில் மிகச் சக்தியுள்ளவன் கதீரென்ற நாம தோற்றம். ஓசை கேட்பவன் 'சமீ'யென்ற நாம தோற்றம். உருவத்தைப் பார்ப்பவன் பஸிரென்ற நாம தோற்றம். வடுக்களை மறைப்பவன் சத்தாரின் நாமதோற்றம். உலகத்தாருக்கு ஊண் குடிப்பித்தல், நன்றியோ|டு விருந்தளித்தல்

'ரஸ்ஸாக்'கின் இஸ்மின் தோற்றம். உலகத்தை உண்டு பண்ணுகிறவன் 'காலிகி'ன் இஸ்மின் தோற்றம்.

கொடை கொடுப்பவன் 'முஹ்தீ' என்ற நாம தோற்றம். யாசகம் வாங்கித் திண்பவன் 'காபிளெ'ன்ற நாம தோற்றம். வாழ்வுடன் சுகித்திருப்பவன் 'பாஸிது' என்ற இஸ்மின் தோற்றம். தொழில் செய்பவன் 'ஷானிவு' என்ற நாம தோற்றம். நூதனமாய் உண்டு பண்ணுகிறவன் 'பதீவு' என்ற நாம தோற்றம். பயிர், புல், பூண்டு முளைப்பதெல்லாம் அதில் என்ற நாம தோற்றம்.

குடும்பத்தைச் சேர்ந்து நடப்பது 'ஜாமிவு' என்ற நாம தோற்றம். பல நசலால் கஷ்டப்படுவது 'ளாற்' என்ற நாமதோற்றம். சுகம் பெறுவதெல்லாம் 'அபூவுண்' என்ற பேரின் தோற்றம். குற்றஞ்செய்து அதிகாரியின் தீர்ப்பால் துன்பப்படுகிறவன் 'முத்தகி' என்ற நாமதோற்றம். வழிகேட்டில் நடப்பவனும், நடப்பிப்பவனும், 'முளில்லு' என்ற நாமதோற்றம்.

தானும் நேரே நடந்து மற்றவர்களையும் நேரே நடப்பிப்பவர்கள் 'ஹாதீ' என்ற நாம தோற்றம் அவர்கள்தான் ரஸூல்மார்களும், நபிமார்களும் காமிலான ஷெய்குமார்களுமாம்.

ஆனால், ஹக்கு சுப்ஹானஹுவத்தஆலா நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களில் அவனுடைய அஸ்மாக்கள் என்னும் நாமங்களடங்களையும் கொண்டு வெளியானான்.

மற்றும் ரஸூல்மார்களில் ஹக்குத்தஆலா நாமமடங்களையும் கொண்டு வெளியானாலும், எல்லா நாமமும் ஒரே விதமாய் வெளியாகவில்லை. நம்முடைய நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களில் ஒன்று போல் அதீதமாய் ஹக்கு வெளியானதால் மள்ஹருல் அதம் என்று பேராயிற்று.

ஐ! இன்சானே! அவர்களுடைய அனந்திரத்தையும், சுதந்திரத்தையும் பெற்றுக் கொள்ள வேண்டுமென்ற நாட்டமும் தேட்டமும் இருக்குமேயானால் நபியுடைய குணத்தைக் கொண்டு குணம் பெற்றுக் கொள். குணமாவது 'நீ' என்ற உண்மைக்கு இல்லாதிருப்பதை இல்லாததாகவே நிற்பதாம்.

வெளியரங்கமான வேடிக்கை ஜாலம் போலொத்த தூல குணங்களை ஒப்பாமல் தள்ளு. எப்போதும் தூலத் திரையை நீக்கி நில். இன்னும் நான் அரூபமாயிருக்கிறேன். என் உள்ளமை கடவுள் உள்ளமையாயிருக்கிறது. என்னில் தீமையில்லை. என்னில் எல்லா நன்மைகளும் உண்டாகிறது என்று அனுதினமும் சிந்தித்து வா. உன்னில் தீமை சுருங்கி நன்மை வளரக் காண்பாய். இது ஒரு நல்ல ஜெபம். உன்னில் எது வந்தாலும் எது போனாலும் கற்பனை என்று எண்ணிக் கலங்காதிரு.

உனக்குள்ள லாபங்களும், நஷ்டங்களும் முன்னமே பதியப்பட்டு போய்விட்டது. அது விசயம் நடக்கப் பெற்றும் போய்விட்டது. நடந்த வழியைப் பார்க்காமல் இனி போகும் வழியே போ. அதில் உயர்வு தாழ்வுகளைக் கவனித்து நட. உனக்கு ஏற்பட்டது அந்நியனுக்குப் போகாது. அந்நியனுக்கு ஏற்பட்டது உனக்கு வராது. எல்லாம் லவ்ஹூல் மஹ்பூலில்

பதியப்பட்டிருக்கின்றன. லவ்ஹில் மஹ்பூளும் ஹக்குத்தஆலாவின் ஒளியாயிருக்கும். அதில் அக்லிலிருந்தும் பதியப்படுகிறவைகளுக்கு களாவென்று சொல்லப்படும்.

ஒரு மனிதன் இன்ன காலத்தில் இன்ன விதமான ரூபமாய்ப் பிறப்பான் என்று திட்டப்படுத்தியதற்குத் தக்தீர் என்று சொல்லப்படும். ஹக் தஆலாவின் இல்மில் நின்றும் சொற்பம்தான் லவ்ஹில் மஹ்பூலில் பதியப்படுகிறவைகள். அவனுடைய இல்முக்கு மட்டுத்திட்டமில்லை. அதற்கு 'உம்முல் கிதாப்' என்று சொல்லப்படும்.

ஆலங்களில் வெளியாகிறவைகளும், ஆகிறத்தில் வெளியாகிறவைகளும் லவ்ஹில் மஹ்பூலில் பதியப்பட்டிருக்கும். ஆனால், லவ்ஹில் மஹ்பூலில் பதியப்பட்டதில் வேறுவிதப்படுகிறவர்களும் உண்டு.

நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கார்மானம் தேடியது வேறுவிதப்படக்கூடிய களாவைப் பற்றியே. அல்லாஹுத்தஆலா நான் நாடினால் அழித்துப்போடுவேன் என்று திருவுளப்பற்றியிருக்கிறது இந்த வகை களாக்களுக்கே.

அக்லும், மஹ்பூளும் கண்டிப்பில்லாதவைகள். அரூபியானவைகளில் எழுதப்படுகிறதென்றும், பதியப்படுகிறதென்றும் சொல்வது உனக்கு மயகத்தைக் கொடுக்கும். இது உனக்கு விளங்கும் பொருட்டு உன்னில் உதாரணம் காட்டுகிறேன்.

நீ சிறு பிராய முதல் அறிந்த அறிவுகளும், நினைத்த எண்ணங்களும், கற்ற கல்விகளும் உன்னுடைய மனமென்னும் கஜானாவில் பதியப்பட்டிருக்கின்றன. மனமொரு கண்டிப்பை உடையதுமல்ல. அதில் விஸ்தீரணத்துக்கு ஒரு எல்லையுமில்லை. இவ்வளவு அறிவையும் உட்கொள்ளக் கூடியதாயிருக்கிறது.

உன் மனதை உனக்கு லவ்ஹில் மஹ்பூலென்று வைத்துக் கொள்ளலாம். நமது மனதிற்கு அதில் அடங்கக் கூடிய அறிவுகளுக்கு ஒரு மட்டில்லாதிருக்க, ஹக்தஆலாவால் வெளியான இல்முக்கு மட்டுதிட்டமிருக்க கூடுமா? உனது அக்லைக் கொண்டு உண்டாகின்றன. அக்லில்லாது போனால் ஒரு அறிவும் இருக்க கூடாது.

அது போலவே, அக்லுல் அவ்வலைக் கொண்டு லவ்ஹில் இல்முகள் உண்டாகின்றன. அதில் உனது நப்ஸின் தத்துவமாயிருக்கும். உன் நப்ஸில்லாது போனால் உனக்கு அக்லு இருக்க கூடாது. மனமும் இருக்க கூடாது. உனது நப்ஸை ஹக்தஆலாவுக்கு உதாரணமாய் வைத்துக் கொள்.

நப்ஸைக் கொண்டே சகலமானதும் நடக்கின்றதுபோல் ஆலத்திலுள்ளவைகள் சகலமானதும் ஹக் தஆலாவைக் கொண்டு நடக்கின்றன. லவ்ஹில் மஹ்பூல் சகல படைப்புக்களையும் சூழ்ந்து இருக்கின்றது. அக்லுல் அவ்வல், லவ்ஹில் மஹ்பூலைச் சூழ்ந்திருக்கிறது. லவ்ஹில் மஹ்பூலுக்கு 'நப்ஸு குல்லி' என்று சொல்லப்படுகிறது.

ஆகையினால், கைரான கட்டளையும், ஷர்ரான கட்டளையும், கட்டளையில் இன்பமானதும், கசப்பானதும் அல்லாஹ்வில் நின்றும் உள்ளதென்றும், ஈமான் கொள்ள வேண்டும். ஆனால், 'தன்னாலே தான் கெட்டால் அண்ணாவி என் செய்வான்' என்ற உவமானப் பிரகாரம் உன்னுடைய வழிபாடும், வழக்கமும் நல்லதாகவே இருக்குமானால் கூலியாகிய கற்பனையும் நல்லதாகவே இருக்கும். வழிபாடும், வழக்கமும், கெட்டதாகவே இருக்குமானால் கற்பனையும் கெட்டதாகவே இருக்கும்.

ஏனென்றால், 'நீனென்னும்' சொல்லுக்குப் பொருள் மூன்று. 1 ஆவது வழிபாடு, 2ஆவது வழமை, 3ஆவது கூலி ஆனபோதே வழிப்படுதல் ஆதத்தாயிருந்தால் ஆகிறத்தில் கூலியுண்டுமென அறிவிக்கப்படுகிறது. அல்லாஹுத்தஆலா:

*இன்னத்தீன இன்தல்லாஹில் இஸ்லாம்*

**பொருள்:** திட்டமாகத் தீனென்பது அல்லாஹ்வினிடத்தில் இஸ்லாமாயிருக்கும். இஸ்லாமென்பது வழிபடுகிறதும், அந்த வழிப்பாட்டை வழமையாய்க் கொண்டு வருவதும் கூலி பெறுவதுமாயிருக்கும். ஆனால், மேற்காட்டிய ஆயத்தால், தீனென்னும் வழிபாடு, வழக்கம், கூலி ஹக்கிடத்திலுமிருக்கின்றது என்று தெரியலாயிற்று. அப்திடத்திலும் தீன் என்னும் வழிபாடு, வழக்கம், கூலி இருக்கிறதென்றாயிற்று. இதற்குத் தலீல் ஹக்குடைய அருமை திருவசனத்தில்:

*லகும் தீனுக்கும் வலியதீனி*

**பொருள்:** ஏ! இணை வைத்தவர்களே! உங்களுக்கு வழமையான தீன் அதாவது இணைவைக்குதல் உங்களுக்குண்டு. எனக்கு வழமையான தீன் அதாவது ஒன்றுபடுத்துவது எனக்குண்டு என்று முஹம்மதே நீர் சொல்லும் என்று திருவுளமானான்.

ஆகையால், நீ ஹக்குக்கு வழிபட்டு அதை வழக்கமாய் கொண்டு வந்தாயானால் அந்த வழிபாட்டை ஒப்புக் கொள்வதின் பேரிலே ஹக்தஆலா வழிபட்டு அந்த வழிபாட்டுக்குத் தகுந்த கூலியைக் கொடுப்பதின் பேரிலே அவன் வழக்கத்தை வைத்துக் கொள்வான்.

நீ ஹவாவுக்கு வழிபட்டு அதை வழக்கமாய் கொண்டு வந்தாயேயானால் அதை ஒப்புக் கொள்ளாமல் இருப்பதின் பேரிலே தீன் என்ற வழிபாட்டைக் கொண்டு அவைன விட்டு தூரப்படுத்துதல் என்கிற கூலியைக் கொடுப்பதன் பேரிலே வழக்கத்தை வைத்துக் கொள்வான். இதற்காகத்தான் தன்னாலே தான் கெட்டால் அண்ணாவி என் செய்வான் என்று சொல்லப்பட்டது. இன்னும்

*இன்கியாதுன் நப்சி பி அஹ்காமிர் றப்பி*

**பொருள்:** அல்லாஹுத்தஆலாவின் ரஹ்மான் என்ற இஸ்மில் நின்றுமுண்டான பல அஸ்மாக்களின் துறைகளாக தான் வெளியானதால் தன்னைத் தானே தான் ரப்பென்கிற ஹுக்கும்களைக் கொண்டு வழிபடுத்திக் கொண்டதே இஸ்லாம் என்று சொல்லப்படும். தன்னைத் தானே ரப்பென்கிற ஹுகுமுகளைக் கொண்டு வழிப்படுத்திக் கொண்டால் ஏகமென்ற

கூலியானது ஏற்படுகிறது. ஏகமென்றதில் என்ன மாசுதான் அணுகும்? அணுகா. அன்பில் சூழ்ந்து விடும்.

ஓ! இன்சானே! உன்னிலிருக்கும் வல்லமை, பலம், ஞானம், அறிவு இவ்வளவென்பதை நீ அறிந்திருக்கிறாய். இந்த ஜீவியத்தில் மனுஷியன் நடப்பிக்க விரும்பும் எந்தக் காரியத்தையும் முடிக்க தக்க ஞானமும், வல்லமையும் ஒவ்வொருவனிடத்திலும் உண்டு.

ஆனால், இவ்வரிய வல்லமையை அற்புதமாய் நமக்கு அருளி, உன் மனதில் அடைத்து, அடக்கி வைத்த ஹக்தஆலா நமது உள் மனப்பூட்டை திறக்கும் திறவு கோலையும் நமது கைவசம் கொடுத்திருக்கிறான். அத்திறவு கோல் நம்பிக்கை எனப்படும்.

விசுவாசமே! உலக ரட்சகர் ஒரு காலத்தில் தமது சிஷ்யர்களைப் பார்த்து, கடுகு விதை அளவு விசுவாசம் உங்களுக்கு இருந்தால் உங்களால் கூடாத காரியம் ஒன்றும் இராது என்றார்கள். இதற்கிணங்கச் சொல்லப்பட்டிருக்கிறது:

**'பூட்டைத் திறப்பது கையாலே மனப்**

**பூட்டைத் திறப்பது மெய்யாலே**

**வீட்டைத் திறக்க முடியாமல்**

**விதியென் றெண்ணுகிறார் ஞானப் பெண்ணே'**

ஐ! இன்சானே! அறிவாளிகள் அறிவிற்கு மாற்றமாக நடப்பதே பாவம். அடிமையாயிருப்பதை அறிந்தது போல் ஆண்டானாயிருப்பதை அறியாமல் போனதே பாவம். நீ ஒருவன் பொருளை திருட இச்சிக்கிறாயே, உன் பொருளை ஒருவன் திருட இச்சிப்பாயா? மேலும் ஒருவன் ஸ்திரீயை புணர இச்சிக்கிறாயே! உன் ஸ்திரீயை ஒருவன் புணர இச்சிப்பாயா? உன் இருதயத்தில் கடவுள் இந்த வாக்கியத்தை கொடுத்திருப்பதை வாசித்துப் பார்.

நீ உனக்கு எதை விரும்பியிருக்கிறாயோ, அதையே பிறருக்குச் செய். நீ உனக்கு எதை விரும்பவில்லையோ அதை பிறருக்குச் செய்யாதே. தீமையை விட்டு விலகுவதற்கும், நன்மையைச் செய்வதற்கும் இதைவிட வேறே நல்ல பிரமாணம் இல்லை.

உன்னுயிருக்கும், உன் பொருளுக்கும், உன் மானத்துக்கும் நிச்சயமாக சேதம் வருகிறதாக இருந்தால், எதிர்த்துக் கொள். வெறும் வீண் வார்த்தைகளாயிருந்தால், எதிர்க்காதே! உன் சுபாவ குணமோ மிருகங்களின் குணம். உன் அறிவின் குணமோ தேவர்களின் குணம். உன் ஆத்மாவின் குணமோ கடவுளின் குணம். உன் சுபாவ குணத்தை விட்டு அறிவின் குணத்திலாகி ஆத்ம குணத்தில் வருவாயாக.

சுபாவ குணம், எல்லோர்க்கும் ஞானம் உண்டாவதற்கு முன் இயற்கையாக வேறுபடும். இதனால் தீங்கைத் தவிர நன்மையுண்டாகாது. அறிவின் குணமோ புத்தியையும், ஞானத்தையும்

அனுசரித்து நடக்காத வரையில் உண்டாகாது. நன்மையின் பேரில் விருப்பமாகவும், தீமையின் பேரில் வெறுப்புள்ளதாகவும் இருக்கும்.

சில சமயம் சுபாவ குணத்தின் மூர்க்கத்தால் ஏமாந்து சிறு குழந்தையைப் போல் தடுமாறி இவற்றில் விழுந்து தன்னை நொந்து கொள்ளும். ஆத்ம குணமோ தன் உள்ளமையைக் கடவுள் உள்மை என்றும், தன் தத்துவம் கடவுள் தத்துவம் என்றும், தன் செயல் கடவுள் செயல் என்றும் அறிந்திருக்கும். இதனால் தீங்குண்டாகாது. நீ வேறு, நான் வேறு என்ற வேற்றுமையான குணமிருந்தால் உனக்கொரு விதம் மற்றவர்களுக்கு ஒருவிதம் செய்யச் சொல்லும். பாரபட்சமாக நடக்காமலிருக்க முடியாது.

ஆத்ம குணம் கடவுளை அறியாத வரையில் உண்டாகாது. கடவுள் என்றால் எல்லாவற்றையும் விட்டு கடந்தவர். ஒன்றிலும் இல்லாதவரல்ல. உதாரணமாக, நம்முடைய கடத்திற்குள் ஆகாயம் இருக்கிறது. அதற்குள் அடங்காமல் வெளியிலும் கடந்து நிற்கிறது.

அவ்வாறே எல்லாவற்றையும், நம் எண்ணத்தை விட்டு கடந்து நிற்பவரே கடவுள். உலகமெல்லாம் அழிந்தாலும் ஆகாயத்தைப் போல் ஒரு உண்மை என்கிலும் ஆகாயத்திற்கு அசலாயுள்ளது ஒரு போதும் அழியாது. அதுவே கடவுளின் உண்மை.

கஸ்தூரி மானானது தனக்குள் இருக்கிற கஸ்தூரிக் காய் முற்றியவுடன், அதன் வாசனையைத் தன் சுவாசத்தில் ஏற்றுக் கொண்டு, தனக்குள்ளிருந்து வருகிற வாசனை என்றறியாமல், இந்த வாசனை எங்கிருந்து வருகிறதென்று தேடிக் கிறுக்கு கொண்டலைவது போல், நீயும் அலையாதே. எல்லா சுகமும் உன் ஆத்மாவிலேயே இருக்கிறது. நீ அதை இலட்சியம் பண்ணாமலிருக்கிறாய்.

ஆகாயத்தில் பட்சி பறக்க நீ அதன் நிழலை வேட்டையாட உன்னால் முடியாது. சிறு குழந்தைகளைப்போல் உன் நிழலைக் கண்டு நீயே பயப்படுகிறாய். நரியாயிருப்பவன் சிங்கமாக முடியாது. மதங்கொண்ட யானை சிங்கத்தைக் கனவில் கண்டு ஒடுங்குவது போல் உன்னைக் கண்டு எல்லாம் ஒடுங்குவதை நீ அறியாமலிருக்கிறாய்.

உன்னையே ஆசித்தவனாகவும், உனக்கே பயந்தவனாகவும் இருக்கிறாய். லா, நஷ்டம் இன்னதென்று உனக்கு தெரியாது. கடவுள் உண்டு என எண்ணிக் கொண்டால் போதுமென்று எண்ணியிருக்கிறாய். அவரை இல்லையென்று எண்ணிக் கொண்டால் அதனாலுண்டான நஷ்டமென்ன? உன்னை நீயே அறியாமலிருப்பதே பெரும் நஷ்டம். ஞானமில்லாமல் கடவுளை மட்டும் விசுவாசித்திருந்தாலென்ன பயன்? உனக்கந்நியமாய் ஒன்றையும் பாராதே. ஹக் அல்ஹம்துலில்லாஹ்.

ஒரு ஆரிபு இடத்தில் ஈமான் ஸலாமாத்தாகிறதைத் தொட்டும் கேட்கப்பட்டதற்கு அவர்கள் மறுமொழி கொடுத்ததாவது: ஈமான் ஸலாமத்தாவதெல்லாம் தவக்கலுடையவர்களுக்கே என்று சொல்லி விட்டார்கள்.

தவக்கலென்கிற சொல்லின் பொருள்: ஒருவன் தனக்கு முக்கியமான கருமங்களை நம்பிக்கையுடையவர்களை வக்கீலூகப் பொறுப்புச் சாட்டல்.

இதற்கு ஒரு உதாரணம்: அதாவது, ஒருவனுடைய உயிரைப் பற்றிய அல்லது பொருளைப் பற்றிய ஒரு வியாச்சியம் நியாய ஸ்தலத்திலுண்டானால், அந்த வியாச்சியத்தை நடத்துவதற்கு தக்க கல்வியும், யோசனையும், சாமர்த்தியமும் உடைய ஒரு வக்கீலை தெரிந்து சகலவற்றையும் அவனிடத்தில் ஒப்படைத்து கலக்கமில்லாது நம்பிக்கையாயிருப்பதுபோல், நமக்குரியவைகள் எல்லாவற்றையும் அல்லாஹுத்தஆலாவிடத்தில் பொறுப்புச் சாட்டி மனக் கலக்கமலில்லாமலிருப்பதற்கு அல்லாஹுத் தஆலாவை உறுதியாக ஈமான் கொண்டவனாகவும், பூரண அறிவும், தத்துவமம், கிருபையுமுடையவன் என்று யகீன் கொண்டவனாகவும் இருக்க வேண்|டும். இதற்குத்தான் தவக்கல் என்று சொல்லப்படுகிறது.

தவக்கலுக்கு மூன்று பதவிகள் இருக்கின்றன. 1ஆவது நமது காரியங்களைத் தகுதியானவர்களைத் தெரிந்து பொறுப்புச் சாட்டுகிறது.

2ஆவது குழந்தை தாயோடிருக்கிற ஹால் போல் இருப்பதாகும். அதற்கு வேறொருவரையும் தெரியாது. எவ்வேளையும் முகமும், கல்பும், கண்ணும் தாயின் புறமேயிருக்கும். தாயைத் தாவிக் கட்டிக் கொள்வதும், புடவையைப் பற்றிப் பிடித்துக் கொள்வதும், வருகிற சப்தமெல்லாம் உம்மா என்றும், அம்மா என்றும் அல்லாமல் வேறொன்றும் இல்லாதிருப்பது போலவே, அல்லாஹுத்தஆலாவின் பேரில் தவக்கல் வைக்கிறது.

3ஆவது குளிப்பாட்டுகிறவனுக்கு மையித்து இடம் கொடுப்பது போலவே தனக்கு ஒரு அறிவும், ஒரு தத்துவமும், நாட்டமும் இல்லாதவனாய் சகல இல்மும், தத்துவமும், நாட்டமும், செயலும் அல்லாஹ்வுக்கே என்ற தன்மையாய்த் தன்னைத் தானும் தனக்குத் தெரியாதவனாயிருப்பது. இதற்கிணங்க தாயுமான சுவாமிகள் கூறியிருக்கின்றார்கள்:

**'பாலரோடு பேயர் பித்தர் பன்மையென நிற்பதுவே**

**சிலமுறும் ஞானியரின் செய்கை பராபரமே'**

நாம் மேற்சொல்லிய முதலாம் மகாமிலுள்ளவர்களுக்கு துஆ இருக்கிறது. ஆனால் கேட்பதெல்லாம் அல்லாஹ்விடம் அல்லாது பிறரிடம் கேட்க மாட்டார்கள். யார் கொடுத்தாலும் அல்லாஹ் கொடுத்தததாக நினைப்பார்கள்.

இரண்டாம் மகாமில் குழந்தைகள் அழுது, சப்தமிட்டு, பால் கேட்பதுமுண்டு. தாயைத் தாவிக் கட்டிக் கொள்கிறதும் உண்டு. தாயிடம் பிள்ளை பால் கேளாது போனாலும், எடுத்துப் பால் கொடுப்பதுமுண்டு. அது போலவே, அல்லாஹ் தஆலாவிடம் துஆ கேட்பதுமிருக்கும். அவனைக் கேளாமல் அவனாகத் தன் கிருபையால் கொடுப்பதும் உண்டு.

மூன்றாம் மகாமில் துஆவும் கிடையாது. சுவாலும் கிடையாது. இன்னும், முந்தின மகாமில் உள்ளவர்கள் நாம் ஒரு வகீலை நியமித்து அவனிடம் நமது காரியங்களை ஒப்புவித்து

இருந்தாலும், அவன் நாம் செய்யவேண்டியது இன்னதென்று சொன்னால் நாம் அதற்கு மாறு செய்யாதது போலவே!

அல்லாஹுத்தஆலாவின் இந்த மகாமில் உள்ளவர்கள் தவக்கல் வைத்திருந்தாலும் அவனின் கட்டளையாகிய மார்க்கச் சட்டங்களுக்கும், நல்ல வழக்கங்களுக்கும் விரோதிக்காது நடப்பார்கள்.

இரண்டாவது, மர்த்தபா: நாம் அவனில் சகலத்தையும் பொறுப்பாக்கி வைத்தாலும் அவனை முடுகத் தேடுவதும், அவன் செய்வதற்குப் பொருந்துவதும், அவனின் சித்தப்படி நடக்கவிரும்புவதுமாயிருக்கும்.

மூன்றாம் மகாமில் மயக்கம் கொண்டு அறிவற்றவனின் தன்மையாயிருந்தாலும் தன் செயலெல்லாம் அவனின் செயலாகவும்,தன் நாட்டமெல்லாம் அவன் நாட்டமாகவும் காண்பான். அவன் நாட்டமாகவும், அவன் செயலாகவும் இருந்தாலும் அவனோடு சேருவதற்கு அவனுடைய சித்தப்படிக்கு நடக்கிற சட்டங்களுக்கு இணங்கி நடக்கிறவனாயிருப்பான். எல்லாமாய் அல்லாஹ்வுமாய் நிற்பாய். உஷார்!உஷார்!! ஹக் அல்ஹம்துலில்லாஹ்.

சுபுஹானல்லாஹி வல்' ஹம்துலில்லாஹி வலாயிலாஹ இல்லல்லாஹு வல்லாஹு அக்பர். வலாஹௌல வலாகுவ்வத இல்லா பில்லாஹில் அலிய்யில் அளீம்.

ஈமானுடைய 6ஆவது ருக்குன் முற்றிற்று.

## 2 ஆவது அத்தியாயம்

*பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்.*

### பாபுல் இஸ்லாம்

*இஸ்லாமைப் பற்றி பேசும் பாடம்.*

இஸ்லாம் என்பது நிவர்த்தி என்று பொருள். அதாவது சகல ஜீவர்களும், எவன் கையை விட்டும், நாவை விட்டும் விடுதலை அடைந்து ஸலாமத்து பெற்றார்களோ, அவர்கள்தான் இஸ்லாமானவர்கள் என்றும், முஸ்லிம்கள் என்றும் சொல்லப்படும்.

இதற்காகத்தான் நமது நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் திருவுளமானார்கள்: முஸ்லிம் என்பது யாரானால் எவனுடைய கையை விட்டும், நாவை விட்டும் மற்ற முஸ்லிமானவர்கள் சலாமத்துப் பெற்றார்களோ, அவன்தான் முஸ்லிம் என்று சொல்லியிருக்கிறார்கள்.

ஆகையால் முஸ்லிம் என்று சொல்லும் போது, நம்முடைய கையைவிட்டும், நாவை விட்டும், முஸ்லிமானவர்களும், மற்ற ஜீவர்களும் ஸலாமத்துப் பெற்றிருக்கிறார்களா? என்று யோசித்துப் பார். அப்படியிருந்தால் நல்லது. அல்லாத வரையில் நீ பொய் சொன்னவனாவாய்.

ஆனபடியினால் போனது போகட்டும். இனிமேலாவது முஸ்லிமானவர்களும், மற்றும் ஜீவர்களும் நம்முடைய நாவை விட்டும், கையை விட்டும், ஸலாமத்தாக வேண்டுமென்ற நல்லெண்ணம் வைத்து ஊக்கமாய் நடந்து வா.

இன்னும் உன்னை கல்கு என்கிற கட்டை விட்டும் அவிழ்த்து நிவர்த்தி பெற்றுக் கொள். அல்லது விடுதலை பெற்றுக் கொள். மற்றும் கல்குகளையும், கல்கு என்ற திரையை நீக்கி ஹக்காய்ப் பார். ஆனால் இஸ்லாமுக்கு முத்தி என்ற அர்த்தமே முடிவாகும். முத்தி என்ற பதத்திற்கு விடுதலை என்று பொருள்.

இஸ்லாமாகிறது ஐந்து காரியம் கொண்டு எடுக்கப்பட்டது. 1ஆது கலிமா ஷஹாதத்து. ஷஹாதத்தின் பொருளாவது கண்ணாரக் கண்டு ருசுபிக்கிறது. கணாததைச் சொல்வது பொய் சாட்சி என்பார்கள்.

ஆனதால் ஆலமில் காணப்பட்ட அடங்களும், அல்லாஹ்வுடைய அஸ்மா, சிபாத்து, அப்ஆல் வெளியாகும் தலங்களாயிருப்பதால், காண்பான் காட்சிப்படுகின்ற பொருட்கள் யாவும் ஹக்காயிற்று. அறவே அந்நியமில்லை. அந்நியமற நின்று விசுவாசிப்பதே யகீன் நிலை. அந்த நிலையே கண்காட்சி. அந்த கண்காட்சியைக் கண்டு சாட்சி சொல்வதாம். இதற்கிணங்க:

**'பூதாதி யைந்தும் பொறி புலன்க ளெல்லாஞ் சித்**

**தேதாதி யந்த மவை யெல்லாஞ் சித்-தோதரிய**

**கற்பனையுஞ் சித்தனைத்துங் காண்பானுங் காட்சியுஞ்**

**சித்தற்பமும் வேறில்லாமையால்' –சொரூப சாரம்.**

**பொருள்:** பூத முதலியவைகளும், ஐந்து பொறிகளும், ஐந்து புலன்களுமாகிய இவைகள் அனைத்தும் ஞான சுரூபியாகிய ஹக்கேயாம். இதன்றியும் இவை அனைத்துக்கும் காரணமாகிய மூலப்பிரகிருதி முதல் பஞ்சதன் மாத்திரை இறுதியாகக் கிடந்தவை அனைத்தும் ஞான சுரூபியாகிய ஹக்கேயாம்.

யாவராலும் கனித்ததற்கரிய கற்பனைகள் எனப்பட்டவைகள் அனைத்தும் ஞான சொரூபியாகிய ஹக்கேயாம். எல்லாவற்றையும், காண்பானாகிய ஞாதுருவும், அந்த அவனறிவாகிய ஞானமும், மெய்யுணர்வாகிய ஹக்கேயாம். ஏனெனில், அந்த மெய்யுணர்வுக்கேதும் வேறில்லாமையால், அதாவது அந்நதியமில்லாமையால் ஹக்கேயாம். கலிமா ஷஹாதத்துப் பொருளாவது:

*அஷ்ஹது அன்லாயிலாஹ இல்லல்லாஹ் ஐ அன்ஹுற் பி அய்னி ஷுஹூதின் அன்லா பில் உஜூதி ஷெய்வுன் இல்லல்லாஹ்*

**பொருள்:** உண்டானவைகளில் யாதொரு வஸ்துவும் அல்லாஹ் அல்லாததால், எல்லாம் அல்லாஹ்தான் என்று நானும் அவன் என்பதாக அவன் கண்கொண்டு கண்டு ஷாஹிதுச் சொல்கிறேன் என்பதாம்.

இனி கலிமாவின் துவக்கத்தில் 'லா' என்னும் அச்சரத்தை வைத்த சூட்சுமமாகிறது, இன்சானுடைய கல்பில் எப்போதும் நானென்கிற வேறென்கிற ஊத்தை அடர்ந்தேறிக் கொண்டே இருப்பதை 'லா' என்னும் ஹருபால் 'நானெ'ன்கிறதும், வேறென்கிறதுமில்லை என்று தொலைத்து ஹக்குடைய உள்ளமையை தரிபடுத்தி ஹக்காய் நிற்பதற்காம்.

கலிமாவை ஒரு வஸ்துவும் தடையாக்கது என்பதற்கு அத்தாட்சியாவது, உன்னிலே இருக்கிறது. அதாவது, அதைச் சொல்லும்போது இரண்டு உதடும் தடுக்காதிருப்பதுதான். அதாவது வாய் மூடாமல் திறந்தே சொல்வதாம். இதனால் அத்துவித மூல மொழியாகிய கலிமா தையிபு ஹக்தஆலாவை மறைவன்றி மறைகளிலுள்ள பொருள்களனைத்தையும் கலங்கமின்றிக் காட்டும் கலிமா என்றுத் தெரியலாயிற்று.

இன்னும் சிறப்புற கலிமா தையிபில் நுக்கத்துக்கள் இல்லாத ஹருபுகளாகச் சேகரிக்கப்பட்டதில் ஆர்பும் ஹக்குடைய அந்நியமில்லை என்று வெளிப்படையாய் காட்டுகிறது. இன்னும் வேதங்கள் வந்ததும், நபிமார்கள் வந்ததும், நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வந்ததும், அத்துவித மூலமொழியாகிய கலிமா தையிபுவின் அர்த்தத்தைத் தருவதற்கேயாம். அதாவது ஹக்குக்கு அந்நியமாய் ஒன்றும் இல்லை என்று அறிவூட்ட வந்தவர்களாம்.

ஐ!இன்சானே! இதைத் தே, நாடு, ஏக்கமுற்று ஏகாந்தமாய் இரு. இன்னும் உன்னுடலுக்குயிராவது, 'இலாஹு', 'அல்லாஹ்' என்கிற ஏழு எழுத்தாகவும், உடல் 'லா' 'இல்லா' என்கிற ஐந்து எழுத்தாக இருக்கிறது. அதெப்படி என்றால், இரண்டு கால்களும் 'லா' என்கிற எழுத்து, உடல் 'இல்லா' என்கிற எழுத்து, மூலம் 'இலாஹ' என்கிற எ|ழுத்து, முகம் 'அல்லாஹ்' என்கிற எழுத்து. ஆக 'லாயிலாஹ இல்லல்லாஹு' என்றாயிற்று.

பொருள்: 'லா அன இல்லாஹு' நானில்லை, அவனே ஒழிய என்பதாம். ஆனபோதே முண்டக கமலத்தெழுந்து அனாவும், இருதயக் கமலத்தெழுந்து ஹூவும் உத்தி கமலத்தெழுந்து 'வாவு'ம், ஆக 'அனாஹூ' என்றாயிற்று. ஆனபோதே, நானில்லை அவன்தான் என்றாயிற்று. இவ்விதமாய் அறிவதே உண்மையான அறிவு. பல கோலமாய் அறிவதும், காண்பதும், தப்பு என்று ஷெய்கு ஷிப்லி ரஹிமஹுல்லாஹ் கூறியுள்ளார்கள்.

ஆனால் உன்னில் மாத்திரம்தான் அத்துவித மூல மொழி உடலும் உயிருமாக நிற்கிறதென்றும், உன்னை பாழ்படுத்தி ஹக்காய் காட்டுகிறதென்று எண்ண வேண்டாம். முழு ஆலத்திலும் உள்ள நாம ரூபங்களாகிய உடல்களும், அதற்கு ஆதாரமாகிய சத்து, சித்து, ஆனந்தமாகிய உயிருகளுமாக நின்று அதிஷ்டான பொருளைக் காட்டுகின்றது.

இன்னும் 'லாயிலாஹ இல்லல்லாஹ்'வுக்கு மஃனாவாகிறது 'லாவுஜூத இல்லல் வுஜூதல் ஹக்கி', - ஹக்கின் உஜூதைத் தவிர உஜூதில்லை. கருத்தாவது: நான் அல்லாஹ்வுக்கு வேறில்லை. மேலும், நான் அவனாகவே இருக்கிறேன் என்பதாம்.

முஹம்மதுர் ரஸூலுல்லாஹ்வுக்கு ம∴னாவாகிறது: அல்லாஹுத்தஆலா தன்னில் நின்றும் தன்னளவில் முஹம்மதென்னும் திருநாமம் கொண்டு யாத்திரையானான் என்பதாயிருக்கும்.

கருத்தாவது: தூதனுப்பினவன் வேறன்றி தங்கள் தூது வேலையின் பொருட்டால் ரஸூலுல்லாஹ் வந்தார்கள் என்று அறி. அனுப்பினவனும் தானாய், அனுப்பப்பட்ட ரஸூலும் தானாய் கல்காகிய தன்னிடத்துக்கே ரஸூலுல்லாஹ் எழுந்தருள் செய்தார்கள் என்பதாம்.

கலிமா பிறந்தது 'அல்ஹம்து' என்ற ஐந்து அச்சரத்தில் நின்றும், அதாவது 1ஆவது 'அலிபு'. அதில் நின்றும் கலிமாவில் 'ஹு' உண்டானது. அது ஆகாசம். நம்மில் ரூஹு 2ஆவது 'லாம்'. அதில் நின்றும் கலிமாவில் 'அல்லாஹ்' என்ற அச்சரமானது. அது நெருப்பு. அது நம்மில் பித்து, கேள்வி.

3ஆவது 'ஹெ'. அதில் நின்றும் கலிமாவில் 'இல்லா' என்ற அச்சரமானது. அது காற்று. நம்மில் நுரையீரல்., மூச்சு. 4ஆவது 'மீம்'. அதில் நின்றும் கலிமாவில் 'இலாஹு' என்ற அச்சரமானது. அது தண்ணீர். நம்மில் கருயீரல், பார்வை. 6ஆவது 'தாலு' அதில் நின்றும் கலிமாவில் 'லா' என்ற அச்சரமானது. அது மண். நம்மில் மண்ணீரல், முகந்தறிதல். இதுவே அறிவாகும்.

அதாவது, கலிமாவில் ஒவ்வொரு ஹர்பினுடைய அர்த்தத்தையும் கவனிக்கும்போது ஹக்குக்கு அந்நியமாய் ஒன்றுமில்லை என்று வெளிப்படையாய்த் தெரியவருகிறது. அதாவது 'லா' என்று அர்த்தம் வேறில்லை. 'இலாஹு' என்தபற்கு அர்த்தம் இணையில்லை.

'இல்லா' என்பதற்கு அர்த்தம் எல்லாம் ஒரு பொருள். 'அல்லாஹ்' என்பதற்கு அர்த்தம் ஒரு வஸ்துவாயில்லை. 'ஹு' என்பதற்கு அர்த்தம் எல்லாம் அவனே. ஆகையால் சர்வமும் பிரஹ்மமயம் என்றாயிற்று. ஹக்கின் அவதாரத்தை அன்போடு எவ்வஸ்துவிலும் தெரிசித்து ஹக்காகி அல்ஹம்துலில்லாஹ் என்று சொல். ஹக் அல்ஹம்துலில்லாஹ்.

இஸ்லாம் மார்க்கத்தில் தவ்ஹீதை மனம், வாக்கு, காயம் என்னும் திரிகரணங்களும் ஒத்து சாதிக்கின்றன. அதாவது, இருப்பதொன்றே என்னும் ஏக தெய்வக் கொள்கையும், ஏக தெய்வ விண்ணப்பமும், ஏக தெய்வ வணக்கமும் ஆகிய இம்மூன்றும், இஸ்லாம் மார்க்கத்தில் தான் இசைத்தியங்குகின்றன.

ஆகையால், இஸ்லாம் மார்க்கத்தின் இரண்டாவது, எடுப்புத் தொழுகையாயிருக்கும். தொழுகையை தொடங்கும் முன், வேண்டுமானது ஒளுவும், முளுக்கும், ஹைளு நிபாஸும் முழுக்கும், நஜீஸை நீக்குதலும், வேண்டுமானதாயிருக்கும். ளாகிரில் ஒளுச் செய்யவும், முழுகவும், நஜீஸை நீக்கவும், மாவுல் முத்லக்கு என்கிற மொத்தமான தண்ணீரைக் கொண்டல்லால் கூடாது. அதற்குத் தஹூரென்று சொல்லப்படும்.

'ஐ' தானும் துப்புரவாய், பிறதையும் துப்புரவாக்கும். இனி இதுபோல் பாத்தினில், கல்பு, துப்புரவாகிறது தௌபாவைக் கொண்டும், இக்லாஸைக் கொண்டும், கெட்ட குணங்களை விட்டும் நீங்கி நற்குணம் எடுப்பது கொண்டுமாயிருக்கும்.

இன்னும் ஒளுவாகிறது மனிதப் பண்பான குணங்களை விட்டும் துப்புரவாகிறதாயிருக்கும். இந்த வெளிரங்கமான ஒளுவின் பேரில் மட்டும் சுருக்கிக் கொண்டவனாகிற உவமையில் ஒரு புதிய வீடு கட்டி அதின் வெளிச் சுவரெல்லாம் பளிங்கியால் அலங்கரித்து வீட்டினுள்ளாலே, குப்பையும், கூளத்தையும், அருவருப்பானதையும் நிரப்பி வைத்து, ஒரு ராஜாவை அவ்வீட்டுக்கு அழைத்துச் சம்பாஷித்துக் கொள்ள நாடினவனைப் போல. அப்போது அந்த ராஜாவுக்குக் கோபம் வருமோ? வராதோ? யோசித்துக் கொள்.

இதற்காகத்தான் புதுஹாத்துல் மக்கிய்யா 68ஆவது பாபில் ஷெய்குல் அக்பர் இபுனு அரபி ரலியல்லாஹு அன்ஹு சொல்லுகிறார்கள்: எத்தனையோ பேர்கள் தன் ஹயாத்தெல்லாம் கடலில் மூழ்கிக் குளித்தாலும், ஹகீகத் என்கிற பஹரில் முங்குதல் என்னும் ஷுஹூதைச் செய்யாதவன் தொடக்கு இறுபடாதென்றார்கள்.

மாசற்ற மைந்தனே! நானென்கிற பெருந்துடக்கையும், வேறென்கிற சிறு துடக்கையும், தௌஹீதுச் செய்கிறதென்னும், மாவுல் முத்லக்கைக் கொண்டு நீக்கி நிஷ்பிரபஞ்சனாய் நிற்பாய்.

இன்னும் பலபல நாம ரூபங்களான ஜகத்தைச் சத்தியமாகவும், அந்நியமாகவும் காண்பதென்னும் நஜீஸை தௌஹீதென்னும் தண்ணீரால் கழுகி நீக்கி, ஏக தெய்வ வணக்கத்திலாகி விடு. இனி தண்ணீரைக் கொண்டு ஒளுச் செய்கிறதில் ஒரு சிர்ரு இருக்கிறது.

அதாவது, தன் அஸலை நோட்டமிடுவதாயிருக்கும். தன் அஸலாகிறது தண்ணீர் முதலாகிய பூதங்களாயிருக்கும். கருத்தாவது: மூலத்தைக் கொண்டு, கோலத்தைவிட்டு அசலாகிய அறிவின் சுரூபமாவதாக இருக்கும். இன்னும் ஒஜீபனம், ஜிமாவு இவைகளை இச்சிக்கிறதானது நெருப்பின் குணத்தாலாயிருக்கும். அந்த நெருப்பானது தண்ணீரைக் கொண்டு நூர்ந்து விடும்.

ஆகையால், கோபமென்னும் நெருப்பானது விஷயமானால் அப்போது அல்லாஹுத்தஆலாவுடைய ரஹ்மானிய்யத்தான சிபத்தின் குணமென்கிற ஜலத்தைக் கொண்டு நூர்த்துவிடு. ஹக் அல்ஹம்துலில்லாஹ்.

இனி ஒளுவின் உறுப்பு நாலாயிருக்கும். 1ஆவது முகம் கழுகிறது. முகமென்பது முன்னோக்குகிற வஸ்து. அதாவது ஹகீகத்தில் கல்பாயிருக்கும். ஆனதால் முகத்தைக் கழுவதற்கிடையில் உன்னுடைய கல்பை அல்லாஹுத்தஆலாவைத் தவிர மற்ற வஸ்துக்களை விட்டும் திருப்பி விடு. 2ஆவது இரண்டு கையையும் கழுகுகிறது. கை என்பது மேலெண்ணம். நீ உன்னுடைய மேலெண்ணத்தைச் சுருக்கிக் கொள்.

நீ ஒருவரையும் அடிக்காதே. நன்றி, உபகாரம், தான தரும் இவைகளைக் கொண்டு உன் கையை நீட்டமாக்கிக் கொள். உன்னுற்சாகத்தை விட்டும் உன் நப்ஸென்கிற கையை கழுவிவிடு. பல் உன் நப்ஸையே பாழாக்கிவிடு. 3ஆவது தலை. தலை என்பது தலைமைத் தனம். பெருமை, அச்சுப் பெருமை இவைகளுடைய தானமாயிருக்கும்.

ஆனதால், இவைகளை விட்டும் உன் நப்ஸை சுத்தப்படுத்திவிடு. 4ஆவது கால். காலென்பது உசும்புதல் செய்கிறது. ஆதலால் தன் இஷ்டமான உசும்புதலையும், அதை நாடுவதை உரிந்துவிடு. இனி அல்லாஹுத்தஆலாவுடைய களா கற்பனைக்குத் தானாலே ஒடுங்குதல் பெற்றிருந்துக் கொள்.

இன்னும் கோள், புறம் போலொத்தவைகளில் ஈடுபடாதே. ஆகையால், உன் முத்தேகத்தையும் நீக்கி நிர்ச்சரீரியாகவும், நிர்த்தொந்தனாகவும் நில். அறிந்து கொள். ஒளுவின் ஆயத்தில் அல்லாஹுத்தஆலா சொல்லியிருக்கிற நாலு உறுப்பும், நாலு மகாமளவிலே இஷாராவாக இருக்கும். அதாவது நாஸூத்து, மலக்கூத்து, ஜபரூத்து, லாஹுத்து இவைகளாயிருக்கும்.

கருத்தாவது மனமென்கிற நாஸூத்தாகிய தன் உஜூதை விட்டும், புத்தி என்கிற மலக்கூத்தாகிய இல்மை பனாவாக்கி, அகங்காரம் என்கிற ஜபரூத்தாகிய நூரை விட்டும், சித்தமென்கிற லாஹுத்தாகிய கல்பு முஹம்மதான குதுஸிய்யத்தாகிய ரூஹைத் தெரிசனை பண்ணுவதாம்.

ஆனதால், ஒரு சாலிஹானவன் அதாவது ஹக்கிடத்தில் செல்பவன், லாஹுத்துடைய மகாமளவில் எத்தினால், அவனுடைய ஸுலூக்கு நீர்ச்சையாகிப் பரிபூரணமாகிவிட்டது. ஆனால் தங்கடத்தின் நேரத்தில் தயமம் செய்ய வேண்டும்.

தயமம்மில் தலையை மஸ்ஹு செய்வதை ஷரஹாகக்கப்படாததெல்லாம் தலையில் மண்ணை வைப்பது பிரிதலுடைய அடையாளத்திலுள்ளது. இபாதத்தைக் கொண்டு நாட்டமெல்லாம் இரண்டற் ஒன்றாயிருப்பது. ஆகையால், மஸ்ஹை விளக்கப்பட்டது. உஷார்! உஷார்!!

ஆனால், ஒளுவில் கூடிய கருத்தாவது: வேற்றுமை அளவில் முன்னோக்குதலென்னும் முகத்தைக் கழுகி, பின்பு துன்யா, ஆகிறமென்னும் ஒருபதியைக் கொண்டும் பிரயோஜனத்தை நாடுதல் என்னும் இரு கையைக் கழுகி பின்பு பற்குடைய மகாம், ஜம்உ உடைய மகாம் என்னும் இரு காலைக் கழுகிற நாட்டம் கொண்டு காலைக் கழுகிக் கொள்வதாம். ஹக் அல்ஹம்துலில்லாஹ்.

**2ஆவது தொழுகை**

இனி தொழுகையுடைய பயானாவது: இன்சான் காமிலில் 63ஆவது பாபில் ஷெய்கு அப்துல் கரீமுல் ஜியலி ரலியல்லாஹு அன்ஹு சொல்கிறார்கள்: தொழுகையாகிறது அஸ்மா சிபாத்தடங்களையும் கொண்டு வண்ணிப்புப் பெறுவதைக் கொண்டு வாஹிதிய்யத்தின் அகமியத்தை நிலைநாட்டி வைப்பதளவில் சைக்கினையாயிருக்கும்.

இன்னும் சொல்லப்பட்டிருக்கிறது தொழுகையாகிறது அப்தைப் போக்கி, ரப்பை நிலைநாட்டி வைப்பதாயிருக்கும். ஸலாத் என்னும் பதத்துக்கு நெருப்பில் புகுதலாயிருக்கும். அதாவது ஹக்கென்ற பெரும் நெருப்பில் கல்கென்ற தடியைப் புகுத்தி கல்கின் உள்ளமையை மாற்றி ஹக்கின் உள்ளமையாய் நிற்பதாம்.

இதற்காகத்தான் சொல்லப்பட்டிருக்கிறது: தொழுகையில் புகுத நீ நாடினால், அல்லாஹுத்தஆலாவைத் தவிரவுள்ள வஸ்துவை நீ எரித்து விடு.

அதாவது அல்லாஹுத்தஆலாவைத் தவிர மற்ற துன்யாவைச் சார்ந்த வஸ்துக்கள், ஆகிரத்தைச் சார்ந்த வஸ்துக்கள், சரீரத்தைச் சார்ந்த வஸ்துக்கள் யாவையும் அனாநிய்யத்தையும், உன் கல்பை விட்டும் நீக்கி சுத்தமாய் கலப்பறுதலான, தாத்தாகிய அல்லாஹ் அளவில் முன்னோக்குகிறவனாயிரு.

இனி, உன்னுடைய கல்பில் அல்லாஹ்வைத் தவிர மற்ற வஸ்துக்களின் எண்ணமுண்டாயிருக்க வேண்டாம்.

இன்னும், ஷரீஅத்துடைய தொழுகையாகிறது ஐந்து வக்தைக் கொண்டும் வக்தாக்கப்பட்ட பர்ளாயிருக்கும். சிர்ருடைய தொழுகையாகிறது, உன்னுடைய ஹயாத்தடங்களிலும் பர்ளாக்கப்பட்டதாயிருக்கும். இந்தத் தொழுகைக்கு வக்து குறிக்கப்படவில்லை.

அதாவது, உன்னுடைய தளைப்பூண்ட ஸிபாத்துக்களை ஹக்குடைய தளைப்பூணாத ஸிபாத்தில் அழித்து ஏகமாய் ஹக்கின் ஸிபத்தாக நில் என்பதாம். இன்னும் முகையதீன் அப்துல் காதிர் ஜீலானி கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அஜீஸ் அவர்கள் சொல்கிறார்கள்: அல்லாஹுத்ஆலாவாகிறவன்:

*ஹாபிளூ- அஸ்ஸலாவாத்தி*

என்று சொன்ன சொல்லைக் கொண்டு ஷரீஅத்தின் தொழுகையை அறியப்பட்டது.

*வஸ்ஸலாதில் உஸ்தா*

என்று சொன்ன சொல்லைக் கொண்டு சிர்ரின் தொழுகையை அறியப்பட்டது என்றார்கள். ஹாபிளூ அஸ்ஸலவாத்தி என்றதின் பொருளாவது தொழுகைகளின் பேரில் பேணுதலாகத் தொழுங்கள் என்றதாயிருக்கும். வஸ்ஸலாத்தில் உஸ்தா என்றதின் பொருளாவது, நடுவான தொழுகையின் பேரில் பேணுதலாய்த் தொழுங்கள் என்றதாயிருக்கும்.

அறிந்து கொள்! நடுவான தொழுகை என்றது கல்பு தொழுகையாயிருக்கும். ஏனென்றால் கல்பானது வலது இடது இரண்டுக்கும் நடுவிலும், மேல்கீழ் இரண்டுக்கும் நடுவிலும், சீதேவித்தனம், மூதேவித்தனம் இரண்டுக்கும் நடுவிலும் படைக்கப்பட்டிருக்கிறது.

இன்னும் உயிர் பிதா முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியிருக்கின்றார்கள்: அதாவது மனிதர்களின் கல்பாகிறது அல்லாஹுத்தஆலாவின் கிருபை அகங்காரமென்னும் இரண்டு சிபாத்துகளுக்கும் இடையிலாயிருக்கும். எப்படி அவன் நாடுவானோ அப்படி அந்த கல்புகளைத் திருப்பி விடுவான்.

இந்த ஆயத்தைக் கொண்டும் ஹதீதைக் கொண்டும் அறியப்படுகிறது அடிமூலமானது கல்புத் தொழுகையாயிருக்கும் என தெரியவருகிறது. ஆதலால் ஒருவன் கல்பு தொழுகையை விட்டுப்

பராக்குவானேயானால், அவனுடைய தொழுகை பஸாதாகிவிடும். அப்படித் தொழுகை பஸாதாகிவிட்டால், அவனுடைய உறுப்புகளின் தொழுகையும் பஸாதாகிவிடும். ஏனென்றால், ஜகத்சர்குரு நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் திருவுளம்பற்றினார்கள்:

*லாஸலாத்த இல்லா பிஹுஹுரில் கல்பி*

**பொருள்:** தொழுகை என்றது, கல்பு ஒருமுகப்படுகிறதன்றி கிடையாது. ஏனெனில், தொழுகிறவன் தன்னுடைய நாயனை முனாஜாத்துச் செய்கிறான். அந்த முனாஜாத்துச் செய்கிற இடமானது கல்பாயிருக்கும்.

ஆதலால் கல்பானது அந்தத் தொழுகையை விட்டும் வேறே பராக்கிலிருந்தால், அவனின் தொழுகை கூடாது. அவனின் உறுப்புகளின் தொழுகையும் கூடாது. ஏனென்றால், கல்பானது அடிமூலமாயிருக்கும். மற்ற அவயங்கள் அதைத் தொடர்ந்ததாயிருக்கும்.

நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சொன்னதுபோல், அதாவது கல்பு இணக்கமாகிவிட்டால் ஜடலம் முழுவதும் இணக்கமாகும். அது பிணக்கமாகிவிட்டால் ஜடலம் முழுவதும் பிணக்கமாகிவிடும் என்றார்கள்.

ஆனால் கல்பானது தூங்கமாட்டாது. மவுத்தாகவும் மாட்டாது. ஆகிலும் அது விழிப்பிலும், தூக்கத்திலும் பராக்கைப் பெற்றுக் கொண்டதாயிருக்கும்.

இனி, கல்பின் தொழுகையானது, சத்தம், நிலை இருப்பன்னியில் கல்பு ஹயாத்தாக இருக்கிறது கொண்டாயிருக்கும். ஆனால் அந்தக் கல்பாகிறது:

*இய்யாக நஃபுது வயிய்யாக்க நஸ்த்தயீன்*

என அல்லாஹ்வின் சொல்லைக் கொண்டு அவனை முன்னிலை செய்து கொள்ளும். அதுவோ நபிநாயகத்தைத் தொடர்ந்ததாகயிருக்கும். ஆகையால் ரூஹின் ஷுக்ராகிய கல்பின் தொழுகையையும், சரீரம் எடுத்து வந்ததின் ஷுக்ராகிய ளாஹிர் தொழுகையையும் பூண்டு கொள். அப்பொழுதுதான் பூரண இன்சானாகுவாய்.

இன்னும் இந்தத் தொழுகையில் ஏக தெய்வ வணக்கமிருக்கிறது. அதாவது, தொழுகிறவன் அஹ்மதாயிருக்கின்றான். அந்தத் தொழுகையில், நிலை 'அலிபு' விருட்சாதிகளின் வணக்கமாகும். 'ஹே' ருகூஉ மிருகங்களின் வணக்கமாகும். 'மீம்' ஸுஜூது மலக்குகளின் வணக்கமும், ஊர்ந்து திரியும் வஸ்துக்களின் வணக்குமாகும்.

'தால்' அத்தஹிய்யாத்து, மலைகளின் வணக்கமுமாகும். அந்தத் தொழுகையில் ஊர்வன, பறப்பன, புழுக்களின் வணக்கமான தஸ்பீஹ், தக்பீர், தஹ்லீல், தஹ்மீத் இருக்கிறது. ஆனதால், தன்னை பிரஹ்மமாகவும், வஸ்துக்கள் யாவும் உனக்கந்நியமில்லாமல் தன் சொரூபமாய்த் தெரிசிக்கும் தன்மையான ஸுஹூதில் முத்தலக் இந்தத் தொழுகையில் ஏற்படுகிறது.

அதாவது சர்வமும் தனக்கந்நியமில்லாமல் எல்லாம் தரமாகவும், நாம் எல்லாமாகவும் இருக்கிற மகாமில் ஆனான். இதற்காகத்தான் நமது நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உங்களுடைய துன்யாவில் நின்றம் என்னளவில் உவப்பாக்கப்பட்டது மூன்று காரியம். அதாவது ஹலாலான பெண்சாதிகளும், வாசனைகளும், தொழுகையில் என் கண் குளிர்ந்திருப்பதும் என்றார்கள். இதற்காகவே சகல வணக்கத்திலும் தொழுகை மேலென்று சொல்லப்பட்டது.

இன்னும், தொழுகை அல்லாஹ் என்கிற லெபுளின் (வாக்கியம்) கோலத்தின் பேரில் படைக்கப்பட்டிருக்கிறது. அல்லாஹ் என்ற நாமமோ ஹக்கனின் அஸ்மாக்களுடைய மஃனா முழுவதையும் ஐக்கியப்படுத்திக் கொண்ட அருமை நாமமாக இருக்கிறது. அந்த லெபுளின் கோலமாகிறது அலிபு நிலை. முந்தின 'லாம்' ருகூஉ, பிந்தின 'லாம்' ஸுஜூது. 'ஹே' இருப்பாயிருக்கும்.

ஆகையால், அல்லாஹ்விலுண்டாநன 'அலிபு' அஹதியத்தளவிலும், முந்தின 'லாம்' வஹ்தத்தளவிலும், பிந்தின 'லாம்' வாஹிதிய்யதளவிலும் 'ஹே' ஹூவிய்யத்தளவிலும், இஷாராவாயிருக்கும். ஆனால் ஹூவிய்யத்தாகிறது ஹூவென்கிற இஸ்மளவில் ஹூவிய்யத்தென்கிறதைச் சேர்க்கப்பட்டிருக்கிறது. அதன் பொருள் சர்வமும் அவனளவிலே சேர்க்கப்பட்டது என்றாகும்.

ஆனபோதே மகுலுகாத்தில் ஒன்றாவது அவனைவிட்டும் நீங்காது. ஆனதால் சர்வமும் பிரஹ்மமயமென்றாயிற்று. இதற்காகத்தான் உமருல் காஹிரி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் மெஞ்ஞானத்திருப்பாடலில்:

**'இஷாறது அலிபுயிலா அஹதியத்ததுமாய்**

**நிஷானியாம் லாம்தான் நிறம்பும் கமாலளவில்,**

**பிஷாறது ஹாஹருபு ஹூவிய்யத்திலே தானாக,**

**உஷாறத்து நின்று வொடுங்கு நாளென்நாளோ'**

என்றார்கள். தொழுகையில் அல்லாஹ் என்றதின் கோலமாக ஜீவபோதம் நீக்கிச் சிவபோதமாகி தன்மயமாய் உஷாரற்று ஒடுங்கு. இதற்குத் தலிலாகப் பார்.

இமாம் அலி கர்ரமல்லாஹு வஜ்ஹஹுவுடைய காலில் தைத்திருந்த அம்பை; பிடுங்கிறதில் நோவினையைப் பயந்தபோது, நான் தொழுகையிலாகினேனேயானால் பிடுங்குங்கள் என்று உத்திரவு கொடுத்து, அவ்விதம் பிடுங்கப்பட்டது. தொழுகை முடிந்தவுடன் பிடுங்கினீர்களா? என்று கேட்டார்கள். அதாவது உஷாரற்று நின்றார்கள்.

இன்னும் இமாம் அபூஹனீபா ரலியல்லாஹு அன்ஹு கூபாவின் பாழும் பள்ளியில் தொ|ழும்போது மேல் உத்திரத்தில் நின்றும் ஒரு மலைப்பாம்பு தங்கள் கழுத்தில் விழுந்து

சுற்றிக் கொண்டது தங்களுக்குத் தெரியாமல் தொழுகை முடிந்ததின் பின் அறிந்தார்கள். அதாவது உஷாரற்று நின்றார்கள்.

ஆகையால், நீயும் உஷாரற்ற மகாமை உவந்து கொள். இன்னும் அல்லாஹ்வுக்காக உறுதி கொண்டு நிற்றல் தொழுகையின் நிலையாகும். அல்லாஹ்வுடைய ஏவலுக்குத் தலைசாய்க்கிறது ருகூஉ ஆகும். என்ன வந்தாலும், எதுபோனாலும் பொறுமையாயிருத்தல் ஸுஜூதாகும். எது நேரிடினும் உள்ளதைக் கொண்டு கனாஅத்துச் செய்தல், அத்தஹிய்யாத்தாம். இவைகளில் ஒன்றை நீ விடுவாயானால் உன் தொழுகை பூரணமாகமாட்டாது. அல்லாஹ்வின் பேரிலே ஆசையும் முஹப்பத்தும் வைப்பது பர்ளாம். துன்யாவில் ஆசை நீங்கியிருப்பது ஸுன்னத்தாம். உஷார்!உஷார்!! ஹக் அல்ஹம்துலில்லாஹ்.

**3ஆவது ஜகாத்து**

இஸ்லாம் மார்க்கத்தின் எடுப்பில் மூன்றாவது சகாத்து . சகாத்து என்ற பதத்திற்கு அர்த்தம் சுத்தப்படுத்தல். ளாஹிரில் தன் முதலை அதில் விதியானதை விட்டும், நீக்கி துப்பரவாக்குவதாம். பாத்தினில் தன்னை கல்கு என்று எண்ணும் எண்ணமான ஊத்தையை மாற்றி அதற்குப் பகரமாய் ஹக்காய் பாவிப்பதைக் கொண்டும் சுத்தப்படுத்துவதாம்.

ளாஹிர் ஷரஇல், சகாத்தில் மிகுந்ததும், நாற்பத்திலொன்றாயிருக்கும். ஹிக்மத்தாகிறது ஹக்குடைய உஜூதுடைய மற்தபாக்கள் நாற்பதுண்டும். அதில் மனித வர்க்கமான நாம் ஒன்றாக இருக்கிறோம். மனித வர்க்கமான நம்மை நீக்கி உஜூதுடைய மர்தபாக்கள் யாவும், ஹக்குக்கேயென்று சொந்தப்படுத்தி கல்குகள் யாவையும் ஹக்காக காண்பதாம். அந்த நுட்பத்தை அஹ்மதிலுள்ள 'மீம்' வெளியாக்கி விட்டது. அதாவது இந்த கிதாபில் மேலே முந்தின ருக்னில் கூறியிருக்கிறோம். பார்த்துக் கொள்ளவும்.

இன்னும் சகாத்தாவது ஈயாமையை விட்டுக் கல்பைச் சுத்தப்படுத்துவதாம். இதற்காகத்தான் சொல்லப்பட்டிருக்கிறது மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அதிக உள்ளச்சத்துடன் தொழுது கொண்டிருந்த ஒரு மனிதனைக் கண்டு புதுமையாகி, ஆண்டவனே! இந்த மனிதனுடைய தொழுகையை அழகாக்கி வைத்த புதுமை என்னவென்று கேட்டார்கள்.

அப்போது அல்லாஹுத்தஆலா, மூஸாவே! அவன் ஒரு நாளொன்றுக்கு ஆயிரம் ரஅகத்துத் தொழுது, ஆயிரம் அடிமையும் உரிமைவிட்டு, ஆயிரம் ஜனாஸாவின் பேரில் தொழுது, ஆயிரம் தடைவ பீஸபீல் செய்தாலும், இவைகளெல்லாம் அவனுக்குப் பிரயோஜனம் கொடாது. அவன் தன்னுடைய முதலுக்கு சகாத்து கொடுக்கிறமட்டிலும் என்று சொன்னான். அதாவது தன் உஜூதென்ற முதலுக்கு சகாத்து கொடுக்கிற மட்டிலும் என்று சொன்னான்.

இன்னும் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமத் அவர்கள் திருவுளுமானார்கள்: சகாத்து இல்லாதவனுக்குத் தொ|ழுகையில்லை என்றும், அதன் கருத்தாவது தன்னைப் பாழ்படுத்தாதவனுக்குத் தொழுகையில்லை என்றார்கள். உஷார்! உஷார்!! ஹக் அல்ஹம்துலில்லாஹ்.

**4ஆவது நோன்பு**

இஸ்லாமின் நாலாம் கடமையாகிறது, நோன்பாயிருக்கும். ஸவ்ம் என்ற பதத்துக்குப் பொருள் தடுத்தல் என்றர்த்தம். ளாகிரில் கிழக்கு வெளுத்த பிறகு பொழுது அஸ்தமிக்கும் வரையும் நோன்பை முறிக்கும் காரியத்தை விட்டும் தன்னைத் தடுத்துக் கொள்கிறது. பாத்தினில் அல்லாஹ்வின் அடிமை என்கிற கொள்கையும், முகம்மதுடைய உம்மத் என்கிற கொள்கையும் சிந்தையில் வராமல் தடுத்துவிடுகிறது.

அதாவது மனிதப் பண்பை பரிமாறுகிறதைத் தடுத்து பிரஹ்மத்தளவிலே சேர்க்கப்பட்ட சத்து, சித்து, ஆனந்தமென்ற வர்ணிப்பை உடல், பொருள், ஆவியாக்கிக் கொள்வதாம். எந்தமட்டும் மனிதப் பண்பென்ற வடுவை விடுவானோ அந்தமட்டும், ஹக்கின் பக்கம் நெருங்குவான். அதாவது அதுவானால் அதுவாவர் அதுவே சொல்லும் என்ற வாக்கியப்படி ஹக்காய் நிற்பான். இதற்காகத்தான்,

*அஸ்ஸவ்மு லீ வஅனா அஜ்ஸீ பிஹி*

பொருள்: நோன்பு எனக்குடையது. நான் அது கொண்டு அவனுக்கு கூலி கொடுக்கவே செய்வேன் என்று அல்லாஹ்த்தஆலா சொன்னான். அதாவது, ஸவ்மென்ற வர்ணிப்பு நான். அதுகொண்டு நான் என்ற உஜூதை கூலியாக கொடுக்கவே செய்வேன் என்றான்.

இன்|னும் பொய், புறம், கோள், ஒருவரை ஏசுகிறது பொய் சாட்சி சொல்வது போன் ஹராமான கர்மங்களை விடுவதே நோன்பு என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஏனென்றால், உஜூது ஒன்று, அதாவது இருப்புது ஒன்றென்ற உண்மைக்கு விரோதமாகும்.

ஆகையால், அவன் நோன்பாளியல்ல. ஏன் சர்வமும் நானாக நிற்கும்போது தனக்குத்தானே பொய் சொல்லவும், புறம் கூறவும், கோள் சொல்லவும் ஏசவும், பொய்சாட்சி சொல்லவும் எப்படி ஏற்படும்? ஏற்படாது. அப்படி ஏற்பட்டால் நோன்பாளியாவானா? ஒருக்காலும் நோன்பாளியாகான்.

இதற்காகத்தான் பெரிய பிதா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் திருவுளமானார்கள்: நோன்பாகிறது ஊண், தீனை விடுகிறதில்லை. வீண் பேச்சு, ஜிமாவு, பொய், புறத்தை விடுகிறது என்றார்கள். பொய் முதலான கெட்ட கருமங்களை விடவில்லையானால், அவன் ஊண், குடிப்பை விட்டதில் அல்லாஹ்வுக்குத் தேவையில்லை என்றும், எத்தனையோ நோன்பாளி அவனுடைய நோன்பில் நின்றும் அவனுக்கு தாகமே தவிர வேறே பிரயோசனமொன்றும் இல்லை என்றும் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சொன்னார்கள்.

இன்னும் ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் திருவுளமானார்கள்: ஐந்து கர்மம் நோன்பை முறிக்கும். 1ஆவது பொய். 2ஆவது புறம். 3ஆவது கோள். 4ஆவது இச்சையுடன் பார்ப்பது 5ஆவது பொய் சத்தியம் செய்வது.

இதற்காகத்தான் அவ்ஸாயி இமாமிடத்தில் பொய்யைக் கொண்டும், புறங்கூறுவதைக் கொண்டும், நோன்பு முறியுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால், வடுவைவிட்டு அடுவை அடுத்துக் கொள். உஷார்! உஷார்!! ஹக் அல்ஹம்துலில்லாஹ்.

**5ஆவது ஹஜ்ஜு**

இஸ்லாம் மார்க்கத்தின் எடுப்பில், 5ஆவது ஹஜ்ஜு. ஹஜ்ஜென்ற பதத்துக்கு அர்த்தம் நாட்டம் வைத்தல்.

ஷரயில் ஹயாத்தில் ஒருதடவை இயலுமானவர்கள் மக்காவுக்குப் போய் ஹஜ்ஜும், உம்ராவும் செய்ய விதியாயிருக்கும்.

பாத்தினில் அல்லாஹுத்தஆலாவை ஷுஹூது செய்வதில் நாட்டத்தை தரிபாடாக்குகிறது. அதாவது ஆலம் இன்சான் முதல் அஹதிய்யத்து வரைக்கும் கலப்பற்ற ஹக்கின் உள்ளமையாகக் காண்பது.

கருத்தாவது: போகும் வரலாறு தொடுத்து வந்த வரலாறு வரைக்கும், வந்த வரலாறு தொ|டுத்து போகும் வரலாறு வரைக்கும் சென்று சென்று அணுவணுவாய்த் தேய்ந்து தேய்ந்து தேய்ந்தொன்றாய், உண்மை நிலையாகிய உணர்வெளியில் நாட்டத்தை வைப்பதாம்.

அதாவது சிர்ரில் நின்றும் நூர் உண்டாகியது. அந்த நூரில் நின்றும் நெருப்பு உண்டாகியது. அந்த நெருப்பில் நின்றும் காற்று உண்டாகியது. அந்த காற்றில் நின்றும் தண்ணீர் உண்டாகியது. அந்தத் தண்ணீரில் நின்றும் மண் உண்டாகியது என்று கல்பினாலே நினைத்துக் கொண்டு அந்த யாதாகவேயிருக்கிறது. இதற்குப் பெயர் ஸுஹூதுல் மப்தவு வல்மஆது என்று கூறப்படும்.

இதற்குப் பொருள் வந்த வரலாறையும், போகும் வரலாறையும், ஸுஹூதுச் செய்கிறதாயிருக்கும். இந்த ஸுஹூதைச் செய்து வந்தால் கஷ்புகராமத்து முதல் உண்டாகும். இதை நேமமாய்க் கொண்டுவரவும். இது பெரியோர்கள், ஒலிமார்கள் நிற்கும் நிலையாகும்.

இன்னும் ஹஜ்ஜென்கிற பதத்திற்கு லெக்கம் (11) அது 'ஹூ'வாயிருக்கும் நீ 'ஹூ'வாய் நில். அந்த 'ஹூ'வின் சைக்கினையாகிறது: (11) ஸிபத்துகளாயிருக்கும்.

அதாவது 1ஆவது உஜூதென்கிற உள்ளமை 2ஆவது கிதம் என்ற பூர்வீகம் 3ஆவது பகா என்ற முடிவற்றிருக்கிறது. 4ஆவது முஹாலிபத்துன்லில் ஹவாதிதி என்ற புதிதான படைப்புக்கு ஒவ்வாவண்ணமாயிருப்பது. 5ஆவது கியாமுஹு பினப்ஸிஹி என்ற தன்னைக் கொண்டு தானே நிலைபாடாயிருக்கிறது. 6ஆவது வஹ்தானிய்யத்து என்ற ஏகமாயிருக்கிறது. 7ஆவது சமதானிய்யத்து என்ற எல்லாம் அவன்தானாயிருக்கிறது. 8ஆவது இலாஹிய்யத்|து என்ற நாயகத்தனமாகவிருக்கிறது. 9ஆவது ரப்பிய்யது என்ற படைத்து வளர்க்கிறது. 10ஆவது ரஹ்மானிய்யத்து என்ற எல்லோருக்கும் அருளானாகவிருக்கிறது. 11ஆவது முளுக்கியத் என்ற ராஜாங்கம் ஆளுகிறது.

ஆகக் கூடிய பதினொன்றும் உன் பரமாத்மாவினுடைய ஸிபாத்துகளாயிருக்கும். இந்தச் சொந்த நிலையை விட்டும் அந்நிய நிலைக்குப் போகாதே. அந்நிய நிலையாவது அஸத்து, ஜடம், துக்கமாம். இந்த மூன்று இலட்சணமும் உன்னுடைய முத்தேகத்திற்குள்ளதாம்.

ஆகையால் அதீத நிலையில் ஆனந்தமாயிரு. (பல்) அதை விட்டும் நீதனாய் நில். இன்னும் ஹஜ்ஜென்ற பதத்தில், ஜீமை விடுத்தமால் லெக்கம் பதினொன்றாகும். ஆனபோதே பதினான்கு வாஜிபான ஸிபாத்தை அதாவது அரூபியான ஸிபாத்தையும், சுரூபியான ஸிபாத்தையம், அறிந்தவன் தான் ஹஜ்ஜு செய்தவன் என்றாகியது. ஆகையால் பதினான்கு சிபாத்தையும் அறிந்து ஹக்கில் அழிந்து ஹக்காய் நிற்பவனே ஹஜ்ஜின் உள்ளமையை நிறைவேற்றியவனாம்.

ஆனால் நம்மில் (3) புத்தியிருக்கிறது. அதை அறிந்து தவிர்வது நமது கடமை. அதாவது 1ஆவது சிந்தை என்கிற நப்ஸு 2ஆவது குணாகுணமென்கிற தபவு 3ஆவது வழமை என்கிற ஆதத்து. இம்மூன்றில் நின்றும் எல்லா ஒவ்வொன்றையம், ஏழு சிபாத்தென்னும் பெலமான ஏழு கல்லைக் கொண்டுடைத்து விடு. பின் ஹக்கின் சுயமாய் நில். ஹக் அல்ஹம்துலில்லாஹ்.

*வஅதிம்முல் ஹஜ்ஜ வல்வும்றத லில்லாஹி*

என்று திருவுளமானான். அதாவது ஹஜ்ஜையும், உம்ராவையும், அல்லாஹ்வுக்காக நிறப்பமாய்ச் செய்யுங்கள். அதாவது தவ்ஹீது தாத்தி என்னும் ஹஜ்ஜையும், தௌஹீது சிபத்தி என்னும் உம்ராவையும், நிரப்பமாய் செய்யுங்கள். ஆனால் இந்த வணக்கத்தில் மாத்திரம் அல்லாஹ்வுக்காகச் செய்யுங்கள் என்று சொல்லியிருக்கின்றானேயல்லாது, மற்ற வணக்கத்தில் இதுபோல் சொல்லவில்லை.

ஏனென்றால் இந்த வணக்கத்தில் கல்லெறிதல், சபாமர்வாவுக்கு மத்தியில் ஓடுதமல் போன்றது இன்ன காரணத்துக்கு என்று தெரியாமல் புத்தி மயங்கும்படியான காரியங்களைச் செய்யும்படி ஏவப்பட்டிருக்கிறது.

ஏனென்றால், எந்த வணக்கத்தில் எதிர்ப்புத்தி நுழைய இடம் உண்டோ அதைச் செய்ய நப்ஸுக்குப் பிரியமாகின்றது. ஏனெனில் என்ன செய்கிறேன், ஏன் செய்கிறேன் என்பதை நீங்கள் உணர்வீர்களானால், அது எதுபோலவெனில், ஜகாத்து கொடுப்பதில் ஏழைகளுக்கு உதவியாகிறதென்றும், தொழுவதில் அல்லாஹ்வுக்கு தாழ்ச்சி செய்தல் உண்டாகிறது என்றும், நோன்பு வைப்பதில் ஷெய்த்தானுடைய படையாகிய இச்சை முறிகிறது என்றும் உணர்ந்திருப்பதனால் உன் நப்ஸானது புத்தியோடு ஒத்து இக்காரியங்களைச் செய்யக்கூடும். ஹஜ்ஜில் புத்தி நுழைய இடமில்லாததால், அதைச் செய்ய நப்ஸு ஒத்துக் கொள்ளாது.

ஆனால் அடிமைக்கு ஒரு காரணமும் தென்படாமல், எஜமானுடைய ஏவலினால் மாத்திரம் செய்வதுதான் அடிமைத்தனத்தின் பூர்த்தியாம். கல்லெறிதலும், ஓடுதலும் இதே வகையில் சேர்ந்தவைகளாம். ஏனென்றால், இதில் சொன்னதைச் செய்வது மாத்திரமே ஒழிய வேறொன்றும் புலப்படவில்லை.

மேலும் ஹஜ்ஜில் பிரதான ரகசியம் யாதெனில், மனிதன் தன்னுடைய இக்தியாரை அதாவது சுயதந்திரத்தை அல்லாஹ்விடம் ஒப்புவிக்காதவரையில் பூரணப்பதவியை அடையமாட்டான். இத்தகமையாய் அவனைப் படைக்கப்பட்டிருக்கிறது. அவன்தன் ம|னோ இச்சைப்படி நடப்பது அவனின் கேட்டுக்குக் காரணமாகும். அவன் சுயதந்திரனாயிருக்கின்ற வரையில், இன்னும் மார்க்கவிதிப்படி செய்யாதவரையில், அவன் தன் இச்சையைப் பின்பற்றியவனாயிருக்கிறான். அவனின் நடவடிக்கை அடிமையின் நடவடிக்கை போலாகாது.

ஆனால் அவனின் நற்பதவியோ அடிமைத் தனத்தில் தான்இருக்கிறது. அதாவது அவன் சுயதந்திரத்தை விடுகிறதிலேதான் இருக்கிறது. உயிர் போனவிடத்தில்தான் பொருள், உன்னுடைய மனம், புத்தி, ஞானேந்திரியம், கன்மேந்திரியம், தேகங்ள் இவைகள் அனைத்தும், உன் ஆத்மஞானத்தினால் சூரியனைக் கண்ட புலிபோல் நீங்கி, நீ என்பதும், நானென்பதும் ஒன்றே! ஒன்று என்ற ஐக்கிய முத்தியை அடைவாய்.

ஷரஇல் ஹஜ்ஜுடைய பர்ளுகள் ஆறாயிருக்கும். 1ஆவது இஹ்ராம் கட்டுவது. அதாவது ஹஜ்ஜில் புகுந்தேன் என்று நிய்யத்து வைக்கிறது. 2ஆவது துல்ஹஜ்ஜு மாதம் ஒன்பதாம் பகல் சவாலுக்கும், பெருநாள் இரவு பஜ்ருக்கும் இடையில் கொஞ்ச நேரமாவது அரபாத்து மலையில் தரிக்கிறது. 3ஆவது பெருநாள் இரவு பாதிக்குப் பின் தவாபுச் செய்கிறது.

4ஆவது அரபாவில் தரிக்கப்போகாதிருக்கும் வரையில் தவாபு குதூம் என்னும் சுன்னத்தான தவாபுக்குப் பின் ஸபாமர்வா என்கிற இரண்டு மலைக்கிடையில் ஸபாக் கொண்டு துவக்கி மர்வாக்கொண்டு முடித்து, ஏழு விடுத்தம் திட்டமாய் தொங்கோட்டம் ஓடுகிறது. அரபாவில் தரித்துவிட்டால், பர்ளான முன்குறித்த தவாபுல் இபாளாவுக்குப் பின் ஸபா மர்வா ஓடவும். 5ஆவது தலைமுடியில் மூன்று ரோமத்துக்குக் குறையாமல் நீக்குகிறது. 6ஆவது முன்சொன்ன ஒழுங்கின்படி தர்த்திபாய் கொண்டு வருகிறது. உம்றாவில் பர்ளாவது அரபாவில் தரிப்பதைத் தவிர மற்ற ஐந்துமாயிருக்கும்.

ஹஜ்ஜின் வாஜிபுகள் ஐந்தாயிருக்கும். 1ஆவது மீக்காதில் நின்றும் இஹ்ராம் கட்டுவது. 2ஆவது முஸ்தலிபாவில் தரிபடுவது. 3ஆவது மினாவில் இரவுகளில் தரிப|டுவது. 4ஆவது மினாவில் கல்லெறிவது. 5ஆவது வதாஃவுடைய தவாபுச் செய்வது. ஆக ஐந்தாயிருக்கும்.

பாத்தினில் இஹ்ராமாகிறது, கல்குகளைத் தரிசித்துக் கொண்டிருப்பதை விடுகிறதும், சரீர இச்சையால் வரும் பழிக்கப்பட்ட குணங்களை உரிகிறதுமாயிருக்கும். பாத்தினில் அரபாவில் தரிபடுகிறது, அல்லாஹுத்தஆலாவை அறியும் மகாமில் தரிபடுவதாயிருக்கும். அதாவது அறிவும், சிவனும் ஒன்றென்ற மகாமில் தரிபடுவதாயிருக்கும்.

தவாபுல் இபாளா அதாவது அரபாவில் நின்றும் போய் செய்கிற தவாபுல் இபாளா அந்தத் தவாபாகிறது நாயனுடைய கடாட்சம் எப்பொழுதும் சொரிந்து கொண்டிருப்பதால், அதைத் தொட்டும் வக்கணையாயிருக்கும். பாத்தினில் தொங்கோட்டம் ஓடுவதாவது, கல்கிய்யத்தான மண்டிகளான ஊத்தையை விட்டும் ஏழு தடைவ ஓடுவதாயிருக்கும். பாத்தினில் தலைமுடி

களைவதாகிறது தானென்ற தலைமைத் தனத்தை களைந்து ஹக்குத் தானென்ற தலைமைத் தனத்தை தரிபடுத்தி நானற்று 'தான்' தானாயிருப்பதாம்.

முஸ்தலிபாவில் தரிபடுவது துரியாதீதத்தில் தரிபடுவதாம். அதாவது காண்பானும் காணப்படும் ஜகத்தும், சத்தாமாத்திரமாய் விளங்குவதாம். மினாவில் தரிபடுவதாவது மறவா நினையா மவுனத்தில் தரிபடுவதாம். அதாவது பலகாலும் நான் என்பது தேகமில்லை. ஆன்மாவென சிந்தித்து வந்தால் மனம் நஸித்து நினைப்பு மறப்பற்று தான் தானாய் என்றுமுள்ள சுரூபமாய் விளங்குவதாம்.

மினாவில் கல்லெறிவதாவது ஏழு சிபாத்தென்ற கல்லைக் கொண்டு நப்ஸு, தபவு, ஆதத்து என்'கிற இம்மூன்று புத்துவிலே அடிப்பதாம். வதாஃவுடைய உள்ஹிய்யா (பலி) கொடுப்பதாவது நப்ஸை உள்ஹிய்யா கொடுப்பதாம்.

இதற்காக வேண்டித்தான் ஒரு ஆரிபு சொல்லியிருக்கின்றார்கள்: அதாவது மனிதருடைய பெருநாளையில் என்னுடைய ஹபீபு நப்ஸைக் கொண்டு உள்ஹிய்யா கொடுப்பான். மனிதர், ஆடு, மாடு, ஒட்டகம் போலொத்தவைகளைக் கொண்டு உள்ஹிய்யா கொடுப்பார்கள். மனிதர்களுக்கு ஹஜ்ஜுண்டும். அவர்களுடைய ஹஜ்ஜில் உள்ஹிய்யாக்களை ஹதீயாக் கொடுக்கப்படும். என்னுடைய ஹஜ்ஜில் என்னுடைய உயிரையும், என்னுடைய இரத்தத்தையும் என்னுடைய ஹபீபுக்கு நான் ஹதீயாக் கொடுப்பேன் என்றார்கள்.

இன்னும் மௌலானா ரூமி ஜலாலுத்தீன் ரஹிமஹுல்லாஹ் அவர்கள் சொல்லுகிறார்கள்: நீ கல்பைக் கைப்பற்றிக் கொள். அதாவது கல்புடைய ஹகீகத்தை தெரிசிக்கிறது அப்படிக் கைப்பற்றிக் கொள்கிறது ஹஜ்ஜுல் அக்பராயிருக்கும். அப்படி கல்புடைய ஹகீகத்தை கைப்பற்றிய கல்பாகிறது ஆயிரமாயிரம் கஃபாவைக் காண மெத்த மேலாயிருக்கும் என்றார்கள்.

இன்னும் மௌலானா ஜாமி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் சொல்|லுகிறார்கள்: ஐ! ஜாமி நீ கஃபாவுக்குப் போக வேண்டாம். கல்பை தவாபு செய். ஏனென்றால் அது தெளிவுடைய தலமாகவும், புதுமைகள் விளையும் தலமாகவும் இருக்கும். இன்னும் அல்லாஹுத்தஆலாவுடைய வீடாகவும் இருக்கும் என்றார்கள். இப்படியெல்லாம் இருப்பதால் கல்பை அறிவது முக்கியக் கடமை.

ஏனென்றால், வீட்டை அறியாமல் அந்த வீட்டுக்குடையவனை எப்படி அறிய முடியும்.? ஆனால் அந்த கல்பாகிறது சுரூபி அல்ல. அரூபியானதால் வெளிக்கண் கொண்டு காணப்படுவதல்ல. ஆனால் ஒருவன் இந்த வெளிக்கண்ணை மூடிக் கொண்டு தன்னையும், இன்னும் வானத்தையும், பூமியையும், மற்ற யாவற்றையும் மறந்து மௌத்து இராதிய்யா என்னும் முப்பாழைப் பெற்றபின் பார்ப்பானேயானால், அப்போது அவனுக்குத் தெரியவரும்.

இன்னும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் திருவுளமாயிருக்கின்றார்கள்: மூமீனானவர்களுடைய கல்பாகிறது கஃபாவைக் காணவும், சுவர்க்கத்தை விடவும் மெத்த வரிசையானதாயிருக்கும். ஏனென்றால், கஃபாவை இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம்

கட்டினார்கள். கல்பை அல்லாஹு ஸுப்ஹான ஹுவத்தஆலா தன் குத்ரத்தைக் கொண்டு படைத்தான்.

கஃபாவானது அல்லாஹ்வுடைய வீடு. கல்பாகிறது அல்லாஹ்வுடைய கஜானா. கஃபாவில் ஹஜருல் அஸ்வது என்கிற கறுத்தக் கல்லிருக்கிறது. கல்பில் ஹஜருல் அப்யலு என்கிற வெள்ளைக் கல்லிருக்கிறது.

கல்பாகிறது அர்ஷைக் காணவும் மெத்த வலுப்பமானது. இன்னும் குர்ஷைக் காணவும் மெத்த விஸ்தீரணமுடையது. இன்னும் சூரியனைக் காணவும், சந்திரனைக் காணவும், மற்ற நட்சத்திரங்களைக் காணவும், அதிக ஜோதிப் பிரகாசமானது. இன்னும் ஹஜருல் அஸ்வதாகிறது மனுவின் அரூபியான நுட்பத்தைத் தொட்டும் வக்கணையாயிருக்கும். கஃபாவாகிறது தாத்தைத் தொட்டும் வக்கணையாயிருக்கும். ஸம்ஸம் என்பது ஆத்ம ஞானமாயிருக்கும். ஹக் அல்ஹம்துலில்லாஹ்.

இப்றாஹிம் நபி அலைஹிஸ்ஸலாம் அவர்கள் கஃபாவைக் கட்டித் தீரவும் அல்லாஹுத்தஆலா மனிதர்களை அதனளவில் அழைக்கும்படி உத்திரவு செய்தான். அப்போது இபுறாஹீம் நபி அலைஹிஸ்ஸலாம் என்னுடைய சப்தத்தை எந்த வஸ்து அவர்களுக்கு அறிவிக்குமென்று சொல்லவே, அல்லாஹுத்தஆலா: கூப்பிடுவது உம்பேரில் கடன். எத்திவைப்பது என் பேரில் கடன் என்று சொன்னான்.

அப்பொழுதே இப்றாஹீம் நபி அலைஹிஸ்ஸலாம் அவர்கள் ஜபல் குபைஸ் மலைமீதேறி நின்று கூப்பிட்டார்கள். அதாவது மனிதர்களே! இந்த கஃபாவுக்கு வந்து ஹஜ்ஜு செய்வதை அல்லாஹுத்தஆலா உங்கள் பேரில் விதியாக்கிவிட்டான் என்கிறார்கள். அப்போது வானம், பூமிக்கிடையில் உள்ள வஸ்துக்கள் அடங்களும் அந்தசப்தத்தைக் கேட்டது. அதைக் கேட்ட வஸ்துக்கள் அடங்களும் லெப்பைக் கல்லாஹும்ம லெப்பைக்க என்று தல்பியத்துச் சொல்லிக் கொண்டு முன்னிட்டன.

அந்தக் கூப்பிடுதலுக்கு தகப்பன்மார் முதுகிலும், தாய்மார் குவழறையிலும் உள்ளவர்கள் உட்பட ஜவாபு கொடுத்தார்கள். இன்னும் கல், மண், புல், பூண்டு, விருட்சம் முதலானவையும், ஜவாபு கொடுத்தன. ஆகையால், சப்தத்திற்கு ஜவாபு கொடுத்தவர்கள் ஹஜ்ஜு செய்வார்கள். மற்றவர்கள் ஹஜ்ஜு செய்யார்கள். ஹகீகத்தில் அதன் கருத்தாவது உண்மை ஞானத்தையும், பக்தி ஞானத்தையும் உபதேசிக்க மனித வடிவிலே அவதரித்தவர்கள் இப்றாஹீமாம்.

தாத்தென்னும் கஃபா அளவில் அவர்களுடைய அழைத்தலுக்கு ஜவாபு கொடுக்காதவர்கள் ஹஜ்ஜின் உள்ளமையை நிறைவேற்றியவனல்லவாம். ஆகையால் உண்மையான இபுறாஹீமுக்கு ஜவாபு கொடுத்து ஹஜ்ஜின்' உள்ளமையை பூர்த்தி செய்வீர்களாக. ஹக் அல்ஹம்துலில்லாஹ்.

2ஆவது பாபுல் இஸ்லாம் சம்பூரணம்.

# 3ஆவது அத்தியாயம்

*பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்*

## பாபுல் இஹ்ஸான்

'இஹ்ஸான்' என்னும் பதத்திற்கு அர்த்தமாவது மனிதன் அழகாக்கி வைக்கிற காரியம். என்பதாம்.

*காலன்னபிய்யு ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம அன்த:புதல்லாஹ கஅன்னக தறாஹு பபின்லம் தகுன் தறாஹு பயின்னஹு யறாக*

**பொருள்:** இஹ்ஸானாகிறது பராபர வஸ்துவாயிருக்கின்றதே அதை நீங்கள் கண்ணாரக் கண்டதுபோல் வணங்குகிறது. அவனை நீங்கள் காணவில்லையானாலும், அவன் உங்களைக் கண்டு கொண்டிருக்கிறான் என்று ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் திருவுளமானார்கள்.

எ:னி அல்லாஹ்தஆலாவை நீங்கள் கண்டதுபோல் வணங்குகிறது என்றதன் கருத்தாவது, உந்தனுக்கு உஜூதுண்டு என்றாயிருக்கவில்லையானால் அவனைக் காண்பாய் என்பதாம்.

இன்னும் ஷெய்கு இமாம் இஸ்ஸத்தீன் இப்னு அப்துஸ்ஸலாம் ரஹிமஹுல்லாஹ் அவாக்ள் ஹல்லுர் ரூமூஸில் கூறியுள்ளார்கள்: அதாவது, மாலிகாகிய அல்லாஹ்வுடைய முஹப்பத்தளவில் சேரும்படியாகிய வணக்கத்திலே செல்பவர்களுடைய ஒழுங்குகள் மூன்றாயிருக்கும்.

1ஆவது இஸ்மாயிருக்கும். அதாவது ஷரீஅத்தின் அஹ்காமுகளை வழமையாய் நடத்தி வருவது கொண்டு உடலை ஸ்திரப்படுத்துகிறது.

2ஆவது ஈமானாயிருக்கும். அதாவது நப்ஸின் கெட்ட குணங்களை நீக்கி, நற்குணங்களை வருத்தி, வழமையாய்ப்பேணி வருகிறது கொண்டு கல்பை ஸ்திரப்படுத்துகிறது.

3ஆவது இஹ்ஸானாயிருக்கும். அதாவது, அறிவின் சுரூபியாகிய ஹக்கை முஷாஹதாவென்னும் காட்சியைக் கொண்டு ரூஹை ஸ்திரப்படுத்துகிறது.

இன்னும் இஹ்ஸானுக்கு ம:னாவாகிறது இக்லாஸென்னும் கலப்பறுதல். ஆனால் முஷாஹதா அநேக வகையிருக்கிறது. அதில் தெரிந்து மூன்'று வகை முஷாஹதாவைச் சொல்லப்படுகிறது.

1ஆவது தாத்துடைய இஸ்மென்னும் அல்லாஹ் என்ற இஸ்மை முஷாஹதா செய்கிறது. அதெப்படியெனில் அந்த இஸ்மை மனதால் கல்பில் எழுதி அந்த இஸ்முடையவனான அல்லாஹ்வாகப் பார்த்:து வருகிறது.

2ஆவது ஷெய்கு காமிலை அதாவது, அவர் சூறத்தை மனதால் கோலப்படுத்தி ஹக்காகப் பார்த்து வருகிறது. 3ஆவது இன்சான் தன்னையே முஷாஹதா செய்கிறது. அதாவது ஹக்தஆலா தன்னைக் கொண்டு வெளியாகி இருக்கிறதாகவும், ஆலமடங்கலும் தனக்கு அவதாரமென்றும், ஆலத்திற்கு அந்நியமாய்த் தானில்லை என்றும், தனக்கு அந்நியமாய் ஆலமில்லை என்றும் நிற்பதாம். இதற்காகத்தான் இஸ்மையும், மஃனாவையும் விட்டவன் ஆரிபுவென்று நமது நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் திருவுளமானார்கள்.

இன்னும், முஷாஹதாவில் 3 வகையுண்டு. 1ஆவது ஹக்கைக் கொண்டு முஷாஹதா செய்கிறது. 2ஆவது ஹக்களவில் முஷாஹதா செய்வது. 3ஆவது ஹக்கை முஷாஹதா செய்வது.

ஹக்கைக் கொண்டு முஷாஹதா செய்வதற்குப் பொருளாவது, ஹக்கைக் கொண்டு வஸ்துக்களை காண்கிறது.

ஹக்களவில் முஷாஹதா செய்வதற்குப் பொருளாவது, ஆதாரம் ஹக்கு, ஆதேயம் வஸ்து தானென்று காண்கிறது.

ஹக்கை முஷாஹதா செய்வதற்குப் பொருளாவது, வஸ்துக்கள் என்கிற பேதமில்லாமல் ஹக்கை தரிசிக்கிறதாயிருக்கும்.

இன்னும், முஷாஹதாவுக்கு ஆரிபீன்கள் அவரவர்களுடைய அநுபோகத்தின்படி பல மஃனாவும் சொல்லுகிறார்கள். அதிலொரு மஃனாவாகிற, உன் பார்வையில் தரிசனமாகும் வஸ்துக்கள் அடங்கலும் ஹக்காய்ப் பார்ப்பதாம். இதற்காகத்தான் ஸெய்யிதுல் ஆரிபீன் அலி கர்ரமல்லாஹு வஜ்ஹஹு

*மாறஅய்துல்லாஹ ஷைஅன் இல்லா வறஅய்துல்லாஹ பீஹி* என்று சொன்னார்கள்.

**பொருள்:** எந்த வஸ்துவையும் ஹக்காகக் காண்பேனேயல்லாது, வஸ்துவாகக் காணேன் என்றார்கள்.

ஹிகமென்னும் கிதாபில் சொன்னார்கள்: யாராகிலும் ஒருவன் ஹக்குத்தஆலாவை அறிந்தால், அவனாக வஸ்துக்களை ஷுஹூதுச் செய்வான். இனியொருவன் தன்னைப் பாழ்படுத்தி ஹக்காக நிற்பானாகில் சகல வஸ்துவும் மறைந்துபோகுமென்று சொன்னார்கள்.

அறிந்து கொள்! இன்னும் முஷாஹதாவில் இரண்டு வகை உண்டு.

1ஆவது ஷுஹூதில் கத்ரதி பில் வஹ்தததி. அதாவது, நாம ரூபபிரபஞ்சங்களை ஏகமாகத் தரிசிக்கிறது. கருத்தாவது, ஹக்குக்கு அந்நியமாய் உலகங்களில்லை என்பதாம்.

2ஆவது ஷுஹூதில் வஹ்தததியில் கத்ரதி. அதாவது ஏகத்தை நாகமரூப பிரபஞ்சமாகத் தரிசிக்கிறது. கருத்தாவது, உலகங்களுக்கு அந்நியமாய் ஹக்கில்லை என்பதாம். இந்த

காட்சியானது ஹக்குத்தஆலாவுக்கே உஜூதென்ற உள்ளமை, நாமரூப பிரபஞ்சங்களுக்கு உஜூதுமில்லை, ஆதமுமில்லை என்ற அறிவைக் கொடுக்கும். இதுதான் ஹக்குல் யக்கீன் நிலையாம். நபிமார்கள், குதுபுமார்களுடைய மர்தபாவுமாம். ஆனால் மேற்சொல்லப்பட்டவைகள் வாய்ப்பது மனம் அடங்குவது கொண்டாம்.

மனதை அடக்கும் உபாயமாவது, நமக்குண்டாகும் எண்ணங்கள் யாவும், நாபியென்ற தொப்புழிலிருந்தே பிறக்கின்றன. அந்த நாபிஸ்தானத்தை வெட்டவெளியாய்ப் பார்த்துப் பழகி வரவேண்டும். அப்படிப்பார்த்து வரும்போது, சங்கற்பமென்னும் எண்ணங்கள் எல்லாம் உதித்தவிடத்திலேயே ஒடுங்கும்.

எப்படி என்றால், சென்னை பட்டணமென்று மனம் நினைக்க ஆரம்பித்தவுடன் (செ) என்னும் அச்சரம் நாபியிலிருந்து புறப்படும். அதை நாபியிலிருந்து வெளிவரவிடாமல் உன்முகமாய் அந்த நாபிஸ்தானத்தை ஆகாய ரூபமாய்ப் பார்த்தபாது (செ) என்னும் அச்சரம் உதித்த இடத்திலேயே ஒடுங்கும். முதலச்சரம் ஒடுங்குவதினால் அதன் பிறகு வரும் விசயங்களெல்லாம் ஒடுங்கிவிடும் என்பதில் சந்தேகமில்லை. ஹக் அல்ஹம்துலில்லாஹ்.

ஐ! இன்சானே! இவ்வுலகமெல்லாம் உன்னுடைய அழியா உடம்பாகவும், நீ இவ்வுலகத்திற்கெல்லாம் அழியா உயிராகவும் பார். இவ்விதம் பார்த்தாலொரு தீமையுண்டாகக் காரணமில்லை. உஷார்! உஷார்!!

இன்னும், மோட்சமடைவதற்கு மார்க்கம் மூன்றுண்டு. 1ஆவது யோகம். 2ஆவது பக்தி அல்லது பஞ்சமுத்திரை. 3ஆவது பிரமசூத்திரம் அல்லது ஞானம்.

இவைகளை அப்பியாசித்து மனதை சிதாகாய வடிவத்தில் லயமடைய லெபிக்கச் செய்ய வேண்டும். ஆனால் சுவாச அப்பியாசங்களில் போக வேண்டாம். அன்பனே! அதில் அநேக அபாயங்களிருக்கின்றன.

ஆனால் நீ மோட்சமடைய எவ்வளவோ வழிகளிருக்கின்றன. அதிலொரு உபாயம் சொல்லுகிறேன். அது நாயனை அறிந்த நாதாக்களின் இரகசியம். எல்லாவற்றை விடவும் சிறந்தது. பக்குவமில்லாதவருக்குச் சொல்வது பாவமென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகிலும், இரகசியமாய்க் கேட்டு மனதில் பதிய வைத்துப் பக்குவத்தை உண்டு பண்ணிப் பார்ப்பாய். இதற்கு மேலாக ஒரு வழியுமில்லை. இதில் சந்தேகம் கொள்ளாதே.

அதாவது, நீ உன் சரீரத்தையும், உலகிலுள்ள எல்லா வஸ்துக்களையும் மனதால் அழித்து மேல், கீழ், முன், பின், இரு பக்கங்களாகிய திசை அற்று இரு. முடிவில்லாத ஆகாயமாகிய வெட்டவெளியாய் நின்று கொள். இதாகிறது:

*அலா இன்னஹு பி குல்லி ஷையின் முஹீத்துன்*

என்ற ஆயத்தின்படிக்குள்ள முஷாஹதாவாம். இதைப் பார்க்க வேண்டுமானால், ஜாமிவுல் உஸூல், கவ்லுல் ஜமீலா போலொத்த கிதாபுகளில் காண்க.

மேற்சொல்லியபடி அப்பியாசித்து வருங்காலத்தில் உன் மனதில் அநேக ரூபங்களும் எண்ணங்களும் ஓடிவரும். அதை நாசம் செய்து கொண்டிரு. சில காலத்தில் உனக்கு சுரூப நாசமுண்டாகும். அதற்கு மேல் ஒரு சப்தமுண்டாகும். அதையே கேட்டுக்கொண்டு வா. அதிலுள்ள சுவாசம் அழிந்து போகும். அந்தத் தொனி உன்னில் மாறாமல் எப்போதும் கேட்டுக் கொண்டிருக்கும். நீயும் அந்தச் சப்தமாகவே ஆகிவிடுவாய்.

அதற்குமேல் அஞ்ஞானமாகிய இருள் திரையைக் கடப்பாய். அதற்குமேல் ஞானமாகிய ஒளியின் திரையைக் கடப்பாய். அதற்குமேல் திருஷ்டி மயமாகிய பார்வையின் திரையைக் கடப்பாய். அதற்குமேல் ஆசையாகிய இச்சையின் திரையைக் கடப்பாய். அதற்குமேல் பூரணத்தை அடைவாய். இதற்கிடையில் அநேக சூட்சும உலகங்களைக் காண்பாய். தேவர்களையும், மகான்களின் ஆத்மாக்களையும் காண்பாய்.

உனக்குச் சொற்ப சங்கற்பமுண்டாகும். உன் எண்ணத்திற்கு மாறாக ஒன்றும் நடக்காது. எல்லாம் சித்திக்கும். நீயே அருகனாவாய். நீ பிரஹ்மமாயிருப்பாய். உன் மகத்துவத்தை யாராலும் சொல்லொண்ணாது, இதற்குமேல் உனக்குப் பதவியில்லை. மற்றும் அப்பியாசத்தால் சில பதவியை அடைவாயேயல்லாமல் முற்றிலும் அடைய முடியாது. பக்குவத்தை அறிந்து இதைச் செய்வாயாக. உஷார். உஷார்!! ஹக் அல்ஹம்துலில்லாஹ்.

இன்னும், இஹ்ஸானாகிறது தன் நப்ஸுக்குச் செய்யும் உபகாரமாம். அதாவது ஹக்குடைய அஸ்மா, சிபாத்துடைய அடையாளம், தன்னில் நடப்பதை நோட்டமிட்டவனாகவிருக்கும் மகாமாக இருக்கும். அதை முராகபா என்று சொல்லப்படும்.

முராக்கபாவாகிறது அநேகமிருக்கிறது. அதில் மூன்று விதம் சொல்'லப்படுகிறது.

1ஆவது எல்லா ஹாலிலும் இன்னுடைய ஸிபாத்து பாயிலிய்யத்தைப் போக்கி, ஹக்கின் சிபாத்து பாயிலிய்யத்தைத் தரிபடுத்துவதாம்.

2ஆவது எல்லா ஹாலிலும் உன்னுடைய ஸிபாத் தாத்தியத்தை போக்கி, ஹக்கின் சிபாத்து தாத்திய்யத்தை தரிபடுத்துவதாம்.

3ஆவது உன்னுயைட உஜூதென்ற நீ ஒரு பொருளாக இருப்பதை இழந்து ஹக்கின் உஜூதாக எப்போதும் நோட்டமிடுவதாம்.

இன்னும், முராக்கபாவில் ஒரு வகையாவது, தாத்துடைய இஸ்மாகிய அல்லாஹ்வென்னும் நாமத்தை எடுத்து ஒரு நொடிப்பொழுதாவது அதைவிட்டும் மறக்காமல் கல்பில் அந்த நாமத்தைப் பூட்டிக்கொண்டே இருக்கிறதாயிருகு;கும்.

இன்னுமொருவகை சொல்லுகிறேன். அதாவது குத்றத்து என்கிற நீறாதாற புஷ்பத்திலிருந்து வாசனை செய்கின்ற ஆவியானது ஆறு கோணங்களாக நிறைந்து நிற்கின்றன. அதுவே ரூஹுல் குத்ஸி என்னும் பிரதான ஆத்மாவாயிருக்கின்றது. அந்த ஆத்மாவுக்கு ஹயாத் என்ற

ஜீவன் சரீரமாயிருக்கின்றது. அந்த ஹயாத்திற்கு ஸ்தூல சரீரம் போர்த்தும் சட்டைபோல் இருக்கிறது. அது உச்சி தொடுத்து உள்ளங்கால் வரையிலும் உண்டாயிருக்கின்றது.

ஹயாத்து ரூஹுல் குத்ஸிக்கு ஏவலாளாக இருக்கும். அது ஜோதிமயமானது. அப்போதுதான் ஓட்டமாட்டமாயிருக்கும். அந்தக் கொலுவை விட்டும் நிஜஸ்தானமான குத்றத்து புஷ்பத்தில் ரூஹுல் குத்ஸிரப்பைப் போய் தரிசித்தால் சரீரம் விழுந்து போகும். அந்தக் குத்ஸியானது சதாவும் அழியாமல் நிற்கும். அதுதான் மஹ்ஷரிலும் அந்தக் குத்ஸி ரப்பாக இருந்து கேள்விகேட்கும். அழிந்த ஹயாத்து கைகட்டி நின்று சேவிக்கும்.

மௌத்துக்கு முன் குத்ஸியை அறிந்து அதனுடன் பழகிவந்தால் குத்ஸி சொல்லும், என்னை அறிந்து என்மயமானபடியால் உன்னை நான் என்ன கேட்பது? உனக்குக் கேள்வி இல்லை என்று சொல்லும். அப்போது இவன் நித்திய சுகத்தைப் பெறுவான்.

மௌத்துக்கு முன் 'தானெ'ன்ற குத்ஸியை அறியாமலும், பழகாமலிருந்த மூடருக்குக் காலன் வந்து முடிகினபோது, உடலிலே ஓடிக்கொண்டிருக்கும் ஆத்மா கண்ணின் நிதானத்தில் வரும். அப்போது இரண்டு கண்களும் ஆகாயத்தைப் பார்க்கும். அந்தப் பார்வையை உலகத்தார் இஸ்றாயிலுடைய பார்வை என்பார்கள். உண்மையில் அதுதான் பிண்டத்திலிருந்து ஹயாத்து தன் அரசனான குத்ஸியை அண்டத்தில் வந்து சந்தித்ததாகவிருக்கும்.

இவன் ஏற்கனவே அவைகளை அறிந்திருந்தால் அவனிடம் பிரயாண விடைபெறாமல் வராது. அறியாதபடியாலே இவன் யாரோவென்று உதறிவிட்டு வருகிற பார்வையாயிருக்கும். அவ்விதம் சிரசில் ஏறிய ஹயாத்து தன்னெஜமானான குத்ஸியின் சமூகத்தில் சென்று தன் உத்தியோக அதிகாரங்களை ஒப்புக் கொடுக்கும். உடனே குத்ஸி தன் ரப்பிடம் போய் இரண்டறக் கலந்து கொள்ளும். உத்தியோகத்தை ஒப்புக் கொடுக்காத ஹயாத்து மூலத்தில் வந்து பதுங்கிக் கொள்ளும். இதற்கு ரூஹானி என்று சொல்லப்படும். இது துக்க வடிவாய் கஷ்டமடைந்து அழிவைப் பெறும்.

ஆனால் உன்னுடைய மாதாவின் கெற்பக்குழறையில் விஷயமாகும் முதலில், உன் ஹயாத்துடைய ஆலம் உன் தகப்பன் மூளையாயிருந்தது. அந்த மூளையிலொரு ஒளி உண்டாயிருந்தது. அதை இன்னவிதமென்று சொல்ல முடியாது.

ஆதலால் உன்னுடைய வெளிப்பார்வை அந்த ஒளியின் ஜோதியைக் கொண்டாயிருக்கிறது. உன் கண்கொண்டு: வஸ்துக்களை பார்க்கிறாய். அந்த ஜோதி வஸ்துக்கள் அடங்களையும் அடைய வளைந்து அவைகளை இன்னது இன்னதென்று விபரித்தறிந்து கொள்கிறது.

கண், ஒளியின் நிறத்தையும், அதின் சூரத்தையும் இன்னவிதமென்று அறியவியலாது. ஏனென்றால், அந்த ஒளி ரூஹில் நின்றும் உள்ளதாயிருக்கிறதற்காக வேண்டி, மௌத்துக்குப் பின் செவியினால் சகலத்தையும் கேட்டும், ஜவாபு சொல்ல குத்ரத்தில்லாமல் குருடாகவும், ஊமையாகவும் ஆகிவிட்டது. ஏனென்றால் அவன் மூச்சு ஒடுங்கி விட்டது.

குத்ரத்தும் உசும்புதலும் ரூஹுக்கல்லாமல் ஹயாத்துக்கில்லை. ஹயாத்துக்கு நாட்டமே தவிர வேறே யாதொன்றும் கிடையாது. ஆகையால், (மூளை) ஒளிவு விளையும் தானம். என்கிலும் ரூஹை இழந்திருப்பதால் மௌத்துக்குப் பின்னாலே ஜடலங்கள் பனாவாகிப் போகிறது.

இனி ரூஹுல் குத்ஸியாகிறது இரண்டு விழிகளுக்கும் நடுவான கொலுவிருக்கும். காமிலான ஷெய்கின் சூரத்தை அந்த இடத்தில் முஷாஹதா செய்து வந்தால் அந்த நாட்டத்தில் வந்து வெளியாகும். அப்போது ஹயாத்து அந்த சூரத்தில் உண்டாயிருக்கும். இந்தப்படிக்குத் தரிசித்து வந்தால் ஜடலம் பனாவாகாது.

ஏனென்றால் ரூஹுல் குத்ஸி எக்காலமும் பனாவாகாது. அப்படிப்போலே ஹயாத்தும் பனாவாகாது. இந்த ரூஹையும், ஹயாத்தையும் உடையவர்கள் கப்ரிலும் ஹயாத்தாக இருப்பார்கள். அவர் ஜடலம் துணியாவிலிருந்த மாதிரியாகத்தான் இருக்கும். அவர்கள் நாடினால் பூமியில் வருகிறதும், போகிறதுமாய் இருப்பார்கள். அவரை மண் திண்ணாது. மற்றும் யாதொன்றும் அணுகாது.

துன்யாவில் அவர் மூச்சுக் கொப்புளுக்குக் கீழாலே நின்றும் உச்சியளவில் நடக்கும். கப்ரில் உச்சியில் நின்றும் கொப்புளுக்கு கீழாலே நடக்கும். இவர் மௌத்தானவரில்லை. இதற்காக வேண்டித்தான் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்,

*'அலா, யின்ன, அவ்லியா அல்லாஹி, லாயமூதூன, பல், யன்கலிபூ ன, மின்தாறின், யிலாதாறின்'*

என்று திருவுளமானார்கள். அதாவது, அறிந்து கொள்! திடனாக அல்லாஹ்வின் ஒளலியாக்கள் மௌத்தாகார்கள். எனினும் ஒரு வீட்டை விட்டும் ஒரு வீட்டளவில் போவார்கள் என்றதாயிருக்கும். ஆனதால் இதை அறிந்து ஷுஹூதுச் செய். உஷார்! உஷார்!! ஹக் அல்ஹம்துலில்லாஹ். இதை மிர்அத்துல் முஷாஹிதீன் என்னும் கிதாபில் காண்க.

இன்னும் இஹ்ஸான் ஏழு ஷறத்தைக் கொண்டுதான் பூர்த்தியாகும். 1ஆவது தௌபா 2ஆவது இனாபா. 3ஆவது ஷுஹூது 4ஆவது தவக்கல். 5ஆவது தப்வீளு 6ஆவது ரிளா. 7ஆவது இக்லாஸு இவைகளாயிருக்கும்.

1ஆவது தவ்பா என்றதற்குப் பொருளாவது அல்லாஹ் அளவில் மீட்சி செய்வதாம். அதில் மூன்று வகையுண்டு. 1ஆவது தௌபத்துல் அவாம். பொது ஜனங்களுடைய தௌபா.

2ஆவது தௌபத்துல் கவாஸ். இது ஹக்கு வேண்டுமானவர்களுடைய தௌபா.

3ஆவது தௌபத்துல் கவாஸுல் கவாஸ். இது ஹக்குக்கு தனதானவர்களுடைய தௌபா. அவாமுகளுடைய தௌபாவாகிறது, பாவங்களை விட்டும் அல்லாஹ் அளவில் மீள்கிறது. கவாஸுகளுடைய தௌபாவாகிறது, தன்னுடைய ஏழு சிபத்துக்களை விட்டும் மீள்கிறது.

கவாஸுல் கவாஸுகளுடைய தௌபாவாகிறது இனாபா தனக்கொரு உள்ளமையுண்டென்கிற பாவத்தை விட்டு மீள்கிறதாயிருக்கும். இதாகிறது இஹ்ஸானுடைய ஷரத்தில்

இரண்டாவதாயிருக்கும். 3ஆவது ஷுஹூதாகிறது துன்யா அளவில் திரும்பிப் பாராமலிருக்கிறது.

அறிந்து கொள். ஷுஹூதாகிறது, இரு வகையாயிருக்கும். 1ஆவது மனிதரின் வல்லமைக்குள்ளடங்கியது. 2ஆவது அவனுடைய வல்லமைக்குள் அடங்காதது. இனி வல்லமைக்குள் அடங்கியது மூன்று வஸ்துவாயிருக்கும்.

துன்யாவில் நின்றும் இழக்கப்பட்டதை இச்சியாமல் விடுகிறதும், அதில் நின்றும் சேகரிக்கப்பட்டதை தன்னை விட்டும் நீக்கிவிடுகிறதும், துன்யாவின் நாட்டத்தை விடுகிறதுமாய் இருக்கும். வல்லமைக்குள்ளடங்காததாகிறது, உலக விருப்பம், துறவியுடைய கல்பில் முற்றிலும் எடுபட்டுப் போகிறது. பின்பு வல்லமைக்குள்ளடங்கிய துறவாகிறது, வல்லமைக்குள்ளடங்காத ஷுஹூதென்னும் துறவுக்கு முன்னிலையாய் இருக்கும்.

ஷுஹூதுக்கு அஸலாகிறது இல்மும், கல்பில் போடப்படுகிற மஃரிபா என்னும் நூருமாயிருக்கும். துறவு என்பது விடலெனப் பொருள்தரும் எதனை விடுவதென்று கேட்டால் 'யான், என'தென்னும் அகங்காரமமகாரங்களை விடுவதாம். அல்லது புறம்பிலுள்ள செல்வத்தின் மீதும் அகமாகிய தேகத்தின் மீதுமுள்ள பற்றினை விடுவதாம். அதை விட்டவர் சங்கற்ப விகற்பங்களையும் சுலபமாக விடுவர்.

அத்துறவு இரு வகையாயிருக்கும். அதாவது அகத்துறவு, புறத்துறவு எனச் சொல்லப்படும். அகத்துறவாவது, அந்தக் காரணத்தை அடக்குதலாகும். புறத்துறவாவது காசாய முதலிய வேடம் தரித்தலேயாம். மக்ஷூதாகிறது அகத்துறுவுதான். இதற்காகத்தான் தாயுமானவர்

**'அந்தக்கரண மடங்க துறப்பதுவே'**

**எந்தத் துறவினும் நன்றென்றாய் பராபரமே'**

**'நித்திரையில் செத்தபிண நேறுமுடர் கிச்சை**

**வையா சுத்தர்களே நல்ல துறவோர்'**

என்றும் திருவாய் மலர்ந்தனர்.

இன்னும், ஷுஹூதாகிறது பொய்யை விடவேண்டும். ஏனென்றால், பொய் சொல்கிறதால் உன்னில் கைரிய்யத்து என்னும் வேறுபாடு உண்டாகிறது. எப்படியெனில், பொய் சொல்கிறதற்கு மூன்று வஸ்து வேண்டும். அதாவது 'கித்பு, காதிபு, மக்தூபு' எஃனி பொய், பொய் சொல்கிறவன், பொய் சொல்லப்பட்டவன். ஆக இம்மூன்று வஸ்துவும் உன்னுடைய கல்பில் வேறுவேறாகத் தரிபட்டபிறகுதான் நீ பொய் சொல்வாய். இல்லாவிட்டால் பொய் சொல்லமாட்டாய்.

நீ பொய் சொன்னபோது ஞானியும், அத்துவைதியுமில்லை. ஞானியாகிறவன் சகல கல்குகளையும் தானாகக் கண்டிருப்பதால் ஒருபோதும் பொய் சொல்ல மாட்டான். ஏனென்றால்

ஒரு காரியத்தை ஒரு மனிதன் தனக்கு மறைத்துப் பொய் சொல்கிறதுண்டா? இல்லவே இல்லை.

இந்த சிர்ருக்காகத்தான் பொய் சொல்ல வேண்டாமென்று ஷரஹில் விலக்கப்பட்டிருக்கிறது. இன்னும் ஆலத்தில் யாதொரு வஸ்து ரூஹுடையதாயிருக்கிறதோ அதில் நின்றும் யாதொரு வஸ்துவையும் உன்னுடைய கை கொண்டு நோவினை செய்கிறதை விடுகிறதும், மனதில் ரோசம், குபாடம், வைக்கிறரை விடுகிறதுமாயிருக்கும். ஏனென்றால், ஸர்வமும் உன்னில் நின்றுமுள்ளபடியால் ஒரு தீங்கும் செய்யாதே.

இன்னும் அடிமை, ரஸூல், உம்மத்து, ஷரஹ், தீன், இமாம், மத்ஹபு, இவைகளுடைய கொழுகுதலையும், தானென்கிற கொழுகுதல், தாய், தந்தை, கணவன், மனைவி, பிள்ளை, ஆளடிமை, ஆஸ்திபாஸ்தி, பணங்காசு, குலம், மார்க்கம் என்கிற கொழுகுதலும், உனக்கு 'தாத்து ஸிபாத்து, அஸ்மா, அப்ஆல்' உண்டென்கிற கொழுகுதலும் இன்னும் மற்றுமுண்டான கொழுகுதல் யாதொன்று இருக்குமோ அதடங்களையும் விட்டுவிடுவதாயிருக்கும்.

மேற்சொல்லப்பட்ட செய்திகள் (ஹகாயிகுஸ்ஸபா) என்னும் கிதாபில் காண்க. இன்னும் இதற்காகத்தான் எனது குருபிரான் செய்யிது அப்துல்காதிருல் கிர்கரிய்யி கல்வத்து ஆண்டவர்கள் அருமை உலூமுத்தீனில் அருளியிருக்கிறார்கள்

*'வஅஸ்லி முத்தீன, வத்துன்யா, லிதாலி, பிஹா வஸப்யறுல் கல்ப லில்மஹ்பூபி அவ்தானா'*

**பொருள்:** தீனையும், துன்யாவையும் அவைகளைத் தேடுகிற பெத்தர் ஞானிகளுக்குச் சாட்டிவிட்டு கல்பை மஹ்பூபாகிய பிரஹ்மத்திற்குக் குடியிருக்கும் ஸ்தலமாக மஹான்களாகிய ஞானிகள் ஆக்கிக் கொண்டார்கள். ஆகையால், அந்தகார இருளிலிருக்கிறதற்குத் தக்க அர்த்தம் கொடுத்துக் கெட்டுப் போகாதே. உஷார்! உஷார்!!

4ஆவது தவக்கலாகிறது, ஹக்கைக் கண்டவன், தன் காரியங்களை ஹக்கனளவில் சாட்டுகிறதாயிருக்கும். அதாவது, தான் தியானிக்கும் கடவுளின் வடிவமாக பாவனை அடைவதாம். அதில் இரண்டு விதம் கூறப்படும். அதாவது அந்நிய பக்தி, அநந்நிய பக்தியாம்' அதில் அந்நிய பக்தியாவது சரியை, கிரியை, யோகமாம். அநந்நிய பக்தியாவது, தன்னை பிரஹ்மமாக அநுசந்தானம் செய்து தியானித்தலாம்.

இன்னும் தவக்கல் என்கிற சொல்லின் பொருளாவது ஒருவன் தனக்கு முக்கியமான கர்மங்களை நம்பிக்கையுடையவனாக ஒருவனை வக்கீலூகப் பொறுப்புச் சாட்டுதல்.

இதற்கு உதாரணமாவது, ஒருவனுடைய உயிரைப் பற்றிய அல்லது பொருளைப் பற்றிய ஒரு வியாட்சியம் நியாயஸ்தலத்திலுண்டானால், அந்த வியாட்சியத்தை நடத்துவதற்குத் தக்க கல்வியும், யூகமும், சாமார்த்தியமுடைய ஒரு வக்கீலைத் தெரிந்து, சகலவற்றையும் அவனிடம் ஒப்புவித்து மனக்கலக்கமில்லாது நம்பிக்கையாயிருப்பது போல், நமக்குரியவைகள் எல்லாம் அல்லாஹுத் தஆலாவிடத்தில் பொறுப்புச் சாட்டி, மனக்கலக்கமில்லாதிருப்பதற்கு அல்லாஹுத்தஆலாவை உறுதியாக ஈமான் கொண்டவனாகவும், பூரண அறிவும், தத்துவமும்,

கிருபையுமுடையவன் என்றும் யகீன் கொண்டவனாக இருக்க வேண்டும். இதற்குத்தான் தவக்கல் என்று சொல்கிறது. ஆகிலும் தவக்கலுக்கு மூன்று பதவிகளிருக்கின்றன.

1ஆவது நமது காரியங்களை தகுதியானவனைத் தெரிந்து பொறுப்புச் சாட்டுதல் போலாயிருக்கும்.

2ஆவது குழந்தை தாயோடிருக்கிற நிலைமை போலாயிருக்கும். அதற்கு வேறொருவரையும் தெரியாது. எவ்வேளையும் முகமும், கல்பும், கண்ணும் தாயின் புறமேயிருக்கும். தாயைத் தாவிக் கட்டிக் கொள்வதும், புடவையைப் பற்றிப்பிடித்துக் கொள்வதும், வருகிற பேச்செல்லாம் உம்மா என்றும், அம்மா என்றுமேயல்லாமல் வேறொன்றும் இல்லாதிருப்பது போலவே அல்லாஹுத்தஆலாவின் பேரில் தவக்கல் வைக்கிறது.

3ஆவது மையித்து குளிப்பாட்டுகிறவனுக்கு இடம்கொடுப்பது போல, தனக்கொரு அறிவும், தத்துவமும், நாட்டமும் இல்லாதவனாய் சகல இல்மும், தத்துவமும், நாட்டமும், செயலும் அல்லாஹ்வுக்கே என்ற தன்மையாய் தன்னைத் தானே தனக்குத் தெரியாதவனாயிருப்பான்.

நாம் சொல்லிய முதலாம் மகாமிலுள்ளவர்கள் ஹக்கிடத்தில் துவா கேட்பார்கள். பிறரிடம் கேட்கவும் மாட்டார்கள். பார்க்கவும் மாட்டார்கள். யார் கொடுத்தாலும் அல்லாஹ் கொடுத்ததாக நினைப்பார்கள்.

2ஆம் மகாமில் குழந்தைகள் அழுது சப்தமிட்டு பால் கேட்பதுமுண்டு. தாயைத் தாவிக் கட்டி தூக்கும்படி செய்விப்பதும் உண்டு.

இதுபோல் அல்லாஹ்விடத்தில் கெஞ்சி துஆ கேட்பதும் உண்டு. ஒருவேளை தாய் இடத்தில் பிள்ளை பால் கேளாது போனாலும் தாய் எடுத்து பால் கொடுப்பதுமுண்டு. இதுபோல் அல்லாஹ்விடம் துஆ கேளாமல் அவனாகத் தன் கருணையால் போதுமென்ற மட்டும் தன் ரஹ்மத்தைக் கொடுப்பதும் இருக்கிறது.

3ஆவது மகாமில் துஆ வேளையில் சுவாலுமில்லை. எதுபோலவெனில், மையித்து குளிப்பாட்டுபவர்களுக்கு இடங்கொடுத்து இருப்பதுபோல் ஹக்குதஆலாவுடைய நாட்டத்துக்கும், தேட்டத்துக்கும் இடம் கொடுத்து ஏக்கமுற்று ஏகாந்தமாக இருப்பார்கள்.

இந்த மகாமில்தான் இபுறாஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் நெருப்புக் கிடங்களில் நம்ரூது தள்ளியபோது மலக்குகள் வந்து தீர்க்கதரிசியாகிய இப்றாஹீம் நபியிடத்தில் ஹக்கனிடம் அவர்கள் விரோதியின் பேரில் கேடாக துஆ கேட்கச் சொன்னதற்கு நபி அவர்கள் ஹக்தஆலா எல்லாம் அறிந்தவன். அவனுக்கு படித்து கொடுக்கத் தேவையில்லை. அவன் நாடியதை செய்வான். ஆகையால் நான் அவனிடம் துஆ கேட்கமாட்டேன் என்று சொன்னார்கள். ஏனென்றால் தங்கள் தாத்தை அழித்து ஹக்கின் தாத்தாய் நின்றார்கள். இதற்கொத்தவண்ணம் தாயுமானவர் கூறியுள்ளார்கள்:

**'பாலரோடு பேயர் பித்தர் பன்மையென நிற்பதுவே**

**சீலமிகு ஞானியர்தஞ் செய்கை பராபரமே'**

ஆகையால் இந்த அருமை மகாமை இந்த சிற்றடியானுக்கு கொடுப்பதைப் பிரார்த்திக்கிறேன். ஆமீன்.

5ஆவது 'தப்வீளு' அதாவது சகலவற்றையும் ஒப்புவித்து சாட்டிய வேலையை அவன் செய்வதற்கே பிரியம் கொள்கிறதும், தன்னாட்டமற்றிருப்பதுமாம்.

6ஆவது 'ரிளா'. அதாவது ஏதுமொரு களா என்னும் பிராரப்தம் நடக்கும் முன் அது எவ்விதம் வந்தாலும் பொருந்திக் கொள்வதற்காக நற்கருத்தைப் பூண்டு கொள்கிறது. நடந்துவிட்டால் மெத்த சந்தோசமாய் பொருந்திக் கொள்வதுமாம்.

ஏனென்றால், எல்லாச் செயலும், தானானதால் ஒன்றையும் கழியாதே. அப்படி கழித்தால் ஞானியாக மாட்டாய். முஃமீனாகவும் மாட்டாய். ஆகையால் சுகதுக்கமற்ற நிலையில் சும்மா இருப்பாய். இதற்காகத்தான் சொல்லப்பட்டிருக்கிறது:

*இதா கான பீமத்ஹின் வதம்மின் தபாவுதுன் பஆபிது அஸ்னாமின் லிவும்ரீ பிஜுமலதி*

**பொருள்:** இவனை புகழுகிறதிலேயும் இகழுகிறதிலேயும் ஏற்ற வாட்டம் ஏற்படுமானால், என் வாணாளின் பேரில் சத்தியமாக இதடங்களைக் கொண்டும், புத்தை வணங்குகிறவனாயிருக்கும் என்றும் சொன்னார்கள். இதற்கொத்தவண்ணம் சொரூபசாரத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது:

**'ஏதுவர வேண்டுமது வருக வென்னைவிட்**

**டேதகல வேண்டுமது வகலக் -கோதென்று**

**பிச்சையுந் தள்ளேன் பிரமபதமும் வேண்டே**

**னெச் செயலும் நானாகினேன்'**

**பொருள்:** என்கிம்மையிலே யாதுவர வேண்டியதோ அது வரக்கடவது. என்னை விட்டு ஏது போகத் தகுந்ததோ அது போகக் கடவது. ஈனமுடையதென்று பிச்சை எடுத்தலையும் தள்ளேன். கெம்பீரமுடையதென்று பிரஹ்மபதத்தையும் வேண்டேன்.

ஏனெனில் எச்செயலும் நானாகியதால் என்றார்கள். ஆகையால் அண்டமெல்லாம் தானாய், அறிவின் வடிவாய் என்றுமியா நித்தியனாய் ஒன்றையும் நினையாமல் ஒடுங்கி அடங்கி பொருந்தி நில். ஹக் அல்ஹம்துலில்லாஹ்.

7ஆவது இக்லாஸ் அதாவது ளாஹிரில் யாதொரு இபாதத்திலும் பிறர் மெய்க்கச் செய்யாதிருக்கிறது. ஸூபியாக்களிடத்தில் யாதொரு இபாதத்திலும் கூலியை ஆதரவு வையாதிருக்கிறது.

அதாவது, அல்லாஹுத்தஆலாவை சுவர்க்கத்தை ஆதரவு வைத்ததற்காகவும், அல்லது நரகத்தை பயந்ததற்காகவும், வணங்காமல் ஈஸ்வார்ப்பணமாய் வணங்குவதாய் இருக்கும்.

முஹக்கிகீன்களிடத்தில் இக்லாஸாகிறது புகழும், இகழும் சரியாயிருக்கிறதாயிருக்கும். இன்னும் அமலுடைய இக்லாஸாகிறது அல்லாஹ் அஸ்ஸ வஜல்ல அளவில் முடுகுதல் என்னும் இரண்டறக் கலப்பதை நாடுகிறதும், அவனுடைய ஏவலை வலுப்பமாக்கி வைக்கிறதும், அவனுடைய கூப்பிடுதலுக்கு ஜவாபு சொல்லுகிறதுமாயிருக்கும்.

புலைல் ரஹிமஹுல்லாஹ் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இக்லாசென்பது என்னவென்றால் முராக்கபா நேமமாய் இருப்பதும், கைரில் நின்றும் பேர் பெற்றுக் கொள்வது அடங்களையும் மறந்து விடுவதுமாய் இருக்கும். ஆகையால் இஹ்ஸானுடைய ஷரத்துகள் இத்துடன் சம்பூரணம்.

இனி ஸபூராகிறது ஈமானில் பாதியாயிருக்கும். மற்றொரு பாதி ஷுக்ரு என்னும் துதியாயிருக்கும். ஏனென்றால், ஒருமுறை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் கேட்கப்பட்டது, ஸபூராவது என்னவென்றபோது ஈமானில் பாதி என்றும், மற்றொரு முறை ஸபூருதான் ஈமான் என்றும் சொல்லியிருக்கின்றார்கள்.

ஏனென்றால் பாசத்தை தடுப்பதே ஈமானில் பாதியாகும். ஆனால் ஷுக்ராகிறது ஸபூறு, கவ்பு, ஷுஹூதாய்க் கண்டதால் ஹக்காய் ஆனந்தித்து அல்ஹம்துலில்லாஹ் என்று துதிப்பதாம். ஹக் அல்ஹம்துலில்லாஹ்.

*ஸுப்ஹானல்லாஹி வல் ஹம்துலில்லாஹி வலாயிலாஹ இல்லல்லாஹு வல்லாஹு அக்பர் வலா ஹவ்ல வலா குவ்வத இல்லா பில்லாஹில் அலீயில் அளீமி வஸல்லல்லாஹு அலா மள்ஹரில் அதம்மி முஹம்மதின் வஆலிஹி வஸஹ்பிஹி வஸல்லம்.*

நூருல் இர்பான் ஞானப்பிரசாகம்
இத்துடன் சம்பூரணம் பெற்றது.